# மறுப்புரை மாண்பு



மொழிஞாயிறு

ஞா.தேவநேயப் பாவாணர்

பதிப்பாசிரியர்

புலவர் அ.நக்கீரன்

பதிப்பாளர்

கோ.இளவழகன்

# மறுப்புரை மாண்பு

ஆசிரியர்

மொழிஞாயிறு

**ஞா. தேவநேயப் பாவாணர்**

பதிப்பாசிரியர்

**புலவர் அ. நக்கீரன்**

பதிப்பாளர்

தமிழ்மொழிக் காவலர்

**கோ. இளவழகன்**

**தமிழ்மண் பதிப்பகம்**

அகமது வணிக வளாகம்

293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,

இராயப்பேட்டை, சென்னை - 14

## நூற்குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | மறுப்புரை மாண்பு |
| ஆசிரியர் | : | ஞா. தேவநேயப் பாவாணர் |
| பதிப்பாசிரியர் | : | புலவர் அ. நக்கீரன் |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதற்பதிப்பு | : | 2001 |
| தாள் | : | 18.6 கி. என்.எஸ். மேப்லித்தோ |
| அளவு | : | 1/8 தெம்மி |
| பக்கம் | : | 56 + 144 = 200 |
| படிகள் | : | 2000 |
| விலை | : | உரு. 125/- |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |
| அட்டை வடிவமைப்பு | : | நாணன் |
| அச்சு | : | Prompt Printers<br>34, திப்புத் தெரு<br>சென்னை - 600 014. |
| கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| வெளியீடு | : | கீழையியல் ஆய்வு நிறுவனக்<br>கல்வி அறக்கட்டளை சார்ந்த<br>தமிழ்மண் பதிப்பகம்<br>293, அகமது வணிக வளாகம்<br>இராயப்பேட்டை நெடுஞ்சாலை<br>இராயப்பேட்டை, சென்னை - 600 014<br>தொலைபேசி : 831 21 75 |

மொழிஞாயிறு

# ஞா. தேவநேயப் பாவாணர்

நூற்றாண்டு

நினைவு வெளியீடு

# தமிழ்நூல் பதிப்பு வரலாற்றில்
# மலையளவு முயற்சி

**இதுவரை நூல்வடிவம் பெறாத பாவாணரின் அரிய கட்டுரைகள்**

**முதன்முதலாக வெளிவருகிறது**

செந்தமிழ்ச்செல்வி
தமிழ்ப்பொழில்
தென்றல்
தென்மொழி
முதன்மொழி
தமிழம்
குயில்
முல்லை
பாவை
மீட்போலை

மற்றும் பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் எழுதிய கட்டுரைகள் பெரிதும் முயன்று தொகுக்கப்பட்டு தக்க அறிஞர்களின் துணையுடனும், பார்வையுடனும் நூல் தொகுப்புகளாக வெளியிடப்படுகிறது.

# அயலகத் தமிழர்களின் பாராட்டுரை



**வெ. கரு. கோவலங்கண்ணன்**

*(கோபாலகிருட்டிணன்)*

*அரிமாபுரி (சிங்கப்பூர்)*

பேரன்புள்ள இளவழகனார்க்கு, வணக்கம்!

நம் ஐயா, செந்தமிழ் மீட்பர், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் நூற்றாண்டு வெளியீடாக, அவர்தம் 35 நூல்களையும் சீரிய முறையில் வண்ண அட்டையில் நல்ல தாளில் தங்களின் **'தமிழ்மண் பதிப்பகம்'** சிறப்பாக வெளியிட்டுள்ளமைக்கு உலகெங்கும் வாழும் நல்ல தமிழ் உள்ளங்கள் பாராட்டுவதோடு, இரு கைகளையும் கூப்பி நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளனர்.

செந்தமிழ்ச் செல்வி, தென்மொழி, தென்றல், தமிழ்ப்பொழில், முதன் மொழி, முல்லை, தமிழம், குயில் மற்றும் பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் பாவாணர் அய்யா அவர்கள் எழுதிய, இதுவரை நூல் வடிவம் பெறாத அரிய கட்டுரைகள் அனைத்தையும் அரும்பாடு பட்டுத் திரட்டித் தொகுத்து நூல் வடிவில் விரைவில் பதிப்பேற்ற உள்ளது அறிந்து பெரும் மகிழ்வு கொள்ளுவதோடு, தாங்கள் பல்லாண்டு வாழ்ந்து இன்னும் பல அரிய தமிழ்த் தொண்டுகள் செய்ய முதற்பகவனை வழுத்துகிறேன். ஒரு பல்கலைக்கழகம் ஏன்? ஓர் அரசு செய்ய வேண்டிய இந்த அரும் பணிகளைத் தன்னந்தனியாக தக்கார் துணை கொண்டும் பெரும் பொருட்செலவு செய்தும் உரிய காலத்தோடு ஐயா பாவாணர் நூற்றாண்டு வெளியீடாக ஐயாவின் எல்லாப்படைப்புகளையும் பதிப்பேற்றும் திறன் அறிந்து வியந்து நிற்கின்றேன்.

> ***"உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்***
> ***கச்சாணி யன்னா ருடைத்து"*** (குறள். 667)

என்னும் குறளைத் தங்களைப் போன்றாரைப் பார்த்துதான் பொய்யா மொழிப் புலவர் இயற்றி இருக்க வேண்டும். உருவில் எளிமையும் செயலில் புலியுமாயுள்ள தங்களை வணங்குகிறேன்.

நான் கனவு கண்டேன்; தாங்கள் நனவு ஆக்கினீர். நன்றி!

அன்பன்

வெ. கோவலங்கண்ணன்

**வெ. கரு. கோவலங்கண்ணன்**

*7.2.2002*

12.1.2002

**V.J. Babu**
President,
Federation of Tamil Sangams of North America,
Annai Illam,
8844 Oakwood Drive,
Hickory Hills,
Illinois 60457
America.

அன்புடையீர்,

வணக்கம்.

தங்களுடன் கடந்த வாரம் பேசிய மகிழ்வினின்று மீளும் முன்னரே தங்களின் மடலும் அய்யா அவர்களின் நிழற்படமும், குறிப்பு தாங்கிய சிறுபுத்தகங்களும் கிடைக்கப் பெற்றன. **தமிழ் மண்ணிலும் இவ்வளவு வேகமா? செயற்பாட்டில்!** என்ற பூரிப்பும் மனதில் சேர்ந்தது. மற்றபடி தங்களின் முயற்சியின் வெற்றி தாங்கள் அனுப்பிய மடல் வழி வந்த விவரம் அறியும் போது மனதில் பெருத்த உவகை. **தமிழ் இனி தழைக்கும்!** இங்கு குளிர்காலத்து இயற்கை அன்னையின் கட்டளைக்கு இணங்க இலையுதிர்ந்து வெறிச்சோடி நிற்கும் மாஇலைகள் யாவும் வசந்தத்தின் வருகையில் தழைத்து நிற்கும் காட்சி மனதில் படுகின்றது. தங்களின் முயற்சிக்கு தேவையான உதவியை தமிழ்ச்சங்கப் பேரவையின் சூலை மாத விழாவிற்குப் பின்னர் சில ஏற்பாடுகள் செய்ய இயலும் என்று எண்ணுகிறேன்.

அன்புள்ள,

வி.ஜேபாபு

# அறிமுகவுரை

தமிழ்மொழி நலம் பெறவும் வளமுறவும் அயல்மொழி வல்லாண்மையினின்று விடுபடவும் அறுபதாண்டுக் காலமாய் அருந்தமிழ்ப் பணியாற்றியவர் மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர். மொழிநூல், வரலாறு, மாந்தநூல் ஆகிய முத்துறை அறிவியல்களை முழுமையாய்க் கற்றுத் தமிழரின் முந்து வரலாற்றை மீளமைத்துத் தந்தவர் அவர். தமிழே திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமான உலகமுதல் உயர்தனிச் செம்மொழி என்பதைத் தம் அஃகி அகன்ற வேர்ச்சொல்லாய்வுகளால் உலகுக்கு உணர்த்திய மொழிமூலர் அவர். அவருடைய எண்ணமும் செயலும் தமிழ் நலம் ஒன்றையே கருதியிருந்தன. தமிழுக்கு நலம் புரிந்தவர் களை அவர்கள் எந்த இனத்தினராயினும் - எந்தக் குலத்தினராயினும் - எந்த நாட்டினராயினும் உளமாரப் பாராட்டினார்; உவப்போடு புகழ்ந்துரைத்தார். ஆனால் தமிழுக்கு எதிராக இயங்கியவர்களை, அவர்கள் நம்மவர்கள் ஆனாலும் எத்துணைப் பெரும் புலமை படைத்தவர்கள் என்றாலும், எத்துணை அதிகாரம் உடையவராய் இருந்தார்கள் என்றாலும், வன்மையாகக் கடிந்துரைத்தார்; விரிவாக அவர்கள் கருத்தினை மறுத்து எழுதினார். தமிழுக்கு, தமிழ் நலத்திற்கு எதிராக எழுந்த கருத்துகளை மறுத்து, பாவாணர் எழுதிய கட்டுரைகளின் திரட்டே இம் மறுப்புரை மாண்பாம்.

ஒரு நூலின் குற்றங்களை எடுத்துக்காட்டி, அந்நூலை மறுத்து எழுகின்ற நூல் முற்காலத்தில் எதிர்நூல் எனப்பட்டது.

*"தன்கோள் நிறீஇப் பிறன்கோள் மறுப்ப(து)*
*எதிர்நூல் என்பர் ஒருசா ரோரே"*

என்பது இறையனார் அகப்பொருள் உரை மேற்கோள் நூற்பா. 'தன் மதம் நிறுத்தல்', 'பிறன் மதம் மறுத்தல்' என்ற இரு வகைகளில் பாவாணர் தம் கொள்கைகளை நிறுவியிருந்தாலும், பாவாணரால் பெரிதும் பின்பற்றப்பட்ட வகை பிறன் மதம் மறுத்தலே. மாற்றாரின் கூற்றுகளை எடுத்துக்காட்டி அவற்றை மறுக்கும் பாவாணரின் கட்டுரை வன்மை கற்போர்க்கு விருந்தளிக்கக் கூடியது; கருத்தூட்ட வல்லது!

இசையறிஞர் விபுலானந்த அடிகளார் தம் யாழ்நூலை நூலாக வெளியிடுமுன் சிறுசிறு பகுதிகளாகத் "தமிழ்ப்பொழில்" மாதிகையில் வெளியிட்டு வந்தார். அவற்றைப் படித்த பாவாணருக்கு

அடிகளாரின் ஆய்வு முதலிலேயே கோணியதாகத் தோன்றியது. குரல் என்பது மத்திமமே என்ற அடிகளாரின் கொள்கையை மறுத்துப் பாவாணர் "குரலே சட்சம்" என்ற கட்டுரையைச் "செந்தமிழ்ச் செல்வி"யில் எழுதினார். பாவாணரின் இக்கட்டுரையை மறுத்து அடிகளாரின் மாணவர் வெள்ளை வாரணனார் "செந்தமிழ்ச் செல்வி"யில் "குரல் மத்திமமே" என்ற கட்டுரை வரைந்தார். அந்தக் கட்டுரையை மறுத்து "குரல் சட்சமே; மத்திமம் அன்று" என்ற கட்டுரையை "செந்தமிழ்ச் செல்வி"யில் எழுதினார் பாவாணர். அதன்பின் அனைவராலும் குரல் சட்சமே என்று கொள்ளப்பட்டு விட்டது.

பாவாணர் மாணவர் மன்றம் வெள்ளிவிழா மலரில் "நன்னூல் நன்னூலா?" என்ற கட்டுரையை எழுதியிருந்தார். அதனை மறு வெளியீடு செய்தது கண்ணதாசனின் "தென்றல்" இதழ். (21.9.1957). பாவாணரின் கட்டுரையை எதிர்த்துத் தமிழாசிரியர் கெம்பீர நைனார் என்பார் "நன்னூல் நன்னூலே" என்ற தலைப்பில் மறுப்புக் கட்டுரை எழுதினார். நைனாரின் கருத்துகளை மறுத்தும் பாவாணரின் கருத்துகளை வலியுறுத்தியும் பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் "தென்றலில்" விரிவாக எழுதினார். இறுதியில் பாவாணரே நைனாரின் கருத்துகளை மறுத்து, "நன்னூல் நன்னூலா?- மறுப்பறுப்பு" என்ற கட்டுரையைத் "தென்றலுக்கு" விடுத்தார்.

ஆராய்ச்சிப் பெரும்புலவர் மயிலை. சீனி. வேங்கடசாமியார், "தமிழ்ப்பொழில்" இதழில் எழுதிய "சேரலாதன் அளித்த பெருஞ் சோறு" என்ற கட்டுரையில் சேரலாதன் பெருஞ்சோறு கடைக் கழகக் காலத்து நிகழ்வென்று கூறியிருந்தார். அதனைக் கண்டு திடுக்கிட்ட பாவாணர், "சேரலாதன் பெருஞ்சோறு வழங்கியது பாரதப் படைகட்கே" என்ற தலைப்பில் விரிவாய் மறுத்து எழுதினார். பாவாணரின் கட்டுரையை மறுத்து எழுதினார் மயிலை. சீனி. வேங்கடசாமியார். அதற்கும் மறுப்பு எழுதினார் பாவாணர். அதனையும் மறுத்து எழுதத் தொடங்கிய மயிலை. சீனி. வேங்கடசாமியார் தொடர்ந்து எழுதாது அமைந்தார்.

தமிழறிஞர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் 1965ஆம் ஆண்டு "தன்னாட்டு நண்பன்" (சுதேச மித்திரன்) விளக்கணி விழா (தீபாவளி) மலரில் "தமிழில் பிறமொழிச் சொற்கள்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அக்கட்டுரையில் தாம் பிறமொழிச் சொற்களாகக் கருதிய சில சொற்களை அவர் அயல் நாடுகளிலிருந்து வந்து தமிழில் வழங்குவதாகக் குறிப்பிட்டிருந்தார். அதனை மறுத்துத் "தெ.பொ.மீ. தமிழுக்கு அதிகாரியா?" என்ற தலைப்பில் "தென் மொழி"யில் விரிவாக எழுதினார் பாவாணர்.

பர்(Dr).தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் 1974-ல் "தமிழ் இலக்கணத்தில் அயன்மொழி அமைப்புகள்" என்ற தலைப்பில் 330 பக்க ஆங்கில நூல் இயற்றி வெளியிட்டார். இந்நூற் பகுதிகள் பாவாணருக்குக் கடு நஞ்சாகவே தோன்றியது பர். தெ.பொ.மீ.யின் நூல் தீந்தமிழுக்கு மேலும் தீங்கு விளைத்தலைத் தடுத்தற் பொருட்டு அதைச் சிறுசிறு பகுதியாய்ப் பகுத்துச் சீரிய வரலாற்று நூல் முறையிற் செகுத்து தவிடு பொடியாய்த் தகர்த்தெறிதலைக் குறிக்கோளாய்க் கொண்டு "தெ.பொ.மீ.யின் திரிபாராய்ச்சி" என்ற தொடர் கட்டுரை எழுதத் தொடங்கினார் ஆறு "செந்தமிழ்ச் செல்வி" இதழ்களில் தொடர்ந்த கட்டுரை பர்.தெ.பொ.மீ.யின் மறைவு கரணியமாய் நிறுத்தப்பட்டது. ஆயினும் "பர்.தெ.பொ.மீ. அவர்கள் எழுதிய "தமிழிலக்கணத்தில் அயன்மொழி யமைப்புகள்" என்னும் 330 பக்கத் திரிபாராய்ச்சி நூலைச் சிறுசிறு பகுதியாகச் 'செல்வி'யில் மறுப்பின் முற்று முடிய மூவாண்டு ஆகுமாதலாலும், அதனால் தொகுப்பு நோக்குக் கெடுமாதலாலும், தமிழுக்குப் பெருந்தீங்கு விளைக்கும் கடுநச்சுப் பகுதிகள் இறுதியில் இருப்பதனாலும், அவற்றை விரைந்து மறுத்தொழிக்க வேண்டுமாதலாலும், மெய்யன்பர் சிலர் விருப்பிற்கு இணங்கியும், மறுப்பு முழுதும் ஓர் எதிர்நூலாகவே வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆதலால் தெ.பொ.மீ.யின் திரிபாராய்ச்சி மறுப்புக் கட்டுரைகள் இனிச் 'செல்வி'யில் தொடரா" என்று பாவாணர் குறிப்பெழுதினார்.

சென்ற நூற்றாண்டில் தலைசிறந்த பெற்றிய (சித்த) மருத்துவராகவும் இசையறிஞராகவும் விளங்கி, "கருணாமிருத சாகரம்" படைத்த ஆபிரகாம் பண்டிதரின் புதல்வர் திரு வரகுண பாண்டியனார், "பாணர் கைவழி" என்ற இசையாராய்ச்சி நூலை எழுதி வெளியிட்டார். இந்த நூல் உருவாகப் பெருந்துணைபுரிந்த பாவாணர் பாயிரமும் வழங்கினார். அந்த நூலைப் பார்வையிட்டு இசையறிஞர் பி. சாம்பமூர்த்தி என்பார் 16.7.1950ஆம் நாளிட்ட 'இந்து'த்தாளில் ஒரு மதிப்புரை எழுதியிருந்தார். அம் மதிப்புரையில் நூலாசிரியரின் சில கருத்துகள் பொருந்தாதன என்று சுட்டியிருந்தார் சாம்பமூர்த்தியார். அதனை மறுத்து, "பாணர் கைவழி மதிப்புரை மறுப்பு" என்ற தலைப்பில் "செந்தமிழ்ச் செல்வி"யில் கட்டுரை வரைந்த பாவாணர் வரகுண பாண்டியனாரின் கருத்துகள் சரியானவை என்பதை நிலைநாட்டினார்.

பாவாணரின் "சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்" நூல் 1948-ல் கழக வெளியீடாக மலர்ந்தது. அந்நூலிற்கு பி.எசு.சுப்பிரமணிய சாத்திரியார் 1949ஆம் ஆண்டைய 'இந்து'த்தாள் ஒன்றில் மதிப்புரை எழுதியிருந்தார். அம் மதிப்புரையில் அந்தணர், பத்தினி, எழுத்து என்ற சொற்கள் வடசொற்கள் என்றும் பல வடசொற்களை

ஆசிரியர் தென்சொல்லாகக் காட்டியுள்ளார் என்றும் நூலாசிரியர் மொழிநூல் பயில்தல் வேண்டும் என்றும் சாத்திரியார் குறிப்பிட்டிருந்தார். அதனை மறுத்துச் "சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் மதிப்புரை மறுப்பு" என்ற தலைப்பில் "செந்தமிழ்ச் செல்வி"யில் கட்டுரை வரைந்தார் பாவாணர்.

பாவாணரின் மறுப்புக் கட்டுரைகள் நந்தமிழ்க்கு நலம் சேர்ப்பதையே நோக்கமாகக் கொண்டவை; தமிழ் நலம் சிதைகின்ற விடத்துச் சீறிக் குரல் கொடுப்பவை. அவ் வகையில் பர்.தெ.பொ.மீ. அவர்களைப் பாவாணர் வன்மையாகக் கண்டித்ததுண்டு. இதற்கான கரணியத்தை, "தனிப்பட்ட முறையில் பர்.தெ.பொ.மீ. யொடு எனக்கு எட்டுணை யும் பகைமையில்லை. அவரை என் உண்மை நண்பர் எனவும் பின்வாங்கேன். ஆயின், அவருக்கும் எனக்கும் பொதுவான தாயைப் பழிப்பதும் முன்னோரைத் தகவிலர் என்பதும் போன்ற கொள்கை யையும் கூற்றையுமே வன்மையாய் எதிர்க்கின்றேன்" என்று பாவாணர் தெளிவாக விளக்கியுள்ளார்.

பாவாணர் நூல்கள் பைந்தமிழைக் காக்கின்ற படைக் கலன்கள்; வண்டமிழ்க்கு வளஞ்சேர்க்கும் அடியுரங்கள்; அன்னைத் தமிழ்க்கு அழகூட்டும் அணிகலன்கள். தமிழர் இல்லமெலாம் பாவாணர் நூல்கள் பொலிக! வளம் பொங்குக!

- பா. **இளங்கோ** க.மு., ஆய்.மு.,

# பதிப்பாசிரியர் உரை

**உலகத் தோற்றம்**

நாம் வாழும் உலகம் 500 கோடி ஆண்டுகட்கு முன்னர்க் கதிரவனிலிருந்து கழன்று சிதறிய ஓர் அனற்பிழம்பு. கழன்ற பிழம்பு நீள்வட்டப் பாதையில் கதிரவனைச் சுற்றிச் சுழன்றது.

சுழற்சி விசையினால் நிலவுருண்டையின் மேற்பகுதி குளிர்ந்து இறுகியது. உருண்டு திரண்டதால் உலகம் (உல்–உலம்–உலகு–உலகம்) என்றும், அண்டவெளியில் ஞாலுவதால் (தொங்குவதால்) ஞாலமென்றும் பெயர்சூட்டி வழங்கினர் தண்டமிழ்ச் சான்றோர்.

**உயிர்த்தோற்றம்**

குளிர்ந்த நிலத்தின் நடுப்பகுதி உயிர்கள் வாழும் தகுதி பெற்றது. முதலில் நிலைத்திணை (தாவரம்) உயிரியாகிய ஓரறிவுயிரே தோன்றியது. பின்னர்ப் படிப்படியாக மற்றை வுயிரினங்கள் தோன்றின. மற்ற உயிரினங்கள் உயிர்வாழ ஓரறிவுயிரே அடிப்படையாக அமைந்தது.

தொல்காப்பியர் அறிவு அடிப்படையில் உயிரினங்களை அறுவகையாகப் பகுத்துத் தமக்கு முன்னர் வாழ்ந்த சான்றோர் உயிரினங்களை நெறிப்படுத்திய பாங்கினைத் தெரிவிக்கின்றார்.

ஆறறிவுடைய மனிதனே உலகத்தில் இறுதியாய்த் தோன்றிய உயிரினம் ஆவான்.

*"மக்கள் தாமே ஆறறி வுயிரே"* (தொல். பொருள். 512)

மக்கள் முதன்முதல் தோன்றிய இடம் ஞாலத்தின் நடுப் பகுதியே. அந்த நடுப்பகுதியே பண்டு குமரிக்கண்டம் (இலெமூரியா) என வழங்கப்பட்டது. முதல் மாந்தன் தோன்றிய இடம் குமரிக்கண்டமே எனப் பல்வகைச் சான்றுகளால் மொழிஞாயிறு பாவாணர் அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறார்.

**பெயர்க் காரணம்**

*"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"* (தொல். சொல். 157)

என்பார் தொல்காப்பியர். நிலைத்திணைக்குரிய பெயர்களுள் பல கண்டப் பெய ராகவும், நாட்டுப் பெயராகவும், ஊர்ப் பெயராகவும், வழங்கிவந்தன என்பதை இன்றும் அவற்றுக்கு வழங்கும் பெயர்களால் அறிகிறோம்.

குமரி – குமரிக்கண்டம்
பனை – பனைநாடு, திருப்பனந்தாள், பனைமரத்துப்பட்டி
தெங்கு – தெங்கநாடு, திருத்தெங்கூர்

பாலை – பாலைநாடு, பாலையூர்
நாவல் – நாவலம்பொழில்
நெல்லி – திருநெல்லிக்கா, நெல்லித்தோப்பு
ஆல் – திருவாலங்காடு
பூல் – பூலாங்குறிச்சி

குமரி என்பது ஒரு மூலிகைச் செடி. இதனைச் சோற்றுக்கற்றாழை என்று நாட்டுப்புற மக்கள் வழங்குவர். குமரிச்செடி மிகுந்திருந்த காரணத்தினால் குமரிக்கண்டம் எனப் பெயர் வழங்குவதாயிற்று.

மூலிகை என்பதன் கடைக்குறை மூலி.

இலை + மூலிகை – இலைமூலிகை

இலைமூலி – இலைமூரி – இலெமூரி

ஒ.நோ : குடல் – குடர், பந்தல் – பந்தர், திடல் – திடர், கூதல் – கூதர், சாம்பல் – சாம்பர், இலுப்பை – இருப்பை, போக்கிலி – போக்கிரி

இலெமூர் என்னும் குரக்கினம் வாழ்ந்ததனால், இலெமூரியா என வழங்கிற்று என்பதனைவிட இலைமூலி – இலைமூரி – இலெமூரி – இலெமூரியா எனக் குமரிக்கண்டம் வழங்கப்பட்டது என்பது சாலப் பொருந்தும்.

### மொழித் தோற்றம்

எங்கு முதன் மாந்தன் தோன்றினானோ அங்குத்தான் ஞால முதன்மொழியும் தோன்றியிருக்க முடியும். குமரி மாந்தன் முதன் மாந்தன். அவன் பேசிய மொழியே முதன் மொழி. அதுவே, நந்தம் தாய்மொழியாம் தமிழ். இது பாவாணரின் அசைக்கமுடியாத கருத்து.

இயல்பாகத் தோன்றிய இயன்மொழிக்குப் பதினாறு பண்புகள் இருக்கவேண்டும். அப் பதினாறும் அமைந்த மொழி தமிழ் ஒன்றுமட்டுமே.

*தொன்மை இயன்மை தூய்மை தாய்மை*
*முன்மை வியன்மை வளமை மறைமை*
*எண்மை இளமை இனிமை தனிமை*
*ஒண்மை இறைமை அம்மை செம்மை*
*எனும்பதி னாறும் இன்றமிழ் இயல்பெனப்*
*பன்னுவர் மொழிவலர் பாவாணர் தாமே.*

### மொழி எண்ணத்தைப் புலப்படுத்தும் கருவி

முதல் மாந்தனுக்கு மொழி தேவையில்லை. அவன் மக்களைப் பெற்றுப் பெருகிய பின்னர்க் கூடிவாழத் தலைப்பட்டான்; தன் எண்ணத்தைக் கைக்குறியாலும் முகக்குறியாலும் படக்குறியாலும் பிறர்க்குப் புலப்படுத்தினான். இக் குறிகள் இரவிலும் தொலைவிலும் பயன்படுத்த முடியாததனால் அதன் பின்னரே மொழி தோன்றிற்று.

*"வைய மீன்றதொன் மக்கள் உளத்தினைக்*
*கையி னாலுரை காலம் இரிந்திடப்*
*பைய நாவை யசைத்த பசுந்தமிழ்*
*ஐயை தாள்தலைக் கொண்டு பணிகுவாம்"*

என்பார் தஞ்சைப் பெரும்புலவர் நீ. கந்தசாமிப் பிள்ளை.

**ஆரியர் வருகை**

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே, ஆரியர், இந்தியாவிற்குள் புகுந்து விட்டனர். அவர் மொழி தமிழில் கலக்கத் தொடங்கிற்று. அதனாலேயே தொல்காப்பியர்,

*"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ*
*எழுத்தொடு புணர்ந்த சொல்லா குமே"* (தொல்.சொல். 401)

எனத் தம் நூலுள் வழிவகுத்தார். ஆடுமாடு மேய்க்கவந்த ஆரியர் ஆட்டக் கலையிலும் வல்லவராயினர். அவர்கள் கழைக்கூத்தாடியதைச் சங்கப்பாடலும் குறிப்பிடும். "ஆரியக்கூத் தாடினாலும் காரியத்திலே கண்" என்னும் பழமொழியும் அவர்கள் கூத்தைத் தெரிவிக்கும்.

தமிழரொடு கலந்த ஆரியர் தமிழ்மொழியைக் கற்றனர்; தமிழர் பண்பாட்டையும் தமிழ்மொழியையும் கெடுக்கச் சூழ்ந்தனர்; எதிர்த்து நில்லாது அடுத்துக் கெடுக்கத் துணிவு கொண்டனர்; அரசர்களையும் செல்வர்களையும் அண்டித் தம் செயலைச் செவ்வனே செயற்படுத்தினர்.

ஆரியர்தம் வெண்ணிறத்தாலும் வெடிப்பொலிப் பேச்சுத் திறத்தாலும் கூத்தாலும் தமிழ் மன்னர்கள் அவர்களுக்கு அடிமையாயினர்; அவர் ஆட்டி வைத்தபடியெல்லாம் ஆடினர்.

முதுகுடுமிப் பெருவழுதி யென்னும் ஒரு பாண்டிய மன்னன் பல வேள்விகளைச் செய்தான்; மக்கள் வரிப்பணத்தை வேள்வி செய்யவும் ஆரியர்க்கு விருந்து வைக்கவும் பரிசில் வழங்கவும் பயன்படுத்தினான்; அதனால் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பேரும் பெற்றான்.

பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்னும் சேரவேந்தன் தன்னைப் பாடிய பாலைக் கௌதமனார் விருப்பப்படி பத்துப் பெருவேள்வி செய்து புலவரையும் அவர் மனைவியையும் துறக்கம் பெறச் செய்தான்.

சிலப்பதிகாரக் காலத் தமிழகம் பார்ப்பனச் செல்வாக்கு ஓங்கியிருந்த காலமாகும். பார்ப்பனியத்தைப் பரப்புதற்கென்றே சிலப்பதிகாரம் படைக்கப் பட்டதோ என்று எண்ண வேண்டியுள்ளது.

காதை என்று வரும் பகுதிகளில் எல்லாம் ஆரியச் செல்வாக்கே காணப் படுகின்றது. "மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட"க் கோவலன் கண்ணகி திருமணம் நடந்தது என்று சிலப்பதிகாரத்தில்தான் முதன்முதல் சொல்லப் படுகின்றது.

கண்ணகிக்குத் தோழி தேவந்தி என்னும் பார்ப்பனத்தி; ஆரியப் பண்பாட்டைக் கண்ணகியிடம் புகுத்தப் பார்த்தாள். கண்ணகியோ நாகரிகமாக, அதனை மறுத்து ஒதுங்கினாள்.

இமயத்தில் கல்லெடுத்து, கங்கையில் நீராட்டி, கனகவிசயர் தலையில் சுமத்திக் கொண்டுவந்த கல்லில் கண்ணகிக்குப் படிமை அமைத்துக் கட்டிய கோயிலில் இவளே முதல் பூசாரினியாகச் செங்குட்டுவனால் அமர்த்தப் பட்டாள்.

ஆடல்மகள் மாதவியிடம் கௌசிகன், வசந்தமாலை என்னும் பார்ப்பனர் பணிபுரிந்தனர்.

மாடல மறையோன் செல்வாக்குச் சிலம்பு முழுதும் திகழ்கின்றது. கோவலன் செய்த நற்செயல்கள் எல்லாம் பார்ப்பனர்க்கே. அதனால் மாடலன் அவனைக் 'கருணை மறவ', 'செல்லாச் செல்வ' , 'இல்லோர் செம்மல்' என ஏத்திப் புகழ்ந்தான்.

கோவலனை அறியாது கொன்ற நெடுஞ்செழியன் ஆரியப்படையை வென்றவன்; பார்ப்பனர்க்குக் களைகணாய்த் திகழ்ந்த கோவலனைக் கொன்றவன்; திருட்டுப் பொருள் சேர்த்தான் என்று பிறர் தெரிவிக்க வார்த்திகன் என்னும் பார்ப்பனனைச் சிறையிட்டான். இதனால் ஐயை கோயில் பூசாரி கோயிலைப் பூட்டினான்; பார்ப்பனர் போராடினர். இறுதியில் பாண்டியன் பணிந்து வார்த்திகனைச் சிறைவீடு செய்தான்; அவன் காலில் விழுந்து வணங்கினான் பாண்டியன்; தங்கால் என்னும் ஊரொடு பரிசில் பல வழங்கினான். இருந்தும் பார்ப்பனர் சினம் தணியவில்லை.

கோவலன் கொலையுண்டபின் கண்ணகி மதுரையை எரித்தாள் என்று சிலம்பு குறிப்பிடும். ஆரியர்மீது படையெடுத்து அவரை வென்றமையாலும், வார்த்திகனைச் சிறையிட்டதாலும், தங்களுக்கு நல்லன செய்த கோவலனைக் கொன்றதாலும் கண்ணகி மதுரைக்குத் தீயிட்டாள் என்னும் காரணத்தைக் கொண்டு மதுரை நகரை எரித்து அழித்தனர் பார்ப்பனர்.

பல்லவர் காலத்தில் தமிழகத்தில் பத்தி இயக்கம் தலையெடுத்தது. இதனால் தமிழும் வளர்ந்தது; சமயமும் வளர்ந்தது. பல சாதிகளைச் சார்ந்தவர்களும் நாயன்மார், ஆழ்வார் கூட்டத்தில் உண்டு.

நந்தனார் என்னும் தாழ்த்தப்பட்டவர் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவர். தில்லைக் கோயிலுள் நுழைந்து வழிபடத் தில்லைவாழ் அந்தணர் தடுத்தனர்; தீயிட்டுக் கொளுத்தியும் கொன்றனர்.

ஞானசம்பந்தரையும் விட்டுவைத்தனரா? இல்லையே! திருமணத்தன்று அவரையும், திருமணத்திற்கு வந்த அத்துணைப் பேரையும் பந்தலில் தீயிட்டுக் கொளுத்தி அழித்தனர். மதுரையிலுள்ள திருஞானசம்பந்தர் மடத்திற்குப் பார்ப்பனர் தலைவரா யில்லாமையே இதனை உறுதிப்படுத்தும்.

இதனுடன் அமையாது சுந்தரருக்குப் பின் மூவர் தேவாரம் அடங்கிய ஏடுகளைத் திரட்டித் தில்லைவாழ் அந்தணர்கள் ஓர் அறையில் வைத்துப் பூட்டினர்; தேவாரம் தமிழ்மக்களிடையே பரவாது தடுத்தனர்.

பிற்காலச் சோழப் பெருவேந்தன் முதலாம் இராசராசன், நம்பியாண் டார் நம்பி மூலம் இதனைக் கேள்வியுற்று, தில்லைவாழ் அந்தணரை அணுகிக் கேட்டான். அவர்கள் தர மறுத்தனர். தேவாரம் பாடிய மூவரும் ஒருங்கே வந்து கேட்டால்தான் தருவோம் என விடையிறுத்தனர்.

பின்னர் இராசராசன் தேவாரம் பாடிய மூவர் திருமேனியுடன் வந்து கேட்டான். வேறு வழியில்லாது அந்தணர்களும் தேவார ஏடுகள் பூட்டியிருந்த அறையைத் திறந்து காட்டினர். அந்தோ! கறையான் அரித்துப் பல்லாயிரம் பாடல்கள் அழிந்து ஒழிந்தன. எஞ்சியவற்றை நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு தொகுத்தான் மன்னன். இசைஞானியார் என்னும் ஓர் ஆதி திராவிடப் பெண்ணே தேவாரத்துக்குப் பண் வகுத்தார்.

ஆங்கில அரசால் கல்வி கற்று முன்னேறிய இப்போதாவது தம் செயலை விட்டார்களா? திருவையாற்றிலுள்ள தியாகராசர் அரங்கில் தண்டபாணி தேசிகர் தமிழில் பாடியதால் தீட்டுப் பட்டுவிட்டது என்று தீட்டுக் கழித்தனரே! தம் குலத்தில் பிறந்த பாரதியாரையும் விடவில்லையே!

"*பேராசைக் காரனடா பார்ப்பான்*"

என்று தொடங்கும் பாட்டில் பார்ப்பனரின் இயல்பைப் பாரதியார் படம்பிடித்துக் காட்டுகிறார். தம் பூணூலை அறுத்து எறிந்தவராயிற்றே; ஆதிதிராவிடச் சிறுவன் ஒருவனுக்குப் பூணூல் அணிவித்தவராயிற்றே; பார்த்தசாரதி கோயில் யானையால் தள்ளுண்டு அடிபட்டு அதனாலேயே இறந்தபோது எந்தப் பார்ப்பனரும் செல்லவில்லையே; பிணந்தூக்கக் கூட ஆளில்லையே!

மதுரை அ. வைத்தியநாத அய்யரை அறியாதார் உண்டோ? பெரிய சீர்திருத்தவாதி; காந்தி அண்ணலிடம் பெருமதிப்பு வைத்திருந்தவர்; 1939-ல் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஆதிதிராவிடர் சென்று வழிபடப் போராடியவர்; அதில் வெற்றியும் கண்டவர்.

முன்னாள் தமிழக அமைச்சர் கக்கன் இளமைப் பருவத்தில் வைத்திய நாத அய்யர் வீட்டில் தங்கிப் படித்தவர். அய்யர், அவரைத் தம் மக்களுள் ஒருவராகவே கருதினார். 23.2.1955-ல் வைத்தியநாத அய்யர் மறைந்தார். அய்யர் பெற்ற மக்கள் மொட்டையடித்துக் கொண்டனர். கக்கனும் மொட்டை யடித்துக்கொண்டு பிள்ளைகளோடு தாமும் ஒரு பிள்ளையாய் நின்றார். பெற்றோர்க்குச் செய்ய வேண்டிய கடமையைத் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவனும் செய்வதா என்று அய்யரினத்தைச் சேர்ந்த பார்ப்பனர் போர்க்குரல் எழுப்பினர்.

"நாங்கள் பிறப்பால் மகன்களானோம்; ஆனால் கக்கன் வளர்ப்பால் மகனானார். ஆகவே எங்களுக்கு என்ன உரிமை இருக்கிறதோ அந்த உரிமை கக்கனுக்கும் இருக்கிறது" என்று ஐயர் மனைவியும் மக்களும் சொன்னதைக் கேட்டுச் சமுதாயத் தலைவர்கள் வியந்தனர். ஆனால் ஐயர் உறவினரோ இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று கூறி அகன்றனர்.

உலககுரு என்று பார்ப்பனர்களால் உச்சிமீது தூக்கிவைத்துப் போற்றப்படும் சங்கராச்சாரியார், காஞ்சிப் பெரியவர் சந்திரசேகர சரசுவதி தமிழை நீசமொழி என்று கூறி ஆட்சிமொழி காவலர் கீ. இராமலிங்கனாரிடம் பேச மறுத்தவர்.

*"நெய்யுண்ணோம் பாலுண்ணோம்*

*. . . . . . . . . . . . . . . . . . . . . . . .*

*தீக்குறளை சென்றோதோம்"*

என்னும் ஆண்டாள் பாசுரத்திற்குத் தீய குறளைப் படிக்கமாட்டோம் என்று பொருள் கொண்டு தமிழ்மறையை இகழ்ந்தவர்.

தனித்தமிழ் வளர்த்த மொழிஞாயிறு பாவாணர்தம் தலைமாணாக்கர் பாவலரேறு பெருஞ்சித்திரனார். அவரைத் திருநெல்வேலி மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரியில் பேசக்கூடாது என்று தடைபோட்டனர்.

ஆரியர், தமிழ் மன்னரை அடிமையாக்கிப் பண்பாட்டைக் கெடுத்ததோடு அல்லாமல் தமிழ்மொழியை அழிக்கவும் கெடுக்கவும் திட்டமிட்டுச் செயல் பட்டனர்.

கடல்கோள்களால் அழிந்தவை போக எஞ்சிய பன்னூற்றுக் கணக்கான நூல்கள் தீக்கிரையாக்கப்பட்டும் ஆற்று வெள்ளத்தில் வீசப்பட்டும் அழிக்கப் பட்டன.

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் நாலாம் தமிழ்ச் சங்கந் தோற்று வித்த பாலவநத்தம் பாண்டித்துரைத் தேவர் மதுரையம்பதியில் அரும்பாடு பட்டுத் தொகுத்து வைத்திருந்த கணக்கற்ற நூல்களும், ஏட்டுச் சுவடிகளும் தமிழ்ப் பகைவரால் தீயிடப்பட்டு அழிந்தொழிந்தன.

1974–ல் நடைபெற்ற 4ஆம் உலகத் தமிழ் மாநாட்டின் போது தமிழர் சிங்களர் கலகத்தால் யாழ்ப்பாணம் நூலகம் சிங்களவரால் அழிக்கப்பட்டது.

தேவாரத்தில் காணப்படும் தனித்தமிழில் இருந்த ஊர்ப்பெயர் இறைவன் பெயர்களும் சமற்கிருதத்தில் மாற்றப்பட்டன.

காட்டு:

| தமிழ் | சமற்கிருதம் |
|---|---|
| நாவலம்பொழில் | ஜம்புத்தீவு |
| மறைக்காடு | வேதாரண்யம் |

| தமிழ் | சமற்கிருதம் |
|---|---|
| மயிலாடுதுறை | மாயவரம், மாயூரம் |
| புளியங்காடு | திண்டிவனம் |
| பழமலை, முதுகுன்றம் | விருத்தாசலம் |
| பெருவுடையார் | பிரகதீஸ்வரர் |
| பிறவிமருந்திறைவர் | பவஔஷதீஸ்வரர் |
| ஐயாற்றர் | பஞ்சநதீஸ்வரர் |
| புற்றிடங்கொண்டார் | வன்மீகநாதர் |
| கூடுதுறையார் | சங்கமேஸ்வரர் |
| தடங்கண்ணி | விசாலாட்சி |
| மாதொருபாகன் | அர்த்தநாரீஸ்வரர் |

இந்தப் பணி இன்னும் தொடர்கின்றது. எழில்மிகு சென்னை சிங்காரச் சென்னை என்று மாறியுள்ளது.

ஊர், ஊரவை, ஊராட்சி, ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம் என்னும் தனித்தமிழ்ப் பெயர்களிருக்கக் கிராம சபை என்று தமிழினத் தலைவர் என்றும், தமிழை வளர்ப்போர் என்றும் பறைசாற்றுபவர்களாலேயே பரப்பப்பட்டு வருகிறது.

**விதிவிலக்கானோர்**

எல்லாரும் இப்படியா? விதிவிலக்காகச் சிலர் இருந்தனர். அவருள் சிலர் சங்க காலத்திலும் இருந்தனர். சென்னைக் கிறித்தவக் கல்லூரிப் பேராசிரியர் வி.கோ. பரிதிமாற் கலைஞர், வரலாற்றுப் பேராசிரியர்கள் பி.தி. சீனிவாசையங்கார், வி.ஆர். இராமச்சந்திர தீட்சிதர், தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதையர் முதலானோர்.

**தனித்தமிழ் எழுச்சி**

தனித்தமிழுக்கு வித்திட்டவர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி. தம் பெயரைப் பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிக்கொண்டார். அவரிடத்தில் வந்த சுவாமி வேதாசலம் பரிதிமாற் கலைஞர் ஊன்றிய வித்துக்கு நீரூற்றி வளர்த்தார்.

*"பெற்ற தாய்தனை மகமறந் தாலும்*
*பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்*
*உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்*
*உயிரை மேவிய உடல்மறந் தாலும்"* (அருட்பா)

இப்பாடல் இராமலிங்க அடிகள் பாடிய திருவருட் பாவிலுள்ளது. "நீவா! இப் பாட்டில் தேகம் என்னும் வடசொல்லை நீக்கி யாக்கை என்னும் தென் சொல்லை யமைத்திருந்தால் எத்துணை இன்னோசையாகவும் தூய தமிழாக வும் இருக்கும்! இங்ஙனம் அயற்சொற்களை ஆள்வதனால், இன்னோசையும்

தூய்மையும் கெடுவதுடன் நாளடைவில் தமிழ்ச்சொற்களும் ஒவ் வொன்றாக வழக்கொழிந்து போகின்றனவே" என்று மகளிடம் கூறி வருந்த, அம் மகளும் "அப்பா! அப்படியானால் இனிமேல் நாம் தனித் தமிழிலேயே பேசுவோம்" என்று தம் ஆர்வத்தைத் தெரிவித்தார். அடிகள் அதனை மெச்சி அன்றே சுவாமி வேதாசலம் என்னும் தம் பெயரை **மறைமலையடிகள்** என்று மாற்றி, அன்று முதல் தனித்தமிழிலேயே பேசவும் எழுதவும் தலைப்பட்டார். மறைமலையடிகள் தாம் வெளியிட்ட ஞானசாகரம் இதழை அறிவுக்கடல் என்று மாற்றினார்; தாம் எழுதிய நூல்கள் மறுபதிப்புக் கண்டபோது வடசொற்களை மாற்றித் தக்க தமிழ்ச்சொற்களைப் பெய்து வெளியிட்டார்; இந்தியெதிர்ப்புப் போரிலும் தலைமைதாங்கி வழிகாட்டினார்.

தனித்தமிழ் எழுச்சி தமிழகம் முழுவதும் வீறுகொண்டு எழுந்தது. பலர் தம் பெயர்களைத் தனித்தமிழாக மாற்றிக்கொண்டனர். சிலர் மாற்றிக்கொண்ட பெயரும் தமிழாக இல்லை. ஒருசிலர் தமிழுக்காகப் போராடினர். ஆனால் தம் பெயரைத் தமிழாக மாற்றிக்கொள்ள விரும்பவில்லை.

***தனித்தமிழ் இதழ்கள்***

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழம், மீட்போலை, தமிழியக்கம், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பொழில், குறளியம் போன்ற இதழ்கள் தனித்தமிழ் பரப்பி வருகின்றன.

### *நூலாசிரியர் பாவாணர்*

பாவாணர் பாட்டனார் முத்துச்சாமித் தேவர் தஞ்சை மாவட்டத்து நீடாமங்கலத்தைச் சேர்ந்தவர்; சங்கரன்கோவிலில் இருந்த தோக்கசு என்னும் மேனாட்டுக் கிறித்தவக் குரவரின் வளமனைக் காவற்காரனாகப் பணியாற்றினார். இவர் மகன் ஞானமுத்து. அவருக்குப் பிறந்தவரே நம் நூலாசிரியர் ஞா.தேவநேயர்.

தனித்தமிழுக்குப் பரிதிமாற் கலைஞர் வித்தூன்றினார்; மறைமலைய டிகளார் நீரூற்றி வளர்த்தார்; பாவாணரோ களையெடுத்து எருவிட்டுக் காத்து வளர்த்தார்.

மாந்தன் பிறப்பிடம் குமரிக்கண்டம் என்பதிலும், ஞால முதன்மொழி தமிழ் என்பதிலும் அசைக்கமுடியாத முடிவு கொண்டிருந்தார். இவற்றை நிலைநாட்டும் பொருட்டு முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். சேலம் நகராண்மைக் கல்லூரியின் முதல்வராய் இராமசாமிக் கவுண்டர் பணியாற்றினார். அப்போது அங்குப் பாவாணர் விரிவுரையாளராய்ப் பணியாற்றினார். பெருஞ் சித்திரனார் போன்ற பல மாணாக்கரைத் தனித்தமிழ் உணர்ச்சியுள்ளவராய் ஆக்கினார்.

பாரதிதாசன் பரம்பரை என்று பாவலர் கூட்டம் ஒன்று எழுந்ததைப் போல, பாவாணர் பரம்பரை ஒன்று தனித்தமிழ் எழுச்சியுடன் நாடெங்கும் எழுந்தது.

அயல்நாடுகள் பலவற்றுள்ளும் 'பாவாணர் மன்றம்' அமைத்துத் தனித்தமிழ் வளர்க்கப்படுகிறது. தமிழுக்குக் கேடு செய்வார் யாராக இருந்தாலும் அவர்களை வெறுத்துக் 'கோடன்மார்' என்றும் 'கொண்டான்மார்' என்றும் கூறிப் பாவாணர் தூற்றினார்.

## *உலகத் தமிழ்க் கழகம்*

தனித்தமிழ் வளர்ப்பதற்கென்றே 1968-ல் உலகத் தமிழ்க் கழகம் ஒன்று தொடங்கப் பெற்றது. கழகத்தின் கிளைகள் நாடு முழுவதும் அமைக்கப்பட்டன. 1969-ல் பறம்புக்குடியில் உ.த.க. முதல் மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டில் முனைவர் சி. இலக்குவனார், முனைவர் வ. சுப. மாணிக்கனார், புலவர் குழந்தை உள்ளிட்ட தமிழ்ச் சான்றோர் பலர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். திருக்குறள் தமிழ் மரபுரை இம் மாநாட்டில் வெளியிடப்பட்டது.

நான்காம் உலகத் தமிழ்க் கழக மாநாடு சென்னையில் பெரியார் திடலில் பதிப்பாசிரியர் அ. நக்கீரன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்ச்சொற்கள் ஞாலமுழுதும் பரவிக் கிடக்கின்றன; பன்னாட்டு மொழிகளிலும் விரவிக் கிடக்கின்றன என்பதனைப் பாவாணர்தாம் தம் நுண்மாண் நுழைபுலத்தால் கண்டுபிடித்து நிறுவினார். கால்டுவெல் எழுதிய 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' இதற்குத் துணை செய்தது. அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பணியாற்றியபோது வங்கமொழி அறிஞர் சுனித்குமார் சட்டர்சியால் ஏற்பட்ட சிக்கலால் அண்ணாமலை பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறினார்.

தமிழக அரசு இவரைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வில்லை. 1968-ல் நடந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் இவர் புறக் கணிக்கப்பட்டார். புதையலைத் தேடிக் கண்டுபிடிப்பது போலவும், எண்ணெய் ஊற்றுகளை நாடிக் கண்டுபிடிப்பது போலவும் அறிஞர்களைத் தேடிக் கண்டு பிடித்து அரசு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த நிலை என்று போற்றப் படுகிறதோ அன்றுதான் நாடு உயரும்.

## *செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்டம்*

தமிழக அரசு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்க கத்தை 1974-ல் தொடங்கியது. அது பாவாணரைத் தலைவராகக் கொண்டு இயங்கியது. தக்க கட்டடமும் ஏந்துகளும் இல்லாது பல இடங்களுக்கு மாற்றப் பட்டது. 74 அகவை கொண்ட பாவாணர் அலுவலகம் சென்றுவர ஊர்தி எதுவும் அளிக்கப்படவில்லை. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு 1981-ல் மதுரையில் நடைபெற்றது. மாநாட்டில் உரையாற்றிய பாவாணர் 16.01.1981-ல் மறைந்தார். அவர் விட்டுச் சென்ற செ.சொ.பி. அகரமுதலிப் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுவரை நான்கு மடலங்கள் வெளிவந்துள்ளன எஞ்சியவை இனி வரவேண்டும்.

***சொன்னிலை***

விதை; விதையிலிருந்து முளை தோன்றுகின்றது; அம் முளையினின்று வேர் தோன்றி நிலத்தில் காலூன்றுகின்றது; வேர் ஆணிவேராக உறுதி பெறுகின்றது. ஆணி வேரினின்று பக்க வேர்களும், பக்க வேரிலிருந்து சல்லிவேர்களும் தோன்றி மரஞ் செழித்து வாழ வகைசெய்கின்றன. நிலத்துக்கு மேல் அடியாகவும், அதனின்று கிளை, கொப்பு, வளார், இலை தோன்றி யாவருக்கும் புலப்பட நிற்கின்றது. வேரோ கண்ணுக்குப் புலப்படுவதில்லை.

சொன்னிலையும் அப்படியே. சொற்களின் வேர் சொல்லாய்வறிஞர்க்கு மட்டுமே புலப்படும்.

பாவாணர், பெரும்பான்மையான சொற்கள் சுட்டடியினின்றே பிறந்தன என்பார். ஆகாரச்சுட்டு, ஈகாரச்சுட்டு, ஊகாரச்சுட்டு என்று முறைப்படி நின்றாலும் ஊகாரச் சுட்டடிப் பிறந்த சொற்களே மிகுதியாதலான் தலைதடுமாறலாக ஊகாரச் சுட்டடி, ஆகாரச் சுட்டடி, ஈகாரச் சுட்டடி என்று வேர்ச்சொற் கட்டுரைகளில் தலைப்பமைத்தார்.

குறில் நெடிலாயிற்று என்பது பலர் கருத்து. நெடிலே குறிலாயிற்று என்பது பாவாணர் கருத்து. இதற்குப் பிற திராவிட மொழிகள் வலுவூட்டுகின்றன.

"உல் என்னும் முதலடி, சொன்முதன் மெய்கள் ஆறொடு கூடிக் குல், சுல், துல், நுல், புல், முல் என்னும் வழியடிகளைத் தோற்றுவிக்கும்" (வட. வர. முன்னுரை)

உ – உல்

உ – முளை

உல் – ஆணிவேர்

குல் – சுல் – துல் – நுல் – புல் – முல் என்பன பக்கவேர். அவற்றினின்று கிளைப்பன சல்லிவேர்.

"சொன்மூலம் வேர் (root), அடி (stem), முதனிலை (theme) என மூவகைப்படும். வேரும் முதல்வேர் (ஆணிவேர்), வழிவேர் (பக்கவேர்), சார்புவேர் (சல்லிவேர்) என முத்திறப்படும். முதல் வேருக்கு மூலம் முளையாகும். முளைக்கு மூலம் வித்தே. அடி என்பது கவையுங் கொப்புங் கிளையும் போத்துங் குச்சுமாகப் பிரியும். இவையெல்லாம் தமிழ் போன்ற இயன்மொழியிலேயே தெளிவாகக் காணப்பெறும்" (வட.வர. பகுதி 2, ப.117).

சொல்லாய்வறிஞர் பலர் பாவாணர் வழிநின்று சொல்லாய்வில் ஈடுபட்டு வருகின்றனர். சொல்லாய்வறிஞர்க்குப் பொறுமை, இலக்கணப் புலமை, அயராவுழைப்பு, மொழியார்வம் நிறைந்திருக்க வேண்டும்.

முனைவர் இரா.மதிவாணன், முனைவர் கு.அரசேந்திரன், புலவர் இரா. இளங்குமரன், முனைவர் இரா.கு. ஆல்துரை, சாத்தூர்ச் சேகரன் ஆகியோர்

தம்மைச் சொல்லாய்வில் ஈடுபடுத்தி உழைத்துவருகின்றனர். இப் பணி மேலும் பெருக வேண்டும்.

**பாவாணர் கோட்பாடுகள்**

1. மாந்தன் தோன்றிய இடம், அழிந்துபோன குமரிக்கண்டமே.
2. மாந்தன் பேசிய முதன்மொழி தமிழே; அதுவே ஞால முதன்மொழி.
3. தமிழ் திரவிடத்துக்குத் தாயும், ஆரியத்துக்கு மூலமும் ஆகும்.
4. தமிழை வடமொழிப் பிணிப்பினின்று மீட்பதே என் வாழ்க்கைக் குறிக்கோள்.
5. இற்றைத் தமிழிலக்கியத்திற்கு அணியாய் இருப்பதும், தமிழன் தான் இழந்த உரிமைகளைப் பெறுதற்கு ஆவணம்போல் உதவுவதும் தொல்காப்பியம் ஒன்றே.

**தன்னம்பிக்கை**

1. அகரமுதலிப் பணிக்காகவே இறைவன் என்னைப் படைத்தான்.
2. என் நூல்களுள் தலைசிறந்ததும், வேறெவராலும் செய்ய முடியாததும், தமிழின் தலைமையை நிலைநாட்டுவதும் அகரமுதலிப் பணி ஒன்றே. என் ஆராய்ச்சியின் முழு விளைவும் அஃதே.
3. இறுதியில் என் நூல்களால்தாம் தமிழுக்கும் தமிழர்க்கும் நலம் பிறக்கும். அதனைப் பின்னர்க் காண்பீர்கள்.
4. மறைமலையடிகட்குப் பின் தமிழ்த் தூய்மை பேணும் பேராசிரியன் யான் ஒருவனே.
5. என் புலமையைப் பொறுத்த வரையில் மறைமலையடிகள் ஒருவரே மதிப்புரையோ முன்னுரையோ வழங்கத் தக்கவர்.
6. என் திருக்குறள் தமிழ் மரபுரை ஒன்றே என் தகுதியைப் பெயர் காட்டப் போதும்.

**பண்புநலன்கள்**

பாவாணர் குழந்தை உள்ளத்தினர்; கள்ளங் கவடில்லாதவர்; குழந்தையே யாயினும் பண்புடன் பரிவுகாட்டிப் பழகுபவர்; தமக்குச் செய்யப்பட்ட உதவி தினைத்துணையாயினும் பனைத்துணையாக் கொண்டு பாராட்டும் பண்பினர்; தமிழுக்குக் கேடு சூழ்ந்தார் எத்தகைய நிலையிலிருப்பினும் அஞ்சாது கண்டிக்கும் துணிவினர்; கருமமே கண்ணாய், துயிலாது சோம்பாது பணிபுரிந்தவர்; யாருக்கும் தலை வணங்காது நின்ற அரிமா!

**நூற்றாண்டு விழா**

பாவாணர் நூற்றாண்டுவிழா இந்த ஆண்டு கொண்டாடப்படவேண்டும். அரசு கொண்டாடுகிறதோ இல்லையோ பன்னாட்டுத் தமிழரும் நூற்றாண்டு விழாவைச் செவ்வையாய்க் கொண்டாட ஏற்பாடு செய்துகொண்டிருக்கின்றனர்.

நூற்றாண்டு விழாக் காணும் பாவாணர் நினைவாக அவர் படைத்த நூல்கள் அத்தனையையும் மறுபதிப்பாக வெளியிடத் **தமிழ்மண் பதிப்பகம்** முனைந்துள்ளமை பாராட்டத்தக்கது.

## பதிப்பாசிரியர் நக்கீரன்

நக்கீரன் எனும் நான் உறந்தைராயன்குடிக்காட்டில் அப்பாவு – பாப்பம்மாள் இணையருக்கு மூத்த மகனாக 22–7–1927–ல் பிறந்தேன்.

தொடக்கக் கல்வியை உள்ளூரிலும், உயர்நிலைக் கல்வியை உரத்த நாட்டிலும் பயின்றேன். 1946–ல் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று 1947 முதல் ஆசிரியராய்ப் பணியாற்றினேன். 1954–ல் புலவர் பட்டமும், 1968–ல் இந்தி விசாரத்துப் பட்டமும், 1979–ல் தமிழில் கலை முதுவர் பட்டமும் பெற்றேன்.

1970 முதல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தில் பணியாற்றி 1986–ல் ஓய்வு பெற்றேன்.

### பாவாணர் தொடர்பு

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் 'ஒப்பியன் மொழிநூல்' தொடர்பாய்ப் பாவாணருடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. 1974 முதல் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. நான் பதிப்பாசிரியராய் இருந்தபோது செ.சொ.பி. அகரமுதலி முதன்மடலம் 1985–ல் வெளியிடப்பெற்றது. என் பணியைப் பாராட்டியதோடு என்னை அகரமுதலிப் பணிக்கு அளித்துதவப் பாவாணர் பாடநூல் நிறுவனத்தைக் கேட்டுக்கொண்டார். ஆனால் நிறுவனம் மறுத்துவிட்டது. நான் ஓய்வுபெற்றபின் அகரமுதலிப் பணியாற்ற விண்ணப்பம் அளித்தும் அமர்த்தம் கிடைக்கவில்லை. ஓய்வு பெற்றுப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் முதன்மைப் பதிப்பாசிரியர் முனைவர் இரா.மதிவாணன் பரிந்துரையின் பேரில் பதிப்பாசிரியராய்ப் பணியாற்றும் வாய்ப்பினை என் 74ஆம் அகவையில் அரசு அளித்துள்ளது.

## பதிப்பாளர் இளவழகன்

இளவழகன், கோவிந்தசாமி – அமிர்தம் அம்மையாருக்கு மூத்த மகனாக 2.9.1946–ல் பிறந்தார்; தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி இரண்டையும் உறந்தைராயன்குடிக்காட்டிலேயே பயின்றார்; தொடக்கம் முதலே தமிழில் ஆர்வம் உடையவர்; 1965–ல் நடந்த இந்தியெதிர்ப்புப் போரில் பங்குகொண்டு சிறை சென்றவர்; தமிழ்நாட்டரசால் 'தமிழ்மொழி காவலர்' விருதளிக்கப் பெற்றவர்; பாவாணருடன் நெருங்கிய தொடர்புகொண்டவர்; 'பாவாணர் அச்சகம்' என்னும் பெயரில் அச்சகம் நிறுவியவர். 'கீழையியல் ஆய்வு நிறுவனக் கல்வி அறக்கட்டளை' தொடங்கி அதன் சார்பில் பல நற்பணி செய்து வருபவர்.

தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் 1917–ல் வெளியிட்ட கருணாமிர்த சாகரம் என்னும் இசைத்தமிழ் நூலை 1995–ல் தஞ்சையில் நடந்த 8ஆம் உலகத் தமிழ்

மாநாட்டில் மறுபதிப்பாய்த் தமிழக முதல்வரைக் கொண்டு வெளியிட்டார். இந்தப் பணியினால் பேரிழப்புக்கு ஆளானவர்.

***பாவாணர் நூல் மறுபதிப்பு***

தமிழ் ஆர்வம் என்னும் ஒன்றையே முதலாகக் கொண்டு ஒரு பெரும் பணியை ஏற்றுக்கொண்டு பாவாணர் படைப்பு முழுவதையும் வெளிக்கொணரும் பணியில் ஈடுபட்டுள்ளார்; தக்க பலரை அமர்த்தி அயராது பாடுபட்டும் வருகிறார்; நூல்கள் செம்மையாக வெளிவரும் என்னும் நம்பிக்கையும் கொண்டுள்ளார்.

***உறந்தைராயன்குடிக்காடு***

தஞ்சைப் பட்டுக்கோட்டைப் பெரும்பாட்டையில் அமைந்துள்ள ஒரு சிற்றூர். இந்தச் சிற்றூரில்தான் பதிப்பாசிரியரும் பதிப்பாளரும் பிறந்தனர்; வளர்ந்தனர்; கல்வி கற்றனர்; தொண்டாற்றினர். இவ் வூரில் 1954–ல் 'ஊர் நலன் வளர்ச்சிக் கழகம்' என்று ஒரு நற்பணிக் கழகம் தொடங்கப்பட்டுப் பல நற்பணிகளைப் புரிந்தது.

*"நாடா கொன்றோ காடா கொன்றோ*
*அவலா கொன்றோ மிசையா கொன்றோ*
*எவ்வழி நல்லவர் ஆடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே"* (புறம். 187)

***கழகத்தின் பணிகளுள் சில***

1. நாற்பத்தைந்து ஆண்டுகட்கு முன்னரே தை மூன்றாம் நாளன்று வள்ளுவர் விழாக் கொண்டாடி வந்தது. அன்று, அவ் வாண்டில் பிறந்த குழந்தைகளுக்குத் தமிழ்ப்பெயர் சூட்டியது. பள்ளிக் குழந்தைகளுக்குத் திருக்குறள் போட்டி வைத்துப் பரிசு வழங்கியது.

2. *'குடி குடியைக் கெடுக்கும்',*
*'ஈன்ற அன்னையும் ஏறெடுத்துப் பாராள்',*
*'சான்றோர் மதிக்க மாட்டார்'*

என்பதனை உணர்ந்து குடியை ஒழிக்க அரும்பாடுபட்டது; உரத்தநாட்டு மதுவொழிப்புத் திட்டத்திற்கு வித்தூன்றியது.

3. முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரேயே தேர்தலின் போது பொதுமேடை அமைத்து அனைத்து வேட்பாளர்களையும் ஒரே மேடையில் பேசவைத்தது.

4. 'Honourable' என்னும் ஆங்கிலச் சொல்லுக்குக் 'கனம்' என்னும் சொல்லைப் பயன்படுத்தி வந்தனர். 1962ஆம் ஆண்டில் அப்போதைய முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் இந்த ஊரில் உயர்நிலைப் பள்ளியைத் திறந்து வைத்தார். கனம் என்பதனை நீக்கிவிட்டு 'மாண்புமிகு முதலமைச்சர்

கு.காமராசர்' என்று திறப்புவிழாக் கல்வெட்டில் பொறித்தோம். அச் சொல்தான் இப்போது தமிழ்நாட்டில் அரசாலும் மக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

5. தொண்டர்படை ஒன்று சீருடையுடன் அமைக்கப்பட்டது. இரவில் திருட்டுப் போகாது காவல் செய்வதும் திருமணங்களில் விருந்து பரிமாறுவதும் விழாக்காலங்களில் மக்களை ஒழுங்குபடுத்துவதும் இதன் பணிகளாகும்.

தந்தை பெரியார், சர்தார் அ. வேதரத்தினம் பிள்ளை, தவத்திரு குன்றக் குடி அடிகளார், பெருந்தலைவர் கு. காமராசர், ஆர்.வேங்கடராமன், மக்கள் கலெக்டர் ஆர். எஸ். மலையப்பன், வே. கார்த்திகேயன், இ.ஆ.ப., வேத நாராயணன், இ.ஆ.ப. போன்றோர் எங்கள் பணிகளைப் பாராட்டியுள்ளனர்.

7–7–74 அன்று பாவாணர் புலவர் மாணிக்கம் வெற்றிச் செல்வி திருமணத்திற்குத் தலைமை தாங்கி நடத்தி வைத்து வாழ்த்தினார்.

காளிகோயில் திருப்பணி முடிக்கப்பட்டுத் தமிழ் நெறிப்படி தவத்திரு குன்றக்குடி அடிகளாரைக் கொண்டு திருமுழுக்குச் செய்யப்பட்டது. பேரூர் சாந்தலிங்க மடத்து இராமசாமி அடிகளார், சுந்தரேச அடிகளார் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முதியோர் கல்வி, திருக்குறள் வகுப்பு நடாத்தி மக்கட்கு அறிவு புகட்டப்பட்டது.

உரத்தநாட்டுப் பகுதியில் தனித்தமிழ் பரவ அடித்தளம் அமைத்தது. பாவாணர் படிப்பகம் தோற்றுவிக்கப்பட்டது.

***பதிப்புப் பணி***

பொருள்வளம் படைத்த பலர் இருக்கத் தமிழ் ஆர்வம் ஒன்றனையே முதலாகக் கொண்டு பாவாணர் படைத்த நூல்கள் அனைத்தும் மறுபதிப்பாக வெளிவருகின்றன. இந்த வெளியீட்டின் பதிப்பாசிரியர் புலவர் அ. நக்கீரனும், பதிப்பாளர் தமிழ்மொழி காவலர் கோ. இளவழகனும் இந்தச் சிற்றூரில் பிறந்தவர்கள். இதனால் சிற்றூர் சீரூராய்த் திகழும் வாய்ப்புக் கிடைத்தமை எங்களுக்குக் கிடைத்தற்கரிய பேறாகும். பழைய பதிப்பில் உள்ள குறைகள் களையப் பெற்றுச் செவ்வையாக இப் பதிப்பு வெளிவருகின்றது. இதுவரை வெளிவந்த தமிழ்நூல்களில் உள்ள பிழைகள் கணக்கில. பல நூல்களும் பிழைதிருத்தப் பட்டியல் ஒன்றனை நூல் இறுதியில் சேர்ப்பது வழக்கம். அந்தப் பட்டியலே இல்லாது இந் நூல்கள் அனைத்தும் வெளியிடப்படுகின்றன. இதுவரை வெளிவந்த தமிழ்நூல் பதிப்பு அனைத்தையும் இந்தப் பதிப்பு வெல்லும்; மக்களின் பேராதரவைப் பெறும் என்னும் நம்பிக்கை உடையேன்.

பிழையின்றி நூல்கள் வெளிவரப் பதிப்பாசிரியர், மெய்ப்புத் திருத்துநர், கணினி இயக்குபவர், கட்டமைப்பினர் அனைவர் பணியும் ஒன்றுசேர வேண்டும். அவை அனைத்தும் இப் பதிப்பில் அமைந்துள்ளன.

பாவாணர் நூல்களில் காணப்பட்ட பல ஐயங்களைக் களையச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்கக முதன்மைப் பதிப்பாசிரியர் முனைவர் இரா.மதிவாணன், என் ஆசிரியர் இராம. சுப்பிரமணியன் ஆகியோர் உறுதுணையாயிருந்தனர். அவருக்கும் நூல் செவ்வையாய் வெளிவர ஒத்துழைத்த அனைவர்க்கும் பாராட்டும் நன்றியும் உரித்தாகுக!

**மொழிஞா யிறெனத் தமிழகம் போற்றிடும்**
**விழுமிய தேவ நேயப்பா வாணர்**
**செந்தமிழ் மறவர்! சிந்தனை ஊற்று!**
**நந்தமிழ் தன்னில் நஞ்சினைக் கலக்கும்**
**நரிமா கலங்கிடச் செய்திடும் அரிமா!**
**அரிவரி கற்கும் சின்னஞ் சிறாஅரும்**
**நெருங்கிப் பழகிட வாய்ப்புத் தந்தவர்!**
**முறுக்கிய மீசை முகத்தில் திகழ்ந்திட**
**நறுக்காய்ப் பேசும் நல்லவர்! பார்ப்பனப்**
**பொல்லார் செய்யும் சூழ்ச்சி பொறாதவர்!**
**நல்லார் தமக்கு நனிநல் லவரவர்!**
**தனித்தமிழ் வளர்க்கும் தந்தை! இளைஞர்க்கு**
**இனித்த தமிழில் கட்டுரை வரைந்தவர்!**
**தொன்மை மொழியாம் தமிழினைக் காக்க**
**இன்னல் ஏற்றவர்! இன்றமிழ்ச் சொல்லின்**
**வேரினைக் கண்டு விரிநூல் படைத்தவர்**
**நூற்றாண்டு காணும் இந்நாள்**
**போற்றுவம் அவரின் புகழ்நிறுத் துவமே!**

*- புலவர் அ. நக்கீரன்*

# பதிப்புரை

**தந்தை பெரியார்**

அடிமைப்பட்டுக் கிடந்த சிறப்பு வாய்ந்த ஓர் இனத்தின் வரலாற்றை எடுத்துச் சொல்லி நம்மைத் தமிழர்களாய்த் தலைநிமிர வாழவைத்த பெருமைக் குரியவர் தந்தை பெரியாராவார்.

***"குடிசெய்வார்க்கு இல்லை பருவம்; மடிசெய்து***
***மானம் கருதக் கெடும்."*** (குறள்.1028)

பொதுத் தொண்டு செய்ய முன்வரும் எவரும் மான அவமானம் பார்க்கக் கூடாது என்ற உணர்வோடு தமிழ்க்குடிக்குத் தொண்டு செய்து தமிழர்களுக்கு **இலக்கணமாய்** வாழ்ந்தவர் தந்தை பெரியார்.

***"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்***
***பெருமையின் பீடுஉடையது இல்."*** (குறள். 1021)

தன்மானத்தை இழக்க நேரிடினும், தமிழ்க்குடியின் மானத்தை உயர்த்திக் காட்டுவேன் என்று தமிழர்களுக்கு **இலக்கியமாய்** வாழ்ந்தவர் தந்தை பெரியார். இவர் ஒரு நூற்றாண்டுப் பயனைத் தமிழர்களுக்குத் தம் ஒய்வறியா உழைப்பால் உண்டாக்கிக் காட்டியவர்.

இவர் தோன்றியிராவிடில் **பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர்** போன்ற பெருமக்களின் தொண்டும், அரசியல் பணியும் தமிழர்களுக்குக் கிடைத்திரா. **தமிழ்த்தென்றல் திரு.வி.க., தமிழ்த்துறவி குன்றக்குடி அடிகளார்** ஆகியோர் ஆற்றிய சமயப்பணியும், தமிழ்ப்பணியும் தமிழ்நாட்டில் வலம்வந்து நிலைத்திரா. **தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள், மொழிநூல் வல்லுநர் தேவநேயப் பாவாணர்** போன்ற பேரறிஞர்களின் தனித்தமிழ் இயக்கத் தொண்டும், பணியும் மதித்துப் போற்றும் நிலை தமிழ்நாட்டில் வளர்ந்திரா. புரட்சிப்பண் பாடிய **பாவேந்தர் பாரதிதாசனின்** மொழி, இன, நாட்டுணர்வும், பகுத்தறிவுக் கொள்கையும் தமிழ்மண்ணில் தழைத்தோங்கி இரா. பெரியார் பிறந்ததால் தமிழர்களாய் நாம் தலைநிமிர்ந்து நிற்கிறோம்.

தன்னலம் அணுவின் முனையளவும் இல்லாது தமிழர்களின் மேன்மைக்கு உழைத்த **தந்தை பெரியாரை – மொழிஞாயிறு பாவாணர்** அவர்களின் **நூற்றாண்டு** நினைவாக அவர் படைத்த நூல்களை வெளியிடும் இந்த நேரத்தில் பெரியாரின் பெருந்தொண்டை நன்றியோடு நினைவுகூர்கிறேன்.

**மொழிநூல் வல்லுநர் பாவாணர்**

மறைக்கப்பட்ட தமிழின வரலாற்றையும், சிதைக்கப்பட்ட ஒப்புயர்வற்ற மொழியையும், தமிழின் தொன்மையையும், அதன் செம்மாப்பினையும், தமிழர்களின் பெருமையையும் உலகறியச் செய்தவர் **தொல்தமிழ் அறிஞர், மொழிநூல் வல்லுநர் பாவாணர்** ஆவார். இவர் தமிழ்மொழி ஆய்விலேயே ஐம்பது ஆண்டுகள் மூழ்கித் திளைத்தவர். இப்படிப்பட்ட பேரறிஞர் ஒருவரைத் தமிழகம் இதுநாள்வரை கண்டதில்லை. தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகளுக்குப் பிறகு தனித்தமிழ் இயக்கத்தை மரமாக வளர்த்தெடுத்துப் பலருக்கு நிழல் தந்தவர் பைந்தமிழறிஞர் பாவாணர் ஆவார். இவர் இலக்கண இலக்கியப் புலமையும், மொழிநூல் புலமையும், வரலாற்று அறிவும், நிலநூல், உயிர்நூல், மாந்தனூல் தேர்ச்சியும் ஒருங்கே பெற்ற ஒப்பற்ற நுண்ணறிவாளர். தமிழின்பால் எல்லையற்ற அன்பும் தமிழைப் பண்டுபோல் புதுமொழியாக ஆக்கிக் காட்ட வேண்டும் என்ற உணர்வுமுடையவர். தமிழர்கள் தங்கள் வாழ்வு நலன்களைத் தேடி முன்னேறுவதற்குத் தம் வாழ்நாள் முழுவதும் உழைத்தவர்.

உலகமொழி அனைத்திற்கும் நம் தமிழே மூலமொழி என்று பறை சாற்றியவர்; செந்தமிழ் மொழியின் செம்மாப்பினை தம் ஆங்கில அறிவால் நூலாக்கி உலக மொழிநூல் வல்லுநர்களின் வாயை அடைத்தவர்; தமிழ்மொழியின் வரலாற்றையும், வடமொழியின் வரலாற்றையும், தமிழர்களின் வரலாற்றையும், தமிழிலக்கியத்தின் வரலாற்றையும் தமிழர்களுக்குக் களஞ்சியமாய் விட்டுச் சென்றவர். தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை, நிறைதமிழ் மலையாம் மறைமலையடிகள், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், புரட்சிப் பாவலர் பாவேந்தர் பாரதிதாசன், தமிழ்த்தென்றல் திரு. வி.க., பேரறிஞர் அண்ணா, பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார், மொழிப்போராளி பேரா. இலக்குவனார், பாவலரேறு பெருஞ்சித்திரனார் மற்றும் பல தமிழ்ப் பெருமக்களால் போற்றிப் புகழப்பட்ட இப் பெருமகன், எழுதிய நூல்களை, மறுபதிப்புச் செய்து வெளியிடுவதன் வாயிலாக என்னைப் பெருமைப்படுத்திக் கொள்கிறேன்.

**தென்மொழியின் பங்களிப்பு**

தமிழின மேன்மைக்கு வித்திட்ட பெருமக்களின் உழைப்பை, தம் 'தென்மொழி' இதழின் வாயிலாக இளமைக் காலத்தில் என் போன்றோர் உள்ளத்தில் விதைத்துத் தனித்தமிழ் இயக்கத்திற்கு எம்மை ஈர்த்த பெருமைக்கும் நன்றிக்கும் உரியவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆவார். தென்மொழியால் எம் போல்வார் பாவாணரின் பேரறிவைக் கண்டு போற்றவும், வணங்கவும், மகிழவும் முடிந்தது. இந்த நேரத்தில்'பாவலரேறு' பெருஞ்சித்திரனாரை எண்ணி வணங்குகிறேன்.

**உடன்பிறந்தார் இருவர்**

பெரும்புலவர் அ. நக்கீரன், புலவர் அ. சித்திரவேலன் ஆகிய இப் பெருமக்கள் இருவரும் என்னைச் செதுக்கியவர்கள். இவர்கள் தோன்றி யிராவிடில்

நான் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்திருக்க முடியாது. ஏழைக் குடும்பத்தில் பிறந்த என்னைத் தமிழுலகம் அறியச் செய்த பெருமைக்கும், நன்றிக்கும் உரியவர்கள் மாமா பெரும்புலவர் நக்கீரனார் அவர்களும், மாமா புலவர் அ.சித்திரவேலன் அவர்களும் ஆவர். என் இளமைக் காலத்தைப் பின்னோக்கிப் பார்க்கிறேன். சமூகக் கேடுகள் மலிந்து சின்னபின்னமாகக் கிடந்த என் ஊர் மக்களை ஒன்றுகூட்டி, கல்வியறிவு புகட்டி மனிதர்களாய் வாழவைத்த பெருமைக் குரியவர்கள் இவ்விருவரும். எங்கள் ஊரான உறந்தைராயன்குடிக் காட்டின் வரலாற்றோடு இவர்களின் வரலாறும் பின்னிப் பிணைந்தது. நான் பொது வாழ்வில் ஈடுபட்டுத் தமிழ்மொழி, இன, நாட்டு உணர்வு பெறுவதற்கும், தந்தை பெரியாரின் கொள்கைகளில் எனக்கு ஆழமான பிடிப்பு ஏற்படுவதற்கும், தனித்தமிழ் இயக்கத் தந்தை பாவாணர் அவர்களின்பால் எனக்குப் பற்று ஏற்படுவதற்கும் இப் பெருமக்கள் இருவரும் காரணமாவர்.

பொதுவாழ்வில் ஈடுபடுபவர்கள் மான அவமானம் பார்க்காது, தன்னலம் கருதாது தொண்டாற்ற வேண்டும் என்று தமிழர்க்கு இலக்கணமாய் அமைந்த தந்தை பெரியாரின் கூற்றுக்குச் சான்றாக அமைந்தவர் பெரும்புலவர் நக்கீரனார் ஆவார்; உழை, உயர், உதவு என்ற பூட்கை உரையை எங்கட்குத் தந்தவர். என்னுடைய இத் தமிழ்ப்பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து என்னை இயக்கிய பெருமக்களுள் முதன்மையானவர்; முதுமைப் பருவத்திலும் கண்களிலும், கைகளிலும் வலியும் சோர்வும் ஏற்படும் அளவிற்கு உழைத்து மெய்ப்புப் பார்த்துத் திருத்தம் செய்து நூல்கள் செப்பமுற வருவதற்குக் கரணியமாக இருந்தவர். பாவாணர் நூல்கள் மறுமதிப்புப் பணியில் ஏறத்தாழ ஓராண்டுக் காலமாகக் கணப்பொழுதும் சோராது, நூல்கள் அனைத்தையும் எழுத்தெண்ணிப் படித்துத் திருத்தங்கள் செய்து இப்பணிக்காகத் தம்மை ஈகம் செய்த மாமா பெரும்புலவர் நக்கீரர் அவர்களின் உழைப்பும், வழிகாட்டுதலும் என் வாணாளில் எனக்குக் கிடைத்த பேறாகக் கருதுகிறேன். என் வாழ்நாள் முழுவதும் இப் பெருமகனார்க்கு நன்றிக் கடப்பாடுடையேன்.

## தனித்தமிழ் இயக்க முன்னோடிகள்

முனைவர் தமிழ்க்குடிமகனார், முனைவர் இரா.இளவரசு, முனைவர் பூங்காவனம், புலவர் இரா.இளங்குமரனார், முனைவர் திருமாறன், முனைவர் இளமுருகன், முனைவர் ந.அரணமுறுவல், குடந்தைக் கதிர். தமிழ்வாணனன், போன்ற பெருமக்கள் மொழிஞாயிறு பாவாணர் நூல்கள் வெளிவருவதற்கு எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து எனக்குத் துணையிருந்த பெருமக்க ளாவர். இவர்களின் தமிழ்மொழி, இன, நாட்டுணர்வுக்குத் தலைவணங்கி என் நன்றியை அவர்களுக்கு இந்த நேரத்தில் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

## நூல்களுக்கு அறிமுகவுரை அளித்த பெருமக்கள்

அயராது தம் பணிநெருக்கடிகளுக்கிடையிலும் மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் அரிய கட்டுரைத் தொகுப்புகள் ஒவ்வொன்றிற்கும் அறிமுகவுரை

வழங்கி தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமைசேர்த்த பெருமக்கள் அனைவருக்கும் **தமிழ்மண்** பதிப்பகச் சார்பில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

## நூலாக்கப் பணிக்கு உதவியோர்

இக்கட்டுரைத் தொகுப்புகள் வெளிவருவதற்கு எனக்குத் துணையா யிருந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்து நூல்கள் வடிவமைப்பிலும், திருத்தத்திலும் ஒவ்வொரு நிலையிலும் என்னோடு இருந்து இரவும் பகலும் அயராது உழைத்த அருமை நண்பர் திரு ஆ.மதிவாணனன், அவர் துணைவியார் இராணி அம்மையார், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் பணியாற்றும் முனைவர் இரா.கு. ஆல்துரை, முனைவர் மு. கண்ணன் அவர்களுக்கும், முதுமை யிலும் தமிழ்ப்பணி ஒன்றே தம் வாழ்வுப் பணியாக உழலும் புலவர் கி.த.பச்சை யப்பன் அவர்களுக்கும் என்றும் நன்றியுடையேன்.

கிடைத்தற்கரிய இவ்வரிய கட்டுரைகளை கொடுத்து நூல்களாக வெளிவருவதற்கு உதவிய புலவர் இரா.இளங்குமரனார், பேரா. பூங்காவனம், நண்பர் இளங்கோ, மேலும் படங்கள் கொடுத்து உதவிய பாவாணர் மகனார் திரு. மணி, நூல்கள் மேலட்டை மிக அழகாக வருவதற்கு வடிவமைப்புச் செய்து எனக்குப் பெரிதும் துணையிருந்த நண்பர் திரு நாணா, என் மகன் இனியன் ஆகியோருக்கும் எம் நன்றி.

பாவாணரின் அரிய கட்டுரைகளைத் தேடி எடுத்துக் கொடுத்து உதவியதுடன் இத்தொகுப்புகளிலுள்ள கட்டுரைகளை வரிசைப்படுத்தியும், மெய்ப்புப் பார்த்தும் நூலாக்கப் பணிக்கு முழுதும் உடனிருந்து உதவிய இளங்கோ அவர்களுக்கு பெரிதும் நன்றியுடையேன். மெய்ப்புப் பார்த்து உதவிய புலவர் வெற்றியழகன் அவர்களுக்கும், என் இளவல் கோ.அரங்கராசன் மெய்ப்புத் திருத்தியும், நூல்கள் செம்மையாகவும், நல்ல வடிவமைப்புடனும் வருவதற்கு துணையிருந்து உதவியமைக்கு பாராட்டும் நன்றியும். 'கணிப்பொறி' பொறியாளர் கணேசன், நூல்களுக்குக் கணினிவழி உதவிபுரிந்த குப்புசாமி, நண்பர் பாலமுருகன், கட்டமைப்பாளர் தனசேகர் ஆகிய அனைவருக்கும் எம் பாராட்டும் நன்றியும். நூல்கள் செப்பமுற வெளிவருவதற்குக் காரணமாயிருந்து அச்சடித்துப் புத்தகத்தைக் கட்டுமானம் செய்து கொடுத்த 'பிராம்ட் அச்சகம்' உரிமையாளருக்கும், தொழிலாளர்களுக்கும் எம் நன்றி.

நூல்கள் முன்பதிவுத் திட்ட விளம்பரத்தைக் கண்ணுற்ற தனித்தமிழ் ஆர்வலர்கள், குறிப்பாக சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா போன்ற வெளிநாடு களில் வாழும் பாவாணர் பேரன்பர்களும், தமிழகத்தில் தனித்தமிழ் ஆர்வலர்களும் என்னைப் பாராட்டி முன்பணம் அனுப்பிவைத்து உதவினர். இவர்கள் காலத்தால் செய்த உதவிதான் எனது பணிக்கு உந்துதலாக இருந்தது. இவர்களுக்கு நான் என்றென்றும் கடப்பாடுடையேன்.

**நூல் வெளியீட்டின் நோக்கம்**

இளமைதொட்டு மொழி யுணர்வும், இன உணர்வும், நாட்டுணர்வும் என் குருதியில் இரண்டறக் கலந்து இழையோடுவதால், பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு இடையிலும் தமிழன் என்ற ஒரே தகுதியுடன் மனஉறுதியோடு செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், தென்றல், தென்மொழி, முதன்மொழி, தமிழம், குயில், முல்லை, மீட்போலை மற்றும் பல்வேறு இதழ்களிலும் மலர்களிலும் எழுதிய அரிய கட்டுரைகள் ஒருங்கே தொகுத்து முதன்முதலாக வெளியிட்டுள்ளேன். இவைகள் இதுவரை நூல்வடிவம் பெறாதவை. அரிய வரலாற்றுச் செய்திகளும், மொழிநூல் நுண்மையும், பண்பாட்டுப் பெருமையும், நாகரிகச் சிறப்பும் அடங்கிய தொகுப்புகளாகும்.

தமிழ்நூல் பதிப்பு வரலாற்றில் தமிழர்கள் இதுவரை கண்டிராத அளவில் தமிழறிஞர் ஒருவரின் அனைத்துப் படைப்புகளும் **தமிழ்மண் பதிப்பகத்தின்** வழியாக ஒரே நேரத்தில் வெளிவருவது குறிக்கத்தக்கதாகும். தமிழர்தம் இல்லந்தோறும் இருக்கவேண்டிய ஒப்பற்ற வரலாற்றுக் கருவூலமான மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் கட்டுரைகளை நூல் வடிவில் தமிழர்களின் கைகளில் தவழவிடுகிறேன். வருங்காலத் தலைமுறைப் படித்துப் பயன்பெறுக.

**வெல்க தமிழ் !**

**கோ. இளவழகன்**
பதிப்பாளர்

# பெருந்தவப் பேரோசான்

**பேரறிஞர் அண்ணா**

பாவாணர் தமிழ்மொழிக்கும், நாட்டுக்கும் இடைவிடாத நற்றொண்டாற்றி நம் அனைவரின் நிலையினையும் உயர்த்தியவர்.

அவருடைய புலமையும், தெளிவும் துணிவுமிக்கது. தமிழ் மொழியின் தூய்மையும் வளமும் எத்தகையது என்பதனை ஆய்ந்தறிந்து தெரிவித்த பெருமகனாரிடம் தமிழிடம் பற்றுக்கொண்ட எவருக்கும் பெருமதிப்பு ஏற்படாதிருக்க முடியாது.

தமிழ்ப்பெருநூல்கள் தமிழரால் நன்கு கற்று உணரப்பட்டு, தமிழ்நெறியில் தமிழர் நின்று வென்றிடல் வேண்டுமென்பதில் தளராத விருப்பம் கொண்டோர்க்கெல்லாம் பாவாணரின் புலமை நம்பிகை தந்து வருகின்றது.

பாவாணர் மேலும் பல ஆண்டுகள் இனிது வாழ்ந்திருந்து தமிழ் மொழிக்கான தொண்டாற்றிவருதல் வேண்டும் என்ற வேண்டுகோளே அவருக்காக நடத்தப்படும் மணிவிழா நிகழ்ச்சியின் போது நான் எடுத்துக்கூறும் நல்லெண்ணச் செய்தி என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்பெரியாருக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க பாவாணர்! வெல்க தமிழ்!

**மா. அரசமாணிக்கனார்**

"பாவாணர் பொதுவாகப் பேராசிரியரல்லர். மிகப்பெரும் ஆராய்ச்சியாளர். வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச் சுரங்கம் போன்றவர். செய்திறமையும் உறுதியும் வினையாண்மையுங் கொண்டவர். அவருடைய ஆய்வுத் திறன் அளப்பதற்கரியது. அவர் என்போன்ற ஆசிரியனுக்கும் ஆராய்ச்சியாளருக்கும் எழுதுகிறார்."

**பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்**

மொழிமலை, இலக்கிய மலை, சமய மலை என மும்மலை ஏந்திய முத்தமிழ் அறிவு மலையாக இயங்கியவர் தவத்திரு மறைமலை அடிகளார். இன்று மொழிவழி, மொழி முகில்கள், மொழித் தாரகைகள் என விளங்கும் எண்ணற்ற வான்படைத் துணைகளுடன் தனித்தமிழ் இயக்கவானில் ஒளிவீசும் மொழி ஞாயிறாக விளங்கியவர் பாவாணர்.

தனித்தமிழ் இயக்கம் மொழியளவில் வளர்ந்துவிட்ட ஓர் இயக்கம் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் அன்று அவ்வியக்கத்தின் ஒப்பற்ற ஒரே ஒரு தலைவராக அடிகளார் திகழ்ந்தார். நாடே படையன்றி, அவருக்குப் பிறிது படை இல்லை. ஆனால் இன்று துறை துறையாகத் தலைவர்கள், இயக்குநர்கள், அறிஞர்கள், கலைஞர்கள் எண்ணற்றவர் உள்ளனர். மேன்மேலும் பெருகி வருகின்றனர். தலைவர்களை இயக்கும் அறிவுத் தலைமை ஒளியாக மொழிஞாயிறு இலங்கினார்.

மறைமலையடிகளார் வளர்த்த தமிழைவிட மொழிஞாயிற்றின் ஒளியில் வளர்ந்த தமிழ் ஆற்றல் சான்ற தமிழ் என்பதைத் தமிழகம் அறிய நெடுநாள் செல்லாது. எத்தகைய அறிவுக் கருத்தையும், அறிவியல் கருத்தையும், கலை நுட்பத்தையும் கலையியல் நுணுக்கங்களையும், புலப்படுத்தும் திறனுடையதாய் அது ஒளிர்கின்றது. கழக (சங்க)த் தமிழ் என்றே அதனைக் கூறிவிடலாம்.

தனித்தமிழையே கருவியாகக் கொண்ட என் போன்றாரால் எட்டிப் பிடிக்கமுடியாத அளவில் அது ஆழ்ந்து அகன்று, உயர்ந்து வளம்பெற்று வளர்கிறது. வளர்ந்து வருகிறது. மேலும் வளர இருக்கிறது.

பாவாணர், உலகில் வேறு எம்மொழிக்கும் கிட்டாது தமிழகத்துக்கு மட்டுமே கிட்டிய, அதேசமயம் தமிழகத்துக்கு மட்டுமன்றி அறிவுலகுக்கே உரிய, மொழிப்புலவர் ஆவர்.

தனித்தமிழ் இயக்கம் அயல்மொழிச் சொல் நீக்கும் இயக்கம் மட்டும் அன்று. அது ஒன்றே உலகில் மொழி வளர்க்கும் ஒரே இயக்கம் ஆகும். அதனை நுணித்தறிந்து கண்டவர் தொல்காப்பியர். ஆசிரியர் மறைமலையடிகள். ஆனால் இதனைக் கண்டவர் மட்டுமல்லர், கண்டு மொழியை இந்த எல்லாத் திறங்களிலும் நாம் காண எடுத்துக் காட்டுந்திறமுடைய தமிழகத்தின், உலகின், ஒரே அறிஞராகத் திகழ்ந்தவரே மொழிஞாயிறு பாவாணர்.

தனித்தமிழியக்கத்தின் முன்னாள் அறிவுத்தலைவர் அடிகளாரையும் சரி, இந்நாள் அறிவுத் தலைவராயிருந்த மொழிஞாயிறு பாவாணரையும் சரி - வெறும் தமிழ்மொழி அறிஞர் என்றோ, வெறும் மொழி அறிஞர் என்றோ மதித்துவிடுவது தவறு. ஏனெனில் அவர்கள் விளக்கும் தமிழ்ச் சொற்பொருட் பண்பு சொற்கடந்து பொருளுக்கும் தமிழ்மொழி கடந்து பிறமொழிகளுக்கும், இலக்கியம் கடந்து கலைகளுக்கும் அறிவுத் துறைகளுக்கும் சமயங்களுக்கும் வழிகாட்டும் பண்புகள் ஆகும்.

தனித்தமிழ் இயக்கம் தமிழ் மொழியும் தமிழ்நாடும் தமிழ் இனமும் கடந்து எல்லா மொழிகளுக்கும் நாடுகளுக்கும் இனங் களுக்கும், சமயங்களுக்கும் பண்பாடுகளுக்கும் உரியதாகும். இவ் வெல்லா வற்றிற்கும் தமிழ்மரபு பயன்வளம் தருவதாகும். அதன் தலைவராயிருந்த மொழிஞாயிறு பயன்வளம் தந்தவர் என்பது என் வாழ்க்கைப் பணியிலேயே நான் கண்ட மெய்ம்மை ஆகும்.

**முனைவர் மு. தமிழ்க்குடிமகன்**

"உலகின் முதற் செம்மொழியாகிய தமிழ்மொழியின் தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை ஆகிய பதினாறு பண்புகளையும் மறைத்தும் திரித்தும் மழுப்பியும் குழப்பியும் வரும் 'மேலை ஆரிய' மேய்ப்பர்களுக்கும் 'கீழையாரிய' ஏய்ப்பர்களுக்கும் அறைகூவல் விடுக்கும் நிறைநூற் பெரும் புலவர்.

ஒப்பிலக்கணம் கண்ட . கால்டுவெலாரையும் மிஞ்சி, தப்பிலக்க ணம் கூறும் ஆரியப் புல்லரும் அஞ்ச - மொழியியல் ஆணிவேருக் கும் மூலம் காட்டி, வரலாற்றியலில் சல்லிவேரையும் கல்விக் காட்டும் மொழியாராய்ச்சி மூதறிஞர்.

நல்லமரத்துப் புல்லுருவிகட்கும், சாரத்தை உறிஞ்சி ஈரத்தில் முளைத்த காளாம்பிகட்கும், பயிரை மேயும் வேலிகட்கும் இலக் கணங்களாய்த் திரிந்தழியும் இற்றைத் தமிழகக் கூவிப் புலவர்கட் கிடையே மொழித் தூய்மைக்கும் இனக்காப்பிற்கும் வழிகாட்டியாய் உலவும் வல்லரிமா.

குறைமதியர் தேக்கிவைத்த கறையிருளை நீக்கவந்த மறை மலையார் வழிவந்த நிறைமலையார். தன்மதிப்பின் கொடுமுடியாய், தன்னுரிமை முகில் இடியாய், ஆர்த்திலங்கும் சீர்த்தியினார்.

நன்றி கொன்ற தமிழினத்தின் பன்றித் தனத்தால் புகழ் மறைக்கப்பட்டும், புறந்தள்ளப்பட்டும் குமைந்த ஈகஎரி. அமைந் தொளிரும் குடவிளக்கு. மடமைத் தமிழரின் அடிமைத்தனத்தால் மிடிமை வாய்ப்பட்ட கடமைக் காவலர்.

அவர்தாம் நம் திரவிட மொழியியல் ஞாயிறு திரு ஞா. தேவநேயப் பாவாணர்.

நேற்றுப் பிறந்த நாற்றக் குளுவான்களின் பிதற்றல்களையும் கூட ஆரியஇனம் தலைமேல் தாங்கிப் பாராட்டி வலம்வரும் போது, நம் பாவாணர் அவர்களின் ஈக வாழ்வின் எச்சங்களாயும், ஆராய்ச்சி வன்மையின் உச்சங்களாயும் வெளிவந்தும், வராமலும் இருக்கின்ற

ஐம்பதுக்கும் மேற்பட்ட அரும்பெரும் நூல்களை தலைமேல் ஏந்திப் பரப்புவது இன்று தமிழறிந்தார் ஒவ்வொருவரின் கடமையாகும்.

**முனைவர் இரா. இளவரசு**

நாம் உண்டு உறங்கியபோது உண்ணாமல், உறங்காமல் உழைத்தவர். தன்னலம் மறந்து தமிழ்நலம் காத்தவர். அறைக்குள் அமர்ந்து ஆய்வுப்பணி மேற்கொண்டவர் அல்லர். அறிஞர்களுக் கெல்லாம் அறிஞர். வெட்ட வெட்டக் கிடைக்கும் தங்கச்சுரங்கம் போன்றவர். தமிழ்மொழியின் நீள, அகல, ஆழம் கண்டவர். தமிழர் நிலையை உயர்த்தியவர். பாவாணரைத் தூக்கிப் பிடித்தால்தான் தமிழன் உருப்பட முடியும். தனித்தமிழ் இயக்கத்தை மக்கள் இயக்கமாக ஆக்கியவர். பொருளைத் திரட்ட நூல் எழுதியவர் அல்லர். தமிழின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். யார் தமிழர்? யார் எதிரிகள்? என்பதையும் இனம் கண்டு எழுதியவர். பாமரத் தமிழர்கள் தலைமேல் தூக்கிவைத்து போற்றும் நிலைக்கு உயர்ந்தவர். வறுமை யின் பிடியில் வாடியவர். கொள்கைக்காக வாழ்ந்தவர். இலக்கண ஆய்வையும், சொல்லாய்வையும், சொல்லியல் ஆய்வையும் தமிழ் மண்ணில் முதன்முதலில் வித்தூன்றியவர். மற்றவர்கள் தொடாத துறையைத் தொட்டவர்.

*குப்பாயம் பூண்டு குறுமடிப்புத் துண்டுடன்நம்*
*அப்பன்பா வாணர் அடியொன்றும் - தப்பாமல்*
*போர்மறவன் போலப் புறம்போந்த பேரழகு*
*நீர்விழியில் நிற்கும் நிலைத்து!*

*நாமெல்லாம் உண்டு நலமாய் உறங்குகையில்*
*தாம்பசித்தும் கண்விழித்தும் தன்னலத்தை - ஓம்பாமல்*
*மன்னு தமிழ்நலமே வாழ்வியவாய்க் கொண்டிருந்தார்*
*கண்மணி பாவாணர் காண்!*

*அந்தமிழின் நீளம் அகலம் அறிந்தவர்கள்*
*செந்தமிழின் நாட்டில் சிலருளரே - நந்தமிழின்*
*ஆழம் அறிந்தவர்யார், வேரை அகழ்ந்தவர்யார்*
*வேழம்பா வாணர்போல் வேறு?*

*யார்தமிழர் என்பதையும் ஞால மொழிமரத்தின்*
*வேர்தமிழே என்பதையும் நேர்நாட்டிச் - சேர்பகையைப்*
*பார்தமிழா என்றொளியைப் பாய்ச்சி நமையுயர்த்தும்*
*சீர்தலைவர் பாவாணர் சீர்!*

**முனைவர் கு. பூங்காவனம்**

முதன்மொழியாகவும் மொழிக்குடும்பத்திற்கும் உலகக் கிளைமொழிகளுக்கும் தாயாகவும் அமைந்த தமிழ்ப் பேராலமரம். "வேர்ச் சொற்கள் சிறுவேர் பெருவேர் என இருவகைய. சிறுவேர் பன்னூற்றுக் கணக்கின. பெருவேர் ஒரு நூற்றிற்கு உட்பட்டவை" என்பதாம். அன்றியும், "உலகமொழிகள் மூவாயிரத் துள்ளும் வேர்ச்சொல் காண்பதற்கு எளிதாகவும் மிகுதியாகவும் இடம்தரும் மொழி தமிழ் ஒன்றே; அஃது இயன்மொழியாதலால் பெரும்பாற் சொற்களின் வேர்வடிவை அல்லது வேருறுப்பை இன்றுந் தாங்கி நிற்கின்றது" என்பதும் அவர் கண்டறிந்ததேயாம்.

**கோ. நிலவழகன்**

அவர் தம்மையும் தம் வாழ்வையுமே ஒரு பயிற்சிக்களமாக, ஆய்வுக் கூடமாக மாற்றிக் கொண்ட வித்தகர். வறுமைத் துன்பத்தி னின்றும் விடுபட ஆராய்ச்சியையே வாழ்க்கையின் கடைக்காலாக அடித்தளமாக மாற்றிக்கொண்ட பெருந்தகையாளர்.

தமிழே அவருடைய உடல்; அறமே அவருடைய உயிர், அன்பே அவருடைய நெறி; பண்பே அவருடைய வாழ்க்கை.

மூட நம்பிக்கை, பகட்டு என்ற இரண்டையுமே முழுவதுமாக வெறுத்தார்.

அவரே புலவர்; அவரே அறிஞர்; அவரே தமிழை முழு துணர்ந்தோர் என உலகமே வியக்கும் வண்ணம் வாழ்ந்து காட்டிய பெருமகனார்.

தமிழின் தொன்மையையும் தனித்தன்மையையும் இலக்கிய வளத்தையும் நிறுவிக் காட்டிய பெருந்தகையாளர். அவருடைய மொழிப்பற்றுக்கு அவரே நிகர் என அறிஞர்கள் வியக்கும் வண்ணம் வாழ்ந்து காட்டினார்.

அரிய நூல்களையெல்லாம் தொகுத்துத் தம்முடைய நூல் நிலையத்தையே ஆராய்ச்சிக் கூடமாக மாற்றிய உழைப்பாளர். பல மொழி நூல்களின் தொகுப்பினை, அரிய பலமொழி அகராதிகளை அவரிடம் காணமுடிந்தது.

ஆற்றல் மிக்க ஒரு சிந்தனையாளர், காட்சிக்கு எளியர், அயராத உழைப்பாளர். கடுஞ்சொல் அறியாத அரிமாநோக்கினராய் விளங்கினார்.

சிறப்பாகத் தமிழ்மொழி, தமிழர் நாகரிகம், தமிழர் பண்பாடு, தமிழர் கலைத்திறன்கள் ஆகியவை குறித்து சிந்தித்த வண்ணமே பொழுதைக் கழித்தார்.

மற்றவர்களுடைய அறிவுப் பசியைத் தூண்டும் வண்ணம், நாடு; மொழியியல், வரலாறு, நாகரிகம் குறித்த கருத்துகளை வாரிவாரி வழங்கினார். கணிப்பொறியின் நினைவாற்றலை (computer memory) அவர் பெற்றிருந்தார்.

விரிந்து பரந்த நெற்றியும் எடுப்பான மீசையும் அவருடைய பெருமிதமான தோற்றத்திற்கு அழகைச் சேர்த்தன.

வாழ்ந்திடவும் வீடறியாக் கொள்கைக்குன்று பாவாணர் என்று பெருஞ்சித்திரனால் போற்றப்பட்டவர்.

*"பசித் தெழுந்த வயிறடக்கிப் பணிந்தெழுந்த*
*மனையாளின் விழைவடக்கி,*
*விசித்தழுத மகவடக்கிச் செந்தமிழின்*
*பகையடக்கி, வீணர்தீங்கை*
*முசித்தெறிந்தான்! தமிழ்ப் பெருமை முழுதுணர்ந்தான்*
*மொய்ம்புகழே யல்லாமல்இற்றைப்*
*புசித்திடவும் சோறறியான். வாழ்ந்திடவும்*
*வீடறியான் மனஞ்சோ ரானே"*

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

- தந்தை பெரியார் தமிழர் குமுகாயத்தைத் தன்னலக்காரர் களிடமிருந்து காத்தார்.

- ஐயா பாவாணர் அவர்கள் தமிழ் மொழியின் தூய்மையையும் தனித்தன்மையையும் பொய்யே புகலும் பகைவர்களிடமிருந்து பாதுகாத்தார்.

**மு. பொன்னவைக்கோ (தமிழ் இணையப் பல்கலைக் கழகம்)**

கருத்தமேனி, சுருண்டமுடி, நிமிர்ந்த நெஞ்சு, தடித்த மீசை, மிளிரும் கண்கள், மிடுக்கான நடை, எடுப்பான தோற்றம், கள்ள மில்லா நெஞ்சம், கடுமையான உழைப்பு, செந்தமிழ் ஆய்வு, சீரிய சிந்தனை, வண்டமிழ்ப் பேச்சு - இத்தனைக்கும் சொந்தக்காரர்-நான் கண்ட மொழி ஞாயிறு தனித்தமிழ் வேந்தர் பாவாணர் ஐயா அவர்கள்.

மொழிஞாயிறு மேடையில் தோன்றித் தம் சொல்லாய்வுக் கதிர்களை அரங்கில் வீசத் தொடங்கினார். அரங்கில் ஊசி விழுந்தால் ஒலி கேட்கும், அப்படியோர் அமைதி. அனைவரும் பாவாணரின் பொழிவில் நனைந்து திளைத்துக் கொண்டிருப்பதைக் காண எங்களுக்கெல்லாம் பெருமகிழ்ச்சியாக இருந்தது.

மாந்தன் தோன்றிய காலத் தொடக்கத்தில் அவன் சைகை மொழியைப் பயன்படுத்தினான் என்றும், மாந்தன் குறிப்பொலி

களுடன் சுட்டொலிகளையுங் கையாண்ட காலத்தில் சொற்கள் பிறந்து தமிழ் மொழி தோன்றியது என்றும் கூறி, அ, இ, உ, என்ற மூவகைச் சுட்டொலிகள் உலக மொழிகள் அனைத்திற்கும் அடிப்படையானவை என்பதை எடுத்துக் காட்டுகளுடன் விளக்கி, தமிழ் உலக மொழிகளுக்கெல்லாம் முதன்மொழியாக இருந்திருக்க வேண்டும் என்ற உண்மையை அவையோர் ஐயமின்றி உணரும் வகையில் தெள்ளிய மொழியில் தெளிவாகக் கூறினார்கள்.

*"தமிழ்க்கெனப் பிறந்து தமிழ்க்கென வளர்ந்து*
*தமிழ்க்கெனப் பயின்று தமிழ்க்கெனப் பயிற்றித்*
*தமிழ்க்கென ஓய்ந்து தமிழ்க்கென ஆய்ந்து*
*தமிழ்க்கென வாழும் தமிழே வாழி"!* - பாவலரேறு

பாவாணர் மறைந்து விடவில்லை. உலகெங்கும் பரவி வாழும் தனித்தமிழ் நெஞ்சங்களில் இன்றும் வாழ்கின்றார். என்றும் வாழ்வார். அவர்தம் வழித்தோன்றல்கள் தமிழின் தூய்மையைக் காப்பார்கள். இணையத்தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள உலகத் தமிழர்கள் பலர் தனித்தமிழ் வளர்ச்சியில் நாட்டங் கொண்டவர் களாக, பாவாணர் அவர்களின் வழித்தோன்றல்களாக, இருப்பதைக் காண்கின்றேன்.

*"வடமொழியும் இந்தியும் மற்றும் வடக்கிற்*
*படுமொழியும் என்ற பலவும் - தடவியே*
*அந்தமிழே ஆதிஎன்னும் தேவநே யர்தாம்*
*எந்தமிழர் எல்லார்க்கும் வேந்து!"* - பாவேந்தர்

**இரா. முத்துக்குமாரசாமி** (சைவ சித்தாந்த நூல் பதிப்புக் கழகம்)

மூவாயிரம் ஆண்டுகள் நெடிதினிது வளர்ந்த தமிழ்மொழி வரலாற்றில் தமிழ் உணர்வு என்பது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தலை தூக்கிற்று. தமிழ்மொழியைப் பிறமொழிச் சொற்கலப்பின்றிப் பயன்படுத்த வேண்டு மென்ற நோக்குடன் பிறமொழிக் கலப்பின்றித் தனித் தமிழால் பாம்பன் குமரகுருபர அடிகளார் 'குமரவேள் பதிற்றுப்பத் தந்தாதி' என்னும் நூறு பாடல்கள் கொண்ட அந்தாதியை இயற்றினார். இதன் பின் 'சேந்தன் செந்தமிழ்' என்ற அரிய தனித்தமிழ் நூலை இயற்றினார். பிறமொழிச் சொல் கலப்பின்றி நூல் எழுத வேண்டுமென்ற உணர்வுடன்தான் இதைப் பாம்பன்அடிகள் இயற்றினார். "1906இல் நான் நாலாட்டைச் சிறுவனாயிருந்தபோதும் அடிகட்குப் பத்தாண்டு முன்பும் அவர்கள் தனித் தமிழ்க் காப்பு நூல் முதன் முதலாக எழுதினார்கள் என்பது மிகமிக மெச்சத் தக்கதே" என்று மொழிஞாயிறு சேந்தன் செந்தமிழைப் பாராட்டுவார்.

தமிழ் உணர்வு, தனித்தமிழ் இயக்கமாக உருவாகக் காரணிய மாக இருந்தவர் பல்லாவரத்தார், பைந்தமிழறிஞர், மறைத்திரு மறைமலையடிகளாரே என்பதை நாடறியும்; நற்றமிழர் அறிவர்.

தனித்தமிழ் இயக்கமெனும் ஈட்டியின் முனை மழுங்காது பார்த்துக் கொண்டவர் அடிகளாரின் அடியொற்றித் தனித்தமிழ் இயக்கத்தில் ஈடுபட்டு வெற்றிகண்டவர் 'மொழி ஞாயிறு' என நாமெல்லாம் வியந்து போற்றும் ஞா. தேவநேயப் பாவாணர் ஆவார்.

பாவாணரும் கழகமும் தனித்தமிழ் உணர்வையும் வடமொழி எதிர்ப்பையும் சற்றுக் கை நழுவவிட்டிருந்தால் பொருள்நிலையில் எவ்வளவோ உயர்ந்திருக்கலாம். கொண்ட கொள்கையை விட்டுப் பொருளை ஈட்டுவதைவிடக் கொள்கைக்காக வாழ்வை ஈகம் செய்வதே சிறப்பு எனப் பாவாணரும் கருதினார். கழகமும் கருதியது.

**மாந்தனின் பிறப்பிடம் குமரிநாடே, தமிழே உலக முதல் உயர்தனிச் செம்மொழி, குமரிநாட்டுத் தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமும் ஆகும், தமிழ் பிற மொழிச்சொல் கலப்பின்றித் தனித்தியங்கும் என்னும் உண்மைகளை நிலை நாட்டுவதே தம் வாழ்நாளின் குறிக்கோள் என்பதைத் தொடக்க முதல் இறுதிவரை பாவாணர் ஒல்லும் வகையிலெல்லாம் தமிழ் மக்களுக்கும் உலகுக்கும் எடுத்துரைத்து வந்தார்.**

செல்விவழி வெளிவந்த வேர்ச்சொற்கட்டுரைகள், தமிழின் தலைமையை நாட்டும் தனிச்சொற்கள் போன்ற கட்டுரைகளின் மொத்தப் பக்கங்கள் 4000வரை வெளிவந்துள்ளன.

**முனைவர் ச. மெய்யப்பன்** (மணிவாசகர் பதிப்பகம்)

இவரின் பேரறிவால், பேராற்றலால், பேருழைப்பால் தனித் தமிழ் இயக்கம் வேர்விட்டு விழுது பரப்பிற்று. பழைய அடையாளங் களை மீட்டெடுப்பதில் மறைமலையடிகள் பொன்னேர் பூட்டினார் பாவாணர் இயக்கம் கண்டார். பெருஞ்சித்திரனார் மக்கள் இயக்கம் ஆக்கினார்.

பெருமக்கள் மூவரின் முயற்சி தனித்தமிழ் களம் கண்டது; போரில் வென்றது, வெற்றி குவித்தது.

> ***"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்***
> ***அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்***
> ***துஞ்சுவதில்லை; எனவே தமிழர் தோளெழுந்தால்***
> ***எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!"***

- பாவலரேறு

தனித்தமிழியக்கம் வாழ்வோடு கலந்தது, வலிமையாக அமைந்தது; வளம் பெற்றது; வெற்றி குவித்தது; தொண்டர்குழு சிறப்பாக அமைந்தது. பல முனைகளில், பல நிலைகளில் தனித்தமிழ் இயக்கம் சுவடு பதித்தது.

எந்த ஒரு தமிழ்ப்பெருமகனும் பெறாத பேற்றினைப் பாவாணர் நூற்றாண்டு விழாவில் பாவாணர் பெற்றார். அவர் எழுத்துகள் அனைத்தையும் வன்தொண்டர் இளவழகன் நற்றமிழ் அறிஞர் நக்கீரன் துணையுடன் வகுத்து தொகுத்து வழங்கியது வரலாற்றுச் சிறப்புடைய நிகழ்ச்சி.

இந்த நூற்றாண்டின் மொழி வரலாற்றில் இலக்கிய வரலாற்றில் மற்ற நிகழ்ச்சிகள் அனைத்தையும் பின் தள்ளி முன் நிற்கும் முதன்மை பெற்றுவிட்டது. இச்சீர்சால் செம்பதிப்பு வரிசை இன்னும் ஒரு நூற்றாண்டிற்கு ஏன் எதிர்வரும் பல நூற்றாண்டுகளுக்குத் தனித்தமிழ் இயக்கத்திற்குக் கிடைத்த படைக்கலன்கள்.

பள்ளித் தமிழாசிரியர்கள் தமிழ்நிலம் முழுவதும் விழா எடுத்துப் பாவாணரை நினைத்துப் போற்றுவதன் வாயிலாகப் பழந்தமிழ் மரபுகளை மீட்டெடுத்துக் காக்கும் பணியில் சிறந்து நிற்கின்றனர். புலவர் குழுவும் தமிழ் அமைப்புகளும் வீறுடன் விழா எடுத்தது குறிப்பிடத்தக்கது.

**அருளாளன்** (ஆசிரியர் தமிழ்ப்பாவை)

நிமிர்ந்த நெற்றியும், அடர்ந்த மீசையும், வட்ட வடிவமான கருப்புமுகமும் மூக்கின் மேல் நின்ற கண்ணாடியும், அந்தக் கண்ணாடிக்கு மேல் விழிகளை உயர்த்திப் பார்க்கும் பார்வையும், அவர் அணிந்துள்ள குப்பாயமும், மடித்துக் கட்டிய வேட்டியும் கண்டு அப்படியே நின்றேன்.

கடலின் ஆழம் போன்று பாவாணரின் ஆய்வுகள் நமக்குக் கிடைத்தன. இது தமிழ் கூறும் நல்லுலகுக்குக் கிடைத்த மிகப் பெரிய பேறு.

முழுகிப் போன குமரிக் கண்டத் தென் கோடியை ஆய்வு செய்து, நில வளமும், நீர் வளமும், உணவு வளமும், பொன் வளமும், மணிவளமும் பழந்தமிழ் நாட்டில் எவ்வாறு சிறந்து விளங்கின என்பதையும் நமக்குத் தோண்டி எடுத்துக் காட்டியவர் மொழி ஞாயிறு அவர்கள்.

"தேவநேயப் பாவாணர் மிகச் சிறந்த அறிஞர். அவர் எழுதிக் குவித் திருப்பது உங்களைப் போன்றோர்க்கன்று எங்களைப் போன்ற பேராசியர்களுக்கு ஆராய்ச்சியாளர்களுக்கு. அதைக் கொண்டு நாங்கள் மாணவர்களுக்குக், கொடுக்கின்றோம்.

அவர் வறுமையில் இருக்கிறார். அவர் எழுதியுள்ள மதிப்பிட முடியாத புத்தகங்களை வெளிக்கொணர வேண்டும்; வருங்காலத் தமிழ் உலகு பயன்பெற வேண்டும். மறைமலையடிகளார்க்குப் பின் அவர்தான் தனித் தமிழ்க் காவலராகத் திகழ்பவர்.

### தமிழும் பன்னீர்ச்செல்வம்

கனித் தமிழைக் காதலித்தார்: வாழ்ந்தார் தமிழாய் தனித் தமிழ்ப் பாவாணர்தாம்!

ஓராண் ஒரு பெண்ணைக் காதலிப்பது போல் மொழி ஞாயிறு. ஞா. தேவநேயப் பாவாணர் தமிழைக் காதலித்தார். அந்தத் தமிழ்ப் பெண்ணின் மீதான காதலால் அவர் தம் வாழ்நாள் முழுதும் அவள் நினைவாகவே வாழ்ந்தார். அவள் காதலுக்காகவே தம் வாழ்க்கையை அவர் ஒப்படைத்தார். காதலியின் அன்பைப் பெறக் காதலன் கொடிய இடர்ப் பாடுகளை எதிர்கொள்வது போலும் கடுந் துன்பங்களை ஏற்றுக்கொள்வது போலும் அவர் வாழ்ந்தார்!

மொழியியல், வரலாறு, இலக்கணம், பண்பாடு, சமயம், மாந்தவியல், தொல்பொருள், அகழ்பொருள் போன்ற அனைத்துத் துறைகளையும் தழுவியது அவர் ஆய்வு. தமிழில் இதுவரை ஒருவரும் முன்வந்து மேற்கொள்ளாத சொல்லாய்வுத் துறையை அவர் மேற்கொண்டார். தமிழ்மொழியின் சொல்லாற்றல் சொல்வளம் ஆகியவற்றை விரிவாக விளக்கியுள்ளார்.

பாவாணர், தமிழ்தான் உலகின் முதன்மொழி என்று மொழி யியல் வராற்றுச் சான்றுகளைக் காட்டி நிறுவினார். மற்ற மொழி களின் துணை யின்றித் தனித்து இயங்கக் கூடியது தமிழ் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டினார். தமிழ்ப் பகைவர் களாலும் மொழி யின் சிறப்பறியா மூடத் தமிழர்களாலும் சிதைக்கப்பட்ட தமிழுக்குப் புத்துயிர் ஊட்டிய மொழி மருத்துவராக விளங்கினார். பிற மொழிச் சொற்கள் எல்லாவற்றையும் மொழி பெயர்த்துக் கொள்ள இயலு மாறு வேர்ச்சொல் வளம் கொண்டது தமிழ் என்பதை விளக்கினார். தம் வீட்டிலும் வெளியேயும் எப்பொழுதும் எவரிடத்தும் வாழ்நாள் முழுமையும் தூய தமிழிலேயே பேசினார்.

உறங்கும் பாவாணரை எழுப்பிக் கேள்வி கேட்டால் அவர் சொல்லும் விடை தூய தமிழில்தான் இருக்கும். அவர் கனவு கண்டால்கூடத் தூயதமிழில் தான் காண்பார் என்று சொல்லலாம். அப்படி அவர் கனவிலும் நனவிலும் அறிவிலும் தனித்தமிழே ஆட்சிசெய்தது.

அவர் கருத்த உருவமும் சிறிது நரைத்த முடியும், பெருத்த மீசையும் எடுப்பான தோற்றமும் கொண்டவராக இருந்தார்.

பிற மொழிச் சொல் ஒன்றுகூடக் கலவாமல் தனித் தமிழில் பேசிய தமிழறிஞர் ஒருவரையும் நான் பார்த்தது இல்லை. அவருடைய பேச்சும், பெருமிதத் தோற்றமும் தமிழிலும், ஆங்கிலத் திலும் வட மொழியிலும் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த புலமையும் அவரிடத்தில் எனக்கு மதிப்பச்சத்தை ஏற்படுத்தின.

பாவாணர் குழந்தை உள்ளம் கொண்டவர். அவர் ஒருவரை நம்பினா ரென்றால் அவர் சொற்படி நடக்கும் குணம் கொண்டவர். வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பும் இயல்பினர். அவருக்கு உலகியல் நடைமுறை பற்றி ஒன்றும் தெரியாது ('நடைமுறை' என்னும் சொல் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்ப நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப உணர்ச்சி வயப்படுவதாலும், நல்லவர் தீயவர் பாகுபாடறிந்து அவர்களுக்கு ஏற்ப வளைந்து நெளிந்து கொடுத்த லும் என்ற பொருளில் ஆளப்பட்டது) உண்மை, நேர்மை, தமிழ் இம் மூன்று உணர்வுகள் மட்டுமே பாவாணர் உள்ளத்தில் நிறைந் திருந்தவ.

அவர் அணிந்திருந்த மூக்குக் கண்ணாடி அழுக்கடைந்து இருப்பதைப் பார்த்தேன். அதைக் கழற்றித் தருமாறு பாவாணரிடம் கேட்டேன் ஏனென்று கேட்காமல் அவர் அதைக் கழற்றிக் கொடுத் தார். அதைத் தூய்மை செய்து நன்றாகத் துடைத்துக் கொடுத்தேன். பாவாணர் மனம் முழுவதும் தமிழின்பாலும் தமிழ் ஆய்வின்பாலும் சென்று விடுவதால் அவர் தம் மூக்குக் கண்ணாடியில் அழுக்குப் படிந்து காணும் பொருள் தெளிவற்றுத் தோன்றுவதைக் கூட அவர் உணர்வதில்லை. நான் அதைத் துடைத்துக் கொடுத்ததும் புதிய கண்ணாடியைப் போட்டுக் கொண்டது போல் அவர் மகிழ்ந்தார்.

அவர் குளிப்பதற்கு மறந்து போயிருந்ததைப் பெருஞ் சித்திரனார் அறிந்துகொண்டார். அவர் அடுப்படிக்குப் போனார். ஒரு தவலையில் நீர் ஊற்றி அடுப்பைப் பற்றவைத்துச் சூடாக்கினார். பிறகு பாவாணரை அழைத்துக் குளிக்கச் சொன்னார். பாவாணர் ஒரு முக்காலியை எடுத்துப் போட்டு அதன்மீது உட்கார்ந்து குளிப்பதற்கு ஆயத்தமானார். அவர் 'காக்கைக் குளியல்' குளிப்பார் என்பதை அறிந்திருந்த பெருஞ்சித்திரனார், என்னைக் கூப்பிட்டார்; வெந்நீரை அவர்மீது ஊற்றச் சொல்லி ஒரு குழந்தையைக் குளிப்பாட்டுவது போல் பெருஞ்சித்திரனார் பாவாணரின் கைகள், கால்கள், பாதங்கள் எல்லாவற்றையும் நன்றாகத் தேய்த்து அழுக்ககற்றினார்.

தமிழ்மொழி ஆய்வில் பாவாணரை விஞ்சிய தமிழறிஞர் ஒருவரும் தமிழகத்தில் இல்லை என்றும்; 'பாவாணர் எழுதிவரும் நூல்கள் வருங்காலத் தமிழகத்திற்கும் உலகத்திற்கும் தமிழின் சிறப்பையும் உண்மை வரலாற்றையும் வெளிப்படுத்தும் என்றும்;

பெரியார் எப்படித் தமிழகத்தில் தலைசிறந்த ஒரு குமுகாயச் சீர்திருத்தக்காரராக விளங்கினாரோ அவரைப் போல் பாவாணர் தமிழ்மொழி தமிழ்வரலாற்றுச் சீர்திருத்தக்காரராக விளங்குகிறார் என்றும் நான் எண்ணினேன்.

"பாவாணர் நீண்டகாலம் உயிர்வாழ வேண்டும்; அவர் ஏராளமான நூல்களைத் தமிழர்களுக்கு இயற்றித் தர வேண்டும், அவர் தமிழர்களுக்கு கிடைத்த விலைமதிப்பற்ற சொத்து".

'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி' தொகுப்பதையே பாவாணர் தம் வாழ்நாள் பணிகளில் தலையாயதாகக் கொண்டிருந்தார்.

பாவாணர் காலமறிந்து உண்பார். தம் உடலுக்கு ஏற்ற உணவை மட்டுமே உண்பார். எவ்வளவு உயர்ந்த உணவாக இருந்தாலும் அல்லது எவ்வளவு சுவையுள்ளதாக இருந்தாலும் அது தம் உடலுக்கு ஏற்றதாக இல்லாவிட்டால் அதை உண்ணமாட்டார். அத்தகைய உணவுக் கட்டுப்பாட்டினால்தான் பாவாணர் தம் அறுபதாம் அகவையைக் கடந்த பின்பும் நல்ல உடற்கட்டோடும் உடல் நலத்தோடும் மிடுக்கான நடையோடும் இயங்கினார்.

பாவாணர் பண்பாட்டைக் காப்பதில் மிகுந்த விழிப்போடு இருந்தார். நல்லொழுக்கத்தை மேற்கொண்டும், நாகரிகத்தைப் பேணியும் தம் வாழ்நாள் முழுவதும் அவர் வாழ்ந்தார். அறிவியலாளரைப் போல் அவர் மொழி ஆய்வில் ஈடுபடுவார். அப்பொழுது அருகில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றி உணரமாட்டார். யாரேனும் அவரை அழைத்தால் உறக்கத்தினின்றும் விழித்தவர் போல் திடுக்கிட்டு பார்ப்பார்.

மண்ணில் புதைந்து வித்தானார் பாவாணர்
எண்ணிலாப் பாவாணர் முளைத் தெழவே!

**புலவர் தி.நா. அறிவுஒளி**

"நின் கை தமிழ்நூல் எழுதுக! நின் வாய் தமிழையேப் பேசுக! நின் மனம் தமிழையே சிந்திக்க! நோய் கொண்டு மெலியனாயின் மருந்துண்டு வலியனாகித் தமிழ் கற்க!" என்று மாகறல் கார்த்திகேயர் தம் மொழி நூலில் எழுதினார்.

தமிழ்க்கடல் மறைமலையடிகளார் 'அறிவுக்கடல்' என்னும் இதழைத் நடத்தித் தனித்தமிழ் ஊழியைத் தோற்றுவித்தார்.

பாவாணர் ஒருவர் தனித்தமிழியக்கத்தை மக்களியக்கமாக்கி முன்னெடுத்துச் சென்றார்.

நட்புக்காகக் கூடத் தமிழ் மாண்பை விட்டுக்கொடுக்க இசையாத பேராண்மை பாவாணரிடம் இருந்தது.

"ஓர் உண்மையான ஆராய்ச்சியாளன் ஒரு நாளும் ஆராயா திருக்க முடியாது. அவன் ஆராயாவிடினும் அவன் உள்ளம் ஆராயும். அதற்குக் கனவென்றும் நனவென்றும் ஊண்வேளை யென்றும் உறக்கவேளை யென்றுமில்லை. சொல்லாராய்ச்சியும் மொழி யாராய்ச்சியும் எனக்கு இயல்பாக இன்பந்தருங் கலைகள்."

வடமொழி, ஆங்கிலம், பிற மொழிகள் கற்றவரும் அவ்வயல் மொழிகட்கு அடிமையாகாமல் தம் தாய் மொழியாம் தமிழுக்கே சிறப்புச் சேர்த்தவர் அறிஞர் பாவாணர். பாவாணரின் பணியின் அருமை பெருமையை இற்றை தலைமுறையினர் உணரவில்லை யேனும் பிற்றை நாளில் பெரும் பயனும் தமிழாக்கமும் பயக்கும் என்பது திண்ணமே. அக்காலத்தின் பணியின் பயன் உணர்வர். உலக முதன்மொழி தமிழே என்றும் தமிழே வட மொழிக்கும், பிற மொழிகளுக்கும் மூலமென்றும் பாவாணர் நாட்டிவிட்டார். இதற்கு மாறான பேராசிரியர், தலைவர், அலுவலர்களை அஞ்சாது கடிந்த தால் கழகக்காலப் புலவர் போலப் பெருமித வாழ்வு வாழ்ந்தார்.

"சொல்லும் பொருள் போல் ஒரு செல்வமே. ஒரு செல்வன் பொருளாற் பெறும் நன்மையை, ஒரு புலவன் சொல்லாற் பெறுகிறான். முன்னோர் ஈட்டிய செல்வத்தைப் பெருக்குதற்குப் பின்னோரும் ஈட்டுவது போல முன்னோர் ஆக்கிய மொழியை வளப்படுத்தற்குப் பின்னோரும் புதுச்சொற்களை ஆக்குதல் வேண்டும்"

பாவாணர் வகுத்த மொழி வழியே யாவரும் ஒழுகின், தமிழர் உய்வர்; உயர்வர்; திண்ணம்.

மொழி நாட்டினும் இன்றியமையாதது. மொழிநலம் காப்போம்.

**இர. திருச்செல்வம்** (மலேசியா)

உலகுக்கு ஒரு ஞாயிறு; அஃது ஒளிஞாயிறு; உலக மொழிக் கெல்லாம் ஒரே ஞாயிறு; அஃது, தமிழென்னும் மொழிஞாயிறு.

புலமக்கள் பொதுமக்கள் என எல்லோர்க்கும் புலப்படுத்தி முற்றிலும் அறிவியல் பாங்கினில் விளக்கி மெய்ப்பித்துக் கால்முள்ள ளவும் ஞாலமீதில் நிலைபெறச்செய்தவர் மொழிஞாயிறு ஞா. தேவ நேயப்பாவாணர் என்னும் ஊழிப்பேரறிஞர் பெருமகனார் ஒருவரே. வழிஞாயிறாகப் பலர் அவர்தம் வழிநின்று இயங்குவது அகல் விசும்பிலுள்ள ஒளி ஞாயிற்றின் வரலாற்றோடு ஒக்கும்.

தன்னொளி விரித்து மண்ணுலகெங்கணும் உயிர்களின் வாழ்க்கையை விளங்கச் செய்துவரும் ஒளிஞாயிறேபோல், தேவநேயம் என்றொரு வடிவில் தமிழென்னும் மொழிஞாயிறும் தன்னொளி விரித்து உலகமுழுதுமுள்ள மொழிகளின் உள்ளுயிர்ப்பை உரங்குன்றாது நிலைசெய்து வருகின்றது.

"என்ன வந்தாலும் எதிர்கொண்டு, என்னுயிர்த் தமிழை ஏற்றமுறச் செய்வேன்! இன்னலுக்கும் இடையூறுகளுக்கும் இரையாகிவிடாமல் அவற்றையும் உரமாக்கிக்கொண்டு முன்னெடுத்துச் செல்வேன்" என்னும் அசைவிலாவூக்கம் உடையவர்கள் இன்னும் சிலர் உளர். அவர்களிடத்தில் ஆக்கம் அதர்வினாய் வரத்தான் போகிறது.

ஆரியக் கும்பல் தங்களின் கருத்துவழித் தலைமைக்குக் கட்டுப்பட்டு நிற்பதைப்போல, இத்தமிழத் தலைவரென்போர் நிற்கவில்லையானால் தமிழினம் தலைநிமிரமாட்டாது. இவ்வுண்மையை உள்வாங்கிக் கொண்ட உணர்வுதான் தமிழர் உறவு - நட்பு - அன்பு-பற்று என்பதற்கெல்லாம் அடிமூலம். பொருள்நயப்பும் பெரும்பெயர் விளம்பர நயப்பும் அல்ல. இந்த விளைச்சலைக் குறிவைத்து எடுக்கப்படும் பாவாணர் நூற்றாண்டு விழாவே அறிவறிந்த தமிழாண்மை விழா.

தேவநேயம் ஆய்வு மட்டுமன்று; அதுவே விடுதலை வழியுமாகும். பாவாணர் கண்டு காட்டிய மொழிநூல் உண்மைகளை உலகெலாம் செல்லிடமெல்லாம் சேர்த்தற்குத் தமிழர்க்குக் கூட்டூக்கம் வேண்டும். உலக இனங்களுக்குக் கூறுமுன் உலகெங்கணுமுள்ள சொந்தத் தமிழினத்துக்குக் கூறிக் கொள்கைக்குறிப்படுத்துதலே முதற்பணி. புதிய திறவுகளையும் அவற்றின் வழி இனிய உறவுகளையும் உலக மொழிநூல் வல்லாரோடு வளர்த்து, தமிழின் தனித்தலைமை, முதன்மை, தாய்மை முதலான தன்னிகர்த்த தனிப் பெரிய இயல்புநலங்களை உணரச்செய்து உலகரனைவரையும் ஒருமையுறச் செய்வதே உண்மையான தேவநேயம் பேணும் நன்னயம் ஆகும். எந்தத் துறைக்கும் தமிழாய்ந்த தமிழர்களே தமிழாக்கம் தரவல்லார்; அல்லாத பிறரெல்லாம் அயல்மரபு வழியே தமிழை நோக்கி அலங்கோலங்களே புரியவல்லார் என்பது மெய்!

**பேரா. அ. இறையன்**

தமிழின வரலாறு உருப்படியாகக் கற்பிக்கப்பட்டால் பாவாணர் அய்யாவின் தொண்டின் அருமை விளக்கமுற்றே தீரும். அவரின் தமிழ்ப் பணி நடவடிக்கைகளை மறுக்கவோ மறைக்கவோ முயலும் எவரும் பெருந்தோல்வியையே தழுவுவர்.

தமிழ்த் தூய்மை பேணும் முயற்சிக்கு ஓர் இயக்க வடிவம் ஈந்தவர் பாவாணர். தமிழ்க் காப்புக்கான வழிகளைப் பாக்களாக்கி அவற்றைத் தமிழ் இயக்கம் என்னும் நூலாகத் தமிழ் மாந்தர்தம் கைகளில் கொடையாக வழங்கியவர் புரட்சிப் பாவேந்தர் என்றால் அத் தமிழ் இயக்கத்தைப் படைத்துக் காட்டியவர் பாவாணர் அவர்களே.

வெறும் சமயம் சார்ந்த - ஆரியப் பண்பாட்டுத் தாக்கத்திற்கு இலக்காகி விட்ட - அடிமைத் தமிழரறிஞராக வழியாமல் தன்மானத் தமிழ்ப் புலமையாளராக அவர் ஒழுகினார்.

**குறிஞ்சிக்குமரன் (மலேசியா)**

மொழிப் பெரும் புலவர் தேவநேயப் பாவாணர் அவர்கள் தமிழ் கூறு நல்லுலகில் மொழித்துறையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாது உயிர்ப்பாடும் முக்கழகமாக இற்றைநாள் இலங்கிவரும் தமிழ்ப் பெருஞ்சான்றோராவர். முப்பத்தைந்து ஆண்டுகட்கு மேலாக முனைவுபெற்றுப் பொதுவாக மொழியியல் ஒப்புவகை யிலும் சிறப்பாகத் திராவிட மொழியிலும் அயர்வின்றி உழைத்து வரும் அறிஞர் பெருந்தகையாவர்.

மொழியியல் துறையின் முதல்வர் பாவாணரெனில் மிகை யாகாது. பாவாணர் அவர்கள் விரிந்த அறிவுத்திறத்தையும் சொல் லுக்குச் சொல் அடிப்படை காணும் ஆற்றலையும் பொருள் காணும் நுண்மையையும் பெற்றிருந்தார்.

சொல்லியல் நெறி முறைகள் அனைத்தையும் 'சொல் லாராய்ச்சிக் கட்டுரைகள்' என்ற நூலில் சீர்பெற விளக்கியுள்ளார். இலக்கணத் துறையில் பாவாணர் அவர்கள் சொல்வதே சட்டமாகி விட்டது. தொல்காப்பியத்தைத் துறைபோகக் கற்றவர்; செறிந்த புலமையர்.

மொழிப் பெரும் புலவர் பாவாணரை நினையுங்கால் அவரது அஞ்சா நெஞ்சமும் ஆற்றல்மிக்க தோற்றமும் தனித்தமிழ் முழக்க மும் நம் நெஞ்சிற் குமிழும். தமிழ்ப் பகைவர் பலர் சளைக்காது தந்த இன்னல் பலவற்றை ஏற்று, எதையும் தாங்கும் உள்ளத்தோடு இனிதமைந்த நெஞ்சுரத்தால் நேர்மை போற்றி அஞ்சாது அருந் தமிழ்த்தொண்டு ஆற்றி வந்தார்.

தமிழும் தமிழினமும் தலைசிறந்து வாழ வேண்டுமென்ற தளராத பெரு நோக்கால் தன்மானங் காக்க அரும்பாடுபட்டார்.

**பேரா. முனைவர் கு. அரசேந்திரன்**

"தமிழுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்றால், அதற்கு நாம் இரண்டு நிலைகளில் அணியமாக வேண்டும். ஒன்று கடின உழைப்பு, மற்றது பொருளிழப்பு".

வறுமையோடும் வயிற்றுப் பசியோடும் எழுபத்தொன்ப தாண்டுகள் இம்மண்ணுலகில் வாழ்ந்த மொழிஞாயிறு ஐம்பதாண் டுகள் தமிழையும் உலக மொழிகளையும் ஒப்பவைத்து ஆய்ந்த மொழிநூற் கதிரவன் சேர்த்துவைத்துச் சென்ற கட்டுரைகள், நூல்கள் அனைத்தும் நமக்குப் பெரும் புதையல்கள் ஆகும்.

வறியோமாய் நாம் வாழ்ந்தோம். தேவபாடையின் பிண நாற்றம் பெரிதென மகிழ்ந்த மூடர்களிடம் நாம் சிக்கியிருந்தோம். தேவநேயரே பஞ்சடைந்த நம் கண்களுக்கு ஒளி காட்டினார். தமிழுக்கு உரிமை படைத்தவராய்ப் பிறந்திருந்தும் தலை குனிந்து தாழ்ந்திருந்த நம் தலையை நிமிர வைத்தார்.

வழக்கிழந்த மொழி சமற்கிருதமே! மக்கள் வழக்கில் எந்தெந்த மொழிகள் உள்ளனவோ அவைதாம் மூலமொழிகள், முந்து மொழி கள். பலப்பல வடபால் மொழிகளில், உள்ளனவற்றை யெல்லாம் வாரிச் சுருட்டிச் சேர்த்துக் கொண்ட மொழி சமற்கிருதமே அல்லாமல் அது வழக்கில் இருந்த மொழி அன்று.

*"சிந்துமணற் பரப்பில் சிற்றில் விளையாடி*
*முந்தை எகுபதியர் மூத்த சுமேரியத்தார்*
*செந்திரு நாவில் சிரித்த இளங்கன்னி"*

என்ற பெருமை பெற்ற நம் தமிழ், உலகை வலம் வந்தது. இந்த உண்மையை, உலகம் தெரியாத மெய்ம்மையை, தமிழே உலக மொழிகட்குச் சாறாக வேராக நீராகப் பரவியிருக்கும் திண்மையைப் பாவாணர் பெருந்தகையே விரித்து விளக்கி உலக மொழிநூல் பேரறிஞர்கட்குப் பேராசானாக மொழிஞாயிறாக நம்மிடையே தோன்றி அறிவுச்சுடர் ஏற்றினார்.

தமிழாய் நம் உயிராய் இயங்கும் நம் அன்னை மொழியின் ஆய்வுக் களத்திற்குள் செல்லும் நமக்கெல்லாம் நம் ஆய்வுப்பசிக் கெல்லாம் தீனி படைக்கும் தகுதியைத் தேவநேயப் பாவாணர் பெற்றுள்ளார்.

**க. தமிழமல்லன்** (ஆசிரியர் 'வெல்லும்தூய தமிழ்')

தேவநேயப் பாவாணர் ஒரு வயிரம் போன்றவர். அவ்வயிரம் தன்னைத் தானே பல நிலைகளிற் பட்டை தீட்டிக் கொண்டது எனக் கூறலாம்.

பன்மொழிப் புலமை, பல்வகை இலக்கியப் பயிற்சி, வரலாற்று வன்மை, சமய ஆராய்ச்சி, வேர்ச்சொல்லாராய்ச்சி, பல்வேறு வட்டார வழக்குகளில் பயிற்சி, சொல்லாக்கம், நடு நிலைமை, துணிவு, தன்னலமின்மை, போராடும் இயல்பு, மானஉணர்ச்சி, நாட்டுப்புற

வியல் பயிற்சி முதலிய பல வகைகளிலும் தம்மைத் தாமே பட்டை தீட்டிக் கொண்ட பெருமை மொழிஞாயிறு பாவாணர்க்கு உண்டு.

அவர் தமிழ்மொழிக்குப் பிறர் வழக்கமாகச் செய்யும் பணிகளில் ஆழ்ந்தாரல்லர்; இலக்கியங்களைப் பலவாராய் எழுதிக் குவித்தாரல்லர்; பட்டி மன்றங்களில் நின்றாரல்லர்.

அவர் மனம் வரலாற்று ஆராய்ச்சியில் தோய்ந்தது, சொற் பிறப்பியலில் ஆழ்ந்தது, தமிழ் மொழியை மீட்கும் பணியில் நிலை கொண்டது.

பிற அறிஞர்களிடமிருந்து பாவாணர் ஆராய்ச்சி மாறு பட்டது; பிறர் சொல்லாத பலவற்றை அவர் சொன்னார். மன்னர் களின் மாட்சிகளைப் பலர் சொன்னபோது அவர்களால் ஏற்பட்ட வீழ்ச்சிகளையும் அவர் எடுத்துரைத்தார். அவர் எழுதிய எல்லா நூல்களிலும் இவற்றைக் காணலாம்.

தமிழியலின் பெருமையை அவர் ஆராய்ந்தார்; கலப்படங் களால் அது மாசுற்ற வகைகளை எடுத்துரைத்தார்; வருங்கால மீட்சியை எண்ணித் திட்டமிட்டார்.

மொழியாலும் ஆட்சியாலும் பண்பாட்டாலும் மதத்தாலும் குமுகாயத்தாலும் அயலாரால் தமிழினம் எவ்வாறு தாழ்ந்தது என்பதை மிகுந்த அக்கறையுடன் ஆய்ந்து எடுத்துக்காட்டினார் பாவாணர். அவ்வத் துறைகளில் மீட்சி பெற்று ஆட்சி பெற வேண்டும். என்னும் வேட்கையுடனே எழுத்துலகில் அவர் இயங்கி னார்.

**பாவலர் கல்லை அருட்செல்வன்**

அருமையானது; எளிமையானது; அழகானது பாவாணரின் வாழ்வு. அவர் தம் ஆய்வுகள் அரிய உண்மைகளை எளிய முறையில் அழகிய உத்திகளில் வெளிப்படுத்தின.

செம்மாந்த செந்தமிழ் வாழ்வு! 'வல்லான் வகுத்த வழி'ப்படி வண்டமிழ் பேணிய வாழ்வு! தன்மானம் கொழுவிய தனிவாழ்வு! உட்பகைக்கு அஞ்சாத உரவாழ்வு!

அவ் வாழ்வினை ஆரியக் குறும்புகள் அசைத்துப் பார்த்தன; அடி வருடிக் கூட்டங்கள் ஆர்த்துப் பார்த்தன; தமிழ் உளறிப் பாசாங்குகள் வேடிக்கை பார்த்தன; வறுமையும் உறுமிப் பார்த்தது.

முகில், மின்னல், இடிகளால் தாக்குறாது எழும் தண்மதிபோல் அந் நுண்மதிச் சான்றோர் புகழ் பூத்தார்.

சொல்லாய்வு, வேர்ச்சொல், கிளைச்சொல், சொற்பொருட் கரணியம், பன்முனை அறிவியல் துறைகளுக்கும் பொருந்திய

இயல்பு... எனப் பல்லாற்றானும் ஆய்ந்து தமிழின் முழுமையான படி மலர்ச்சியை உலகுக்குணர்த்தியவர் மொழி ஞாயிறு பாவாணர்.

எளிதில் புலப்படாத சொற்பொருள் விளக்கம் அவர் நாவினின்று எளிதில் உதிர்ந்தது. தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல் எப்படியேனும் சொல்லுக்குக் காரணம் காட்ட முயன்று முட்டுப்பட்டவர்கள் பாவாணரிடம் குட்டுப்பட்டனர்.

எந்நேரத்திலும் எச்சூழலிலும் தான் மேற்கொண்டிருந்த தமிழாய்வில் உள்ளம் ஒன்றிக்கிடந்தவர் பாவாணர்.

"வடக்கத்தியானையும் வயிற்றுவலியையும் நம்பக் கூடாது"

"ஆயிரம் பாட்டிற்கு அடி தெரியும், ஒரு பாட்டிற்கும் உருத் தெரியாது" அரசின் அரவணைப்புள்ள மொழி ஏற்றம் பெறும் என்பதைச் சுட்டும் போது, "அரசன் முத்தினால் அரம்பை" என்ற பழமொழியை முன்வைக்கிறார்.

"அக்காளைப் பழித்துத் தங்கை அலவை போனாள்", "நண்டு கொழுத்தால் வளைக்குள் இராது" என்றும் நவில்வது நயமிக்கன.

ஒரு கருத்தை மறுத்துத் தம் கருத்தை நிறுவுவதற்கும் பழமொழிகளைத் துணைக் கொள்ளும் பாங்கு பாவாணர்க்கே உரியது.

பாவாணர் 'அருளி'ய செவ்வழி பைந்தமிழ் காத்திடும் படைக் கலனாகும். அவ்வழியில் தமிழர் "தாழ்வுணர்ச்சி நீங்கி வாழ்வுயர்ச்சி காணும்" நிலை எய்துவாராக.

**பறம்பை அறிவன்**

தமிழ்க்கென - தமிழின் மேன்மைக் கென வாழ்ந்தவர். அவர் தம் மொழியியல் தமிழியல் - தமிழியம் ஆனது.

பாவாணரின் வறுமை அவர்தம் அறிவில் இல்லை. அவர் தோன்றிய துறையில் கருவி நூல்களும், ஆய்வுப் பனுவல்களும், ஏந்துகளும் இன்மை ஒருகுறையே. ஆயினும், அவர் தொட்ட ஆய்வின் மூலம் புதிய அறிவூற்றுகள் தோன்றியுள்ளன. ஆய்வும், தேடலும், தமிழின் இன்மை மேன்மையை மேலும் உறுதி செய்கின்றன. இதனால் பாவாணரின் ஆய்வுநெறி உலகிற்குப் புது நெறியாக அறிமுகமாவது உறுதியாகும்.

அகமுரண், புறமுரண் இரண்டையும் அளவறிந்து கையாளும் குமுக அரசியல் முதிர்ச்சி பெறப் பாவாணரிடம் கண்ட அறிவு நேர்மை, உழைப்பு, ஈக வுணர்வு பெற்றவர்களாக நாம் மாறுவோம்.

இளைய தலைமுறை, மூத்த தலைமுறையின் 'முதுசொம்' பட்டறிவு போற்றி எழுவதே பாவாணர்க்கு நாம் செய்யும் கைமாறாகும்.

**க. முருகையன்** (மலேசியா)

பாவாணர் நூற்றாண்டு விழா தமிழினத்தைக் கடைத்தேற்றும் கருத்துக்களமாகும்.

உலகின் மற்ற இன ஆய்வாளர்கள் அனைவரும் தொல் பொருள் ஆய்வின் வழியாக உலக வரலாற்றை வரைந்து காட்ட முயன்று கொண்டிருந்த காலத்தில், மொழிஞாயிறு பாவாணர் ஒருவர் மட்டும் அவர்தம் தொல்மொழி ஆய்வின் வழி உலக வரலாற்றை உருவாக்கிக் காட்டிய ஊழிப் பேரறிஞர் என்பது இவ்வுலகம் ஒப்பும் உண்மையாக உள்ளது. அதன் விளைவாகத்தான் இன்று தமிழகத்தில் மட்டுமல்லாமல் தமிழ்கூறும் நல்லுலகம் எங்கும் அவரின் அரியவற்றிலும் அரியவான ஆய்வுத் திறன்கள் போற்றப் படுகின்றன; பின்பற்றப்படுகின்றன. குறிப்பாக, மலைத்திருநாட்டில் பல்வேறு தனித்தமிழ் இயக்கங்கள் முகிழ்த் திருத்தலும் தனித்தமிழ்ப் பணிகள் துலங்குதலும், இன்று பாவாணர் நூற்றாண்டு விழா மிகச்சிறுடன் நடைபெறலும் பாவாணரின் கருத்துகள் கடல் கடந்த தமிழர் உள்ளங்களையும் வென்றுள்ளது என்பதற்குச் சான்று களாகும். அவ்வகையில் கடந்த 17.2.2001 முதல் திங்களொரு நிகழ்வு என்னும் வரையீட்டில் பாரிட்புந்தார் திருநகரில் பாவாணர் வழி ஆய்வுகளைத் தக்காரைக் கொண்டு நடத்தி வருகிறோம். தொடக்க விழா நிறைவு விழா நீங்கலாக மொத்தம் 15 தொடர் நிகழ்வுகள்; ஒவ்வொரு திங்களுக்கும் தமிழ்ஞாயிறு என்னும் பெயரில் 'தென் மொழி' அமைப்பில் இதழ் ஒன்றும் வெளியிடப்பட்டு வருகின்றது.

பாவாணர் செய்துள்ள அத்தகைய மாபெரும் தமிழ்நெறி மீட்பாக்கங்கள் இத்துடன் நின்றுவிடத் தக்கன அல்ல. இன்னும் பல தலைமுறைகள் திட்டமிட்டு வழி நடத்தத் தக்கவையாகும். 'ஒருநூல் ஒருவழி' என்னும் கருத்துவழித் தலைமையின் கீழ் ஒன்று பட்ட மக்களே கடந்த 2000 ஆண்டுக்கால உலக வரலாற்றில் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள் என்பதைப் பைபிளை ஏற்றுக் கொண்ட கிறித்துவர்களையும் திருக்குரானை ஏற்றுக் கொண்ட இசுலாமி யர்களையும் பார்த்தாலே நமக்குத் தெளிவாகப் புரியும்.

நாம் நம் பிறப்பைப் பீடுசெய்யும் தமிழ்மரபு சார்ந்த கருத்துவழித் தலைமையில் நம்பிக்கை வையாமையும் அதனால் ஒரு பொழுதும் வாழ்வது அறியாமல் ஒன்றையே குறித்து எண்ணித் துணியாமையும், ஒருகோடி எண்ணங்களால் உள்ளுடைவு கொண்டுள்ளமையுமே நம் இழிநிலைக்குக் கரணியம் என்பதை இனநலம் பற்றிக் கருதும் நல்லுணர்வாளர்கள் அனைவரும் ஒப்புவர்.

அகத்து உணர்வினில் கப்பிநிற்கும் காரிருளை அறியாமல், நொந்து நூறாயிரங் கோடியாய்ப் பொங்கும் நுரைப்புகளாக

இருப்பதாலோ, நீள நினைந்து நினைந்து நோவதாலோ மாறப் போவது எதுவுமில்லை; திரப் போவதும் எதுவுமில்லை. இருட்டை நோவதைக்காட்டிலும் அதைப் போக்குவதற்கான அணுவளவான முயற்சியையாவது ஓர் அணுவை நூறாகப் பங்கிட்டால் தேறும் ஒரு கோண் அளவிலான சிறிய ஆற்றலைக் கொண்டு நாம் முயல்வதும் - முயன்று கொண்டிருப்பதும் சாலச் சிறந்ததாகும்.

2000 ஆண்டுக்காலத் தமிழின வரலாற்றின் இருளகற்ற அப்பணிக்காகத் தம்மையே ஒளியாக்கிக் கொடுத்த மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் அதற்காக அனைத்து அடிப் படைத் தேவைகளையும் அதன் ஆழ அகலம் குறையாமல் ஐயம் திரிபற நமக்கு அகழ்ந்தெடுத்துக் கொடுத்துள்ளார்கள். அவற்றைப் பற்றிப் பயன் கொள்ளச் செய்வது தமிழகத் தனித்தமிழ்ச் சான் றோர்களின் தனிப்பெரும் கடனாகும். உலக உருண்டையில், எந்த மூலையில் தமிழன் வாழ்ந்தாலும் அவனைக் காடு மலை மேடு என்றும் ஆட்சி அதிகாரம் என்றும் சட்டம் என்றும் எது பிரித் தாலும் அவனின் பண்பாட்டுத் தேவைகளை ஒருநிலைப்பட்ட தமிழ் நெறியின் வழி வடிவமைத்து வழிகாட்ட வேண்டிய கடமை தமிழகத்துச் சான்றோர்களுக்கே உண்டு.

கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழினத்திற்கு ஏற்பட்டுவிட்ட வீழச்சியின் உச்சத்தை இன்று நாம் தொட்டுத் துய்த்துக் கொண்டிருக்கின்றோம். மதவழிப்பட்டத் தமிழன் தனது தனித்தன்மைபெற்ற தமிழ் நெறிவழித் தன் பண்பாட்டு நெறிமுறை களை வடிவமைத்துக் கொள்ளாமல், அவரவர் சார்ந்த மதவழிப் பட்டே தம் பண்பாட்டு நெறிமுறைகளை வடிவமைத்து வாழ்கின்ற அவலநிலையைப் பார்க்கின்றோம். இதனை உடனே தடுத்து நிறுத்தித் தக்க சீராக்க வழிவகைகளைச் செய்யாவிட்டால், எல்லா மிருந்தும் வாழ்வியல் வடிவம் பெறாததாய்த் தமிழினம் என்ற ஓரினம் வரலாற்றில் மட்டுமே பார்க்கப்படக் கூடிய ஓர் இனமாகி விடும் என்ற அவல நிலையைத் தடுத்துவிட முடியாது.

மொழி - இனம் - சமயம் (மீமிசைநெறி) என்னும் முக்கூறு களையும் உள்ளடக்கிய தமிழ்நெறி என்னும் வாழ்வியல் நெறியைப் பாவாணர் கொடுத்துள்ள ஒளியைக் கொண்டு நிலைப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

நம்புங்கள் - தமிழனால் முடிந்தால், தமிழால் முடியும்.

**க. திருநாவுக்கரசு** (ஆசிரியர் 'சங்கொலி')

பாவாணரின் கட்டுரையில் 'உயிர்ப்பு' மிகுதியாக இருப்பதாக எனக்கு தோன்றியது.

பாவாணரின் கட்டுரைகள் என் மொழி அறிவை விரிவடையச் செய்தன.

பாவாணரிடம் பார்த்தாலும், நின்றாலும், படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும் தொட்டனைத்தூறும் மணற் கேணியாகவே அவர் அறிவு திகழ்ந்தது.

அவர் இன்றில்லை. அவராற்றிய பணிகளின் எச்சமாக அவர்தம் ஆய்வுகள் நம்மிடையே இருக்கின்றன. நாம் அவர்க்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடிக் கொண்டு இருக்கின்ற இந்த நேரத்திலே அவர்தம் ஆய்வுகள் அனைத்தும் மீண்டும் புத்தகங்களாக வெளிவந்துள்ளன. அவரது ஆய்வைப் பரப்பும் பணியை நாம் மேற்கொண்டாலே தமிழன் உரிய அடையாளத்தைப் பெற்று விடுவான். அவர்க்கு நூற்றாண்டு விழா எடுக்கிற நேரத்தில் அவரது ஆய்வைப் பரப்பும் சூளுரையை மேற்கொள்வோம்!

**த. வையை நம்பி**

*"வைய மீன்றதொன் மக்கள் உளத்தினைக்*
*கையி னாலுரை கால மிரித்திடப்*
*பைய நாவை யசைத்த பசுந்தமிழ்*
*ஐயை தாள்தலை கொண்டு பணிகுவாம்"*

எனப் போற்றிப் புகழும் தமிழ், உலக முதன்மொழி, உயர்தனிச் செம்மொழி, மூத்த முதுமொழி, இனிய இளமைமொழி, தூயமொழி, இயற்கை இலக்கண மொழி, புதுமைக் கலைமொழி என்பதைத் தமிழகத்திற்கும் உலகிற்கும் உணர்த்திய ஒப்பற்ற நுண்மாண் நுழைபுலப் புலவர் பாவாணர்.

அரிய பல ஆக்கம் படைத்துத் தமிழ்மொழி, தமிழுடன், தமிழ் நாட்டின் நெடுங்காலத் தேவையை அடைய அடிப்படையானவர் பாவாணர். ஆய்வில் மட்டும் அன்றி ஏற்ற இலக்குகள் செயல் வடிவம் பெற வினையாண்மை கொண்ட இயக்க நிலையிலும் முனைப்புற்று எழுந்தவர் பாவாணர்.

தன்னல நோக்கற்றுத் தமிழ்நல நோக்கையே முதன்மையாகக் கொண்ட பெருந்தகையாளர்; பட்டம், பதவி, பாராட்டு எதையும் தேடாதவர்; தேடி ஓடாதவர் பாவாணர்.

தமிழ்த் தேசிய இனக் கட்டுமானத்திற்கு அடித்தளமானவர். தமிழிய மனப்பான்மையைத் திறம்பட வளர்த்தவர். அருந்தமிழ்ப் பணியைப் பெருந்தவ முயற்சியை மேற்கொண்டு செயலாற்றிய கொள்கைக் குரிசில் பாவாணர்.

உலக நாகரிகப் பண்பாட்டு வரலாற்றில் தலைசிறந்த தலைக் கழக முத்தமிழர் வாழ்வு இடைக்கழகக் காலந்தொட்டு ஆரியத்தின்

நுழைவால் தாக்குண்டு சீர்குலையத் தொடங்கியது. கடைக்கழகக் காலத்தில் அது தொடர்ந்தது. இன்று மொழி, இனம், நாடு மூன்றும் அடையாளம் இன்றி உள்ளன.

பல்வேறு சீர்திருத்த மறுமலர்ச்சி இயக்கங்கள் தோன்றின. பன்மொழிப்புலவர் பாவாணர் தமிழ்மொழி, இன, நாட்டுப் பெருமைகளை உண்மைச் சான்றுகளுடன் ஆராய்ந்து நிறுவினார்.

பாவாணர் தம் ஒப்பியன் மொழிநூலில் மாந்தன் தோன்றியது குமரி நிலப்பகுதி என்பதையும் தமிழ் உலக முதற்பெருமொழி என்பதையும், தமிழோடு பிறமொழிகள் ஒவ்வாமைக்குக் காரணங்கள் எவை என்பதையும் விளக்குகிறார்.

தமிழ்மொழி என்று தொடங்கி இனம், ஆட்சி, அரசு, நாடு என்று தனி உணர்ச்சி பொங்கிப் பெருகுவதை அரசு தடைச் சட்டம் இட்டுத் தடுத்திட முனைகிறது. ஆரியப்பார்ப்பன மாயை என்ற நிலையையும் நினைப்பையும் சுட்டிய பேரறிஞரின் எழுச்சி மொழிகளை மறந்த தமிழினமே விடுதலை பெற உழைப்பாய்! "கொலை வாளினை எட்டா மிகு கொடியோர் செயல் அறவே" என்ற பாவேந்தரின் வரிகளை - "தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்னும் நாமக்கல்லாரின் வரிகளை மறந்து அடிமைப்பட்டு இழிவுபெற்ற மொழியினராய்ச் சாதியின ராய்ப் பழிபெற்றுப் பாழாகும் தமிழினமே இனநலம் பேணிட நாட்டுரிமை காண எழுச்சி பெற்று முனைப்புற்று வினையாற்று வோம்.

தமிழ்க்கடல் மறைமலையடிகளார், இனமானத் தந்தை பெரியார், பாவேந்தர் பாரதிதாசனார், மொழிஞாயிறு பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார், பேரறிஞர் அண்ணா போன்ற ஆன்றோரும், சான்றோரும் மூட்டிய தமிழ்மொழிப் பற்றுத் தீப்பற்றட்டும் - படைநடக்கட்டும்! தமிழ் வாழட்டும்! தமிழ் வளரட்டும்! தமிழ் வெல்லட்டும்!

**பேரா. இரா. மதிவாணன்**

பாவாணர் இலக்கண நிறைகடல்; மொழிநூல் கலங்கரை விளக்கம்; தமிழ்ப் பகைவர்க்கு அரிமா; பண்பாளர்க்கு இளந் தென்றல். அவர் வாழ்ந்த வீடு தமிழன்பர்க்குத் தமிழ்த் தாயின் கோயில்.

தமிழ் உலகமொழிகளுக்குத் தாய் என்னும் கொள்கையை நிலைநாட்டுவதே அவர் வாழ்வின் குறிக்கோளாய் இருந்தது.

உலகில் இதுவரை வந்துள்ள சொற்பிறப்பியல் அகரமுதலி கள், சொன்மூலம் மட்டும் காட்டி நிற்கின்றன. பாவாணரின் அகர

முதலி சொன்மூலத்துக்கு மூலமான ஆணிவேர், பக்கவேர் சல்லிவேர்ச் சொற்களையும் காட்டும் சிறப்புடையது.

**முனைவர் கு. திருமாறன்**

வேறு எந்தத் தமிழறிஞர்க்கும் இல்லாத அளவில் சாதி கடந்து, மதம் கடந்து ஆசிரியர் - மாணவர் என்ற உறவுகூட இல்லாத தமிழர் வாழ் நிலப்பரப்பெல்லாம் பாவாணர்க்குத் தமிழுணர்வாளர்கள் தாமே முன்வந்து விழாவெடுத்து மகிழ்ந்ததும் மகிழ்வதும் தமிழகம் இதுவரை கண்டிராத புதுமை.

பல்கதிர் விரிக்கும் சுடரொளி ஞாயிறு உலகைச் சூழ்ந்த இருள கற்றும். ஞாயிற்றுக்கு எவரேனும் ஒளிதரமுடியுமா? முடியாதன்றோ? அவ்வாறே மொழிஞாயிறு பாவாணரும் அறிவுச்சுடர், தமிழையும் தமிழரையும் சூழ்ந்த இருளகற்றிய தன்னொளி ஞாயிறாகத் திகழ்ந்தார் என்பது உண்மை; முற்றிலும் உண்மை.

**புலவர். கி.த. பச்சையப்பன்**

எண்ணிலடங்கா இடையூறுகளில், இன்னல்களில், வறுமைத் துன்பத்துள் ஆழ்ந்திருந்தபோதும் உள்ளந் தளராமல், "சொல் லாராய்ச்சியும் மொழி யாராய்ச்சியும் எனக்கு இயல்பான இன்பந் தரும் கலைகள்" என எழுதப் பாவாணரைத் தவிர வேறெவர் துணிந்து எழுத உள்ளார்?

**முனைவர் இ. சுந்தரமூர்த்தி**

தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகளார்க்குப் பின் உலகத் தமிழ்க் கழகம் கண்ட பாவாணர் ஓர் அறிவு இயக்கமாகவே விளங்கினார். மறைமலையடிகளார் அறிவுக் கடலாகவும் பாவாணர் அறிவு இயக்கமாகவும் விளங்கினர் என்று கூறலாம். மொழி யாராய்ச்சி, சொல்லாராய்ச்சி, வரலாற்று ஆராய்ச்சி, பண்பாட்டு ஆராய்ச்சி எனப் பல்துறைகளிலும் ஆராய்ந்து தன் தனித்த அடையாளத்தைப் பதித்தவர் பாவாணர்.

**மா.செ. தமிழ்மணி**

பன்மொழிப் புலமையும் ஆய்வும் அறிவியல் ஓர்மையும் உடைய பாவாணரின் தனித்தமிழ் இயங்குநிலையே இன்றைய தனித்தமிழ் இயக்கங்கட்கு அடித்தளம் என்பதை எதனுடன் ஒப்பிடலாம் எனின் "தமிழரின் தலைநிமிர்ந்த வாழ்வு தமிழால்தான்" என்பதற்கு ஒப்பிடலாம்.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| அயலகத் தமிழர்களின் பாராட்டுரை ... | v |
| அறிமுகவுரை ... | vii |
| பதிப்பாசிரியர் உரை ... | xi |
| பதிப்புரை ... | xxvi |
| பெருந்தவப் பேராசான் ... | xxxi |
| **நூல்** | |
| 1. குரலே சட்சம் ... | 1 |
| 2. குரல் சட்சமே மத்திமமன்று ... | 6 |
| 3. நன்னூல் நன்னூலா? ... | 13 |
| 4. நன்னூல் நன்னூலா – மறுப்பறுப்பு ... | 24 |
| 5. சேரலாதன் பெருஞ்சோறு வழங்கியது பாரதபடைகட்கே ... | 30 |
| 6. பேரா. தெ.பொ.மீ. தமிழுக்கதிகாரியா? ... | 46 |
| 7. தெ.பொ.மீ.யின் திரிபாராய்ச்சி ... | 75 |
| 8. 'பாணர் கைவழி' மதிப்புரை (மறுப்பு) ... | 115 |
| 9. சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் மதிப்புரை மறுப்பு ... | 128 |
| பாவாணர் வாழ்க்கைச் சுவடுகள் ... | 136 |
| தாய்மொழிப்பற்றே தலையாயப்பற்று ... | 142 |
| பாவாணர் பொன்மொழிகள் ... | 144 |

# மறுப்புரை மாண்பு

# (1)
# குரலே சட்சம்

இயற்றமிழுணர்ச்சி போன்றே இசைத்தமிழுணர்ச்சியும் மிக்குவரும் இக்காலத்தில், இசைத்தமிழைப் பலரும் பலவாற்றால் தத்தமக் கிசைந்தவாறு ஆராய்வது தக்கதே. ஆனால், ஒரு படத்தைத் தலைகீழ்த் திருப்பிப் பார்ப்பதுபோல், முதனூலை, வழிநூலாகவும், வழிநூலை முதனூலாகவும் பிறழக்கொண்டு ஆராய்ச்சி நடாத்துவது ஒரு சிறிதும் தக்கதன்று. முத்தமிழில் எத்தமிழை ஆராயினும் முன்னதாக இன்றியமையாது அறிய வேண்டிய உண்மைகள் மூன்றுள. அவை தமிழும் தமிழரும் தோன்றியது குமரிநாடென்பதும், ஆரியர் வருமுன்னரே தமிழர் பல துறையிலும் முழுநாகரிக மடைந்திருந்தன ரென்பதும், தமிழர் அல்லது திரவிடரிடத்தி னின்றே ஆரியர் நாகரிகத்தையடைந்தன ரென்பதுமாம். ஆரியர் வருமுன்னரே தமிழ் முத்தமிழாய் வழங்கியதாதலின், ஒருவர் எத்துணைக் கலைபயில் தெளிவும் ஆராய்ச்சி வன்மையும் வாய்ந்தவ ரெனினும், ஆரிய வேதங்களை இசை முதனூலாகக் கொண்டு ஆராயின், விளக்கின்றிப் புத்திருள் வழி போவார் போல் இடர்ப்படுவாராவர். தமிழ்க் கலைகளையும் நூல்களையும் வடமொழியில் பெயர்க்கும்போது குறியீடு, பாகுபாடு, தொகையீடு முதலியவற்றை இயன்றவரை மாற்றி வழிநூலையே முதனூலாகக் காட்டுவது ஆரியர் வழக்கம்.

'தமிழ்ப்பொழில்' 17ஆம் துணர் 4ஆம் மலரிலிருந்து இசைத் தமிழைப்பற்றி விபுலானந்த அடிகள் எழுதிவந்த ஆராய்ச்சிப் பகுதிகளிற் சிலவற்றைப் படித்துப் பார்த்தேன். அவற்றால், அவ் வாராய்ச்சி முதலி லேயே கோணியதாக என் சிற்றறிவிற் கெட்டிற்று. உடனே இசைத்தமிழ்த் தோற்றத்தை யானே ஆராயத் தொடங்கினேன். அதன் பலனாகக் குரலே சட்சம் எனத் தோன்றுகின்றது. ஆயினும், இதை அறிஞர் ஆராய்ந்து உண்மை காணுமாறு இங்கு வரையலானேன்.

## குரலே சட்சம் என்பதற்குச் சான்றுகள்

### 1. தன்மத நிறுத்தல்

(1) *ஏழிசை வரிசையில் குரல் முதலிற் கூறப்படுதல்.*

இதுகாறும், எத் தமிழ்நூலினும், **குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம்** என்ற வரிசையிலேயே ஏழு சுரங்களும் கூறப்படு கின்றன.

(2) மத்தளத்திற்கு வலக்கண் குரலென்றல்

சிந்தாமணியில், 675ஆம் செய்யுளுரையில்.

"இடக்கண் இளியாய் வலக்கண் குரலாய்
நடப்பது தோலியற் கருவி யாகும்"

என்பது மேற்கோள். தண்ணுமை, முழவு, மத்தளம், மிருதங்கம் எனப் பலவாறு சொல்லப்படும் ஓரினத் தோற்கருவிகளில், தொன்றுதொட்டு வலக்கண்ணே சட்சமா யிருந்துவருகின்றது.

(3) குரலை முதற்றான மென்றல்

11ஆம் புறப்பாட்டில், 'குரல் புணர்சீர்' என்னுந் தொடருக்கு "முதற் றானமாகிய குரலிலே வந்து பொருந்தும் அளவையுடைய பாட்டை" என்பது பழையவுரை.

(4) கேள்விச் சுரம்(சுருதி) இயல்பாய்ச் சட்சமாயிருத்தல்

எவர் பாடினும் இயல்பாய்ப் பாடும்போது மத்திமமன்றிச் சட்சமே சுருதியாயிருத்தலின், அதனையே முதற் சுரமாக நம் முன்னோருங் கொண்டிருக்க வேண்டும்.

(5) குரல் என்னுஞ் சொல் தொண்டையையும் அதிற் பிறக்கும் ஓசையையுங் குறித்தல்

குல் > குர் > குரல். குலவு = வளை. L. *curvus*, E. *curve*. குரவை = வட்டமாக நின்று ஆடுங் கூத்து. E.,L. *chorus*, Gk. *choros*, orig . a dance in a ring. குரல் = வளைந்த துளை, துளையுள்ள தொண்டை, தொண்டையிற் பிறக்கும் ஓசை. ஒ.நோ: வளை = குழி. தொண்டை = தொளையுள்ளது. (தொள் + தை).

Dan. *kroc*, E. *craw*, the throat of fowls, Dan. *kroe*, Ger. *kragen*, Scot. *craig*, the neck, E. *crop*, the craw of a bird, A.S. *crop*, Dut. *crop*, a bird's crop.

எல்லா ஓசையுங் குரலெனப்படுமேனும், இயல்பான கேள்வி யிசையே (சுருதி), குரலென்னுந் தொண்டைப் பெயராற் கூறப்படுதற் கேற்றல் காண்க.

(6) குரலே சட்சமாக மாபெரும் புலவர் ஆபிரகாம் பண்டிதர் கொண்டமை

இசைத்தமிழ்க் கடலை (சாகரத்தை)த் தனிப்படக் கடைந்து 'கருணாமிர்தம்' என்னும் அரிய அமுதையெடுத்து நாம் உண்ண வைத்த காலஞ்சென்ற இராவ்சாகிபு ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் இசை யாராய்ச்சி நூலில், இரண்டொரு சிறு சருக்கல்களிருப்பதாகத் தெரியினும், குரலிசையைப்பற்றிய கொள்கை வலியுறுவதாகவே தோன்றுகின்றது.

2. பிறன்மத மறுத்தல்

(விபுலானந்த அடிகள் குரல் மத்திமம் என்று கூறுவதை மறுப்பது.)

(1) கூற்று:

"ச ரி க ம ப த நி என்னும் ஏழு சுரங்களுக்கும் பொருந்திய சுருதிகள் 4, 3, 2, 4, 4, 3, 2 ஆகும்.

"குரல்துத்தம் நான்கு கிளைமூன் றிரண்டாங்
குரையா உழைஇளி நான்கு - விரையா
விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார்
களரிசேர் கண்ணுற் றவர்"

என்றமையின், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழும் இளிக் கிரமத்திலே, 4, 4, 3, 2, 4, 3, 2, என அலகு பெற்று நின்றன. இவைதமையே இளி முதலாக இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழையென நிறுத்துமிடத்து அலகுகள் 4, 3, 2, 4, 4, 3, 2 என நிரல் பெறுதல் காண்க.

மறுப்பு: முதலாவது, அலகுகளே இன்னும் இத்தனை யென்று திட்ட மாகவில்லை. அலகு மொத்தம் 24 என்றும், 22 என்றும் இருவேறு கொள்கைகள் இருந்துவருகின்றன. இரண்டாவது, பண்ணுக்கேற்றபடி அலகுப் பகுப்பு வேறுபடுவதாகத் தெரிவதால், ஒரு பண்ணுக்கு வகுத்த அலகு முறையைப் பொதுமைப்படுத்துவது பொருந்தாது. மூன்றாவது, இசைத்தமிழ் முதனூல்கள் அழிந்தபின், ஆரிய வழிநூல்களைத் தழுவியும் தமிழிசை நூலும் நூற்பாவும் தோன்றியிருக்கலாமாதலின், தமிழிலுள்ள நூலெல்லாம் தனித்தமிழ்க் கொள்கைகளைக் கூறுபவையே யென்று கொள்வதற்கும் இடனின்று.

(2) கூற்று:

| | (வடநூல்) | | (தமிழ்நூல்) | | | |
|---|---|---|---|---|---|---|
| | நாரத சிட்சை | சங்கீத ரத்தினாகரம் | பிங்கலந்தை | | திவாகரமும் | சூடாமணியும் |
| ச | - மயில் | மயில் | குரல் | ம | வண்டு | வண்டு |
| ரி | - பசு | சாதகம் | துத்தம் | ப | கிளி | கிளி |
| க | - ஆடு | ஆடு | கைக்கிளை | த | குதிரை | குதிரை |
| ம | - கொக்கு | கிரௌஞ்சம் | உழை | நி | யானை | யானை |
| ப | - குயில் | குயில் | இளி | ச | குயில் | தவளை |
| த | - குதிரை | குதிரை | விளரி | ரி | பசு | பசு |
| நி | - யானை | யானை | தாரம் | க | ஆடு | ஆடு |

இருஷபம் (விளரி), பசு, காந்தாரம் (தாரம்), ஆடு, தைவதம் (கைக்கிளை), குதிரை, நிஷாதம் (உழை), யானை என்பன இருமொழி மரபுக்கும் ஒத்துநின்றன.

மறுப்பு: முதன்முதல் யாழிற் பல நரம்புகளைக் கட்டி மீட்டியபோது, கீழ்க் குரலோடொத்த மேற்குரலையும் அவற்றுக் கிடையிலுள்ள பிற சுரங்களையுங் கண்டு ஏழிசைகளை யறிந்தார்களேயொழிய, மேற்கூறியவாறு மயில் பசு முதலிய பறவை விலங்குகளின் ஓசைகளை ஒருங்கேயோ தனித் தனியோ கேட்டறியவில்லை. ஏழிசைகளைப் புள்ளொடும் விலங்கொடும் இசைத்துக் கூறுவது, புள்நூலையும் குறிநூலையும் ஒட்டிய கற்பனைக் கொள்கையாகவும் இருக்கலாம். இவ்வாறே, பிற்காலத்தாரும், எழுதீவு, எழுமுனிவர், எழுமரபு, ஏழாறு, எழுதேவதை, எழுநிறம் முதலியவாக ஏழென்னுந் தொகைபெற்ற பொருள்களோ டெல்லாம் தத்தம் விருப்பிற்கும் உன்னத்திற்கும் ஏற்றவாறு ஏழிசையை இசைத்துக் கூறுவாராயினர். இக் கூற்றெல்லாம் இசைநூலோடு எள்ளளவும் தொடர்புற்றவல்ல.

குரலை மத்திமமாகக் கொண்டு, இருமொழி நூல்களிலும் கூறப்பட் டுள்ள புள் விலங்குகளை ஒப்புநோக்குமிடத்தும் ரி க த நி என்னும் நாற் சுரங்கட் குரியவையே ஒத்திருக்கின்றன; ஏனை முச்சுரங்கட்கும் ஒவ்வ வில்லை. குரலைச் சட்சமாகக் கொண்டு நோக்குமிடத்தும், இருமொழியிலும் பஞ்சமத்திற்குக் கூறிய பறவை (குயில்) ஒத்திருக்கின்றது. இனி,

"சங்கு குயில்மயில் யானை புரவி
செங்கா லன்னம் காடையிவற் றோசை"

என்னுங் கல்லாட மேற்கோளில், வடநூல்களிற் கூறப்படாத மூன்றும் தமிழ் நூல்களிற் கூறப்படாத நான்குங் கூறப்பட்டுள்ளன. இதனால், புள் விலங்குக் குறிப்பைக்கொண்டு ஒரு கொள்கையை நிறுவ முடியாதென்பது போதரும்.

**(3) கூற்று:**

"குரலது மிடற்றிற் றுத்த நாவினிற்
கைக்கிளை யண்ணத்திற் சிரத்தி னுழையே
இளிநெற் றியினில் விளரி நெஞ்சினில்
தார நாசியிலை தம்பிறப் பென்ப"

எனக் கூறியிருப்பதை வடமொழி நூல்கள் கூறும் பிறப்பிடங்களோடு ஒப்பவைத்து நோக்குமிடத்து, குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்னும் ஏழும் **ம ப த நி ச ரி க** வாம் என்பது தெளிவாகின்றது.

மறுப்பு: மேற்கூறிய நூற்பாவில், குரலுக்குக் கூறிய இடந்தவிரப் பிற வெல்லாம் உடல்நூற்கும் ஒலிநூற்கும் ஒவ்வாவென்பது, கண்ட அல்லது கேட்ட மட்டிலேயே தெள்ளத்தெளிவாம்.

இனி, முற்கால யாழெல்லாம் ஒருதொகை நரம்பினவும் ஒரு திறத்தவுமல்ல. சிலவும் பலவுமான நரம்புகளைக் கொண்ட பல யாழ்களில், சில குரலிலும் சில உழையிலும் சில இளியிலும் சில தாரத்திலும் தொடங்கின. உழையில் (மத்திமத்தில்) தொடங்கிய கோவையைச் சில பண்ணுக்குக் குரன் முதலதாகக் கொண்டு வாசித்தனர். இதனால், ஒரே

கோவை (மேளம்) இசை வகையால், ஒன்றும் இடவகையால் ஒன்றுமாக இருவேறுபட்டு, குரலுக்குக் கூறியதை மத்திமத்திற்கும் மத்திமத்திற்குக் கூறியதைக் குரலுக்குமாக மயங்கக் கொண்டனர்.

பண்ணுக்கேற்றபடி எந்தச் சுரத்தையுங் குரலாகக்கொண்டு வாசித்ததை, 'குரல் குரலாயது', 'துத்தங் குரலாயது', 'கைக்கிளை குரலாயது' முதலிய தொடர்களாலுணர்க.

**(4) கூற்று:**

"இளி நரம்பிற்குப் 'பட்டடை' என ஒரு பெயருண்டு. "வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்தாங்கு" (அரங்கேற்று காதை, 63) என்பதற்கு அடியார்க்குநல்லார் கூறும் உரையினை நோக்குக. 'எல்லாப் பண்ணிற்கும் அடிமணையாதலின்' இளி இப் பெயர் பெற்றது. 'ஷட்ஜம்' என்னுஞ் சொல்லும் ஏனை ஆறு சுவரமும் பிறத்தற்கு இடமாகியது என்னும் பொருளினைத் தரும்.

மறுப்பு: ச-ப என்னும் சுரப்பிடிப்பே பண்களுக்கெல்லாம் அடிப்படையாதலின், பஞ்சமம் (இளி) 'பட்டடை' யென்றும், 'வண்ணப் பட்டடை' யென்றுங் கூறப்படுவதாயிற்று. பல பண்ணுச் சக்கரங்கள் ச-ப முறையில் இயங்குவதை அடியார்க்குநல்லா ருரையிலும் கருணாமிர்த சாகரத்திலுங் கண்டுகொள்க.

"தாரத்துட் டோன்றும் உழைஉழை யுட்டோன்றும்
ஓருங் குரல்குரலி லுட்டோன்றிச்...சேரும் இளி...."

என்றதும் இம் முறைபற்றியே.

இனி, இதன் விரிவை, ஆபிரகாம் பண்டிதனார் மகனார் வரகுண பாண்டியனார் எழுதியுள்ள இசைத்தமிழ் விளக்கத்திற் கண்டு தெளிக.

"காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே."

(இக் கட்டுரையிற் பெரும்பகுதி எனது 'இசைத்தமிழ்ச் சரித்திரம்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.)

– "செந்தமிழ்ச் செல்வி" கடகம் 1943

## ②
## குரல் சட்சமே; மத்திமமன்று

1. தம் மறுப்பில் விபுலாநந்த அடிகளைப்பற்றி முதலிற் குறிப்பிடும் போதே, "பழந்தமிழிசை மரபினை ஆராய்தலையே தமது வாழ்க்கை நோக்கமாகக் கொண்டுழைத்துவரும் அருட்டிரு விபுலாநந்த அடிகளார்" என்று கூறியிருக்கிறார் நண்பர் வெள்ளைவாரணர். அடிகளார் பல ஆண்டுகளாகத் தமிழிசையை ஆராய்ந்து வருவது தமிழுலகனைத்தும் அறிந்ததே. ஆனால், பிறர் தமிழிசையை ஆராயவில்லை என்பது இதனால் எங்ஙனம் பெறப்படும்? யான் இயற்றமிழில் இறங்கிய அளவு இசைத்தமிழில் இறங்காவிடினும், சென்ற பன்னீராண்டுகளாக என்னாலியன்றவரை இசைத்தமிழையும் ஆராய்ந்து வருகிறேன் என்பதையும், நால்வகை இசைக் கருவிகளும் என்னிடமுள என்பதையும், ஒவ்வொரு வகையிலும் ஒன்றேனும் ஓரளவு இயக்குவேன் என்பதையும், அச்சில் முடிகல (கிரௌன்) அளவில் 200 பக்கம் வரும் இசைத்தமிழ்ச் சரித்திரம் என்னும் நூலையும் சென்ற ஆண்டிலேயே எழுதி முடித்தேன் என்பதையும் நம் நண்பர் அறியக்கடவர். ஆனால், இதுவரை சொற்பொழிவு வாயிலாகவோ கட்டுரை வாயிலாகவோ சிறிதும் ஆரவாரம் செய்திலேன். ஆயினும், என்னோடு நெருங்கிப் பழகிய சில நண்பருக்கு எனது சிற்றளவான இசையாராய்ச்சி தெரியாமலிருந்திருக்காது. மேலும், எத்துறை ஆராய்ச்சியாயினும், அது நெறிமுறையும் உண்மை முடிபும்பற்றிப் போற்றப்படுமே யன்றி அளவும் உழைப்பும்பற்றி மட்டும் போற்றப்படாது.

2. நம் அடிகளுக்குமுன் இசைத்தமிழை ஆராய்ந்தவ ரெல்லாரும் இயல்நூற் பயிற்சி இசைப் பயிற்சி இவ் விரண்டுள் ஒன்றே யுடையார் என்று குறித்துள்ளார் நம் நண்பர். காலஞ் சென்ற ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் இவ் விரண்டிலும் இணையறத் தேர்ந்தவர் என்பது வெள்ளிடையாதலின், அவரிடத்து இக் குறையை ஏற்றிக் கூறுதல் நன்றிக்கேடும் புறன் பழிப்புமே யன்றி வேறாகாது. மேலும், இவ் விரு பயிற்சியோடு சொல்லாராய்ச்சியும் இன்றியமையாதது என்பதை நம் நண்பர் அறிவாராக.

3. அடிகள் தமிழிசை மிகத் தொன்மை வாய்ந்தது எனக் கூறி யிருப்பது உண்மையே. ஆனால், துத்தம் என்னும் சுரப்பெயர் உதாத்தம் என்னும் வடசொல்லினின்று வந்திருக்கலாம் என்றும், யாழ் வேறு வீணை

வேறு என்றும், சுரத்திற்கு ஒரு நரம்பாகக் கட்டி எழீஇய யாழ் தமிழரது என்றும், ஒரே நரம்பில் பல சுரம் எழூஉம் வீணை ஆரியரது என்றும் கூறியிருப்பது, தமிழ் நாகரிகத்திற்கும் இசைத்தமிழுக்கும் உண்மைக்கும் மாறாம். வீணையென்னும் பெயர் வேறுபாட்டானேயே யாழ் வேறென்று கொள்வது, விருத்தாசலத்தின் வேறு பழமலை(முதுகுன்றம்) என்று கொள்வதே யாகும்.

4. கரந்தைத் தமிழ்க் கழகத்தினரால் அடிகளார் யாழ்நூல் அண்மையில் வெளியிடப்படும் என்று அறிவிக்கிறார் நண்பர். இது இக்காலத்தில் தமிழைப் போற்றி உண்மையை யெழுதுபவர்க்கு வெளியீட்டு வசதியில்லை யென்பதைத் தவிர வேறொன்றையும் தெரிவிப்பதாய்த் தெரியவில்லை. யாமும் காலம் வாய்க்கும்போது எம் நூல்களை வெளியிடுவோம் என்று கூறுவதல்லது வேறென் சொல்லக் கடவேம்! நூல்களைக் கண்டு மயங்குவதோ தெளிவதோ படிப்பார்க்கே தெரிந்துவிடும்.

5. ஏழிசை முறைக்கும் யாழ்நரம்பு முறைக்கும் வேறுபாடு தெரியாமல், முன்னதற்கு 'உழைமுதற் கைக்கிளை யிறுவாய்க் கட்டி' என்பதைச் சான்று கூறுகிறார் நம் நண்பர். எல்லா நூல்களிலும் எப்போதும் ஏழிசை குரல் முதலவாகவே கூறப்படுமென்றும், யாழின் நரப்புமுறை, மரபையும் வாசிப்பாரின் ஆற்றலோடு கூடிய விருப்பத்தையும் பொறுத்த தென்றும் நம் நண்பர்க்கு அறிவுறுத்துகின்றேன். அதோடு சிலப்பதிகாரத்தை மறுபடியும் ஒருமுறை படிக்கத் தூண்டுகின்றேன். இவர் மயக்கப்படியே யாழ் நரப்புமுறையை ஏழிசை முறையாகக் கொள்ளினும், ஏழிசைகள் இளிமுதல என்னும் இவர் கொள்கை யழிந்து ஒவ்வோரிசையும்(சுரம்) ஏழிசைக்கு முதலாம் என்று பெறப்படுதல் காண்க.

"எழுவகை நிலமாவன: ச ரி க ம ப த நி என்னு மெழுவகைப்பட்ட எழுத்தடியாகப் பிறக்கும் குரன்முதலாகிய ஏழும்" என்று அடியார்க்கு நல்லார் (சிலப். 14: 152-4) கூறியிருத்தலைக் கண்விழித்துக் காண்க.

6. மத்தளத்திலும் அதன் குறுமையான மிருதங்கத்திலும் அதன் வேறுபாடான தபேலாவிலும் இன்னும் இடக்கண் இளி (மெலிவுப் பஞ்சமம்) யாகவும் வலக்கண் குர(சமன்சட்சம்) லாகவுமே இருந்து வருகின்றது. இதையறியாமல், இளியென்பது மந்தர ஷட்ஜம் என்று கூறுகிறார் நம் நண்பர். இவர் எந்த மத்தளத்தைப் பார்த்தா ரென்று தெரியவில்லை. மேலும், வலக்கண்ணாகிய குரலை இன்னதென்று திட்டமாய்க் கூறாமல் மழுப்பி விட்டிருக்கிறார்.

7. நரப்புக் கருவிகளில், சுரம் எழும் அல்லது அமைந்த இடத்தை இன்னும் சுரத்தானம்(சுரஸ்தானம்) என்பர். இது வழக்கில் இல்லை என்கிறார் நம் நண்பர். வேற்றுமைகளை எழுவாய் வேற்றுமை செய்பொருள் வேற்றுமை என்று பொருள்பற்றியும், முதலாம் வேற்றுமை இரண்டாம்

வேற்றுமை என முறைபற்றியும் இருமுறையாய்க் கூறுவதுபோல, சுரவிடங்களையும் குரல்தானம் துத்தத்தானம் என இசைபற்றியும், முதற்றானம் இரண்டாந்தானம் என முறைபற்றியும் இருமுறையாய்க் கூறுவதற் கேற்கும். ஏழிசைத் தொடரான ஒரு நிலைக்குத் தானம் என்னும் பெயரிருப்பினும், உரையாசிரியர் 'முதற்றானத்திற்குரிய குரல்' என்று வேற்றுமைத் தொடராகக் கூறாமல் 'முதற்றானமாகிய குரல்' என்று பண்புத் தொடராகக் கூறியிருத்தலால், தானம் என்னும் பெயர் இங்கு நிலையைக் குறிக்காமல் இசையைக் குறிக்குமென்று கொள்வதே பொருத்தமானதாம்.

8. கேள்விச்சுரம் எந்தச் சுரமாகவு மிருக்கலாம் என்கிறார் நம் நண்பர். ஓர் இடத்தை அதைச் சூழ்ந்துள்ள பலபொருள் நோக்கி எத்திசையாகவுங் கூறலாம். ஆனால், பொதுவாக நம்மை நோக்கி ஓர் இடத்தை இன்ன திசை யென்று கூறுதலே மரபு. அதுபோல, எந்தச் சுரத்தையுங் கேள்வியாகக் கொள்வதற் கேற்குமேனும் ஒன்றைக் கேள்விச் சுரமாகக் கொண்ட பிறகு அதைக் குரலென்று கொள்வதே மரபாம்.

9. குரல் என்னும் சொல் இயற்றமிழில் ஏழிசைக்கும் பொதுவான ஓசையையே குறிக்குமேனும், இசைத்தமிழில் அவ்வப்போது தொண் டைக்கு இயல்பாயுள்ள கேள்விச் சுரமாகிய குரலோசையைக் குறிக்கு மென்று கொள்வதல்லது, இயல்புக்கு மாறாய் ஏற்றியும் இறக்கியும் ஒலிக்கும் பிற திரிபு (விகார) இசைகளைக் குறிக்குமென்று கொள்வது பொருந்தாது.

10. கருணாமிர்த சாகரத்தில் இருப்பனவாக யான் கூறிய இரண்டொரு சிறு சருக்கல்கள் பெரும்பாலும் சரித்திரமும் சொற்பிறப்பியலும் பற்றியவை யாதலால், என் கூற்றைப் பிறழக் கொண்டு தமது தவற்றுக் கொள்கைக்குத் துணையளிப்பதாக நம் நண்பர் கருதி மகிழற்க.

11. ஏழிசை அலகுகள் மொத்தம் 24 என்றே என் இசையாசிரியர் காலஞ்சென்ற மன்னார்குடி யாழ்ப்புலவர் இராசகோபால ஐயரவர்கள் எடுத்துக் கூறினார்கள். இதை (அண்மையில் 20 ஆண்டுகட்குமுன்) மேனாட்டார் கண்டுபிடிப்பும் வலியுறுத்துகிறது. நம் முன்னோர் கருவி யில்லாமல் தம் நுண்மாண் நுழைபுலத்தால் கண்டுபிடித்தவற்றையே மேனாட்டார் இன்று கருவியினால் கண்டுபிடித்துள்ளனர். இதற்கு வானூ லும் சான்று பகரும். தமிழ்நூலை வடமொழியில், மொழிபெயர்க்கும்போது இயன்றவரை திரித்தெழுதுவது வடநூலார் வழக்கம். இதைப் பூர்வீக சங்கீத உண்மை என்னும் நூலிற் கண்டு தெளிக. பிற்காலத் தமிழ் நூற்பாக்களிற் சில, வடமொழி வழூஉ நூற்பாக்களின் மொழிபெயர்ப்பாகவு மிருக்கலாம். ஆலாபன இசையை அல்லது பண்களை இந்தியாவில் முதன்முதல் பாடியவர் தமிழரே யென்பதையும் அது பண்டைக்காலத்தில் எழுத் துச்சரிப்பை அணுவும் பிறழவிடாத ஆரியவேத மந்திரத்திற்கும் ஆரியப் பார்ப்பனருக்கும் விலக்கப்பட்டிருந்தது என்பதையும் அறிதல் வேண்டும்.

"குரவிற் பாதியும் தாரத்திலொன்றும் இரண்டின் அந்தரத்திலே கிளையாக்கித் தாரத்திலே நின்ற ஓரலகை விளரியின்மே லேறட விளரி குரலாய்ப் படுமலைப் பாலையாம்" என்று அடியார்க்குநல்லார்(சிலப். 8:35) ஒரு நூற்பா விற்கு உரை கூறுவதை நோக்குமிடத்து, பண்ணுக்கேற்றபடி அலகு பகுத்துக் கொடுக்கப்படும் என்பதை அறியலாம்.

"குரல்துத்தம் நான்கு கிளைமூன் றிரண்டாங்
குரையா உழைஇளி நான்கு - விரையா
விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார்
களரிசேர் கண்ணுற் றவர்"

என்று கூறியது, ஒரு பண்ணுக்குரிய அலகுப் பகுப்பே யன்றி மொத்த அலகுக் கணக்கன்று. முதலிலிருந்து இறுதிகாறும் இசையிலக்கணங்களை யெல்லாம் தொடர்பாகக் கூறுகின்ற பண்டை இசைத்தமிழ் நூல்களுள் ஒன்றேனும் இன்று முழுமையாகக் கிடையாமையால், ஆங்காங்குத் தனித்துநிற்கும் ஒரொரு நூற்பாவை மட்டுங் கொண்டு இசைத்தமிழியல்பு முழுவதையும் துணிந்துவிட முடியாது.

"ஆயத்துக் கீரா றறுநான்கு வட்டத்துக்
கேயுங்கோ ணத்துக் கிரட்டிப்புத் - தூயவிசை
நுண்மைக் கதிவிரட்டி நோனலகு மோர்நிலைக்கிங்
கெண்மூன்று கேள்விகொண் டெண்"

என்பது இசைமரபு. இதில் அலகு 24 எனத் தெளிவாகக் கூறியிருத்தல் காண்க. இசை நுண்மை-நுண்பாலை-சதுரப்பாலை. அலகு 24 (சதுர்விம்சதி) என்று கணக்கிட்டுக் கூறும் வடமொழிச் சுவடியிரண்டும் தெலுங்குச் சுவடியொன்றும் இன்றும் தஞ்சைச் சரசுவதி மகாலில் உள.

11. குரலை மத்திமமாகக் கொண்டு பறவையோசையால் ஒப்புக் காணுமிடத்து நாற்சுரங்களேனும் ஒத்துவருகின்றனவே என்கிறார் நம் நண்பர். கல்லாட மேற்கோளை நோக்குமிடத்து அந் நான்கும் இல்லாமற் பறந்துபோகின்றனவே! மேலும், தமிழ்நூற்கும் வடநூற்கும் பறவை விலங்குத் தொடுப்பிலுள்ள ஒப்புமைகூடத் தன்னேர்ச்சியே (accidental) யன்றி வேறன்று. இத்தகைய தன்னேர்ச்சிகள் பல துறையிலும் காணலாம். (எ-கா:) உண்மை வாய்மை மெய்ம்மை. இவை முக்கரணம் பற்றியவை என்பது பொதுக் கொள்கை. யானும் இதற்குடம்பட்டு எனது மொழிநூலிற் கூறினேன். ஆனால், இற்றையாராய்ச்சியால் அது தன்னேர்ச்சி யென்று பட்டுவிட்டது. உள்ளது உண்மை; வாய்ப்பது வாய்மை; மெய் (உடம்பு) போன்றது மெய்ம்மை. ஒ.நோ: E. substance-substantial = true. முற்காலத்தில் கட்புலனும் மெய்ப்புலனுமானதே உண்மை யென்று கொள்ளப்பட்டது. இயேசு உயிர்த்தெழுந்த பின் தோமா என்னும் மாணவன் அவரைத் தொட்டுப் பார்த்துத்தான் நம்பினானென்று கிறித்தவ மறையிற் கூறப்பட்டுள்ளது.

13. சட்சம் ஏனைய ஆறு சுரங்கட்கும் அடிப்படையாதலால் அதுவே வண்ணப்பட்டடை என்கிறார் நம் நண்பர். வண்ணம் அல்லது பண் சுரத்தா லமைவதெனினும், அச் சுரங்கள் ஆரோசை (ஆரோகணம்) யாகவும் அமரோசை(அவரோகணம்) யாகவும் நேராகவோ வளைந்தோ இயங்கிக் கலந்தொலித் தன்றித் தனித்தனி யிசைத்து வண்ணமாகாமையாலும், அங்ஙனங் கலத்தற்குக் குறைந்தது இரு சுரங்கள் வேண்டுமாதலானும், சச, சரி, சக, சம, சப, சத, சநி என இவ்விரு சுரங்களா யிணைக்கும்போது சப என்ற இணையே சிறந்தொலித்தலானும், "தாரத்துட் டோன்றும் உழை" என்னும் நூற்பாவால் சப முறையிலேயே நரப்பிசை யமைத்தார்கள் முன்னோர் என்று தெரிதலானும், வண்ணத்திற்கு அடிப்படையாகிய இணையெனப்படும் 7ஆம் நரம்பாகிய இளியையே(பஞ்சமம்) வண்ணப் பட்டடை யென்றழைத்தனர் முன்னோர் என அறிக. ஐ ஔ என்னும் புணரொலிகளில் அகரக்கூறு மிருந்தாலும் அதைப் பொதுவென்று தள்ளி விட்டுச் சிறப்பான இகர வுகரங்களையே முறையே அவற்றுக் கினக்குறிலாகக் கொண்டாற்போல, சப என்னும் இணையில் பொதுவான 'ச'வைத் தள்ளிவிட்டுச் சிறப்பான 'ப' வை வண்ணப்பட்டடை என்றனர். மேலும், சட்சம் மற்ற ஆறு சுரங்கட்கும் அடிப்படையாதல்பற்றிப் பட்டடையெனப்படின், சுரப்பட்டடையென்று கூறப்படுவதன்றி வண்ணப் பட்டடை என்று எங்ஙனங் கூறப்படும்?

14. நம் நண்பர் குரல் என்னும் சொல் வந்தவிடமெல்லாம் அஃது ஏழிசை முதலைக் குறியாதென்றும், "குரல் குரலாகத் தற்கிழமை திரிந்தபின்" என்னும் அடியில் முந்தின குரல் ஓரிசையையும் பிந்தின குரல் தொடங்குமிசையையுங் குறிக்கு மென்றும் என்னை மறுப்பதுபோல எண்ணிக்கொண்டே தம்மையறியாமல் என்னைத் தாங்கியுரைத்திருப்பது பற்றி மிக மகிழ்வதுடன் அவருக்கு நன்றியும் கூறுகின்றேன். குரல் என்னும் சொல் முதலாவது ஏழிசையில் தொடங்கு மிசையாகிய சட்சத்தைக் குறிக்கும்; இரண்டாவது எந்த இசையையும் குரலாக அல்லது தொடங்கு மிசையாகக் கொள்ளும்போது அதைக் குறிக்கும். எந்த இசையில் தொடங்கினாலும் அதுவே குரல் என்றும், குரல் என்பது முதலிசையாகிய சட்சத்தின் பெயராயிருத்தலாலேயே அது தொடங்குமிசையைக் குறித்ததென்றும் நம் நண்பர் அறியாது போயினர். 'குரல் குரலாக', 'துத்தம் குரலாக', 'கைக்கிளை குரலாக', 'உழை குரலாக', 'இளி குரலாக', 'விளரி குரலாக', 'தாரம் குரலாக' என்று நூல்களிற் கூறியிருப்பதெல்லாம், எமது கொள்கைக்கே சான்றா மென்பதை இனியேனும் நம் நண்பர் அறிவாராக. ஆர்மோனியம் என்னும் சுரப்பெட்டியில் ஒவ்வொரு கட்டையாய் ஏற்றியேற்றிக் கேள்வி (சுருதி)யாக வைத்துக்கொண்டு போனால், ஒவ்வொரு கட்டைக்குரிய சுரமும், தான் கேள்வியாகும்போது குரல்(சட்சம்) அல்லது தொடங்குமிசையாம் என்றும், இங்ஙனம் கேள்வியேற்றுவது பண்ணுப் பெயர்த்தல், உயர்த்திப் பாட

வல்லார்க்கு ஏற்பித்தல் ஆகிய இருபயனோக்கி என்றும், இவ் விரு பயனை யும் முறையே சங்கராபரண மேளமும் கலியாணி மேளமும் அமைந்த சுரப்பெட்டிகளிலும் ஒன்றரைக் கட்டை இரண்டரைக் கட்டை நாலு கட்டை நாலரைக் கட்டை முதலியவாகப் பல்வேறு கட்டைக் கேள்வி (சுருதி) களுக்குப் பாடும் வழக்கத்திலும் காணலாமென்றும், இம் முறை பற்றியே யாழ் நரம்புகளும் ஏற்றி அல்லது மாற்றியமைக்கப்படும் என்றும் நம் நண்பர்க்கு அறிவுறுத்துகின்றேன். "உழைகுரலாகிய கோடிப் பாலை நிற்க இடமுறை திரியுமிடத்துக் குரல்குரலாயது செம்பாலை..... விளரி குரலாய்ப் படுமலைப் பாலையாம்..... துத்தம் குரலாயது செவ்வழிப் பாலையாம். இளி குரலாயது அரும்பாலையாம். கைக்கிளை குரலாயது மேற்செம்பாலையாம். தாரம் குரலாயது விளரிப்பாலையாம்" என்று அடியார்க்குநல்லார் (சிலப். 8:35) கூறியிருத்தலை நோக்குக. "இக் **குரன்முத லேழினும்** முற்றோன்றி யது தாரம்;

"தாரத்துட் டோன்றும் முழையுழை யுட்டோன்று
மோருங் குரல்குரலி னுட்டோன்றிச் - சேருமிளி
யுட்டோன்றுந் துத்தத்துட் டோன்றும் விளரியுட்
கைக்கிளை தோன்றும் பிறப்பு"

என்பதனால், தாரத்தில் முதற் பிறப்பதாகிய **உழை குரலாய்க் கைக்கிளை தாரமாகிய** கோடிப்பாலை முதற் பிறக்கக் **கட்டி** யென்க" (சிலப். 8: 31-2) என்று அடியார்க்குநல்லார் கூறியிருத்தலை ஓர்ந்தறிந்து கூர்ந்துணர்க.

குரல் சட்சமன்றி இளியே சட்சமாயிருப்பின், ஏழிசையைக் **குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம்** எனக் கூறாது **இளி விளரி தாரம் குரல் துத்தம் கைக்கிளை உழை** என்றும், கேள்வி மாற்றிப் பண்ணுப் பெயர்க்கும்போது 'குரல் குரலாய்', 'துத்தம் குரலாய்' என்று கூறுவதற்குப் பதிலாக 'இளி யிளியாய்', 'விளரி யிளியாய்' என்றும் கூறியிருப்பர். இங்ஙனம் யாண்டும் கூறாமையான் குரலே சட்சம் என்பது தெளியப்படும். "உழைமுதற் கைக்கிளை யிறுவாய்க் கட்டி" என்றும், "தாரத்துட் டோன்றும் உழை" என்றும் கூறியிருப்பது **யாழ்களின்** வெவ்வேறு நரப்படைவைக் குறிக்குமே யன்றி ஏழிசை **முறையைக் குறியா**. இக்காலத்தும் வீணை கின்னரி(பிடில்) முதலியவை **ச ப ச ப என்னும்** முறையிலும் சித்தார் தில்ருபா முதலியவை **ம ச ப ச என்னும் முறையிலும்** நரப்படைவு பெற்றுள்ளன. நரப்படைவும் திவவென்னும் மெட்டுக் கட்டினின்று வேறுபட்டதென மற்றுமோர் வேறுபாடறிதல் வேண்டும். இவையெல்லாம் துலுக்க வாத்தியங்களெனப்படும். வடக்கத்து இசைக் கருவிகளை ஆராய்ந்தாலொழிய விளங்கா. பண்டைத் தமிழ்ப் பழக்கங்கள் சில தமிழ்நாட்டில் மதமயக்கினால் ஒழிக்கப்பட்டிருப்பினும் வடநாட்டில் இன்றும் தொடர்ந்து வழங்குகின்றன. தொகையராப் பாட்டென்னும் உரையிடையிட்ட பாட்டும், டக்காவென்னும் இடக்கையும், தரப்புத் தந்திகள்

என்னும் ஆர்ப்பு நரம்புகளும் பண்டைத் தமிழ்நாட்டில் இருந்தனவே. இவற்றையெல்லாம் இங்கு விரிப்பிற் பெருகும்.

குரலே சட்சம் என்பதற்கு வேறு சில சான்றுகளும் உள. அவற்றைப் பின்னர்க் கூறுவேன். அடிகள் ஏழிசைபற்றி மட்டுமன்றிப் பிற பகுதிகள் பற்றியும் தவறான கருத்துகளைக் கொண்டுள்ளமை, யான் அடுத்துச் செல்வியில் வெளியிடும் 'ஆளத்தி', 'யாழே வீணை', 'ஏழிசைப் பெயர்கள்' என்னும் கட்டுரைகளில் விளக்கப்படும். அறிஞர் நடுநிலைக் கண்கொண்டு ஆராய்வாராக.

## குறிப்பு

(1) வித்துவான் வெள்ளைவாரணர் மத்தளத்தின் இருகட் சுரங்களையும் கூறியவிடத்தில் இசைப் பேராசிரியர் பொன்னையா பிள்ளை அவர்களின் பெயரைப் புகுத்தியிருப்பது அவர்கட்குத் தெரியாதென்று நினைக்கிறேன். இசையறிவிற் சிறந்த அவர்கள் அங்ஙனங் கூறியிரார்கள் என்பது எனது கருத்து.

(2) வித்துவான் வெள்ளைவாரணர் யான் இத்துணை கூறிய பின்பும் 'நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று வலிப்பாராயின், தமிழிசை யரசு தண்டபாணிப் பிள்ளையும் வேலூர்த் தேவார இசைவேந்தர் அப்பா துரை ஆச்சாரியாரின் மகனார் சம்பந்தமூர்த்தி யாச்சாரியாரும் போன்ற அறிஞர்முன் மிடற்றினாலும் கருவியினாலும் தம் கொள்கையை மெய்ப் பித்து அவர்தம் உடம்பாட்டைப் பெற்றுவிடின், யான் என் தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்.

(3) பண்டைத் தமிழர் நம் போன்ற புல்லறிவுப் போலித் தமிழரல்லர். அவரது மதிநுட்பமும் நுழைநோக்கும் பலதுறைப்பட்ட கலைத்திட்பமும் நாகரிகப் பண்பும் 'பழந்தமிழ் நாகரிகம்' என்னும் எனது நூலிற் பரக்கக் காட்டுவேன்.

– **"செந்தமிழ்ச் செல்வி" துலை 1943**

## 3

# நன்னூல் நன்னூலா?

பவணந்தியார் தம் நூலுக்கு நன்னூல் எனப் பெயரிட்டிருப்பினும் சுவாமிநாத தேசிகர் அந் நூலைப்பற்றி, "முன்னூ லொழியப் பின்னூல் பலவினுள் நன்னூலார் தமக்கெந்நூலாரு மிணையோ வென்னுந் துணிவே மன்னுக" வெனக் கூறியிருப்பினும், தொல்காப்பியம் முதலிய நிறை யிலக்கண நூலொடு ஒப்பு நோக்கியும் மொழிநூற்குப் பொருந்தவும் காணுங்கால், அது பெரும்பாலும் நன்னூலன்று என்பதே பெறப்படும்.

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள் என முப்பாற்றாதலின் எழுத்தும் சொல்லும் மட்டும் கூறும் இலக்கண நூல்கள் எத்துணை விரிவுபட்டனவாயினும், நிறைவுடையனவாகா. ஒருகாலத் தொரு பாண்டியன், "என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொரு ளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்" எனக் கவன்றதாக இறையனா ரகப்பொருளுரை கூறுதல் காண்க.

பண்டைத் தமிழ்நூல்களெல்லாம் செய்யுள் வடிவில் இயற்றப்பட்ட மையானும், இருவகை யணிகளும் செய்யுளில் அடக்கப்பட்டமையானும் தமிழிலக்கணத்தை எழுத்து, சொல், பொருள் என மூன்றாகப் பகுப்பதே பண்டை மரபாம்.

நன்னூல், நூற்பாவும் இயலும் அதிகாரமும் ஆகிய மூன்றுறுப்பு மடக்கிய பிண்டமேனும் தலையான பொருளதிகாரம் இல்லாமையின் மூண்டமே யென்க. அதோடு பல இலக்கணங்களில் வழுவியுமுள்ளமை அதன் குறைபாட்டை மிகுத்துக் காட்டுவதாகும்.

நன்னூல் வழீஇயுள்ள இடங்களிற் சில வருமாறு:

### 1. எழுத்தியல்

### (1) சார்பெழுத்து வகை

தொல்காப்பியர்,

"சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே" (1)

எனச் சார்பெழுத்தின் தொகையும்,

"அளவதாம்
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன" ௨

என அதன் வகையும் உண்மைக்கொப்பவும் உத்தியொடு பொருந்தவும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருப்பவும், நன்னூலார்,

"உயிர்மெய் யாய்தம் உயிரள பொற்றள
பஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்" ௬௰

என அதன் வகையைப் பெருக்கி,

"உயிர்மெய் யிரட்டுநூற் றெட்டுய ராய்தம்
எட்டுயி ரளபெழு மூன்றொற் றளபெடை
ஆறே ழஃகு மிம்முப் பானேழ்
உகர மாறா றைகான் மூன்றே
ஔகான் ஒன்றே மஃகான் மூன்றே
ஆய்த மிரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபா னென்ப" ௬௧

என அவ் வகைகளின் தொகையை விரித்து விழுமிய பயனின்றி மாணவர்க்கு வீணாக வெறுப்பை விளைத்துள்ளார். அவற்றை இக் காலத்துப் பொதுக்கல்வி மாணவர்க்கும் பாடமாக விதித்து அவரை வருத்துவது மேலும் வருந்தத்தக்க செய்தியாகும்.

இன்னின்ன எழுத்துகள் இன்னின்ன இடத்தில் குறுகியொலிக்கும் என, மாத்திரை குறிக்குமிடத்தும் புணரியலிலும் கூறினாற் போதுமானதாம். அஃதன்றி, குறுகியொலிக்கு மிடமெல்லாம் வெவ்வேறெழுத்தெனக் கூறுவது பிள்ளைத் தன்மையேயன்றிப் புலமைத் தன்மையாகாது.

### (2) ஆய்தப் பிறப்பு

தொல்காப்பியர்,

"சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்
தத்தம் சார்பிற் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியிற் றம்மியல் பியலும்" (101)

என்று சார்பெழுத்துகள் தத்தம் முதலெழுத்துகளைச் சார்ந்து பிறப்பதைக் கூறியிருப்பவும் நன்னூலார்,

"ஆய்தக் கிடந்தலை அங்கா முயற்சி" (87)

எனப் புதுவது புனைந்தலாக விதித்துள்ளார்.

ககரவொலியை யொட்டிய ஆய்தம் தலையை இடமாகக் கொண்டு பிறக்குமென்றும் மெய்த்தன்மையுடைய அது அங்காத்தலால் தோன்று மென்றும் அவர் எங்ஙனம் அறிந்தனரோ அறிகிலம். ஒருகால் தொல் காப்பியர்க்கு முந்தியவராயோ தூய தமிழராயோ இருந்திருப்பின் அவர் கூற்றைக் கொள்ள ஒருசிறிது இடமுண்டு. அவர் ஆரியச் சார்பான பிராமணராதலாலும் 12ஆம் நூற்றாண்டினராதலாலும் தமிழிலக்கண விலக்கியங்களைக் கற்று இலக்கியவதிகாரி யாயினரேயன்றி, தமிழ் மொழிக்கும் ஒலிக்கும் அதிகாரியாயினரல்லர் என அறிக.

### (3) மொழிமுத லெழுத்துகள்

"ஆவோ டல்லது யகரமுத லாது" 65

என்றார் தொல்காப்பியர். இவ் வியல்பையே கழக (சங்க) இலக்கியத்திற் காண்கின்றோம். ஆயின், இதற்கு மாறாக,

"அஆ உஊ ஒஔ யம்முதல்" (104)

என விதித்துள்ளார் நன்னூலார். இதற்குக் காரணம், அவர் வடசொற்கட்குத் தமிழில் தாராளமாய் வழிவகுத்துள்ளதே.

தொல்காப்பியர் ஙகரத்தை மொழிமுதலெழுத்தாகக் கொண்டிலர் ஆயின் நன்னூலார்,

"சுட்டியா வெகர வினாவழி யவ்வை
ஒட்டி ஙவ்வு முதலா கும்மே" (106)

என நூற்பா யாத்தார்.

ஙகரம் இற்றைத் தமிழ்நாட்டில் மட்டுமன்றி மூக்கொலி மிக்குள்ள மலையாள நாட்டிலும் ஒருவகை வழக்கிலும் வழங்குவதில்லை. ஙனம் என்னும் வடிவம் அங்ஙனம் இங்ஙனம் எங்ஙனம் எனச் சுட்டெழுத்தையும் வினாவெழுத்தையும் ஒட்டியல்லது தனித்து வருவதில்லை. 'அவ்வகை' 'எவ்வகை' என்பன 'அந்தவகை' 'எந்தவகை' என்றும், 'அவ்வண்ணம்' 'எவ்வண்ணம்' என்பன 'அந்தவண்ணம்' 'எந்தவண்ணம்' என்றும், வழங்குவதுபோல் 'அங்ஙனம்' 'எங்ஙனம்' என்பன 'அந்த ஙனம்' 'எந்த ஙனம்' என்று வழங்குவதை ஓரிடத்தும் காண்கின்றிலம். ஆகவே, ஙனம் என்னும் வடிவின் முதலெழுத்து மற்றோரெழுத்தின் திரிபாயே யிருத்தல் வேண்டும்.

ஆங்கு ஈங்கு என்னும் சுட்டுச் சொற்களும், எங்கு, யாங்கு என்னும் வினாச் சொற்களும் 'அனம்' என்னும் ஈற்றை யேற்று வருவது இயல்பு. அவ் வீறேற்ற அச் சொற்களே குறுகியும் குறுகாதும் நின்று மூக்கொலிப்பாடு (Nasalization) பெறுங்கால் அவற்றிடையேயுள்ள ககரம் ஙகரமாகத் திரியும்.

எ-கா: ஆங்கனம் - ஆங்ஙனம்
ஈங்கனம் - ஈங்ஙனம்
எங்கனம் - எங்ஙனம்
யாங்கனம் - யாங்ஙனம்
அங்கனம் - அங்ஙனம்
இங்கனம் - இங்ஙனம்

இக்காலத்து மொழியாராய்ச்சியும் ஒலியாராய்ச்சியும் அக்காலத் தில்லாமையும், நன்னூலார் வழுவியதற்குக் காரணமாகும்.

இனி, சுட்டையும் வினாவையும் ஒட்டி ஙகரமும் மொழிமுதலாகும் என்று நன்னூலார் கூறியது சரியே என்று வலிப்பார் உளரெனின் அந்த வண்ணம், இந்த வண்ணம், எந்த வண்ணம் என்பன, முறையே அன்னணம், இன்னணம், என்னணம் எனத் தொக்கும் திரிந்தும் வருமாதலின்,

சுட்டுட னெகர வினாவழி யவ்வை
ஒட்டி ஙவ்வு முதலா கும்மே

எனவும் விதித்தல் வேண்டும் எனக் கூறி விடுக்க.

## 2. பதவியல்

### (1) பண்புப் பெயர்

"செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை யுண்மை நுண்மை யிவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே" (135)

என்னும் நூற்பாவால், பண்புப் பெயர்களெல்லாம் மையீறு பெற்றே நிற்கும் என்பது படவும் பண்புப் பகுதியின் திரிபுகளைக் கூறும் நூற்பாவில் (136) 'ஈறு போதல்' என்னுந் தொடரால் பண்புத்தொகைச் சொற்களிலுள்ள நிலைமொழி யெல்லாம் ஈறுகெட்டவையே யென்றும் குறிப்பாய்க் கூறியுள்ளார் நன்னூலார்.

அன்பு, அழகு, சினம், பச்சை முதலிய பண்புப் பெயர்கள் பிறவீறும் பெற்று வருவதால் பண்புப் பெயரீறு மையொன்றே யென்பது குன்றக் கூறலாம்.

செம்மை சிறுமை முதலிய மையீற்றுப் பண்புப் பெயர்களெல்லாம் சொல்நிலையாற் பகுசொல்லாயினும் பொருள்நிலையாற் பகாச்சொல்லாம் என்பது அறிவித்தற்குப் 'பண்பிற் பகா' என்று ஆசிரியர் கூறியதாக உரை யாசிரியர் சிலர் கூறுவர். மையீற்றுப் பண்புப் பெயர்கள் சொல்நிலை யால் மட்டுமன்றிப் பொருள்நிலையாலும் பகுசொல்லே யென்பது நுணுகி நோக்குவார்க்குப் புலனாம். மையீறு தன்மை குறிக்குஞ் சொல்லாதலின் மையீற்றுப் பண்புப் பெயர்களெல்லாம் பண்பும் பண்புத் தன்மையுமாகிய

இரு கருத்துகளை யுணர்த்தும் பகுசொல்லே யென வறிக. ஒன்று என்பது ஓர் எண்ணையும் ஒருமை என்பது ஒன்றாயிருக்குந் தன்மையையும் உணர்த்தும். இங்ஙனமே பச்சை என்பது ஒரு நிறத்தையும் பசுமை என்பது பச்சையாயிருக்கும் தன்மையையும் உணர்த்தும்.

மேலும் செந்தமிழ், சிறுநாவல் முதலிய பண்புத்தொகைச் சொற்களின் நிலைமொழிகள் செம், சிறு என இயல்பாக நின்றவையே யன்றி, செம்மை, சிறுமை, முதலியன ஈறுகெட்டு நின்றனவல்ல. சிறு, புது, மேல் முதலிய பண்புச் சொற்கள் இயல்பாக நின்று குறிப்புப் பெயரெச்சமாயிருக்குமென்றும், பண்புப் பெயராகும் போது மையீறு பெறுமென்றும், அறிதல் வேண்டும், செம், சேய், தீ, வெம், மெல், திண் முதலிய அடிச்சொற்கள் சிறு, புது முதலியனபோல, எளிதாய் அல்லது விளக்கமாய்ப் பொருளுணர்த்தாமைக்கு அவற்றின் வழக்கின்மை அல்லது அருகிய வழக்கே காரணம்.

Red, small, remote முதலிய ஆங்கிலக் குறிப்புப் பெயரெச்சங்கள் ness என்னும் ஈறுபெற்ற பின்னரே redness, smallness, remoteness எனப் பண்புப் பெயராகும். அஃதன்றி redness என்னும் பண்புப் பெயரே ness என்னும் ஈறுகெட்டு red என நின்றது எனின் அதை ஆங்கில இலக்கணியரும் ஒப்புக்கொள்ளார். ஆகவே, 'ஈறு போதல்', என்பது வழுப்படக் கூறலே என அறிக.

அஃதாயின் பண்புத்தொகைச் சொல்லிடையே 'ஆகிய' என்னும் பண்புருபு விரியுமா றெங்ஙனெனின் பண்புத்தொகைச் சொல் தொகையெனப் பெயர் பெற்றிருப்பினும் உண்மையில் ஒரு சொல்லுந் தொக்கதன்று என்றும் செம்மையான தமிழ், பனையாகிய மரம் என்று விளக்க நடையில் விரித்துக் கூறும் வழக்கு நோக்கி, செந்தமிழ், பனைமரம் என்பன பண்புத்தொகையெனப்பட்டன வென்றும் மொழிநூலொட்டிய இலக்கணப்படி அது ஒரு மயக்கே என்றும் கூறி விடுக்க. சிவந்த நீர் என்னும் எளிய வழக்கில் எங்ஙனம் ஒரு சொல்லும் தொக்கிலதோ, அங்ஙனமே செந்நீர் என்னும் உயர்வழக்கிலும் என்க.

**(2) வினையிடைநிலை**

**(1) இறந்தகால இடைநிலை**

"தடறவொற் றின்னே யைம்பால் மூவிடத்
திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை" (142)

என்றார் நன்னூலார்.

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" (தொல். 640)

என்றும், தனித்து நின்று பொருள் தராத இடைச்சொற்களும் ஒரு காலத்துத் தனித்து நின்று பொருள் தந்த பெயர் வினைச் சொற்களின் சிதைவே

யென்றும் அறிவார்க்கு த், ட், ற் என்னும் தனி மெய்கள் சொற்குறுப்பாய் நின்று பொருளுணர்த்தும் என்பது நகையாடத்தக்க செய்தியாம்.

இறந்த கால வினைமுற்றுகள் மலையாளத்திற் போன்றே முதற் காலத்தில் இற்றை இறந்தகால வினையெச்ச வடிவிலிருந்து பின்பு ஈரெண் ஐம்பாலீறுகளைப் பெற்றனவாதலின், அவற்றைப் பகுக்கும்போது முதற்கண் எச்சமும் ஈறுமாகவே பகுத்தல் வேண்டும்.

எ-கா:

| | | | | |
|---|---|---|---|---|
| செய்தான் | = | செய்து | + | ஆன் |
| படித்தான் | = | படித்து | + | ஆன் |
| உண்டான் | = | உண்டு | + | ஆன் |
| கொண்டான் | = | கொண்டு | + | ஆன் |
| கட்டான் | = | கட்டு | + | ஆன் |
| தின்றான் | = | தின்று | + | ஆன் |
| நின்றான் | = | நின்று | + | ஆன் |
| கற்றான் | = | கற்று | + | ஆன் |

இங்ஙனம் பகுத்து நோக்குங்கால் எச்சத்தின் இறுதியில் நிற்பது அது என்பதன் முதற் குறையான துவ் விகுதியே என்பதும் அதுவே டுவ்வென்றும் றுவ் வென்றும் புணர்ச்சியால் திரிந்ததென்பதும் புலனாம்.

உள்+து=உண்டு என்பது போன்றதே கொள்+து=கொண்டு என்பதும். இல்+து=இன்று என்பது போன்றதே நில் + து = நின்று என்பதும்.

நிலைமொழி யீற்றிலுள்ள ணகர ளகர னகர லகர மெய்கள் அது என்னும் விகுதியோடு புணரின் இயல்பாகவும் துவ்விகுதியொடு புணரின் முறையே டகர றகர மெய்களாகத் திரிந்தும் புணரும்.

எ-கா :

கண் + அது = கண்ணது
தாள் + அது = தாளது
அன் + அது = அன்னது
பால் + அது = பாலது
கண் + து = கட்டு
தாள் + து = தாட்டு
அன் + து = அற்று
பால் + து = பாற்று

புக்கான், சுட்டான், அற்றான் எனப் பகுதி யிரட்டித்து இறந்த காலங் காட்டிய வினைமுற்றுகளையும் புக்கு - ஆன், சுட்டு - ஆன், அற்று - ஆன் என எச்சமும் ஈறுமாகவே பகுத்தல் வேண்டும்.

புக்கான் என்பதில் க் எங்ஙனம் இறந்தகால இடைநிலை யன்றோ, அங்ஙனமே படித்தான் என்பதிலும் த் இறந்தகால இடைநிலையன்று என அறிக.

இனி 'உறங்கினான்', 'போனான்' முதலியன எங்ஙனம் புணர்ந்தன வெனின் அவையும் மேற்கூறியவாறு எச்சமும் ஈறுமாகவே யென்றறிக.

எ-கா:

உறங்கி + ஆன் = உறங்கியான் - உறங்கினான்.
போயி + ஆன் = போயியான் - போயினான்.
போயி + போய் = ஆன் - போயான் - போனான்.

சொல்லாக்கத்தில் யகரம் நகரமாக (அல்லது னகரமாக)த் திரிதல் இயல்பு.

எ-கா: யான் - நான், யாம் - நாம்.

சேரநாட்டுத் தமிழின் திரிபான மலையாளத்தில், ஆயி, போயி என்னும் இறந்தகால வினை வடிவுகளே இன்றும் வழங்குகின்றன.

### (3) நிகழ்கால இடைநிலை

நன்னூலார் கூறிய நிகழ்கால யிடைநிலை மூன்றனுள், ஆநின்று என்பது சரியன்று. அது செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகால வினை யெச்சமும் அதனைத் தொடர்ந்த இறந்தகால வினைமுற்றுமாகிய செய்யா நின்றான் என்னும் தொடரின் இடைநின்று தவறாய்ப் பிரித்துக்கொண்ட ஒரு சொற்பகுதியே. ஆநின்று என்பதும் ஓர் இடைநிலையே யெனக் கொள்ளின், உண்ணாகிடந்தான் என்னும் வழக்கினின்று ஆகிடந்தான் என்பதும் ஓர் இடைநிலையெனக் கோடல் வேண்டும்.

இனி, உண்ணாகிடந்தான் என்பது எச்சமும் முற்றுமாக இரு சொல் லாயின் உண்ணாக்கிடந்தான் என்றிருத்தல் வேண்டுமாதலின் உண்ணா கிடந்தான் என இயல்பாய் நிற்கும் சொல் உண்ணாநின்றான் என்பது போல் ஒருவகை நிகழ்கால வினைமுற்றே யெனின், அது ஆகிடந்து என ஓர் இடைநிலை வேண்டுவார் இடைக்காலத்துத் திரித்துக் கொண்ட வழக்கே யன்றித் தொன்றுதொட்டு வந்த மரபன்று எனக் கூறி விடுக்க. செய்யா என்னும் வாய்பாட்டு எவ்வினைச் சொல்லும் நின்றான் என்பதனொடு என்றும் இயல்பாகவே புணருமாதலின், அதனோ டொப்ப உண்ணாக் கிடந்தான் என்றிருக்க வேண்டுவதையும் உண்ணா கிடந்தான் என இயல்பாக்கிக் கொண்டனர் என்க.

செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம், செய்யாநின்றான் செய்யாநிற்கின்றான், செய்யாநிற்பான் என முக்கால முற்றொடும் கூடிவருதலின், அவற்றுள் இறந்த கால முற்றொடு கூடியதை மட்டும் ஒரு சொல்லாகக் கொள்வது பொருந்தா தென்க.

இனி, செய்யாநின்றான் என்பது செய்கின்றான் என நிகழ்காலப் பொருளன்றோ தருகின்றதெனின், அது ஒரு சாரார் ஆட்சி பற்றியதே யன்றிச் சொல்வகை பற்றியதன்றெனக் கூறி மறுக்க.

**(4) எதிர்கால இடைநிலை**

"பவ்வ மூவிடத் தைம்பா லெதிர்பொழு
திசைவினை யிடைநிலை.." (144)

என்றார் நன்னூலார்.

முற்றும் எச்சமுமாகிய செய்யும் என்னும் வாய்பாட்டு எதிர்காலப் பாற்பொது வினை, பால் பிரிந்திசைத்தற்கு வெவ்வேறு விகுதிகளுடன் கூடி நிற்கும் நிலையில் நிலைமொழியீற்று மகரம் வகரமாகவும் சிலவிடத்துப் பகரமாகவும் திரியும். அத் திரிபால் வந்த மெய்நிலையே எதிர்கால இடைநிலையென்றார் நன்னூலார்.

## முற்றம் பாலீறும்

எ-கா: செய்யும் + ஆன் = செய்யுமான் - செய்யுவான் -செய்வான்
செய்யும் + ஆர் = செய்யுமார் - செய்யுவார் - செய்வார்
செய்யும் + அ = செய்யும - செய்யுவ - செய்வ
உண்ணும் + ஆன் = உண்ணுமான் - உண்ணுவான்
உண்ணும் + ஆன் = உண்ணுமான் - உண்மான் - உண்பான்
தின்னும் + ஆன் = தின்னுமான் - தின்னுவான்
தின்னும் + ஆன் = தின்னுமான் - தின்மான் - தின்பான்
நடக்கும் + ஆன் = நடக்குமான் - நடக்குவான் - நடக்கான் - நடப்பான்
படிக்கும் + ஆன் = படிக்குமான் - படிக்குவான் - (படிக்கான்) - படிப்பான்

படிப்பான் என்பதைப் படிப்பு + ஆன் எனப் பிரிப்பின் நன்றெனத் தோன்றும், ஆயின், தருவான் வருவான் என்பன தருவு+ஆன், வருவு + ஆன் எனப் பிரியாமையின், தொழிற்பெயரும் ஈறுமாகப் பிரிப்பதினும் முற்றும் ஈறுமாகப் பிரிப்பதே நன்றென வறிக. மேலும், செய்து செய்கின்று என்னும் ஏனை யிருகாலப் பண்டை முற்றுகள் போன்றே, செய்யும் என்னும் எதிர்கால முற்றும் பாலீறொடு புணர்ந்ததெனக் கோடல் பொருத்த முடைத்தாம்.

## பெயரெச்சமும் பாலீறும்

எ-கா: செய்யும் + அவன் = செய்யுமவன் - செய்யுபவன் - செய்பவன்
செய்யும் + அது = செய்யுமது-செய்யுவது-செய்வது
செய்யும் + அவை = செய்யுமவை - செய்யுபவை - செய்பவை.

## (5) வடமொழி யாக்கம்

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே" (880)

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே." (884)

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்" (885)

எனத் தொல்காப்பியர் கூறியதே மிகையாயிருக்க நன்னூலார்,

"பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானும் இயைவன வடசொல்." (275)

"இடையில் நான்கு மீற்றில் இரண்டும்
அல்லா வச்சை வருக்கமுத லீறு
யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம்
பொதுவெழுத் தொழிந்தநா லேழுந் திரியும்" (146)

அவற்றுள்

"ஏழாமுயி ரிய்யு மிருவுமை வருக்கத்
திடையின் மூன்று மவ்வம் முதலும்
எட்டே யவ்வும் முப்பது சயவும்
மேலொன்று சடவும் இரண்டு சதவும்
மூன்றே யகவு மைந்திரு கவ்வும்
ஆவீ றையு மீயீ றிகரமும்." (147)

"ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்
கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே" (148)

"இணைந்தியல் காலை யரலக் கிகரமும்
மவ்வக் குகரமும் நகரக் ககரமும்
மிசைவரும் ரவ்வழி யுவ்வு மாம்பிற" (149)

என வடசொற்கள் கட்டுமட்டும் கங்குகரையுமின்றித் தமிழில் தாராளமாய் வந்து வழங்குமாறு வழிவகுத்துப் பாழ்படுத்தியதுமன்றி, பல தென்சொற்களை வடசொற்களெனமயங்கவும் வைத்தார்.

வடசொற்களால் தமிழ் வளம் பெற்றதெனக் கூறுவார், தம் அறியாமையையும் ஆராய்ச்சி யின்மையையும் பகைமையையுமே வெளிப்படுத்துவர். வடமொழியால் தமிழடைந்த கேடு கொஞ்சநஞ்சமன்று. வடசொற்கள், வேண்டாது தமிழிற் புகுத்தப்பட்டன என்பதற்கு, ஊசி(உதீச்சி-வடக்கு), பாசி(ப்ராச்சீ-கிழக்கு), என்ற புறநானூற்றுச் சொற்களே (229 ஆம் பாட்டு) போதுமானவை. சொன் மறைவு, வழக்கு வீழ்ச்சி, ஒலிமாற்றம், பொருட்கேடு ஆகிய நால்வகையிலும், வடசொல்லால் தமிழுக்கு நேர்ந்த

தீங்கு வரம்பற்றதாம். நன்னூலார் செய்த வழுக்களுள் தலையானது வடமொழி யாக்கமே.

## (6) பெயரியல்

தொல்காப்பியர்,

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" (640)

"மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" (877)

எனக் கூறியிருப்பவும் நன்னூலார்,

"இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின" (62)

"இடுகுறி காரண மரபோ டாக்கம்
ஏற்பவும் பொதுவு மாவன பெயரே" (275)

என வடநூற் கொள்கை தழுவி, தமிழிலும் இடுகுறி யுண்டென உண்மைக்கு மாறாகக் கூறினார்.

உரையாசிரியர் இடுகுறிக் கெடுத்துக்காட்டாகக் கூறுவன வெல்லாம், மரம், பனை, பலா, பரம், பொன், விள என்பவையே. இவையும் காரணக் குறியே என்பதைக் கீழ்வரும் மொழிப்பொருட் காரணத்தாலும் பொருள் விளக்கத்தாலும் கண்டுகொள்க.

மரத்தல் = உணர்ச்சியறுதல், மரம் உணர்ச்சியற்றது.

பல் - பன் - பனை. பல் = ஒரு கூரிய உறுப்பு, கூர்மை. பன் = அரிவாட்பல். பனை = பற்போல் கூரிய கருக்குமட்டையுடைய மரம்.

பல் - பரு - பெரு. பல் - பலா = பெரும்பழம். பெரும் பழத்தை யுடைய மரம்.

புரம் = உயரம், உயரமானது, மேன்மாடம்

"புரை உயர்வாகும்". (தொல்.785)

புரம் - பரம் = மேல், மேலிடம், வானுலகம்.

உ-அ.

ஒ.நோ: குடும்பு - கடும்பு. முடங்கு - மடங்கு.

பொல் - பொன் = அழகு, அழகிய தாது(உலோகம்). பொல் + பு = பொற்பு = அழகு. பொற்ற = அழகிய (சீவக. 885).

பொற்றது = பொலிவுற்றது (சீவக. 2247).

விள் - விள = வெள்ளையான தோட்டை யுடைய பழம். அதனை யுடைய மரம். விள்-வெள்-வெள்ளை.

## முடிபு

தொல்காப்பியத்துக்கும் நன்னூற்கும் பொதுவான பல வழுக்க ளிருப்பினும், அவற்றை நீக்கி, நன்னூற்குச் சிறப்பானவையே ஈங்குக் கூறப்பட்டன. இதுகாறும் கூறியவற்றால், நன்னூல் சில காரணம் பற்றி நன்னூலாயினும், பல காரணம் பற்றி நன்னூலன்று என்பதே முடிபாகக் கொள்க.

– சென்னை மாணவர் மன்றம் வெள்ளிவிழா மலர் 1957;
"தென்றல்" 21.9.1957.

## (4)

# நன்னூல் நன்னூலா – மறுப்பறுப்பு

சென்ற வாரத் தென்றல் இதழில் நன்னூல் நன்னூலே என்றொரு கட்டுரை, என் நன்னூல் நன்னூலா? என்னும் கட்டுரைக்கு மறுப்பாக வெளிவந்ததைக் கண்டேன். அம் மறுப்பின் போலித் தன்மை தமிழாராய்ச்சி யாளர்க்குத் தெளிவாகத் தெரிவது தேற்றமாயினும், மாணவருலகின் மயக்கறுத்தற்பொருட்டு, இம் மறுப்பறுப்பை விடுகின்றேன்.

'நன்னூல் நன்னூலே' என்னும் கட்டுரையாசிரியர் சென்னைச் சௌக்கார்பேட்டை ஜெயின் உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழா சிரியர் வித்வான் எஸ்.பி. கெம்பீர நைனார் என்னும் செய்தியொன்றே அவர் பவணந்தி என்னும் சமண முனிவர் இயற்றிய நன்னூற் குறையை மறைத்தற் காரணத்தை அறிஞர்க்குணர்த்தப் போதுமானதாம். மதப்பற்று மதப் பற்றன்றோ.

இனி, மறுப்பாசிரியர் மறுப்புகளையெல்லாம் ஒவ்வொன்றாய் எடுத்தறுப்பாம்.

மறுப்பு : நன்னூல் நன்னூலா? என்று கேட்டிருப்பது, மரத்தைக் கண்ட ஒருவன், இந்த மரம் மரமா? என்று கேட்பது போல் வினாவில் தவறுபட்டு வினா வழுவாய் அமைந்துள்ளது.

அறுப்பு : மரத்தை மரமென்று கண்ட ஒருவனுக்கு, இது நன்மரமா என்று ஐயம் எழுமேயன்றி மரமா என்று ஐயம் எழாது. அதுபோல் ஒரு நூலைக் கண்டவனுக்கு இது நன்னூலா என்று ஐயம் எழுமேயன்றி நூலா என்று ஐயம் எழாது. பவணந்தி முனிவர் தம் நூலுக்கு நன்னூல் என்று பெயரிட்ட அளவிலேயே அது நன்னூலாகிவிடாது. பொருளுக்கும் பெயருக்கும் பொருத்தம் இருப்பினும் இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம். இரு கண்ணுமில்லானுக்குத் தாமரைக்கண்ணன் என்றும், இரு காலு மற்றவனுக்குத் தாண்டவராயன் என்றும், பெயரிடப்பட்டிருக்கலாம். குற்றம் நிறைந்த வேறுசில நூல்கள்கூட நன்னூல் என்று பெயர்பெறலாம்.

ஒரு கனியை உண்டமட்டில் அது நன்றென்று ஒரு பொதுமகன் கொள்ளுதல் தகாது. அதனை ஆய்ந்து அதன் உண்மைத் தன்மையைக் காண்பவன் மருத்துவனே. அதுபோல், ஒரு நூலையும் ஒரு மாணவன் கற்ற அளவில் அது நன்றென்று கொள்ளுதல் முடியாது. ஆராய்ச்சியாளனே அதன் உண்மைத் தன்மையைக் காண இயலும்.

நன்னூல் என்ற பெயரளவில் அதை நன்னூலென்று தாம் மயங்கியது மன்றி, தம்மைப்போற் பிறரையுங் கருதி அம் மயக்கத்தைப் பிறர் மீதும் ஏற்றிக்கொள்கின்றார், நம் மறுப்பாசிரியர். "நன்னூல் நன்னூலா"? என்னும் வினாவை, நல்லெண்ணெய் நல்லெண்ணெயா? நன்மாறன் நன்மாறனா? நல்ல பாம்பு நல்ல பாம்பா? என்றித் தகையவற்றுள் ஒன்றற்கு ஒப்பிடலா மேயன்றி, இந்த மரம் மரமா? என்னும் வினாவுக்கு ஒப்பிடலாகாது. இதை உவமையிலக்கணம் செவ்வையாய் அறிந்தாரே உணர்வர்.

மேலும், வினாவில் தவறுபட்டு வினா வழுவாயமைந்துள்ளது. என்னும் சொற்றொடர், கூறியது கூறலாம். வினாவில் தவறுபட்டுள்ளது வினா வழுவாயமைந்துள்ளது என்னும் இவ் விரண்டில் ஒன்றே அமையும்.

**மறுப்பு 2** : "இன்னின்ன எழுத்துகள் இன்னின்ன இடத்தில் குறுகி ஒலிக்கும் என மாத்திரை குறிக்கும் இடத்தும், புணரியலிலும் கூறினாற் போதுமானதாம்." எனக் கூறி, முன்பு தாம் மறுத்த அச் சார்பு எழுத்துகளின் வகைகளை ஏற்றுக்கொள்ள உடன்படுகிறது."

**அறுப்பு** : சில எழுத்துகள் சிலவிடத்திற் குறுகி யொலித்தமட்டில் சார்பெழுத்துக ளாகிவிடா. எழுத்துகள் குறுகி யொலித்தல் மட்டுமன்றி நீண்டும் ஒலிக்கும்.

"ஆவியு மொற்றும் அளவிறந் திசைத்தலும்
மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின்" (101)

என்று நன்னூலாரே நன்றாய் (தெளிவாய்)க் கூறியுள்ளார். ஆகவே, குறுகியும் நீண்டும் ஒலிக்குமிடமெல்லாம் சார்பெழுத் தியல்பைப் பிறழ வுணர்தலாம். குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் ஆகிய மூன்றும், குறுகி யொலித்தலால் மட்டுமன்றித் தத்தம் முதலினின்று திரிந்தொலித்தாலும் சார்பெழுத்துகளாயின என்றறிதல் வேண்டும்.

**மறுப்பு 3** : '*சன்மதி*', '*யசோமதி*' யென்ற பெயர்களும், 'பவணந்தி,' 'தரும நந்தி' என்ற பெயர்களும் பண்டுதொட்டு இன்றுகாறும், தமிழ்நாட்டு ஜைனர்களுக்கே யிட்டு வழங்கப்படும் பெயர்களாக அமைந்துள்ளன..... இப்படியிருக்க யாதொரு ஆதாரமுமின்றி நன்னூலாரை ஆரிய அந்தணர் என்றால், அதை ஆராய்ச்சியுலகம் அடியோடு ஏற்காது.

**அறுப்பு** : சன்மதி, யசோமதி, பவணந்தி, தருமநந்தி என்பன தமிழ்ப் பெயர்களல்லவென்பதும், சமணம் வடநாட்டினின்று வந்த அயன்மதம் என்பதும், யாவரும் அறிவர். பவணந்தியார் ஒருகால் பிறப்பளவில் திரவிடராயிருந்திருப்பினும், கருத்தளவில் மாறுபட்டவர் என்பதை எவரும் மறுக்கவொண்ணாது. ஒருவரை ஓர் இனத்தோடு சார்புபடுத்துவது, சிறப்பாக அவர் மனப்பான்மைபற்றியே யன்றிப் பிறப்புப் பற்றியன்று.

**மறுப்பு 4** : நம் தமிழ்நாடு தொல்காப்பியர் காலத்திற்குப் பின்பும் நன்னூலார் காலத்திற்கு முன்பும் ஆகிய இடைப்பட்ட காலத்தில்

தொடர்பைப் பெரிதும் மேற்கொண்டு, அவர் தம் நடையுடை பாவனை களில் பெரிதும் ஈடுபட்டு இருந்ததோடன்றி, அவர் தம் வடமொழியையும் தமிழில் கலந்து வழங்குதலை உயர்ந்த நாகரிகமாகக் கருதிவந்தது.

அறுப்பு : நம் மறுப்பாசிரியர் தமிழ் நாகரிகத்தையும் தமிழ் வரலாற்றையும் செவ்வையாய் அறியாமையை அவர் மறுப்பு அறிவிக்கின் றது. அதற்கு விடை விளக்கம் ஒரு பெருநூலாய் விரியும். வடமொழியாளர் தென்னாட்டுக்கு வந்த பின்பு, தமிழ்ப் புலவருள், தமிழன்பரும் (காட்டிக் கொடுக்கும்) தமிழ்ப் பகைவரும், (கவலையற்ற) நொதுமலருமாக மூவேறு சாரார் தோன்றினர். இடைக்காலத்தில் தமிழன்பர் கை முற்றும் தாழ்ந்து விட்டதினால், வடவர் வாழ்க்கை முறையும் வடமொழியும் போற்றப்படத் தொடங்கினவேயன்றி வேறன்று.

இந்திய நாகரிகப் பண்பாட்டின் அடிப்படை தமிழரதே யென்பதும், தமிழ் தெற்கில் மூழ்கிப் போன குமரிநாட்டில் தோன்றி வடக்கே சென்று திரவிடமாய்த் திரிந்ததென்பதும், திரவிடமே ஆரியத்துக் கடிப்படை யென்பதும், தமிழ் வடமொழியால் தளர்ந்ததேயன்றி வளர்ந்ததன்று என்பதும், கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழ்நூல்கள் ஒளிக்கப்பட்டும் ஒழிக்கப்பட்டும் வந்தன என்பதும், உலகம் அறியும் காலம் அடுத்து வருகின்றது என்பதை நம் மறுப்பாசிரியர்க்கு உணர்த்த விரும்புகின்றேன்.

மறுப்பு 5 : "சீயகங்கன் அரும்பொருள் ஐந்தையும் தருகவெனக் கேட்டதாகவும், பன்னருஞ் சிறப்பிற் பாடித் தந்ததாகவும் பாயிரஞ் செப்பு கின்றது. ஆதலின், ஐந்தும் அமைந்ததாய் அந் நன்னூல் நிறைநூலே ஆம் என்க."

அறுப்பு : சீயகங்கன் ஐந்திலக்கணமும் இயற்றித் தருமாறு பவணந்தி முனிவரைக் கேட்டிருக்கலாம். அவரும் இசைந்திருக்கலாம். ஆயின், அந் நோக்கம் நிறைவேறியதென்பதைக் காட்டற்கு யாதொரு சான்றுமில்லை.

பாயிரம், நூலியற்றியதைக் குறிக்குமிடத்து, "முன்னோர் நூலின் வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்" என்று மட்டும் கூறுகின்றதே யன்றி, ஐந்திலக்கணமும் வகுத்தனன் என்று ஐயமறக் கூறவேயில்லை.

பெயரியலில் (11)

"பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்
வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்"

என்று செய்யுளிலக்கணம் கூறியிருப்பது, சொல்லின் பொதுவிலக்கணம் கூறிய நூற்பாவில் உள்ள "வழக்கொடு செய்யுளின்" என்னும் பாகுபாட்டின் ஒரு பகுதியை விளக்க எழுந்ததாயினும், தொல்காப்பியத்தில் அங்ஙனம் கூறப்படாமையை நோக்கும் போது, நன்னூலில் செய்யுளதிகாரம் என ஒன்று என்றேனும் அமைந்திருந்ததாகத் தெரிகின்றிலது.

மேலும், சமணம் சம்பந்தர் காலத்துக்குப் பின் தமிழ்நாட்டில் தலை தாழ்ந்து போயினும், ஓரளவு இன்றுவரை இடையறாது தொடர்ந்து வருவதால், ஒரு சமணர் வீட்டிலும் ஐந்ததிகார நன்னூலில்லாமையும், ஏனை மூவதிகாரங்களுள் ஒன்றேனும் ஓரிடத்துமின்மையும், அவை ஆசிரியரால் இயற்றப்பட்டில என்பதே யுணர்த்தற் பால.

மறுப்பு 6 : தமிழ்ப் புலவராம் குடிகள்........

"முன்னோர் ஒழியப் பின்னோர் பலரினும்
நன்னூலார் தமக்கு எந்நூலாரும் இணையோ"

எனப் புகழ்வராயினர்.

அறுப்பு : இது, குயக்கொண்டான்மாரும் சுவாமிநாத தேசிகன் மாரும் வையாபுரிகளும் ஆகிய கோடரிக்காம்புகளின் கூற்றேயெனக் கூறி விடுக்க.

மறுப்பு 7 : "ஒன்றொழி முந்நூற்று எழுபான் என்ப" என்று விரிவைக் கண்ட வர்களையும் காட்டுகின்றார்.

அறுப்பு : 'என்ப' என்பது அசைச் சொல்லாயும் வரும் என்பதை மறுப்பாசிரியர் அறியார் போலும். தொல்காப்பியம் - சொல்லதிகாரம் 293ஆம் நூற்பா வுரையைக் காண்க.

மேலும், ஒன்றொழி முந்நூற்றெழுபான் என விரிக்கும் முன்னை நூலொன்றும் இதுபோதில்லை.

மறுப்பு 8 : உயிரெழுத்தாயினுஞ் சரி, மெய்யெழுத்தாயினுஞ் சரி எல்லா எழுத்துகளையும் மனத்தால் நினைக்கும்போது மாத்திரம் வாய் திறவாமல் நினைக்கவாமே யொழிய, எதிராளிக்குத் தாம் கூறிக் காட்டுங் காலத்து வாய் திறந்தே கூற வேண்டுதலின் மெய்த்தன்மையையுடைய ஆய்தம் அங்காத்தலில் தோன்றாது எனக் கொள்ளுதல் எப்படிப் பொருந்தும்?

அறுப்பு : மெய்யெழுத்துகளையும் கூறிக் காட்டுங்காலத்து அங்காந்தே கூற வேண்டியிருத்தலின், ஆய்தத்துக்குமட்டும் ஏன் 'அங்கா' முயற்சியை விதந்து கூற வேண்டும்?

மேலும் பவணந்தி முனிவரே,

"அவற்றுள்
முயற்சியுள் அஆ அங்காப் புடைய" (76)

என முதலீருயிர்கட்கும்,

"இஈ எஏ ஐஅங் காப்போ
டண்பல் முதனா விளிம்புற வருமே" (77)

என ஏனைச் சில வுயிர்கட்குமாக, அங்கா முயற்சியை இதழகல் உயிர்கட்கு மட்டும் ஏன் வரையறுத்தல் வேண்டும்?

மறுப்பு 9 : "தும்மல் ஒலிபோன்று ஆய்த ஒலி தலையில் பிறப்பதை யெப்படி மறுத்தல் இயலும் எனக் கேட்க நேரிடுகின்றது."

அறுப்பு : தும்மல் ஒலிபோன்று எங்ஙனம் ஆய்த வொலி தலையில் பிறக்கும் எனக் கேட்க நேரிடுகின்றது.

மறுப்பு 10 : ஙகரம் மொழிக்கு முதலாகும் எனக் கூறும் ஒரு கட்சி யினரும், ஙகரம் மொழிக்கு முதலாகாது எனக் கூறும் மற்றொரு கட்சி யினரும் இருந்தனர். அவ் விரு சாராரையும் ஒன்றுபட் டாலுண்டு வாழ்வே என ஒன்றுபடுத்துதற்கே நன்னூலார்.... கூறிய அதனைக் குற்றமாகக் காட்டினால் அறிஞர் உலகம் ஆதரிக்குமா?"

அறுப்பு : ஙகரம்பற்றி மாறுபட்ட இரு சாராரும் எத்தனை முறை எங்கெங்குப் போரிட்டு எத்தனை பேர் மாய்ந்தனர்? ஒரு பொருளின் இயல்புபற்றி இருவர் அல்லது இரு சாரார் மாறுபடின், அறிஞன் அல்லது ஆசிரியன், தவறான கருத்துடையாரைத் திருத்துவதா? கோமுட்டிச் செட்டியார் கூற்றுப்போல் மாணவர்க்கு மயக்கமுண்டாகும் வண்ணம் இரு திறம்படக் கூறுவதா?

மறுப்பு 11 : "அங்ஙனம் என்று கூறலே தொன்றுதொட்ட மரபாகும் என்க."

அறுப்பு : "ஆங்கன மாகிய வாதிரை கையால்" என்று மணி மேகலையிலும்(16, 128), "ஆங்ஙனம் விரிப்பின்" என்று தொல்காப்பியத்தி லும் (1308) வந்திருப்பதால், நெடின் முதல் வடிவமே முந்தியதென்பது பெறப்படும். தொல்காப்பியம் மணிமேகலைக்கு முந்தியதாயினும், ஆங்ஙனம் என்பது ஆங்கனம் என்பதன் திரிபென்பது ஆராய்ச்சியால் தெளிவாம். அங்கிட்டு, இங்கிட்டு என்னும் சொற்கள் முறையே, அங்ஙோட்டு இங்ஙோட்டு என மலையாளத்தில் வழங்குவது கவனிக்கத் தக்கது. ஆங்கனம் ஆங்ஙனம் என்னும் வடிவங்களே, முறையே, அங்கனம் அங்ஙனம் எனக் குறுகி வழங்குகின்றன. இங்ஙனமே, இங்கனம் இங்ஙனம் முதலியனவும். இவை யெல்லாம், பாண்டிநாட்டு வழக்கை யறிந்த சொல் லாராய்ச்சியாளர்க்கன்றிப் பிறர்க்குச் செவ்வன் விளங்கா.

மறுப்பு 12 : "இடுகுறிப் பெயர், காரணப் பெயர், காரண இடுகுறிப் பெயர் என்ற இவற்றின் வேறுபாட்டைச் சூடாமணி நிகண்டு முதலிய பண்டைய நூல்களை ஓதியுணர்ந்தவர் மறுக்க முன்வரமாட்டார்."

அறுப்பு : சூடாமணி நிகண்டு மண்டலபுருடன் என்னும் சமணர் 16ஆம் நூற்றாண்டில் தொகுத்த சொற்பொருட்டொகுதி. அது இலக்கண நூலுமன்று, பண்டைய நூலுமன்று. ஆதலால், அதை அளவையாகக் கொள்பவர் தமிழியல்பை யறியார் என்பது தேற்றம்.

1. ஆங்ஙனம் என்பது ஆங்கு-அனம் எனப் பிரியும்.

2. அங்கிட்டு என்பது அங்கு-இட்டு எனப் பிரியும்.

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே." என்னும் தொல் காப்பியம் உண்மையானதாம்.

முடிவு: நன்னூல் நன்னூலே என்னுங் கட்டுரைக்கு உண்மையில் எதிர்மறுப்புத் தேவையில்லாவிடினும்,

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் கொல்குறும்பும்" சேர வியலும் இற்றைத் தமிழ்நாட்டின் சீர்கெட்ட நிலை நோக்கி, தமிழ் மாணவர் மருள் நீங்கித் தெருளும் வண்ணம் தென்றலிதழின் கட்டுரையிடச் சிறுமைக் கும் என் ஒழிவு நேரக் குறுமைக்கும் ஏற்ப, சுருங்கச் சொல்லன் முறையில், ஓரளவு வரைந்தேன்.

தமிழ்நாடு தமிழுக்குச் சிறப்புரிமையின்றிப் பொது நாடாயிருக்கு மளவும், தமிழக் கொள்கைகள் தலையெடா. அறியாமையிலும் அடிமைத் தனத்திலும் மயங்கிக் கிடக்கும் இளங்காளையர் உள்ளம் தளிர்ப்பெய்துமாறு, தென்றல் வீசுகின்றது. தெளிந்தெழுக.

இதனால், நன்னூல் அறவே தீ நூல் என்பதன்று. அதிலும் சில நற்கூறுகள் உள. ஆயின், தமிழின் உயிர்நாடியான தனித் தன்மைக்கும் தமிழ்மொழி நூலுண்மைக்கும் மாறான பல கருத்துகள் உண்மையின், அது முற்றும் நன்னூலன்று என்பதே, நன்னூல் நன்னூலா? என்னும் கட்டுரைக்கும் இம் மறுப்பறுப்புக்கும் முடிபும் என்க.

– "தென்றல்" 16.11.1957

## ⑤
# சேரலாதன் பெருஞ்சோறு வழங்கியது பாரதப் படைகட்கே

## 1

'தமிழ்ப் பொழில்' 36ஆம் துணர் 4ஆம் மலரில் மயிலை சீனி. வேங்கடசாமியார் பெயரில் வந்துள்ள 'சேரலாதன் அளித்த பெருஞ்சோறு' என்னும் கட்டுரையைக் கண்டு திடுக்கிட்டேன்.

கடந்த ஐயாயிரம் ஆண்டாக மெலிவுற்றும் நலிவுற்றும் வந்து குற்றுயிராய்க் கிடக்கும் தமிழ், அயன்மொழியாரால் மட்டுமன்றித் தமிழ ராலும் புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையில், மயிலை சீனி. வேங்கடசாமியார் ஒருவரே தமிழ்ப் பகைவரின் கூற்றுகளை ஆற்றலொடு மறுத்து வருகின்றார் என்று பற்றுள்ள தமிழ்ப் புலவர் உற்றுவரும் மகிழ்ச்சிக்கு மாறாக எழுந்துள்ளதக் கட்டுரை.

தமிழின் பிறந்தகமாகிய குமரிக்கண்டத்தைக் கடல் கொண்டு ஆரிய வருகைக்கு முற்பட்ட பழந்தமிழிலக்கியமனைத்தும் இறந்துபட்டபின், தமிழின் முதுபழந் தொன்மையைக் காட்டி நிற்கும் சான்றுகள், பஃறுளி யாற்றுச் செய்தியும், சேரலாதன் பெருஞ்சோற்றுச் செய்தியும் ஆகிய இரண்டே. இவற்றுள் பஃறுளியாறு மலையாள நாட்டின் தென்கோடியில் ஓடும் பறளியாறேயென்று ஒரு பிராமணத் தமிழ்ப் புலவரால் ஏற்கனவே கூறப்பட்டுளது. இன்று, சேரலாதன் பெருஞ்சோறும் கடைக்கழகக் காலத்ததேயென்று ஒரு தமிழகத் தமிழ்ப் புலவரால் கூறப்பட்டுவிட்டது.

எவ்வினத்தரேனும், காய்தல் உவத்தல் அகற்றி நடுநிலையாய் ஒரு பொருளை ஆய்ந்து அதன் உண்மை கண்டுரைப்பின் ஒப்புக்கொள்ளத் தக்கதே ஆயின், 'சேரலாதன் அளித்த பெருஞ்சோறு' என்னுங் கட்டுரை அங்ஙனம் ஆய்ந்தெழுதியதா என்பதை இங்கு ஆய்ந்து காண்பாம்.

"மண்டிணிந்த நிலனும்" என்று தொடங்கும் புறநானூற்று இரண்டாஞ் செய்யுளில்,

"வான வரம்பனை நீயோ பெரும!
அலங்குளைப் புரவி *ஐவரொடு* சினைஇ

நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
*ஈரைம் பதின்மரும்* பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"

என்னும் பகுதிக்குப் பழைய உரையாசிரியர் உரைத்த உரை.

"வான வரம்ப, பெரும, நீ, அசைந்த தலையாட்டமணிந்த குதிரையை யுடைய பாண்டவ ரைவருடனே சினந்து நிலத்தைத் தம்மிடத்தே கொண்ட பொற்பூந் தும்பையையுடைய துரியோதனன் முதலாகிய நூற்றுவரும் பொருது போர்க்களத்தின்கட் படுந்துணையும் பெருஞ் சோறாகிய மிக்க உணவை இருபடைக்கும் வரையாது வழங்கினோய்!" என்பது.

ஐவர் என்னும் தொகையடிப்பெயர், பாரதக் காலத்திற்குப் பின் தமிழிலக்கியத்திலும் வழக்கிலும் பாண்டவரையே குறித்து வந்துள்ளமை, "ஐவரென் றுலகேத்தும் அரசர்கள்" என்னும் கலித்தொகைத் தொடராலும் (25), "ஐவருக்குந் தேவி அழியாத பத்தினி" என்னும் பழமொழியாலும், அறியப்படும்.) நூற்றுவர் என்னும் பெயரும், தனித்துவருமிட மெல்லாம், "நூற்றுவர்பால்... தூது நடந்தானை" (சிலப். ஆய்ச்சியர் குரவை) என்பதிற் போல் துரியோதனன் முதலியோரையே குறிக்கும். இதனால் தொகைக் குறிப்பு என்னும் நன்னூல் இலக்கணத்திற்கு (நூற்பா 269), ஐவர் நூற்றுவர் என்னும் பெயர்களையே இலக்கியமாக எடுத்துக் காட்டுவர் உரையாசிரியர்.

ஐவர் என்பதற்கு நேரான பஞ்சவர் என்னும் வடசொல்லும், "பஞ்சவர்க்குத் தூது நடந்தானை" என்னும் ஆய்ச்சியர் குரவைத் தொடரில் (சிலப். 17) பாண்டவரையே குறித்தது.

பண்டைத் தமிழகப் பாண்டியர் ஐவராக இருந்து ஆண்டு பஞ்சவர் எனப் பெயர்பெற்றமை, இலக்கியத்தாலும், கல்வெட்டுகளாலும் நிகண்டு என்னும் உரிச்சொற்றொகுதிகளாலும் அறியப்பட்டதே. பதினாறாம் நூற்றாண்டில் விசுவநாத நாயக்கரோடு பஞ்ச பாண்டியர் பொருதார் என்னும் செய்தியும் இதை வலியுறுத்தும். ஆயின், அப் பாண்டியர் ஐவருள்ளும் ஒருவனே தலைமையாக மதுரையிலிருந்து ஆண்டான் என்பதும், அவனுக்குள் ஏனைய நால்வரும் அடக்கம் என்பதும், பஞ்சவன் என்னும் ஒருமைப் பெயரே உணர்த்தும். பாண்டவர் ஐவருள் ஒவ்வொருவரையும் பஞ்சவன் என்னும் வழக்கமில்லை; பாண்டவர் என்பதே மரபு.

புறநானூற் றிரண்டாஞ் செய்யுளில் வரும் 'ஐவர்' என்னும் சொல், வழக்கும் இடமும் பற்றிமட்டுமன்றி "ஈரைம் பதின்மரும்" என்னும் தொடர்புடைய தொகையடிப்பெயராலும், "நிலந்தலைக் கொண்ட" எனத் துரியோதனன் முதலியோர்க்கு வந்துள்ள அடைமொழியாலும், "பொருது களத் தொழிய" என்னும் வினை முடிபாலும், பாண்டவரையே குறித்தல் வெளிப்படை இனி, பாண்டவருள் ஒருவனான நகுலன் குதிரையேற்றத்தில் தேர்ச்சி பெற்றவனாதலின், "அலங்குளைப் புரவி" என்னும் அடைமொழி பாண்டவருக்குக் கொடுக்கப்பட்டுளதெனக் கொள்ளினும் பொருந்தும்.

பாரதப்போர் நாடுபற்றி நிகழ்ந்ததென்பது யாவரும் அறிந்தது. நூற்றுவர் யாவரும் அப் போரில் மாண்டனர் என்பதும் ஐயமறுப்பற்றதே.

மேலும், பஞ்சவர் என்னும் பன்மைப் பெயர், பாண்டியரைக் குறிக்கும்போது, முன் பின் ஆண்ட ஐந்து தலைமைப் பாண்டியரைக் குறிக்குமேயன்றி, சமகாலத் துணைப்பாண்டியரை உளப்படுத்தாது. துணைப்பாண்டியரை உளப்படுத்துமிட மெல்லாம் பஞ்ச பாண்டியர் என விரித்துக் கூறுவதே வழக்கம். பாண்டவரைக் குறிப்பதாயின் பஞ்ச பாண்டவர் என இருசொல் வேண்டுவதில்லை; பஞ்சவர் எனினே அமையும்.

ஐவர், அல்லது பஞ்சவர் என்னும் சொல், பாண்டியர் பாண்டவர் ஆகிய இருசாரார்க்கும் பொதுவேனும், ஈரைம் பதின்மர் என்பது பாண்டியர் ஐவரின் நூறு படைத்தலைவர் என்று கொள்வது நூலிற்கு முற்றும் மாறானதாம். ஒரு பாண்டியனுக்கு இருபதின்மர் விழுக்காடு ஐவர் பாண்டியர்க்கும் நூற்றுவர் படைத்தலைவர் இருந்தனர் என்பது, வரம்பிறந்த உயர்வுநவிற்சியாம். ஐவர்க்கும் வெவ்வேறு படைத்தலைவர் என்று கொள்ளினும், ஐவர்க்குமேல் படைத்தலைவர் இருந்திருக்க முடியாது. ஓர் அரசனுக்கு எத்துணைப் பெரும்படையிருப்பினும், பெருந்தலைவன் ஒருவனாகவே யிருப்பான். பல, துணைப்படைகள் ஒருங்கு சேரினும், ஒருவனே அவற்றுக்கெல்லாம் பொதுத்தலைவனா யிருப்பான். அல்லாக்கால், படைகள் வெற்றிபெற ஒற்றுமையாகப் பொரமுடியாது. வெற்றி பெற்றெழினும் பொருது களத்தொழியினும் புறங்காட்டியோடினும், போர் விளை வெல்லாம், அரசர் அல்லது பெரும்படைத்தலைவர் மேலேயே வைத்துக் கூறப்படும். பாண்டியர் ஐவரின் படைத்தலைவர் நூற்றுவர் எனின், அவருட் பலர் செய்யுளில் விதந்து குறிப்பிடத்தகாத சிறு படைத்தலைவரே யாவர். இனி, நூற்றுவர் படைத்தலைவர், என்பது நூலுத்தி வழக்குக்குப் பொருந்தா தென்று கண்ட கட்டுரைகாரர்தாமே, ஈரைம் பதின்மர் என்பது ஈரொன்பதின்மர் (பதினெண்மர்) என்பதின் பாடவேறு பாடாயிருக்கலா மென்று புதுவதாகக் கருதுகின்றார். பாடவேறுபாடு கொண்டு தம் கொள்கையை நாட்டக் கருதியவர், ஈரும்பதின்மரும் என்னும் பாடம் கொண்டு, படைத்தலைவர் தொகையைப் பத்தாகக் குறைத்திருக்க லாமே!

இனி, உதியஞ்சேரலாதன் பதினெட்டு நாளும் பாரதப் படைகட்கு வழங்கிய பெருஞ்சோற்று மிகுபதத்தை, பிற்காலத்துச் சேரனொருவன் தன் படைமறவர்க்களித்த "பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையாகக் காட்டுகின்றார் கட்டுரைகாரர். தொல்காப்பியத்தில் வஞ்சித்திணைத் துறையாகக் குறிக்கப்பட்டுள்ள "பிண்ட மேய பெருஞ்சோற்று நிலை" வழிவழி வந்த மூவேந்தர்க்கும் பொதுவேயன்றி அவருள் ஒருவனுக்கு மட்டும் சிறப்பாக வுரியதன்று. ஓர் அரசனைச் சிறப்பித்துப் பாடும் இயன்மொழி வாழ்த்தில், அவனுக்குச் சிறப்பாகவுரிய இயல்களையும்

செயல்களையும் குறிப்பிடுவதன்றி, எல்லார்க்கும் பொதுவானவற்றைக் குறிப்பது மரபன்று. மேலும், ஒரு வேந்தன் போருக்குச் செல்லும் தன் படைஞர்க்கு அளிக்கும் விருந்து, வணிக முறையில் கைம்மாறு கருதிச் செய்யுங் கடமையேயன்றி, வள்ளன்மை முறையில் வழங்கும் கொடையாகாது. போர்க்களத்தில் தன் வேந்தன்பொருட்டு உயிரைத் துறக்கத் துணியும் மறவனுக்கு ஓர் உருண்டை சோறு கொடுத்தல்தானா பெரிது! இதனாலேயே "பிண்ட மேய பெருஞ் சோற்று நிலை" பாடாண் பாட்டுகளில் இடம் பெறுவதில்லை. உதியஞ் சேரலாதனது "பெருஞ்சோற்று மிகுபதம்" "பிண்ட மேய பெருஞ் சோற்று நிலை"யேயாயின் போர் நிகழ்த்திய எல்லா வேந்தரும் "பெருஞ் சோற்று" என்னும் பெயரடை (மொழி) பெற்றிருக்கலாமே!

உதியஞ்சேரலாதனது பெருஞ்சோற்று மிகுபதத்துக்குப் பல சிறப்பியல்களுண்டு. அவையாவன:

1. கைம்மாறின்மை
2. படைப்பெருமை
3. நடுநிலை
4. வரையாமை
5. சேய்மை

இச் சிறப்புப் பற்றியே உதியஞ்சேரலாதன் ஒப்புயர்வற்ற அடைமொழி பெற்றான். முடிநாகராயர் பாட்டில் பெருஞ்சோறு என்று மட்டும் குறியாது "பெருஞ்சோற்று மிகுபதம்" என மிகுத்துக் கூறியதும், "வரையாது" என்னுங் குறிப்பும், 'பிண்டம்' என்னுஞ் சொல்லின்மையும், கவனிக்கத்தக்கன.

ராயர் என்னும் பெயர் கடைச்சங்க காலத்தில் வழங்கப் பெறவில்லை என்பது கட்டுரைகாரர் கருத்து. அது கடைச்சங்கத்திற்கும் முந்தி வழங்கியதென்பதற்குத் தொல்காப்பியமே சான்றாம். தொல்காப்பியர் காலம் கி.மு.7ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகாது. ஓர் ஆள்வினைத் துறைத் தலைவன் அரசனாற் பெறுஞ் சிறப்பு மாராயம் எனப்பட்டது.

"மாராயம் பெற்ற நெடுமொழி யானும்" (பொருள். 63)

என்பது தொல்காப்பியம்.

மாராயமாவது மாராயன் என்று அரசனாற் பட்டம் பெறுகை. "பஞ்சவ மாராயன்......கொங்காள்வான்" என்று கல்வெட்டில் வருதல் காண்க. அரசனாற் சிறப்பெய்திய வெற்றி மறவரின் பெற்றிமை கூறும் புறத்துறையை **மாராய வஞ்சி** எனப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் (3 : 11).

அரசன் - அரைசன் - அரையன் - ராயன். மாவரையன்- மாராயன்.

நாகர் என்பார் பண்டைக் காலத்தில் நாகவணக்கம் மிகுந்திருந்த கீழ்நாட்டார். அவர் முடிநாகர், ஒளிநாகர், நீலநாகர் எனப் பல வகையர்.

முடிநாகர் நாகமுடியணிந்திருந்தவர். அவர் சூட்டு நாகர் எனப்படுவர். முடிநாகவரையர் - முடிநாகராயர். இரு சொற்றொடர்களில் அரையன் என்பது வருஞ்சொல்லாக நின்று ராயன் என்று திரிவதை மரூஉவாக அல்லது சிதைவாகக் கொள்ளல் வேண்டும். அரையன் என்னும் பெயர் தலைவன் என்னும் பொருளதாகவோ, இடுகுறிப் பெயராகவோ, இருந் திருக்கலாம். வேத காலத்திலேயே ஆரியர்க்குத் தமிழ்நாட்டொடு தொடர் பிருந்ததென ஆராய்ச்சியாளர் கூறுவதால், தென்சொற் சிதைவான ஆரியச் சொற்கள் வேதத்தில் இடம்பெற்றமை வியப்பன்று.

வானவரம்பன் என்பது வானளாவும் மலையரசன் என்றும், இமயவரம்பன் என்பது பனிமலையை (இமயத்தை) எல்லையாகவுடைய நாட்டரசன் என்றும் பொருள்படுவதாகும். இவை சேரர் பெயர்கள். இவற்றுள் முன்னது எல்லார்க்கும் பொது; பின்னது வடநாட்டை அடிப்படுத்திய ஒரு சிலர்க்கே சிறப்பு.

நூறடி உயரமுள்ள மாடங்களும் இருநூறடி யுயரமுள்ள கோபுரங் களும், வான்றோய்வனவாகவும் வானத்தைத் துளைத்து மீச்சென்றன வாகவும் உயர்வு நவிற்சியாகக் கூறப்படும்போது, பத்தாயிரம் அடி உயர்ந்த குடமலை ஏன் வான வரம்பென்று மீக்கூறப்பட முடியாது?

தமிழகத்தின் வடவெல்லை வரலாற்றிற்கெட்டிய காலமெல்லாம் வேங்கட மலையாகவே இருந்திருப்பினும், மூவேந்தருள்ளும் வலிமை மிக்கவர் அவ்வப்போது பனிமலைவரை படையெடுத்துச் சென்று நாவலந்தேய முழுவதையும் தம் ஆட்சிக்குட்படுத்தியமை தமிழிலக்கியமும் தமிழ்நாட்டு வரலாறும் கற்றார் அனைவரும் அறிந்ததே. கி.பி.11ஆம் நூற்றாண்டிலிருந்த இராசேந்திரச் சோழன் கங்கைவரை சென்று அதைக் கைக்கொண்டான். 3ஆம் நூற்றாண்டிலிருந்த செங்குட்டுவன் வடவரசரை யெல்லாம் வணக்கிப் பனிமலையிலிருந்து கண்ணகி சிலைக்குக் கற் கொணர்ந்தான். அவன் தந்தையாகிய சேரலாதன், "குமரியொடு வடவிமயத் தொருமொழிவைத் துலகாண்ட" பெருவேந்தன். 2ஆம் நூற்றாண்டிலிருந்த கரிகால்வளவன், பனிமலை வரை வென்று, அதற்கும்அப்பால் படையெடுக்க முயன்றவன்.

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்" (பொருள். 391) என்று தொல்காப்பியம் கூறுவதாலும் தமிழகத்தில் முதற் காலத்தில் மூவேந்தர்க்கே முடியணியும் உரிமை இருந்ததினாலும் 'படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டுவரும் சேரசோழ பாண்டியர் குடி" எனப் பரிமேலழகர் பாராட்டுவதாலும், கடைக்கழகக் காலத்திற்கு முன்பே மூத்தமிழ் வேந்தரும் முழுவலி பெற்றிருந்தனர் என்பதும், அவருட் சிலரேனும் பனிமலைவரை செங்கோல் செலுத்தியிருக்க வேண்டுமென்பதும், அவ் வரலாற்றுச் சான்று களெல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன என்பதும், உய்த்துணரப்படும். இனி

சோழர் காலத்திலும் கங்கைக்கரையில் தெலுங்கச் சோழர் ஆண்டனர் என்னும் செய்தியும், வடநாட்டுக் கதிரவன்குல அரசர்க்கும் திங்கள்குல அரசர்க்கும் முறையே சோழ பாண்டியரோ டிருந்தவுறவும் குமரிநாட்டுத் தோன்றிய தமிழின் தொன்மையும், இன்னும் வடநாட்டில் திரவிட மொழி களுண்மையும், ஆரிய வருகைக்குமுன் நாவலந் தண்பொழில் முழுதும் மூவராட்சிக்குட்பட்டிருந்ததோ என ஐயுறத் தூண்டும்.

உதியன் என்பது சேரர்குடிப் பெயர். ஆதன் என்பது பண்டைக் காலத் தியற்பெயர்களுள் ஒன்று. பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் வேறு; செங்குட்டுவன் தந்தையாகிய சேரலாதன் வேறு; தமிழின் தொன்மையைக் குறைக்க விரும்பும் தமிழ்ப் பகைவரே, இவ் விருவரையும் ஒருவராக மயக்குவர்.

"இமயமலையை எல்லையாகக் கொண்டு சேரமன்னர் எந்தக் காலத்திலும் அரசாண்டதாகத் தெரியவில்லை" என்று கட்டுரைகாரர் கூறுவது, கிறித்துவுக்கு முற்பட்ட சேரவேந்தர் வரலாற்றையெல்லாம் கண்ட பின் கூறுவதுபோல், வேடிக்கையாகத் தோன்றுகின்றது. செங்குட்டுவனிலும் சேரலாதனிலும் பெரிய சேரவேந்தர் எத்தனையோபேர், வரலாற்றுக் காலத்துக்கு முன் குமரிமுதல் பனிமலைவரை ஆண்டிருக்கலாமே!

"தென்குமரி வடபெருங்கற்
குணகுடகட லாவெல்லை
குன்றுமலை காடுநா
டொன்றுபட்டு வழிமொழியக்
கொடிதுகடிந்து கோறிருத்திப்
படுவதுண்டு பகலாற்றி
யினிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல!" (புறம். 17)

என்று, யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையை, இமயமலையை எல்லையாகக்கொண்டு ஆண்ட சேரவேந்தரின் வழிவந்தோனாக, குறுங் கோழியூர்கிழார் பாடியிருப்பது எத்துணைத் தெள்ளிதுந் தேற்றமுமாக வுள்ளது!

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி" (சிலப். 11 : 19 : 22)

என்று இளங்கோவடிகள் பொதுப்படக் கூறினும், அது ஒரு தனிப்பட்ட பண்டைப் பாண்டியன் செய்தியையன்றோ எடுத்துரைக்கின்றது! அப் பாண்டியன்போல் சில, சேரவேந்தரும் பனிமலைவரை ஆண்டிருக்க லாமே! ஒரு தமிழ் வேந்தன் பனிமலையை எல்லையாகக் கொண்டு

ஆள்வதென்பது. முத்தமிழ் நாடுகளுள் ஒன்றை ஆள்வதுபோல் நேரடியாக இருந்திருக்க முடியாது. தமிழகத்துக் கப்பாற்பட்ட வடவரசரிடமெல்லாம் திறைகொண்டு தன் அதிகாரத்தைச் செலுத்தியதாகவே இருந்திருக்க முடியும். அதுவும் ஆட்சியின்பாற்பட்டதே. ஆதலால், "இமயமலையை எல்லையாக வுடையவன்" என்னும் பொருட்கு இழுக்கில்லை யென்க.

இனி, முடிநாகராயர் பாட்டில், 'ஐவர்' என்பது பஞ்ச பாண்டியரையும், 'ஈரைம் பதின்மர்' என்பது அப் பஞ்ச பாண்டியரின் படைத் தலைவர் நூற்றுவரையும், குறிக்குமென்று புத்துரை வரையும் கட்டுரைகாரர், தம் உரைக்குச் சான்றாக,

"நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்" (புறம். 2)

என்னும் பகுதியைக் காட்டுகின்றார். குமரிக்கண்டம் கடலுள் முழுகிய பின், தமிழகத்தின் தென்கோடி குவிந்து முனையாக முடிந்ததினாலும், அம் முனைவரை சேரனுக்கு ஆள்நில மிருந்ததினாலும், அவனாட்சிக் குட்பட்ட கடலிலேயே கதிரவன் தோன்றி மறைவதாயிற்று. இவ் வியற்கையான நிலைமையினின்று, உதியஞ் சேரலாதன் சோழநாட்டையும் கைப்பற்றி ஆண்டானென்றும், அதனால் பாண்டியர் ஐவரும் அஞ்சிப் படையெடுத் தனர் என்றும், உய்த்துணர இடமில்லை. பாண்டியநாட்டுக் கப்பாலுள்ளதும் அதினும் பெரியதுமான சோழநாட்டைக் கைப்பற்ற வல்லவன் முதலிற் பாண்டிய நாட்டையே கைப்பற்றியிருப்பான். ஆதலால், பாண்டிய நாட்டைத் தாண்டிச் சென்று சோணாட்டைப் பிடித்தான் என்னும் செய்தி, கொக்குப் பிடிக்கும் கலை (வித்தை) போன்றதே.

இனி, பண்டைச் சேரர் கலப்படையும் வைத்திருந்ததினால், சோணாட்டையோ பாண்டிநாட்டையோ கருதாது நேரே ஈழஞ்சென்று, அதன் வடபகுதியைக் கைப்பற்றிச் சில்கால் ஆண்டிருக்கலாம். 'வெயிலத்துச் சென்றான்', 'மழையத்துப் போனான்' என்பன போன்ற அத்துச் சாரியை வழக்குகள், சோழ பாண்டிய நாடுகளில் வழங்காமல், சேரநாட்டிலும் யாழ்ப்பாணத்திலும் இன்றும் வழங்குவது இதற்குச் சான்றாயிருக்கலாம். சேரர் ஆட்சி யாழ்ப்பாணத்தில் சின்னாள் இருந்திருப் பினும், கதிரவன் சேரர் கடலிலேயே தோன்றி மறைந்த செய்தி அக்கால நிலைமைக்கு முற்றும் ஏற்பதே. முடிநாகராயரின் முரஞ்சியூர் ஈழத்தைச் சேர்ந்ததென்னும் அறிஞர் கருத்தும், அப் புலவரின் பெயருக்கும் ஞாயிற்றைப்பற்றிய அவர் கூற்றிற்கும் மிகப் பொருந்துவதாகும்.

இனி, நால்வேதம் முடிநாகராயரின் பாட்டிற் குறிக்கப் பெற்றிருப்ப தால், அதுபற்றியும் அவர் தொன்மையைப்பற்றிச் சிலர் ஐயுறுவர். பாரத காலத்திலேயே ஆரிய வேதம் வியாசரால் நான்காகப் பகுப்பட்டுவிட்ட தென்றும், அதனால் அவர் வேதவியாசர் எனப்பட்டார் என்றும், புராணங்

கூறும். முடிநாகராயர் பாட்டு பாரதப் போருக்குப் பிற்பட்டதென்பது வெளிப்படை. ஆதலால், நால்வேதத்தை அவர் குறிப்பிட்டது அவர் தொன்மையை மறுக்காது. வேதத்தை மறை என்னுஞ் சொல்லாற் குறிக்கவில்லையே யென்றும் சிலர் மயங்குவர். பாட்டிற் குறிக்கப்பட்டது ஆரியமறை. அதற்குரிய பெயர் வேதம் என்பதே. ஆதலால், ஆரிய மறையை ஆரியச் சொல்லாலேயே குறித்தது முறையானதே. கிறித்தவ மறையைப் பைபிள் அல்லது விவிலியம் என்றும், இசலாமிய மறையைக் குரான் என்றும், குறிக்காது வேறு எச் சொல்லாற் குறிக்கமுடியும்? தமிழிலுள்ள தமிழ்மறையே மறை என்னும் சொல்லால் யாண்டும் குறிக்கப்படற்குரியதாம்.

"உயர்ந்தோர்க் குரிய வோத்தி னான"

என்னும் தொல்காப்பிய நூற்பா (அகத். 31) இறந்துபட்ட தமிழ்மறையை உணர்த்தும்.

தமிழுக்கு வேறெம்மொழிக்கும் இல்லா வகையில், அயலாராலும் தமராலும் வலிய எதிர்ப்புண்மையாலும், ஆரிய வருகைக்கு முற்பட்ட தமிழ் இலக்கியமனைத்தும் அழிக்கப்பட்டுவிட்டமையாலும், வரலாறும் மொழிநூலும் துணைகொண்டல்லது பெருந்தமிழ்ப் புலவரும் தமிழைச் செவ்வையாய் அறிய முடியாது. அவ் விரு நூலையும் துணை கொண் டறிந்த விடத்தும், தன்மானமும் நெஞ்சுரமும் இல்லாக்கால் உண்மையுணர முடியாது. பிறப்பொடு தொடர்புபடுத்தப்பட்ட ஆரியக் குலப்பிரிவினை யுளையில் நெடுங்காலம் முழுகிக் கிடந்தமையால், அடிமைத்தனம் ஊறிப் போன குடியிற் பிறந்த சிலர், ஆங்கில ஆட்சியும் ஆங்கிலக் கல்வியும் கண்ட பின்னரும், தம் அடிமைத்தனத்தை விட்டு உய்வதில்லை. சில்லாண்டு கட்குமுன், ஒரு தமிழ்ப் புலவர், வானவரம்பன், இமயவரம்பன் என்னும் பெயர்கள், முறையே, 'வானவர் அன்பன்', 'இமையவர் அன்பன்' என்ப வற்றின் சிதைவென்றும் அவ் விரு பெயரும் 'பிராமணர் அடிமை' என்று பொருள்படுமென்றும் எழுதியிருந்தார்.

இனி, வறுமையினாலும் சிலர் அடிமைத்தனத்தை ஏற்பதுண்டு இதற்குத் தமிழைக் காக்கும் தமிழரசின்மையும் புலவரைப் போற்றும் வள்ளல்களின்மையுமே காரணம்.

எது எங்ஙனமிருப்பினும்,

"பால்புளிப்பினும் பகல்இருளினும்
கோல்சாயினும் குறள்தவறினும்"

நடுக்கின்றி நிற்கும் என் மதிப்புக்குரிய நண்பர் மயிலை-சீனி. வேங்கட சாமியார், தாம் வரைந்ததை மீண்டும் ஆய்ந்து பார்ப்பாராக.

# 2

'தமிழ்ப்பொழில்' 36ஆம் துணர் 7ஆம் மலரில் யான் எழுதியிருந்த கட்டுரையைக் கண்டு, வரலாற்றாராய்ச்சியாளரும் என் நண்பருமாகிய புலவர் மயிலை சீனி. வேங்கடசாமியார் அவர்கள் அமைவார்கள் என்று கருதியிருந்தேன். ஆயின், அதற்கு மாறாக அதை மறுத்ததுடன் வேறுஞ் சில வழூஉக் கருத்துகளையும் தோற்றியுள்ளார்கள். அவர்களது எதிர்மறுப்பு பொதுவகையான செய்திபற்றியதாயின், யான் அமைந்திருப்பேன். ஆயின், தமிழுக்குப் பேரிழுக்கம் விளைப்பதாதலின், இவ் விறுப்பை விடுக்கத் துணிந்தேன். இதற்கும் மறுப்பு வரின், அதற்கும் இறுக்க அணியமாய் (தயாராய்) இருக்கின்றேன்.

1. "ஓர் அரசனைச் சிறப்பித்துப் பாடும் இயன்மொழி வாழ்த்தில் ...... பொதுவானவற்றைக் குறிப்பது மரபன்று" என்னும் என் கூற்றில், 'சிறப்பித்து' என்னும் சொற்பொருளை நண்பர் செவ்வையாய் உணர வில்லையென்று தெரிகின்றது.

சிறப்பு என்பது, பொதுச்சிறப்பு, தனிச்சிறப்பு என இருவகைப்படும். இவற்றுள், முன்னது பலர்க்குப் பொதுவானது; பின்னது ஒருவரிருவர்க்கே சிறப்பானது. இரவலர் ஒரு பெரும்பொருள் வேண்டின், அதனை இல்லையென்னாது ஈவது பொதுச்சிறப்பு. பெருந்தலைச் சாத்தனார்க்குக் குமணன் தன் தலையைக் கொடுக்கத் துணிந்தது தனிச்சிறப்பு.

"பெருஞ்சமந் ததைந்த........ தழங்குகுரன் முரசே" என்னும் பதிற்றுப் பத்துப் பகுதியுள், "பெருஞ்சோறு உகுத்தற் கெறியும்" என்பது தனிச்சிறப்பு மன்று, பொதுச்சிறப்புமன்று. "முரசுமுழங்கு தானை மூவருள்ளும்" என்று வெள்ளைக்குடி நாகனார் பாடுவதால் (புறம்.35), பல்யானைச் செல்கெழு குட்டுவன் உகுத்த பெருஞ்சோறும், சேரன் செங்குட்டுவன் நிகழ்த்திய "பெருஞ்சோற்று வஞ்சியும்" "பிண்ட மேய பெருஞ்சோற்று நிலை" என்னும் வஞ்சித்துறைக்கு எடுத்துக்காட்டான பொதுச் செய்திகளே.

"பெருஞ்சோறு கொடுப்பது மூவேந்தருக்கும் பொதுவான தென்றா லும், அதுவும் ஓர் அரசனுக்குரிய சிறப்பாகப் புலவர்களால் குறிப்பிடப் பட்டுள்ளன," என்று நண்பர் கூறியிருப்பது முன்னுக்குப் பின் முரணாதல் காண்க.

ஒருவரைப் பாடும் பாட்டில் பொதுச்செய்தியும் கூறப்படும்; சிறப்புச் செய்தியும் கூறப்படும். சிறப்புச் செய்தியே சிறப்பித்துப் பாடும் இயன்மொழி வாழ்த்திற்குரியதாம். ஔவையார் முல்லானைப் பாடிய பாட்டு இதற்கு ஓர் எடுத்துக்காட்டாம்.

"பிண்ட மேய பெருஞ்சோற்று நிலை" என்னும் பொதுவான வஞ்சித் துறை பற்றியே உதியஞ் சேரலாதன். "பெருஞ்சோற்று" என்னும் அடை

மொழி பெற்றானாயின், அதனை நிகழ்த்திய பிறவேந்தருள், நண்பரால் சிறப்பாக எடுத்துக்காட்டப் பெறும் பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் சேரன் செங்குட்டுவனும் உதியஞ்சேரலும், ஏன் அவ் வடைமொழி பெறவில்லை? எல்லாருக்கும் பல்லிருக்க, ஒருவனைமட்டும் ஏன் பல்லன் என்றழைக்க வேண்டும்? அதனால் அவன் பெரும்பல்லன் என்பது பெறப்பட வில்லையா? அதுபோல், எல்லா வேந்தரும் போர்க்கு முன் பெருஞ்சோறு வழங்கியிருக்கவும், அவருள் ஒருவன்மட்டும் 'பெருஞ் சோற்று' என்னும் அடை ஏன் பெற்றிருக்கவேண்டும்? அவனைப் பாடிய புலவரெல்லாரும் நடுநிலை திறம்பியவரா? இதனாலேயே உதியஞ் சேரலாதன் வழங்கிய பெருஞ்சோறு, பிறவேந்தர் வழங்கிய பெருஞ் சோற்றினும் வேறானதென்று தெரிகின்றதே!

2. பெருஞ்சோறு என்பது அரசன் உடனிருந்துண்ணுவதால் பெருமை பெற்ற சோறு என்று நண்பர் கருதுகின்றார். அது உண்பாரின் தொகைப் பெருமையால் ஆன அளவுப் பெருமையேயன்றி வேறன்று.

"சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானு நனிபல கலத்தன் மன்னே" (புறம். 235)

என்னும் ஔவையார் புறப்பாட்டடிகளையும் அவற்றின் உரையையும் நோக்குக.

இன்றும் நாட்டுப்புறத்துக் காளியம்மை விழாப் படைப்புகளில், ஊராரெல்லாம் உடனுண்ணும் பெருஞ்சோற்றமலையைக் காணலாம். ஒரு வேந்தனின் நாற்பெரும் படைமறவரும் உடனுண்ணத்தக்க சோற்றுத் திரளை, எத்துணைப் பெரிதா யிருந்திருத்தல் வேண்டும்!

பிண்டம் என்பது பிண்டிக்கப்பட்ட உருண்டை. அது ஒரு சிறு கவளமன்று; ஓர் ஆடவனுக்குப் போதிய பேருருண்டை. சுவை மிக்கதும் சத்துள்ளதும் மணங்கமழ்வதும் மறவுணர்ச்சிக்குப் பொருந்திய சரக்குகள் கலந்ததுமான சிறந்த புலவுவுருண்டையே, அப் பிண்டமென்றறிதல் வேண்டும். ஆயினும், போரில்லாவிடின் புலந்து கொள்ளும் தறுகண் மறவர், மறமிகுதியும் நன்றியறிவும்பற்றிப் பொருதனரேயன்றி, அரசனுடன் அமர்ந்துண்ணும் உண்டியினால் மட்டும் பொரவில்லை. அரசன் அமைதிக் காலத்தில் உயர்ந்தவனாயினும், போர்க்காலத்தில் தன் படைமறவரொடு கூடித் தானும் பொருததினாலும், போரால் ஏற்படக்கூடிய யாக்கை நிலையாமை தனக்குமுண்மை யறிந்திருப்பனாதலாலும், பிண்டமேய பெருஞ்சோற்று நிலையில் அவனுக்கு இரக்க வுணர்ச்சியினும் சமநிலைப் பட்ட மறவுணர்ச்சியே விஞ்சியிருந் திருக்கும்.

3. "ராயர், வானவரம்பன், இமயவரம்பன் என்பன பற்றியும் தேவநேயர் தமது கருத்தைக் கூறியுள்ளார். அவையும் ஏற்கத் தகுந்தனவல்ல. இதுபற்றித் தனியே வேறு கட்டுரை எழுதியிருக்கிறேன்," என்றார் நண்பர். அக் கட்டுரை வரின் அதையும் மறுப்பேன்.

4. முரஞ்சியூர் முடிநாகராயர் செய்யுளில் 'ஐவர்' 'ஈரைம் பதின்மர்' என்றும், சிலப்பதிகார வாழ்த்துக் காதை ஊசல் வரியில், 'ஓரைவர்', 'ஈரைம் பதின்மர்' என்றும் வருபவை பாண்டவர் கௌரவர் என்னும் சொல்லின்மையால், பாண்டவரையும் கௌரவரையும் குறியாவென்றும், அத் தொகைப் பட்ட வேறிரு சாராரையே குறிக்குமென்றும், நண்பர் கூறுகின்றார்.

"காய்தல் உவத்தல் அகற்றி நடுநிலையில் நின்று ஆராயும் பழக்க முடைய" நண்பர்.

"வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினுஞ் சார்பினும்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே" (தொல்.536)

என்னும் நூற்பாவையும்,

"உய்த்துக்கொண் டுணர்தல்" (தொல். 1610)

என்னும் உத்தியையும் சரியாய் உணர்ந்திருப்பாராயின், இத்தனைத் தடுமாறி இடர்ப்படார்.

காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்ட முடிநாகராயரும் இளங்கோ வடிகளும், பாரதப் போர்ச் செய்தியையே முறையே, புறப்பாட்டிலும் (2) சிலப்பதிகார ஊசல்வரியிலும் பாடியுள்ளனர் என்பது, சொல்லையும் பொருளையும் நடுநிலையாய் நோக்குவார் எவர்க்கும் புலனாகாமற் போகாது.

5. முடிநாகராயர் 2ஆம் புறப்பாட்டில் பாடிய உதியஞ் சேரலாதனும், மாமூலனார் 233ஆம் அகப்பாட்டிற் குறித்த உதியஞ் சேரலும், ஒருவனென மயங்குகிறார் நண்பர்.

"வான வரம்பனை நீயோ பெரும
அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்" (புறம். 2)

என்பது புறப்பாட்டுப் பகுதி.

"மறப்படைக் குதிரை மாறா மைந்தின்
துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை இரும்பல
கூளிச் சுற்றம் குழீஇஇருந் தாங்கு" (அகம். 233)

என்பது அகப்பாட்டுப் பகுதி.

இவ் விரண்டையும் ஒப்புநோக்கின், கீழ்வரும் வேற்றுமை புலனாம்.

| புறப்பாட்டு | அகப்பாட்டு |
|---|---|
| 1) பெருஞ்சோறு வழங்கியது 'பிண்ட மேய பெருஞ்சோற்று நிலை' போன்ற விருந்து. | பெருஞ்சோறு வழங்கியது தென்புலத்தார் கடன் போன்ற சடங்கு. |
| 2) பாண்டவரையும் கௌரவரையும் குறிக்கும் 'ஐவர்', 'ஈரைம்பதின்மர்' என்னும் சொற்கள் உள. | பாண்டவரையும் கௌரவரையுங் குறிக்கும் ஒரு சொல்லுமில்லை. |
| 3) பாடப்பட்டவன் பெயர் உதியஞ்சேரலாதன் | பாடப்பட்டவன் பெயர் உதியஞ் சேரல். |
| 4) பாடியவர் தலைக்கழகத்தார் | பாடியவர் கடைக்கழகத்தார். |

இங்கிலாந் தரசருள், என்றி என்ற பெயர் கொண்டு, எண்மரும், வில்லியம் என்று பெயர் கொண்டு நால்வரும், எட்வர்டு என்று பெயர் கொண்ட எண்மரும், சியார்சு என்று பெயர் கொண்ட அறுவரும் இருந் திருக்கின்றனர். இதை நோக்கின், உதியஞ் சேரலாதன், உதியஞ்சேரல் என்னும் பெயர்களின் ஒருபுடை யொப்புமை ஒருவனைக் குறிக்குஞ் சான்றன்மை புலனாம்.

6. கடைக்கழகக் காலத்துப் பராசரன் என்னும் சோணாட்டுப் பிராமணன் சேரனிடம் பரிசுபெறச் சென்றதை,

"பெருஞ்சோறு பயந்த திருந்துவேற் றடக்கை
திருநிலை பெற்ற பெருநா ளிருக்கை
..........................................
வண்டமிழ் மறையோற்கு வானுறை கொடுத்த
திண்டிறல் நெடுவேல் சேரலற் காண்கெனக்
காடு நாடு மூரும் போகி
நீடுநிலை மலையம் பிற்படச் சென்று" (சிலப். கட்டுரை, 55-66)

என இளங்கோவடிகள் பாடுகின்றார்.

இதில் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனின் சோற்றுக் கொடை குறிக்கப்படுகின்றது. அருஞ்சொல் உரையாசிரியரும், "பெருஞ்சோறு பயந்த என்றது சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் பாரத யுத்தத்தில் எல்லோர்க்கும் உணவளித்த செய்தியை" என மரபு வழாது வரைந் திருக்கின்றார். ஓர் அரசனை ஒரு புலவன் புகழும் பாட்டில், அவன் முன்னோர் செயலையும் அவன்மீது ஏற்றிக் கூறுவது செந்தமிழ்ப் பாடன் மரபு. இதை யுணராத நண்பர், "பாரதப் போரில் சோறு கொடுத்த சேரனிடம் பரிசு பெற்ற பராசரன், பாரத காலத்திற்குப் பிறகு (1500 ஆண்டுக்குப் பின்னர்) இருந்த சேர அரசர்களை எப்படி வாழ்த்த முடியும்?" எனக் கால மலைவு கண்டவர்போல் கேட்கின்றார்?

கோவலனுக்குக் காட்டு வழியில் எதிர்ப்பட்ட மறையோன், அக் காலத்துப் பாண்டியனை,

"வாழ்க வெங்கோ மன்னவர் பெருந்தகை
யூழிதொ றூழிதொ றுலகங் காக்க
வடிவிற் றன்னை வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி
திங்கட் செல்வன் திருக்குலம் விளங்கச்
செங்கணா யிரத்தோன் றிறல்விளங் காரம்
பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி
முடிவளை யுடைத்தோன் முதல்வன் சென்னியென்
றிடியுடைப் பெருமழை யெய்தா தேகப்
பிழையா விளையுட் பெருவளஞ் சுரப்ப
மழைபிணித் தாண்ட மன்னவன் வாழ்கெனத்
தீதுதீர் சிறப்பிற் றென்னனை வாழ்த்தி" (சிலப்.11:15-30)

வந்திருந்ததாக இளங்கோவடிகள் பாடியுள்ளார்.

இதில் முன்னோர் மூவர் செயலை ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் மீது ஏற்றிக் கூறியிருத்தல் காண்க.

திருவாவடுதுறை மடவளாகம் திருக்கயிலை வழிமரபு என்னுங் கொள்கைபற்றி, அவ் வளாகத் தம்பிரான் ஒருவர்மீது சிவபிரான் செயலை யேற்றிப் பாடிய புலவரும் உளர். இதனோடு ஒப்புநோக்கின், பெருஞ்சோற் றுதியஞ் சேரலாதன் செயலைக் கடைக்கழகக் காலத்துச் சேரன் மீதேற்றிக் கூறியது வியப்பாகாது.

7. "இரண்டு அரசர் போர் செய்தால், ஒருவர் பக்கத்திற் சேர்ந்து போர் செய்யவேண்டுவது முறை. அதனை விட்டு இரண்டுதரத்தாருக்கும் சோறு இட்டான் என்பது உலகத்திலே எங்கும் எப்பொழுதும் நிகழாத ஒன்று" என எங்கு முண்மை, என்றுமுண்மை, எல்லாமறிதல் முதலிய இறைவன் தன்மைகளைத் தன்மீது ஏற்றிக்கொள்கிறார் நண்பர்.

என்றி தியூனன்று ஆத்திரியப் போர்க்களத்திற் செய்த அரும்பெரு நடுநிலைத் தொண்டையும், அவன் அமைத்த செஞ்சிலுவைக் கழகம் ஆற்றிவரும் அரும்பணியையும், நண்பர் எண்ணிக் காண்க.

முதல் உலகப் போரில் அமெரிக்கர் வணிகம் பற்றியேனும் இரு கட்சியாருக்கும் நெடுங்காலம் பொருளுதவியே வந்தனர். இன்றும், நல்லுறவின்றிக் கரந்த பகைகொண்ட இந்தியாவிற்கும் பாக்கித்தானுக்கும் அவர் பல்வகையில் உதவி வருகின்றனர்.

நடுநிலையுதவியை இன்றுங் காணவேண்டின், நாட்டுப்புறத்தார் ஒன்றில் அயலார் இருவரைச் சண்டையிட்டுக் காயம் பட்டு வீழச்செய்து நண்பர் காண்க.

8. போர் செய்யும் இரு கட்சியாரும் நெருங்கிய உறவாயின் ஒரு பக்கத்திலும் சேர முடியாதென்பதும், உறவுமுறை யிருந்தால்தான் ஒருவன் பிறர்க்கு உணவளிக்க முடியும் என்பதும், நண்பர் கருத்து.

பாரதப் போரில் கலந்தவருட் பெரும்பாலார் நெருங்கிய உறவினரே. போர் செய்யும் இரு படைகட்கும் உணவளிக்க வேண்டிய நிலைமைகள், பெருஞ்செல்வம், வண்மை, அன்பு, நடுநிலைமை என்பவையே. பண்டைத் தமிழ் வேளாளரின் விருந்தோம்புந் திறனையும், விருந்து என்னுஞ் சொல்லின் பொருளையும் நண்பர் ஆய்ந்து பார்க்க.

9. தமிழின் சிறப்பையோ தமிழன் சிறப்பையோ வடநூல்கள் கூறுவதில்லை. இதை நண்பர் நன்றாய் அறிந்திருந்தும் அறியாதவர்போல், மகாபாரத நூல் உதியஞ் சேரலாதன் வழங்கிய பெருஞ்சோற்றை ஏன் கூறவில்லை யென்று கேட்கின்றார்.

10. "தங்கள் சேனைக்குச் சோறு கொடுக்கக்கூட இயலாத அவ்வளவு வறியவர்களா பாண்டவரும் கௌரவர்களும்?" என்பது நண்பர் ஐய வினாக்களுள் ஒன்று.

பாண்டவர் வறுமையை,

"முந்நூர் வெம்பணிக் கொடியோன் மூதூரி
　　னடந்துழவர் முன்றி றோறு
நந்தூரும் புனனாட்டின் றிறம்வேண்டு
　　நாடொன்று நல்கா னாகி
வைந்நூர்வேண் டவையிலெனி வைந்தி லம்வேண்
　　டவைமறுத்தா லடுபோர் வேண்டு
சிந்தூரத் திலகநுதற் சிந்து ரத்தின்
　　மருப்பொசித்த செங்கண் மாலே"

என்னும் பாரதப் பாட்டாலறிக.

கௌரவர் செல்வரேனும் கடும் பெரும்போர் மூண்ட நிலையில் தம் உணவு வசதியைப் பிறர்போற் கவனித்திருக்க முடியாது. இதை இழவு விழுந்த பெருஞ் செல்வர் வீட்டிலும் ஏனை யுறவினர் உணவளித் துதவுவதைக் கண்டு தெளிக.

11. "இருதரத்தார் போர் செய்யும்போது, இரண்டு படைக்கும் சோறு அளித்த செய்தி உலகத்தில் யாண்டும் கேட்டதும் இல்லை; கண்டதும் இல்லை" என்கிறார் நண்பர். நண்பர் கண்டதில்லை யெனினும் முடிநாக ராயரும் இளங்கோவடிகளும் வழிவழி வந்த உரையாசிரியர் பலரும் கூறக் கேட்டிருக்கின்றாரே!

பண்டாரகர் (Dr.) உ. வே. சா. அவர்கள், தங்கள் புறநானூற்றுப் பதிப்பில், பாடப்பட்டோர் வரலாற்றில் "சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்: இவன், பாரதப்போரில் பாண்டவர் துரியோத னாதியரென்னும் இரு வகையார் சேனைக்கும் உணவளித்தான். இவ் வரலாற்றை,

"ஓரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரில் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் றிறம்பாடிக்
கார்செய் குழலாட வாடாமோ ஊசல்
கடம்பெறிந்த வாபாடி யாடாமோர் ஊசல்" (சிலப். வாழ்த்து. 25)

என்னும் சிலப்பதிகார வாழ்த்துக் காதைச் செய்யுளும் நன்கு புலப்படுத்தும். இதனாலேயே இவன் இப் பெயர் பெற்றான். இவனைப் பாடிய புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர், என வரைந்திருப்பதையேனும் நண்பர் கண்டு தெளிக.

குமணன் தலைகொடுக்கத் துணிந்ததும், கண்ணப்பன் கண்ணிடந் தப்பியதும், இயற்பகை நாயனார் மனைவியை அளித்ததும், சிறுத்தொண்டர் மகவரிந் தூட்டியதும், வேறெங்கேனும் கண்டதுங் கேட்டதும் உண்டோ? ஆயினும், அவை உண்மையன்றோ!

12. நண்பரது 6ஆம் ஐயவினா 4ஆம் ஐயவினாவின் மறுகூற்றே. இது நண்பரின் மனக்கலக்கத்தையே மறுசாய லிடுகின்றது.

13. முடிநாகராயர் புறச் செய்யுள் பெருஞ்சோற் றுதியஞ் சேரலாதன் பாரதப் படைகட்குச் சோறு வழங்கியதைப் பற்றியதாயின், அதற்கும் கடைக் கழகக் காலத்திற்கும் இடைப்பட்ட செய்யுள்களெல்லாம் எங்கேயென்று, திரு.வையாபுரிப் பிள்ளையவர்கள் மனப்பான்மையுடன் வினவுகின்றார் நண்பர்.

"ஏரண முருவம் யோகம் இசைகணக் கிரதஞ் சாலம்
தாரண மறமே சந்தந் தம்பநீர் நிலமு லோகம்
மாரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி
வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரு மாள"

என்னும் பழஞ் செய்யுளே இதற்குத் தக்க விடை. பல நூல்களுஞ் செய்யுள் களும், தமிழ்ப் பகைவரால் அழிக்கப்பட்டும்விட்டன.

அழிந்துபோன தமிழ்நூல்களைப்பற்றிச் செந்தமிழ்ச் செல்வியில் தொடர்ந்து அழகாக எழுதிவந்த நண்பர், தாமே தம் கூற்றை மறுப்பது மிகமிக வருந்தத்தக்கது. இதற்கொரு காரணமு மிருக்கலாம்.

இக் காலத்தில், உண்மையான தமிழ்ப் புலவர்க்கு வழங்கும் வள்ளல் ஒருவருமில்லை. காட்டிக் கொடுக்கும் கொண்டான்கட்கு வாரிக்கொடுக்கும் கொடைமடமே மிகுந்துள்ளது. கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக நலிந்தும்

மெலிந்தும் வந்து குற்றுயிராய்க் கிடக்கும் தமிழைக் கொன்றுவிடக் கூலி வாங்கும் கோடரிக் காம்புகட்குப் போன போன விடமெல்லாம் பொன்னாடை; கண்ட கண்ட விடமெல்லாம் காசு மூட்டை; இறுதிவரை பதவியுறுதி.

தமிழ் வாழ்தல் வேண்டுமாயின், திரு.மயிலை சீனி. வேங்கட சாமியார்க்கும், கணியர் இ.மு. சுப்பிரமணியப் பிள்ளைக்கும் இனியேனும் தமிழர் இயன்றவரை சிறப்புச் செய்க.

– "தமிழ்ப்பொழில்" துலை 1960, கும்பம் 1961

## 6
# பேரா. தெ.பொ.மீ. தமிழுக்கதிகாரியா?

'சுதேசமித்திரன்' (தன்னாட்டு நண்பன்) என்னும் நாளிதழ் தொடர்பில் சென்ற விளக்கணி (தீபாவளி) விழாவன்று வெளிவந்த சிறப்பு மலரை, அண்மையில் தற்செயலாகப் பார்க்க நேர்ந்தது. அதில், 'தமிழில் பிறமொழிச் சொற்கள்' என்றொரு கட்டுரை, பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரால் வரையப்பட்டுள்ளது. எனக்கு ஏற்கெனவே அவர்தம் ஆரியச் சார்பும் தமிழறிவுத் திறமும் தெரியுமேனும், அக் கட்டுரை கண்டவுடன், இதுதானா இத்தகைய கட்டுரை வெளிவரற்கேற்ற சமையம் என்னும் வினா என் உள்ளத்தெழுந்து வருத்தியது.

கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக, முன்பு வேத ஆரியத்தாலும் பின்பு அதனோடு சமற்கிருதம் இணைந்த வட மொழியாலும் நைந்து குற்றுயிராய்க் கிடக்கும் தமிழை, நாளடைவிற் கொல்ல வரும் இந்தியைச் சிறுபான்மையரான அறிவுடைத் தமிழர் எதிர்த்துக்கொண்டிருக்கும் இந் நாளில், தமிழ் ஒரு கலவை மொழியென்றும் இந்தியால் எள்ளளவும் தாக்குண்ணா தென்றும் தவறான கருத்துகள் அமைச்சருள்ளத்திலும் அறிவாராய்ச்சி யில்லாத மாணவர், பொதுமக்களுள்ளத்திலும் படுமாறு, அக் கட்டுரையைத் தமிழுக்குச் சிறப்பாக அமைக்கப் பெற்றதாகச் சொல்லப் பெறும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பொறுப்பு வாய்ந்த தலைமைத் தமிழ்ப் பதவியிலிருப்பவர் வரைந்திருப்பது. மிகமிக வருந்தத்தக்கதாகும்.

பிராமணர் தென்னாட்டிற்கு வந்ததிலிருந்து தமிழ் தாழ்த்தப்பட்டே வந்திருக்கின்றது. தமிழ் பொது வழிபாட்டுக்குத் தகாத மொழியென்று தள்ளப்பட்டதே அதன் தாழ்வுத் தொடக்கம். பிராமணர் நிலத்தேவரும் (பூசுரர்) அல்லர் ; வடமொழி தேவமொழியு மன்று. சிவநெறியும் மால் நெறியும் முறையே, குமரிநாட்டுச் சேயோன் வணக்கத்தினின்றும் மாயோன் வணக்கத்தினின்றும் தோன்றிய தமிழர் சமயங்கள். ஆதலால், வடமொழி தமிழ்நாட்டு வழிபாட்டு மொழியாதற்குச் சிறிதும் தக்கதன்று.

"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி"

என்பது,

தென்னா டுடைய மாலே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

என்று திருமால் நெறிக்கும் செல்லும்.

உலகப் பழம்பெரு மொழிகளுள் தமிழைப்போல், வளமும் தூய்மையும் உள்ளது வேறொன்றுமில்லை. ஈராயிரங் கல் தொலைவு தெற்கே பரவியிருந்த குமரிக்கண்டப் பல்லாயிரம் உலக வழக்குச் சொற்களும், முதலிரு கழகப் பல்லாயிரம் தமிழ்நூல்களும், மறைந்த பின்பும்; தமிழ் தனித்து வழங்கும் அளவு சொல்வளங் கொண்டுள்ளது. மேலையாரியத்தில் இன்றும் நூற்றுக் கணக்கான தென்சொற்கள் உள்ளன. கீழையாரியமாகிய வடமொழியில் ஐந்திலிரு பகுதி தமிழ்.

பேரா.தெ.பொ.மீ.யின் பேச்சினின்றும் எழுத்தினின்றும் அவர் செவ்வையாய்த் தமிழை அறியவில்லையென்று தெரிகின்றது. முதலாவது, அவர் சென்னைவாணர்; நெல்லைநாட்டுச் சிறப்புச் சொற்களையும் தமிழொலிப்பு முறையையும் அறிந்திலர். வடமொழி யிலக்கியத்தை முன்னும் தென்மொழி யிலக்கியத்தைப் பின்னும் கற்றதாகத் தெரிகின்றது. தமிழர் கிரேக்க நாட்டுப் பாங்கரினின்று வந்தவர் என்னும் கொள்கையை ஏற்கின்றவர். தொல்காப்பியர் காலம் கி.பி.முதலாம் இரண்டாம் நூற்றாண் டென்று என் எதிரிலேயே வடநாட்டாருள்ள ஒரு பொதுக் கூட்டத்திற் சொன்னவர். மேற்குறித்த கட்டுரையில், தூய தென்சொற்களைப் பிற மொழிச் சொற்களென்றும், தேவையில்லாத ஆங்கிலச் சொற்களை "இன்றியமையாத தமிழ்ச்சொற்கள்" என்றும், கூறியிருப்பதும்; சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலியை அளவை நூலாகக் கொண்டிருப்பதும்; அவர்தம் தமிழ்ப் பற்றின்மையைப் பறை சாற்றுகின்றன.

பொதுவாக, பிராமணர் வெளியிடும் சிறப்பு மலர்களில், மறைமலை யடிகளைப் பின்பற்றுவோரின் கட்டுரைகள் இடம்பெறுவதில்லை. இங்ஙனமே, தமிழ்த் தூய்மை வேண்டுவோர் வெளியீடுகளிலும் வையாபுரி வழியினர் கட்டுரைகள் இடம் பெறுவதில்லை. இவ் வேறுபாடு தொடராத வாறு அறிஞர் அம்பலத்தில் தருக்க வாயிலாய் உண்மை நாட்டப்பெறல் வேண்டும்.

பண்டைநாளில் தமிழர்க்குத் தமிழுணர்ச்சி நிரம்பியிருந்ததினால், வெளிநாட்டினின்று வந்த பொருள்கட்கெல்லாம் உடனுடன் தனித்தமிழ்ப் பெயரிடப்பெற்றன.

கரும்பு சீன நாட்டினின்று வந்தது. அதன் செங்கருமைபற்றிக் கரும்பெனப்பட்டது.

"அரும்பெறல் மரபின் கரும்பிவட் டந்து

..................................

தொன்னிலை மரபினின் முன்னோர் போல" (புறம். 99)

என்று ஔவையார் அதிகமான் நெடுமானஞ்சியைப் பாடிய புறப்பாட்டடிகட்கு, "பெறுதற்கரிய முறைமையையுடைய கரும்பை விண்ணுலகத்தினின்று இவ்வுலகத்தின்கட் கொண்டு வந்து தந்ததும் ...... சக்கரத்தை நடாத்திய ..... நின்குடியிற் பழையோரை யொப்ப" என்று, பழைய வுரைகாரர் உரைத்திருத்தலை நோக்குக. சீனநாடு 'வானவர் நாடு' (Celestial Empire) என்று பெயர் பெற்றிருந்ததும், தமிழர் தொன்றுதொட்டுச் சீனநாட்டொடு வணிகம் செய்து வந்ததும், இங்குக் கருதத்தக்கன. சூடமும் சீனநாட்டி னின்று வந்ததே.

நிலக்கடலை(வேர்க்கடலை), கூவைக் கிழங்கு (arrow root), பெருங்காயம், அட்டிகம்(சாதிக்காய்), கிள்ளை (சாதிபத்திரி), கராம்பூ முதலியவை கீழிந்தியத் திட்டுகளினின்றும்; உருளைக்கிழங்கு, புகையிலை, குச்சுக்கிழங்கு, அண்டிமா (மரமுந்திரி - cashew) முதலியவை தென்னமெரிக்காவினின்றும்; செந்தாழை (pine apple) ஆத்திரேலியாவினின்றும்; பேரீந்து அரபி நாட்டினின்றும் வந்தவையாகும்.

மிளகாயும் வெளிநாட்டினின்று வந்ததாகச் சொல்லப்படுகின்றது. மிளகுபோற் காரமான காய் மிளகாய்.

மக்கைச் சோளம் வடஅமெரிக்காவினின்று வந்தது. மொக்கை- மக்கை = பெரியது.

சில பொருள்கட்கு வட்டகைதோறும் வேறு பெயருமுண்டு.

எ-கா : ஏழிலைக் கிழங்கு (நெல்லை), குச்சுக்கிழங்கு (சேலம்), மரவள்ளிக்கிழங்கு அல்லது சவரிக்கட்டை (தஞ்சை), ஆழ்வள்ளிக் கிழங்கு (மேல் வடார்க்காடு).

இதள் (பாதரசம்) மேல்நாட்டினின்று வந்தது. ஒட்டகமும் குதிரையும் அரபி நாட்டினின்று வந்தவை. ஒட்டகத்துக்கு நெடுங்கழுத்தன்-ல், நெடுங்கோணி என்றும் பெயருண்டு. ஒட்டகம் என்பது ஒட்டை என மருவும்.

வான்கோழி துருக்கிநாட்டினின்று வந்தது. வரிக்குதிரையும் (zebra), நீர்யானையும் (hippopotamus), ஒட்டகச்சிவிங்கியும் (camelopard or giraffe) ஆப்பிரிக்காவினின்றும் வந்தவை. தீக்கோழியை ஒட்டகப் பறவை என்பர் புதுச்சேரியார்.

வெளிநாட்டினின்று வந்த விலங்குகளுள் குதிரை பல வகைப்பட்டிருந்ததனால், அவ் வகைகளின் நுண்ணியல்புக்கேற்பப் பாடலம், கோடகம், இவுளி, வன்னி, குதிரை, பரி, கந்துகம், புரவி என எண்வேறு பெயரிட்டிருந்தனர். இனி, பாண்டியன் குதிரை கனவட்டம் என்னும் வகையையும், சோழன் குதிரை கோரம் என்னும் வகையையும், சேரன் குதிரை பாடலம் என்னும் வகையையும், குறுநில மன்னர் குதிரை கந்துகம் என்னும் வகையையும் சேர்ந்தவை. சிறு குதிரை (pony) மட்டம் என்றும், நாட்டுக் குதிரை தட்டு என்றும் சொல்லப்படும்.

மேனாட்டினின்று வந்த வண்டிவகைப் பெயர்களுள் புகைவண்டி (train), மிதிவண்டி (cycle) என்பன பொதுமக்களிட்டவை; மின்வண்டி (train), இயங்கி (motor) என்பன புலமக்க ளிட்டவை.

மக்கட்குத் தாய்மொழி யுணர்ச்சியும் தூய்மை போற்றும் எண்ணமு மிருப்பின், வெளிநாட்டினின்று வந்த எப்பொருட்கும் தமிழ்ப்பெயரிடுவது அரிதன்று. உள்நாட்டுப் பொருள்கட்குப் பெயரிடும் நெறிமுறைகளே, வெளிநாட்டுப் பொருள்கட்குப் பெயரிடுவதையும் தழுவும். ஒரு பொருளுக்கு முதலில் அதன் சிறப்பியல்புபற்றிப் பெயரிடப்பெறும். பின்பு அதையொத்த பொருள்கட்கெல்லாம் அப் பெயரே வெவ்வேறு ஏற்ற அடைமொழி கொடுத்திடப்பெறும்.

எ-கா : வெம்புங்காலத்தில் அல்லது நிலத்தில் தழைப்பது வேம்பு. அதையொத்தவை, நாய்வேம்பு, கறிவேம்பு, நிலவேம்பு முதலியவை.

சில இனப்பொருள்கட்கு வெவ்வேறு பெயரும் இடப்பெற்றுள.

எ-கா : தட்டையாயிருப்பது தட்டைப்பயறு அல்லது தட்டான் பயறு; கருத்துத் திரண்டிருப்பது காராமணி; வரியுடையது வரிக்கொற்றான். இடங்கர், கராம், முதலை என்னும் உயிரிவகைப் பெயர்களும் இம் முறை பற்றியனவே.

தண்டோடு ஒட்டியிருப்பதைத் தாள் என்றும், அது நீண்டு தொங்கின் தோகை என்றும், திண்ணமாயிருப்பின் ஓலை யென்றும், மெல்லியதா யிருப்பின் இலை என்றும், மாம்பிஞ்சை வடுவென்றும், பலாப்பிஞ்சை மூசு என்றும், வாழைப்பிஞ்சைக் கச்சல் என்றும், வேறுபடுத்துச் சொன்ன நுண்மாண் நுழைபுலத் தமிழர்க்குப் பெயரிட அரிதாம் பொருள் இவ் வுலகத்தில் ஏதேனும் உண்டோ? இவ் வாற்றல் இன்னும் அழியா திருப்பதை நாஞ்சில் நாட்டு வைத்தூற்றி (Funnel) என்னும் சொல்லிற் காண்க.

தமிழரின் தாய்மொழியுணர்ச்சி முதற்கண் ஆரியத்தாலும் பின்னர் வேற்றரசுகளாலும் பெரும்பாலும் கொல்லப்பட்டது. கொண்டான்மாரும் புத்தமித்திரன்மாரும் சுவாமிநாத தேசிகன்மாரும் வையாபுரிகளும் பல்கினர். செந்தமிழைக் காக்கும் நக்கீரர்க்கும் பொய்யாமொழியர்க்கும் படிக்காசர்க்கும் பிழைப்பில்லாது போயிற்று. ஆங்கிலர் ஆட்சியாலும் ஆங்கிலக் கல்வியாலும் தமிழருள் ஒரு சாரார்க்குப் புத்துணர்ச்சி பிறந்தது. அதன் விளைவாக மறைமலையடிகள் தோன்றினர். தமிழ் புத்துயிர் பெற்றது. அது நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வருங் காலத்தில், ஆரியம் மீண்டும் தலையெடுத்து அதை அழித்து வருகின்றது. அதற்கு அடிதாங்கி நிற்பவர் பேரா.தெ.பொ.மீ.யே. தமிழாசிரியர் தமிழ்ப் பற்று, தொடக்கப்பள்ளிப் பதவியினின்று பல்கலைக்கழகத் தலைமைப் பதவிவரை மேனோக்கிச் செல்லச் செல்லக் குன்றிக்கொண்டே போய்,

பேரா.தெ.பொ.மீ.யண்டை மறைந்துவிடுகின்றது. அவருக்கடுத்துள்ள பர்.மு.வ.போன்றாரும் தமிழைக் கவனிப்பதில்லை. தலைமைப் பதவி தாங்கும் தமிழ்ப் பேராசிரியர் தமிழைக் காத்திருப்பின், இந்தி தமிழ் நாட்டிற்குள் கால்வைத்தே யிருக்காது. பெரும்பாலும் எளியரான உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரிய ரெல்லாரும், இந்தியை எதிர்க்காதவாறு கல்வியமைச்சரால் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றனர். தமிழாசிரியர் தலையிடாததினால், இந்தியெதிர்ப்பு ஓர் அரசியற் கட்சி வேலையாகத் தோற்றமளிக்கின்றது. உரிமையுணர்ச்சியும் அறிவு விளக்கமும் கொழுந்து விட்டெரியும் இளம் காளையரான மாணவர், மேய்ப்பனில்லா ஆடுகள் போல் இடர்ப்பட்டுத் தவிக்கின்றனர். உள்ளத்தில் உணர்ச்சியுள்ள கல்லூரித் தமிழாசிரியர் ஒருசிலர், தலைமைத் தமிழ்ப் பேராசிரியர்க்கஞ்சியும் தமிழ்த் தேர்வாணமைப்பேறு நோக்கியும், வெளிப்படையாய் எதுவுஞ் செய்ய இயலாதிருக்கின்றனர். தமிழைக் காத்தல் தமிழாற் பெருஞ் சம்பளம் பெறும் தலைமைப் பேராசிரியர் தலைமேல் விழுந்த தலையாய கடமை. இதை அவர் எள்ளளவும் உணர்கின்றிலர். தமிழால் வேலையிழந்த என் போன்றார் அரும்பாடுபட்டு இந்தியை எதிர்க்க வேண்டியுள்ளது. "குத்துக்கு நிற்பான் வீரமுட்டி, கொள்ளை கொண்டுபோவான் தவசிப் பிள்ளை." தமிழைக் காக்குந் தகுதியின்றேல் தலைமைப் பதவி தாங்குதல் தவறாம். பொதுவாகப் பதவிபற்றியே மக்கள் புலமை மதிக்கப்படுவதால், தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் இந்தியை ஏற்கின் அல்லது எதிர்க்காவிடின், பிறர்க்கு மொழியுணர்ச்சி குன்றுவதொடு, அதுதான் சரிபோலு மென்று பிறழ்ந் துணரவும் இடமுண்டாகின்றது. பேராசிரியர் சிலர் செந்தமிழ்க் காவலரென்று சிறப்புப்பெயர் தாங்கிக்கொண்டு இந்தியை எதிர்க்காதிருப்பது, பெரிதும் வியப்பிற்கிடமானதே.

பேரா.தெ.பொ.மீ.முதலாவது வழக்கறிஞராய் வரவேண்டிச் சட்டம் பயின்று பட்டம் பெற்றவர். பின்பு அத் துறையை விட்டுவிட்டுத் தமிழ்த் துறைக்குட் புகுந்தார். உண்மைத் தமிழ்ப் பற்றுள்ளவர் ஒரு கட்சியையும் சார்ந்திருக்க முடியாது. பேரா.தெ.பொ.மீ. பேராயக் கட்சியைச் சேர்ந்தவர். இந்தி தமிழ்நாட்டிற் புகுத்தப்பட்ட பின்பு, நாவலர் சோமசுந்தர பாரதியார், கலைத் தந்தையார் கருமுத்து தியாகராசர் முதலிய தூய தமிழர் பேராயக் கட்சியினின்று விலகிவிட்டனர். பேரா. தெ.பொ.மீ.யோ விலகவில்லை. அவர் கருத்திற்கு அக் கட்சிக் கொள்கை மிகப் பொருத்தமானது. மேலும், அவர் பதவி மேம்பாட்டுக்கும் அக் கட்சியாட்சி உதவி வருகின்றது. ஆங்கிலராட்சிக் காலத்தும், மறைமலையடிகள் மறையும் வரையும் தமிழ்த்துறையில் இருக்குமிடம் தெரியாமலிருந்த அவர், இன்று தமிழ்நாட்டுத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்கின்றார். இதுவரை அவர் இந்தியை எதிர்த்ததேயில்லை.

இனி, அவரது கட்டுரையைத் தொடர் தொடராய் ஆராய்ந்து தடை விடை கூறுவோம்.

1. "உயிருள்ள மொழிகள் வழக்கில் இருக்கும்பொழுது கொடுக்கல் வாங்கல் இருக்கவே செய்யும்."

உயிரற்ற வேத ஆரியமும் உயிரில்லாத சமற்கிருதமும், அடிநாள் முதல் கொடுக்கல் வாங்கல் செய்து வந்திருக்கின்றனவே!

2. "பல பொருள்கள் ஒருமொழி பேசுபவரிடையே சிறந்திருக்கும். அவற்றை மற்றொரு மொழி பேசுவோர் பயன்படுத்தப் புகுவது உலக இயற்கை."

இக் கூற்று மிகப் பொருத்தமானது. என் கருத்தும் இதுவே. பேராசிரியர், பல சொற்கள் என்று குறியாமல் "பல பொருள்கள்" என்று குறித்திருப்பது மிகவும் போற்றத்தக்கதாம். தமிழ் பிறமொழிகளிலுள்ள சொற்களையன்றிக் கருத்துகளையே தழுவும். இதை 'Intussusception' என்பர் ஆங்கிலர்.

3. "நம்முடைய மாம்பழமும் மாங்காயும் ஆங்கிலேயருக்குச் சுவை மிகத் தந்தன. ஆகையால், மாங்காய் என்பது 'mango' என்று பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஆங்கிலேயர் தமிழ்நாட்டுக்கு வந்ததிலிருந்தே ஆங்கில மொழியில் புகுந்துள்ளது."

இது சரிதான். ஆயின், மாங்காய் ஆங்கிலேயருக்குச் சுவைமிகத் தந்ததா என்பது தெரியவில்லை. வடார்க்காடு மேலைப் பகுதியிலுள்ள ஆம்பூர் வட்டத்தில், மா என்னும் பெயர் மாங்காய் என்னும் வடிவிலேயே வழங்குகின்றது. காயைக் குறியாதவிடத் தெல்லாம், மாங்காய்ப் பழம், மாங்காய்த் தோப்பு, மாங்காய் மரம், மாங்காயிலை, மாங்காய்ப்பிஞ்சு என, மாங்காய் என்பதே நிலைமொழியாய் வழங்குகின்றது. ஆம்பூர் சென்னைக்கு அண்மையிலிருப்பதால், கிழக்கிந்தியக் குழும்பார் வந்திருந்த தொடக்கத்தில், மா என்னும் பெயர் மாங்காய் (mango) என்னும் வடிவில் ஆங்கிலத்திற் புகுந்திருக்கலாம்.

4. "அப்படியே ஆங்கிலேயர் வழியாக 'மோட்டார்க் கார்' நம் நாட்டுக்கு வந்தது. அதனோடு 'கார்' என்ற சொல்லும் தமிழுக்குள் நுழைந்தது. எனவே கொடுத்தும் வாங்கியும் வந்தது மக்கள் பண்பாட்டு வளர்ச்சியையே காட்டுகிறது."

இயங்கி (Motor car) நம் நாட்டிற்கு வந்தது மெய்தான். ஆயின் 'கார்' என்ற சொல் அப் பொருளில் தமிழுக்குள் நுழையவில்லை. மொழியுணர்ச்சியும் அறிவுமில்லாத மக்கள் வாய்க்குள் மட்டும் நுழைந்தது. அது தமிழுக்குள் நுழைந்ததாகாது. மக்கள் வாய்க்குள் நுழைந்ததற்கும் வையாபுரி வகையார் ஆட்சியில் அன்று தமிழிருந்ததே கரணியம். செந்தமிழ்க் காவலர் அன்று இருந்திருந்தால், ஆண்டுதோறும் அருந்தமிழ் நூல்கள் ஆடிப் பெருக்கில் அமிழ்ந்திருக்குமோ? 'கார்' என்னும் ஆங்கிலச் சொல்லும் இயங்கியையும் தேரையையும் வேறுபாடின்றிக் குறிப்பதால், அத்துணைச் சிறந்த சொல்லுமன்று.

தமிழுக்குள் ஒரு சொல் நுழைந்ததெனின், அது நீக்கவும் மாற்றவும் முடியாததாயிருக்கும். ஆகவே 'கார்' என்னும் சொல் மக்கள் வாய்க்குள் நுழைந்தது. மொழித்துறையிற் புண்பாட்டு வளர்ச்சியேயன்றிப் பண்பாட்டு வளர்ச்சியன்று.

திரு.மகிழ்நன் தமிழில் எழுதியுள்ள தாமசு ஆல்வா எடிசனின் வாழ்க்கை வரலாற்றைப் பார்க்க. அதில் இயங்கி என்னும் சொல்லைக் காணலாம்.

5. "மயில் இந்திய நாட்டுப் பறவை. திராவிடமொழியைச் சேர்ந்த சொல்."

திராவிடமொழிச்சொல் என்பதினும் தமிழ்ச்சொல் என்பது தகும். திராவிடம் இன்று 19 மொழிகளாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும் தமிழைத் திராவிடத்தினின்று பிரிக்க வேண்டிய நிலைமை இன்று நேர்ந்துள்ளது.

மயில் என்னும் சொல் திராவிடமொழிகளிற் பின்வருமாறு வேறு பட்டும் உளது.

| தமிழ் | மலையாளம் | கன்னடம் | தெலுங்கு | துளு |
|---|---|---|---|---|
| மயில் | மயில் | நவில் | நமலி | மைரெ |

மலையாளம் பண்டைச் சேரநாட்டுத் தமிழே.

6. "வடமொழியில் இருந்தும் உயிருள்ளவையாய் வழக்கில் இருந்த சொற்கள் தமிழில் வந்துதானே வழங்கும்?"

வடமொழி என்பது, வேத ஆரியம் அல்லது வேதமொழி, சமற் கிருதம் என இருநிலைகளையுடையது. வேத ஆரியம் வேதகாலத்தி லேயே வழக்கற்றுப்போய்விட்டது. வழக்கற்றுப்போன வேத ஆரியத்தோடு, அக்காலத்து வட்டார மொழிகளாகிய பிராகிருதங்களைச் சேர்த்து ஆக்கிக் கொண்ட அரைச் செயற்கையான இலக்கிய நடைமொழியே (Literary dialect) சமற்கிருதம். பிராகிருதம் முந்திச் செய்யப்பட்டது; முன்னுள்ளது; இயற்கையானது. சமற்கிருதம் நன்றாய்ச் செய்யப்பட்டது; பிற்பட்டது. செயற்கையானது. ஆதலால், வடமொழிச் சொற்களை உயிருள்ளவையாய் வழக்கிலிருந்தவை என்று சொல்வது தவறாம். தமிழையும் அதன் வழிப்பட்ட திரவிடமொழிகளையும் ஆரியவண்ண மாக்குவதற்கு, வேண்டுமென்று புகுத்தப்பட்ட வேண்டாச் சொற்களே வடமொழிச் சொற்கள். அவை, தமித்து வாழும் ஆற்றலின்றிப் பிற வுயிரிகளைச் சார்ந்தே வாழும் உண்ணிகளைப் (parasites) போன்றவையே.

7. "புத்தர் என்ற பெயர் தமிழல்ல என்று தள்ள முடியுமா?"

புத்தர் என்பது ஒருவரின் இயற்பெயர் (proper name). அதை எங்ஙனம் மொழிபெயர்த்தல் சாலும்? புத்தன் என்பது, பொதுச் சொல்லாயின்,

தமிழில் அறிவன் என்று பெயரும். மேலும், புத்தரையே அறிவன் என்று பண்டைநாளில் வழங்கியிருக்கின்றனரே!

"... ... ... ... ... ... ... ... ...

புனிதன் சினன்வரன் அறிவன் பிடகன்

போதி வேந்தன் புத்தன் பெயரே" (102)

என்பது பிங்கலம்.

8. "சங்கம் என்பதை அப்படியே தள்ளிவிட முடியுமா?"

ஏன் தள்ளிவிட முடியாது? கழகம், மன்றம் முதலிய சொற்கள் இருக்கின்றனவே!

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து" என்று பரஞ்சோதி முனிவர் பாடியிருக்கின்றாரே! பிராமணர் வருகைக்கு முற்பட்ட முதலிரு கழகங்களிலும் சங்கம் என்னும் வடசொல் வழங்கியிருக்க முடியாதே!

மேலும், சங்க (Sangha) என்னும் வடசொல்லின் வேராகிய சம் (sam) என்பது, கும் என்னும் தென்சொல்லின் திரிபே. கும்முதல் கூடுதல். கும் என்னும் முதனிலை ஆரிய மொழிகளில் ஒரு முன்னொட்டாகி, இலத்தீனில் cum என்று இயல்பாயும்; ஆங்கிலத்தில் com, con, co என்றும், கிரேக்கத்தில் sym, syn என்றும்; வேத ஆரியத்திலும் சமற்கிருதத்திலும் சம் (sam) என்றும் திரிந்தும் நிற்கும்.

கும் என்பதன் மூலம் உம் என்பதாம். உம்முதல் கூடுதல். இவ் வினை இன்று வழக்கற்றது. இது உகரத்தோடு கூடிவரும் க ச த ந ப ம என்னும் அறு மெய்களோடும் சேர்ந்து, கும், சும், தும், நும், பும், மும் என்னும் அறு வேறு வழியடிகளைப் பிறப்பிக்கும். இவற்றுட் சில அகரமுதலாகவும் திரிந்துள்ளன. உகரமுதற் சொற்கள் மோனைத்திரிபு கொண்டு வேறுசில சொற்களைத் தோற்றுவிக்கும். எடுத்துக்காட்டில்லாதன இறந்துபட்டனவென அறிக.

எ-கா : உம் : உம்முதல் = கூடுதல். இப் பொருளிலேயே இச் சொல் எண்ணுப்பொருள் இடைச்சொல்லாகிய கூட்டிணைப்புச் சொல்லாய் வரும்.

எ.கா : அறமும் பொருளும் இன்பமும்

வந்தும் போயும்

உம்-அம். அம்முதல் = கூடுதல், நெருங்குதல் பொருந்துதல், கலத்தல், ஒத்தல்.

அம்-அந்து-அந்தி = 1. இரவும் பகலும் கூடும் காலை, பகலும் இரவும் கூடும் மாலை.

"காலை யந்தியும் மாலை யந்தியும்" (புறம்.34)

2. ஒரு தெருவோடு இன்னொரு தெருக் கூடுமிடம்.

"அந்தியும் சதுக்கமும்" (சிலப்.14 : 213)

அந்தித்தல் = நெருங்குதல், கூடுதல், முடியிட்டுவைத்தல்.

அந்து - அத்து, அத்துதல் = சேர்த்துத் தைத்தல்.

கும் : கும்முதல் = கூடுதல், கும் = கும்மல் - L .cumulus.

கும் - கம்-கமம், கம்முதல் = கூடுதல், நிறைதல்.

"கமம்நிறைந் தியலும்" (தொல்.உரி 57)

கும் - குந்து - கொந்து. குந்து - குத்து - கொத்து.

கம் - கந்து = திரட்சி, திரண்ட தூண், சார்பு, பற்றுக்கோடு.

சும் : சும்-சும்மை = தொகுதி.

சும் - சொம் = செல்வம். சொம் - svam(Skt.)

சொம் - சொந்து - சொந்தம் = உடன் கூடியது.

சொந்து - சொத்து.

சும் - சம் - சந்து = கூட்டு, பொருந்து.

சந்து செய்தல் = இருபகைவரை ஒப்புரவாக்கிக் கூட்டி வைத்தல்.

சந்து - சந்தை = விற்பாரும் கொள்வாரும் கூடுமிடம்.

தும் தும் : துந்து - தொந்து - தொந்தம் = கூட்டு, தொடர்பு, புணர்ச்சி.

தொந்தம் - dvandva(Skt.)

தொந்து - தொத்து = கொத்து , திரள், தொடர்பு.

நும் : நும் - நம் - நந்து. நந்துதல் = வளர்தல், தழைத்தல், பெருத்தல்.

பும் : பும் - (புந்து) - பொந்து - பொந்தன் - பருத்தவன்.

பொந்தன் - போந்தான் = பருத்த கோழி.

போந்து - போந்தி = யானைக்கால்.

பொந்து - பொத்து, பொத்துதல் = சேர்த்தல், சேர்த்துத் தைத்தல்.

பொத்து - பொத்தை = பருமையானது, பருமிளகாய்.

பொத்து - பொட்டு = பொருத்து.

பொட்டு + அணம் = பொட்டணம் (சேர்த்துக் கட்டியது).

மும் மும் : முந்து - மொந்து - மொந்தன் = பருத்தவன், பருத்தது, பருத்த வாழைக்காய்.

மொந்து - மொந்தை = சோற்றுத் திரளை.

மொந்து - மொத்து - மொத்தம் = திரட்சி.

மொந்தை - மொத்தை = திரளை, பருமன்.

மொத்தை - மோத்தை = பருத்த ஆட்டுக்கடா.

9. "போதியார், இளம்போதியார் என்பனவற்றுள் போதி என்பது புத்தமதச் சொல்லல்லவா?"

ஆம்; புத்தமதத்தைச் சேர்ந்த வடசொல்தான். ஆயின், அது புத்த மதம் தென்னாட்டில் வந்து பரவியதைக் குறிக்கின்றதேயன்றி, தமிழுக்கு இன்றியமையாத சொல்லென்று எங்ஙனம் ஆகும்? அதற்குப் பகரமாக அறிவைக் குறித்தற்கு ஓதி என்னும் சொல்லும், மரத்தைக் குறித்தற்கு அரசு என்னும் சொல்லும் இருக்கின்றனவே!

10. "உலோச்சனார் - சைன மதத்தில் லோச்சு என்ற மயிர்கழிக்கும் நோன்பில் எழுந்த பெயரல்லவா? நமது நாட்டுப் பொருளை நீக்க முடியாததுபோல இவற்றையும் தள்ளிவைக்க முடியாது."

லோச்சு என்பது லுஞ்ச் (lunc) அல்லது லுச் (luc) என்னும் வடசொற் றிரிவாகும். அதற்குப் பறித்தல் என்பதுதான் பொருள். லுஞ்சித கேச (luncitakesa) என்று சொன்னால்தான், தன் தலையினின்றும் (உடம்பி னின்றும்) மயிரை ஒவ்வொன்றாய்ப் பறித்துள்ள சமணத்துறவியைக் குறிக்கும்.

உலோச்சனார் என்னும் சொல்லை, அக்காலத்திலேயே தமிழர் அல்லது தமிழ்ப்புலவர் பறிதலையர் என்று அழகாக மொழிபெயர்த்திருக் கின்றனரே!

"பறிதலையராற் சாலப் பழுதா மன்றே"

(திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், 37 : 7)

11. "தமிழிற் புகுந்த வடசொற்களை எண்ணி முடியாது; இரண்டா யிரத்துக்குமேல் இருக்கும். தொடர்களை இங்கே கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை."

தமிழிற் புகுந்த வடசொற்கள் என்று சொல்வதைவிட, தமிழ்நூல்களிற் புகுத்தப்பட்ட வடசொற்கள் என்று சொல்வதே மிகப்பொருத்தமாகும். அவை ஈராயிரமாயிருந்தாலென்ன? இருபதினாயிரமாயிருந்தாலென்ன? அவை தமிழுக்குத் தேவையல்லவே! அவற்றால் தமிழ்ச்சொற்கள் பொருளிழந்தும் வழக்கற்றும் இறந்துபட்டும் போனதன்றி வேறு என்ன கண்டோம்?

மேலும், வடசொற்கள் என்று பேராசிரியர் குறிக்கும் சொற்றொகுதி யுள், ஏறத்தாழ 1/5 பகுதி தமிழ்ச்சொல்லும், 1/5 பகுதி தமிழ்த்திரிசொல்லும், 1/5 பகுதி தமிழ் வேர்கொண்ட சொல்லும், ஆகும் என்பதை அவர் அறியார் போலும்!

12. "வடமொழி இந்த நாட்டிற்கு வருவதற்கு முன்னரும் 'முண்டா' இனத்து மொழிகள் இந்தியாவில் வழங்கியிருத்தல் வேண்டும். அம் மொழிகளைப் பேசுவாரோடு தொடர்புகொள்ள வந்தபொழுதெல்லாம் ஒரு சில சொற்களேனும் அவர்களிடமிருந்து தமிழில் நுழையாதிருக்க முடியுமா? வழுதுணங்காய், தவளைக்காய், மீசை முதலியன அத்தகையன என்று கருதுகிறார்கள். இளநீர் என்று சொல்லுகிறோமே, அந்தப் பெயரை எண்ணிப் பார்த்தோமா? இளந்தேங்காய் என்பதுதானே அதன் பொருள்? அப்படியானால் 'நீர்' என்பது தேங்காயையல்லவா குறிக்கவேண்டும். அப்படி, தேங்காய் என்ற பொருளிலேயே 'நீர்' என்ற சொல் 'முண்டா' மொழியில் வழங்குகிறது."

இந்தியாவில் இன்று வழங்கும் மொழிகள், தமிழம் (திரவிடம்), முண்டா, மான்குமேர், திபேத்த சீனம், ஆரியம், சேமியம் என்னும் அறு குடும்பங்களாகவும், வகைப்படுத்தப் பெறாத சிலவுமாக வகுக்கப் பெற்றிருக்கின்றன. நக்கவார மொழி மலையப் பாலினீசியக் குடும்பத்தைச் சேர்ந்ததாகும்.

இவற்றுள் முண்டா மொழிகள் வேத காலத்திலேயே, அதாவது கி.மு.1500 ஆண்டுகட்கு முன்பே, வழங்கியிருக்கின்றன. இவை சோட்டா நாகப்பூர் என்னும் சின்ன நாகபுரியிலும், அதையடுத்துள்ள வங்க, ஒட்டர, சென்னை, நடுவண் (மத்திய) நாடுகளைச் சேர்ந்த மாவட்டங்களிலும், விதர்ப்ப (Berar) நாட்டுக்கு வடக்கிலுள்ள மகதேவ மலைத்தொடரிலும் பேசப்படுகின்றன. இவற்றிற்கும், நக்கவாரத்திலும் சில கிழக்கிந்தியத் திட்டுகளிலும் பேசப்படும் மான்குமேர்க் குடும்ப மொழிகட்கும் ஒரு பொதுக் கூறுண்டென்று, கிரையர்சன் கூறுகின்றார். இவ்விரு குடும்பங்களும் முதலில் ஒன்றாயிருந்திருக்கலாம் என்பது அவரது உய்த்துணர்வு.

முண்டா மொழிகளைப் பேசும் மாந்தர் பெரும்பாலும் இந்தியாவின் கீழ்ப்பாகத்தை யடுத்திருப்பதாலும், மான்குமேர் என்னும் கிழக்கத்து மொழிகளை அவர்களுடையவை ஒருபுடை ஒத்திருப்பதாலும், இடைக் கழக விருக்கையை முழுக்கிய 2ஆம் கடல்கோளுக்குப்பின் அவர்கள் வந்து இந்தியாவிற் குடியேறியிருக்கலா மென்றெண்ண இடமுண்டு.

"தீங்கனி நாவல் ஓங்குமித் தீவிடை
... ... ... ... ... ... ... ...
பூமி நடுக்குறூஉம் போழ்தத் திந்நகர்
நாகநன் னாட்டு நானூறு யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்துகே டெய்தும்" (9 : 18 - 21)

என்னும் மணிமேகலைப் பகுதி அக் கடல்கோளைக் குறித்ததாகலாம்.

முண்டா மொழிகள் எழுத்தும் இலக்கியமுமற்றுப் பண்பாட்டில் தமிழினும் மிகத் தாழ்ந்திருப்பதனாலும், தலைக்கழகக் காலத்திலேயே தமிழ்

முழு வளர்ச்சியடைந்துவிட்டதனாலும், தமிழ் முண்டாமொழியினின்று சில சொற்களைக் கடன் வாங்கும் நிலையிலிருந்த தென்பது, வேண்டுமென்று தமிழைத் தாழ்த்திக் கூறுவதாகவே தோன்றுகின்றது. வணிகத்திற்கு முதலோ, ஒரு பொருள் வாங்கப் பணமோ, இல்லாதவர், செல்வர் ஒருவரிடம் சென்று கடன் கொள்ளலாம். ஆயின், நப்பீல்டும் இராக்குப்பெல்லரும் பிருளாவும் போன்றார், எங்ஙனம் ஒருவரிடம் கடன் கொள்ள நேரும்!

தவ்விச் செல்வது தவளை. தவ்வுதல் தாவுதல், இனி தவழ்ந்து செல்லும் நீருயிரி தவளை எனினுமாம்.

தவழ்தல் = தத்திச் செல்லுதல், தத்துதல். "ஓதங் கரைதவழ்நீர் வேலி யுலகினுள்" (பு.வெ.8 : 9).

சிறுவர் நீர்மேல் தவளைபோல் தத்தித் தத்திச் செல்லுமாறு எறியும் தட்டையான காய், தவளைக்காய் எனப்படும். காயில்லாத விடத்து ஓட்டாஞ் சல்லியை எறிவர். தோளில் அடித்தவிடத்துத் திரளும் சதையையும் தவளைக்காய் என்பர். பழுக்காத புண்கட்டியைக் காய் என்பதுண்டு.

இனி, நுணல் என்னும் மணற்றவளையை மணற்காடை, மணற் காளான், மணற்கூகை என்னும் வழக்குண்மையால், அதை உண்ணும் வகுப்பார் அதைத் தவளைக்காய் என்றும் அழைத்திருக்கலாம். தவளைக்காய் என்பது தவக்களை, தவக்கை என்றும் திரியும்.

கி.பி.2ஆம் நூற்றாண்டினதான குறுந்தொகைச் செய்யுளிலும், 9ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்பெறும் பெருங்கதையிலும், 10ஆம் நூற் றாண்டினதான சீவகசிந்தாமணியிலும், 12ஆம் நூற்றாண்டிலிருந்த பேரா சிரியர் உரையிலும், 13ஆம் நூற்றாண்டினதான நன்னூலிலும், தவளை குறிக்கப்பட்டுள்ளது.

"தவளை வாய பொலஞ்செய் கிண்கிணி" (குறுந்.148)

"தவளைத் தண்டுறை கலங்கப் போதி" (பெருங்.மகத.3,21)

"தவளைக் கிண்கிணி ததும்புசீ றடியர்" (பெருங். உஞ்சைக். 46,246)

"தத்துநீர்த் தவளைக்குரற் கிண்கிணி" (சீவக.2481)

"தத்துவனவற்றுக்குங் குட்டிப் பெயர் கொடுக்கப்படும்; தவளைக் குட்டி எனவரும்" (தொல்.பொருள்.561, பேரா.உரை)

"ஆற்றொழுக் கரிமா நோக்கந் தவளைப்
பாய்த்துப் பருந்தின்வீழ் வன்ன சூத்திரநிலை" (நன்.18)

தவளை நீருள்ளவிடமெல்லாம் காணக்கூடிய உயிரியாதலாலும், அதன் பொதுவான இனத்திற்கு வேறு பெயரின்மையாலும், தவளை என்னுஞ் சொல் தமிழ்நாடு முழுதும் வழங்கும் உலக வழக்குச் சொல்லாத லாலும், அது தொன்றுதொட்டு வழங்கிவரும் தென்சொல்லேயெனத் தெளிக.

தவளையினத்திற் பலவகையுண்டு. வெளிறித் தேய்ந்து போயிருப்பது தேரை; சொறியுள்ளதாயிருப்பது சொறியன்; பருத்துப் பச்சையாயிருப்பது மொங்கன்; மணலுக்குள்ளிருப்பது நுணல்; வாலறாத தவளைக் குட்டி அரைத் தவளையென்றும், தலைப்பிரட்டையென்றும் சொல்லப்படும். தேரை பாய்வதால் குழந்தை நோய்ந்து போமென்றும், இளநீர் சொத்தையாகிவிடு மென்றும், பொதுமக்கள் கருதுவர்.

"தேரைக்கால் பெற்றுத் தேய்ந்துகா லோய்ந்ததே" (ஔவையார்)

"தேரையார் தெங்கிளநீ ருண்ணார் பழிசுமப்பார்" (தமிழ்நா. 74)

எதுகைபற்றிச் சிறப்புச் சொற்களைப் பொதுப் பொருளில் ஆள்வது பிற்காலப் புலவரியல்பு.

எ-கா :

"நாரை துயில்வதியும் ஊர குளந்தொட்டுத்
தேரைவழிச் சென்றா ரில்." (பழ. 23)

வழுதுணங்காய் என்பது கத்தரிக்காய். அதன் மறுவடிவம் வழுதலை என்பது. காய்களுள் மிக வழுக்கையாயிருப்பது கத்தரிக்காயாதலால், அது வழுதலையெனப் பெற்றது.

வழுதலை, வழுதுணை என்னும் இரண்டும் கத்தரிக்காயையும், அதற்கினமான கண்டங்கத்திரியையும் குறிக்கும்.

வழுதலை = 1. கத்தரி (பிங்.) 2. கண்டங்கத்தரி (மூ. அக.).

வழுதுணை = 1. கத்தரிக்காய்

"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்" (ஔவையார் பாடல்)

"வழுதுணங்காய் முதலிய காய்களையும்" (மதுரைக். 529, நச்.உரை)

2.கண்டங்கத்திரி.

"வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வாரே" (நாலடி. 264)

மிகுதி - மீதி, மிகு - மீ - மீது = மேல். மீது - மீசு = மேல்.

"துவராடை மீசு பிறக்கிய மெய்யி னாரும்" (தேவா. 38 : 11)

மீசு வைத்தல் = மேலே வைத்தல் (யாழ். அக.).

மீசு - மீசை = 1. மேலிடம் "மீசை நீள் விசும்பில்" (சீவக.911)

2. மேலுதட்டில் முளைக்கும் மயிர்.

"துடித்த தொடர் மீசைகள்" (கம்பரா. மாரீச.49)

மீசை - மிசை = மேல். மீசை-வீசை (உலகவழக்கு)

மீசை தமிழ்ச்சொல் லன்றென்பது மீசையில்லார் கூற்றே.

இளநீர் என்பது தேங்காயன்று; குரும்பைக்கும் தேங்காய்க்கும் இடைப்பட்ட வழுக்கையும் தோன்றாத நிலையிலுள்ள இளமையான நீரே. பின்பு, அது வழுக்கை தோன்றிய நிலையிலுள்ள நீரையும் குறித்தது.

அதுவும் இளமையான நீரே. மருந்துக்குச் சிறந்தது வழுக்கை தோன்றாத இளநீர்தான். ஆயின், குளிர்ச்சிக்காகவும் நீர்வேட்கை தணிப்பதற்காகவும் மட்டும் குடிக்கும் உடல்நல நிலையர், வழுக்கையும் தின்ன விரும்புவதால், வழுக்கையிளநீர் வெட்டத் தரப்படும். இன்றும் இளநீர்க் கடைகளில் வழுக்கையில்லாத இளநீர்க் காய்களைக் காணலாம். முற்றின காயிலுள்ள நீரை இளநீரென்று எவரும் கூறார். அதைத் தேங்காய்த் தண்ணீர் என்றே சொல்வது மரபு.

இளநீர் என்னும் தொடரின் இரு சொற்களும் பொருள் நிரம்பியவை. இளமையும் நீரும் உள்ளதே இளநீர். நீர் ஒரு கொள்கலத்திலன்றித் தனித்திருக்க முடியாது. ஆகவே, இளநீர் என்பது தெங்கமட்டையோடு கூடித்தானிருக்கும். இளநீர் என்பது நீரைமட்டும் குறிப்பின் இயற்பெயர். அதையுடைய மட்டையையுங் குறிப்பின் (அடையடுத்த) ஆகுபெயர். இளநீர்க் கடைக்குச் சென்று தேங்காய் இருக்கிறதா என்றாலும், தேங்காய்க் கடைக்குச் சென்று இளநீரிருக்கிறதா என்றாலும், இல்லையென்றுதான் சொல்வர்.

தமிழுக்கென்று சிறப்பாக நிறுவப் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழிநூல்துறைப் பேராசிரியராக வுள்ளவரும், மாநிலக் கல்லூரியில் அவருக்குரிய தலைமைத் தமிழ்ப் பேராசிரியப் பதவி தக்கார் வேறொருவருமின்மையால் வெறுமையாயிருக்கிறதென்று, மேனாட் கல்வியமைச்சர் திரு. சுப்பிரமணியத்தால் புகழப் பெற்றவருமான பேரா.தெ.பொ.மீ. முண்டா நிலத்திற் பிறந்து வளர்ந்தவர்போல் கூறிக்கொண் டிருப்பது பெருவியப்பாகவே யிருக்கின்றது.

தமிழ்நாட்டில் தெங்கு தொன்றுதொட்டு வளர்ந்து வருகின்றது. முழுகிப்போன குமரிக்கண்டத்திலும் ஏழ்தெங்க நாடுகள் இருந்தன.

சின்ரிகுசா (jinrickshaw = ஆள்வலி வண்டி) என்பது ரிகுசா என்றும், பைசைக்கிள் (bicycle) என்பது சைக்கிள் என்றும், குறுகி வழங்குதல் போல், இளநீர் என்பது முண்டாவில் நீர் என்று குறுகி வழங்கித் தேங்காயையும் குறித்திருக்கலாம். அல்லது, இது வேறொரு சொல்லாகவு மிருக்கலாம்.

13. "கீழைத் தீவுகளிலிருந்து பல நறுமணப் பொருள்கள் நம் நாட்டில் வந்து, நம் மக்கள் மனத்தையும் மூக்கையும் கவர்ந்தன. தக்கோலி, அரு மணவன் முதலியவை அந்த நறுமணப் பொருள்களுள் ஒருசில. இவை, தாம் விளையும் இடத்தின் பெயரையே தம் பெயராகக் கொண்டவை என்று அடியார்க்குநல்லார் எடுத்துக் காட்டுகிறார். இவற்றை எப்படி ஒழித்துத் தள்ளுவது?"

கீழைத் தீவுகளிலிருந்து நறுமணப் பொருள்கள் நம் நாட்டுக்கு வலிய வரவில்லை. நம் நாட்டு வணிகரே அங்குச் சென்று அப் பொருள் களைக் கொணர்ந்தனர்.

"முந்நீர் வழக்கம் மகடூஉ வோ டில்லை" என்று கி.மு.7ஆம் நூற்றாண்டினதான தொல்காப்பியம் பண்டைத் தமிழ்க் கடல்வாணிகரைக் குறிக்கின்றது. குமரிக்கண்டத்து வடிம்பலம்ப நின்ற பாண்டியன், சாலித் (சாவகம்) தீவிற்குச் சென்று அதைக் கைப்பற்றியதிலிருந்து, அல்லது அதற்கு முன்பிருந்தே கீழைநாட்டு வாணிகத் தொடர்பு நம் நாட்டிற்கு இருந்து வந்திருக்கின்றது. அகிலின் வகைகளை, "அருமணவன், தக்கோலி, கிடாரவன், காரகில் என்று சொல்லப்பட்ட பல்வகைத்தாகிய தொகுதியும்" என்றே அடியார்க்குநல்லார் குறிப்பிடுகின்றார். இதற்கு, "இங்குக் கூறப்படும் பெயர்கள் இக்காலத்து வழங்காமையாற் புலப்படவில்லை." என்று டாக்டர். உ.வே.சா. அடிக்குறிப்பு வரைந்திருக்கின்றார்.

அருமணம் அல்லது அருமணவன் என்பது ஒரு தீவுப் பெயராகத் தெரிகின்றது. அஃது அரிய மணப்பொருள்கள் விளைவது என்று பொருள்படும் தமிழ்ப் பெயராகவும் இருக்கலாம்.

முதுபண்டைக் காலத்தில் கிழக்கத்துத் தீவுகளையும் நாடுகளையும் தமிழரசர் கைப்பற்றியிருந்ததால், அவற்றுட் சில இன்னும் தமிழ்ப் பெயர்களையே தாங்கி நிற்றலைக் காண்க.

எ-கா : மதுரை - மதுரா , மலையம் - மலாயா, பொருநை - போர்நியோ.

சாலி என்பது யவ என்று வடமொழியில் மொழிபெயர்க்கப்பட்டுப் பின்பு சாவா என்று வழங்கி வருகின்றது.

சுமதுரை (சுமதுரா - சுமத்ரா) என்பது, சு என்னும் வடமொழி முன்னொட்டுப் பெற்றது.

அகில் என்பது பழஞ் சேரநாடாகிய மலையாள நாட்டிலும் விளைகின்றது. அது வெள்ளகில். அதன் பிற வகைகளே கீழ்நாட்டினின்று வந்தவை. அருமணம் என்னும் தீவினின்று வந்த யானை அருமணவன் எனப்பட்டதால், தமிழ்நாட்டில் யானை யில்லை என்பது பெறப்படாது . இது பிறவற்றிற்கும் ஒக்கும்.

அகில் என்னும் சொல் முள்ளுள்ளது என்னும் பொருளது. அக்கு = முள், அகில். அக்கு + இல் = அக்கில் - அகில்.

"கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும்" என்றார் விளம்பிநாகனார். கள் = முள். கள்ளி = முள்ளுள்ளது.

அகில் தமிழ்நாட்டினின்று மேனாடுகட்கு ஏற்றுமதி யானதினால், மேனாடுகளிலும் அதன் தமிழ்ப் பெயரே திரிந்து வழங்கி வருகின்றது

அகலிம் (ahalim) என்பது எபிரேயம். அகலோக்கோன் (agallochon) என்பது கிரேக்கம்; அகலோக்கா (agallocha) என்பது இலத்தீனம்.

அகில் என்பதே மலையாளமும், அகலோ (agallo) என்பது மலாயம். அகரு (agaru) என்பது சமற்கிருதம். எல்லாவற்றிலும் பிற்பட்டது

சமற்கிருதம். ஆயினும் அச் சமற்கிருதச் சொல்லினின்று தமிழ்ச்சொல் வந்ததாக, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சொற்களஞ்சியம் காட்டி யிருப்பது, ஆரிய ஏமாற்றுத் தன்மையையும் தமிழர் ஏமாறுந் தன்மையை யும் எத்துணை விளக்கமாகக் காட்டுகின்றதென்பதை எண்ணிக் காண்க.

தக்கோலம் என்பது வால்மிளகு, திப்பிலி, பாகடை (தாம்பூலம்), சிறுநாவல், பெருநாவல் என்னும் ஐம்பொருள்களையே உணர்த்தும். ஆகையால், தக்கோலி என்பது உவமை அல்லது தன்மை பற்றியதாகவு மிருக்கலாம். காரகில் என்பது வெள்ளகில் என்பதற்கு எதிராகையால் தன்மை பற்றியதே. கிடாரவன் என்பது கிடாரத்தினின்று வந்ததாக இருக்கலாம்.

இக்காலத்தில் அருமணவன், தக்கோலி என்னும் பொருளு மில்லை; சொல் வழக்குமில்லை. இவை தாமாக ஒழிந்துபோயின. ஆயினும், "இவற்றை எப்படி ஒழித்துத் தள்ளுவது?" என்று நம் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் கவன்று பெரிதும் இடர்ப்படுகின்றார். ஒருகால், அப் பொருள்கள் அவர் இல்லத்தில் இடத்தையடைத்துக் கொண்டுள்ளன போலும்!

14. "நாம் நம்முடைய பண்பாட்டை அங்கெல்லாம் பரப்பினோம் என்பதற்கு நிலையான சின்னங்களாக, அங்கிருந்து வந்த சொற்கள் இன்றும் விளங்குகின்றன."

நாம் நம் பண்பாட்டை அங்குப் பரப்பியிருந்தால், நம் சொற்கள் அங்குச் சென்றிருக்குமேயொழிய, அங்கிருந்து சொற்கள் இங்கு வந்திரா. வந்திருப்பின், நம் பண்பாடின்மையைக் காட்டுமேயன்றிப் பண்பாட்டைக் காட்டா.

15. "நாம் மிகமிக விரும்பிச் சுவைக்கும் முருங்கைக்காய்ச் சாம் பாரில் விளங்கும் 'முருங்கை' சிங்களவர்கள் நமக்குக் கொடுத்த அன்பின் காணிக்கை."

முருங்கை தொன்றுதொட்டுத் தமிழரால் உண்ணப்பட்டு அல்லது தின்னப்பட்டு வரும் தமிழ்நாட்டுக் காயே; ஆதலால், முருங்கைமரம் தமிழ்நாட்டு மரமே.

முருங்குதல் (தன்வினை) = 1 முறிதல்.

"கூம்பு முதன்முருங்க" (மதுரைக். 377)

2. அழிதல்.

"அமரு ளேற்றார் முரண்முருங்க" (பு.வெ. 1 : 7)

முருக்குதல் (பிறவினை) = 1. முறித்தல்.

"காப்புடைய வெழுமுருக்கி" (புறம்.14).

2. அழித்தல்.

"விறல்வேல் மன்னர் மன்னெயில் முருக்கி" (சிறுபாண். 247)

3. கொல்லுதல், (திவா.)

முருங்கு என்னும் சொல் முரி என்னும் சொல்லொடு தொடர்புள்ளது. முரிதல் = ஓடிதல், கெடுதல்.

முருங்கைமரம் அல்லது கிளை எளிதாய் ஒடியும் மரம். முருங்குவது முருங்கை.

முருங்கைக்காய்போற் காய்ப்பதும் முள்ளுள்ளதுமான முள் முருங்கை மரம், முருக்கு எனப்பட்டது. இது வலித்துத் திரிந்த திரிசொல்.

"முருக்குத்தாழ் பெழிலிய நெருப்புற ழடைகரை" (பதிற். 23 : 26)

முருக்கமலர் செந்நிறமாயிருப்பதால் எரிமலர் எனப்படும்.

"எரிமலர்ப் பவளச் செவ்வாய்" (சீவக. 862)

முருக்கு என்பது முருங்கு என்றும் நிற்கும். புத்தமித்திரன் என்னும் பித்தமித்திரன் பிதற்றிய வீரசோழியத்துக்கு உரை கண்ட பெருந்தேவனார், "முருங்கா வென்னுஞ் சிங்களச் சொல் முருங்கையென வந்தவாறுங் கொள்க" என்று 11ஆம் நூற்றாண்டிற் கூறிய வுரையை, வரலாறு, மொழி நூல் முதலிய நூலறிவும் ஆராய்ச்சியும் மிக்க இக்காலத்திற் கொண்டு கூறுவது எத்துணைப் பேதைமையும் அடிமைத்தனமும் ஆகும்!

கங்கைக்கரை நாட்டைச் சேர்ந்த விசயன் என்னும் இளவரசன், கி.மு. 543-ல் ஒரு படையோடு வந்து இலங்கையில் இறங்கிச் சிங்கள இனத்தைத் தோற்றுவித்தான் என்பது பழைய வரலாறு. அதனால், இலங்கையும் அதன் மொழியும் சிங்களம் எனப்பட்டன.

பெருந்தேவனார் "முருங்காவென்னும் சிங்களச் சொல்" என்று இடத்தின்மேல் மட்டும் ஏற்றிக் கூறியிருப்பவும், நம் பேராசிரியர் "சிங்கள வர்கள் நமக்குக் கொடுத்த அன்பின் காணிக்கை" என்று அவ் வினத்தார் மீதே ஏற்றிக் கூறிவிட்டனர். விசயன் கங்கைக்கரை நாட்டினின்று வந்த பொழுதே முருங்கை மரத்தையும் உடன்கொண்டுவந்தான் என்பது அவர் கருத்துப்போலும்!

"முருங்கைக்காய் என்றதும் முறிந்ததாம் பத்தியம்"

"முருங்கை பருத்து முட்டுக்கால் ஆகுமா?"

"முருக்கம்பூ சிவந்ததினால் முடிப்பார் உண்டா?"

என்பவை தொன்றுதொட்டு வழங்கி வரும் பழமொழிகள். முருங்கைப் பட்டை, முருங்கைப் பிசின் ஆகியவை பிள்ளை மருத்துவத்திற் பெயர் பெற்ற மருந்துகள். முருங்கைக்காயும் முருங்கைக் கீரையும் தமிழர் தொன்று தொட்டு உண்டு வரும் உணவு வகைகள்.

முருங்கை என்னும் சொல், மலையாளத்தில் முரிஞ்ஞ என்றும், தெலுங்கில் முனக என்றும், சமற்கிருதத்தில் முருங்கீ என்றும் திரிந்து வழங்குகின்றது. ஐகார வீற்றுத் தமிழ்ச்சொற்கள் பொதுவாய் ஆரிய மொழிகளில் ஆகாரவீறாய் நிற்கும். அம் முறைப்படி, ஆரியச் சார்பான சிங்களத்திலும், முருங்கை என்பது முருங்கா எனத் திரிந்தது. சமற்கிருதச் சொல் 'வேத' ஆரியர் தமிழ்நாட்டுக்கு வந்தபின் கடன்கொண்டதால், முருங்கீ என்னும் வடிவு கொண்டது. உண்மை இங்ஙனம் இருக்கவும், முருங்கீ என்னும் சமற்கிருதச் சொல்லே சிங்கள மொழியில் முருங்கா எனத் திரிந்ததென்றும், பின்பு அது தமிழில் முருங்கை எனப் புகுந்ததென்றும், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலியில், பிராமணரான மு.இராகவையங்காரும் கோடரிக்காம்பான வையாபுரியும் கூடித் தலை கீழாய்க் குறித்திருப்பதை, ஆயிரக்கணக்காய்ச் சம்பளம் வாங்கிக்கொண்டு தமிழைப் பேணாத பேடித் தமிழ்ப் பேராசிரியர் கவனிப்பாரா?

முருங்கை, முருக்கு என்னும் இரு பெயரும் தொன்றுதொட்டு இரு வகை வழக்கிலும் வழங்கி வரும் தமிழ்ச்சொற்களாகும். முருக்கைப் புனமுருக்கு, புனமுருங்கை என்பதுமுண்டு.

முதலிரு கழக நூல்களனைத்தும் கடைக்கழக நூல்களிற் பலவற் றொடு இறந்துபட்டமையால், இன்று சில பழந் தமிழ்ச்சொற்கட்கு இலக்கியச் சான்று காட்ட இடமில்லை. தொல்காப்பியம் இலக்கண நூலேயன்றி அகர முதலியன்று. இதைப் பலர் உணர்வதில்லை.

16. "சீனர்களோடும் நமக்குத் தொடர்பு உண்டு. படகுவகையைச் சேர்ந்த சம்பான் என்ற சொல்லும், பெரிய மண்கலத்தைக் குறிக்கும் 'காங்கு' என்ற சொல்லும், 'பீங்கான்' என்ற சொல்லும், நாம் விரும்பும் சீனப் பட்டைப்போலச் சீனநாட்டிலிருந்து வந்தவையே ஆம்."

குமரிக்கண்டத் தமிழர் நீர்வழியும் நிலவழியும் உலக முழுதும் சுற்றினவர். அல்லாக்கால், வடவையைக் கண்டிருக்க முடியாது; ஞாலத்திற் கும் உலகம் என்று பெயரிட்டிருக்க முடியாது.

உலகில் முதன்முதல் நீர்வழிச் செல்லக் கலம் புனைந்தவரும், கடலைக் கடந்தவரும் தமிழரே. நாவாய் என்ற தமிழ்ச்சொல்லே navis என்றும், படகு என்ற தமிழ்ச்சொல்லே barca, அல்லது barga என்றும் இலத்தீனில் திரிந்துள்ளன. Navy, bark, barge என்ற ஆங்கிலச் சொற்கள் இலத்தீனினின்றும் திரிந்தவை. கோதியத்தில் skip என்றும், மூதாங்கிலத்தில் scip என்றும், மூதுயர் செருமானியத்தில் scif என்றும், ஆங்கிலத்தில் ship என்றும், வழங்குவதும் கப்பல் என்னும் தென்சொல்லின் சிதைவே.

கப்பலும் நாவாயுமல்லாத சிறுகலங்கள், பரிசல், ஓடம், அம்பி, பஃறி, திமில், தோணி, படகு முதலியனவாகப் பல வகைய.

சம்பான் என்பது (E.sampan) ஒருவகைக் சிறிய சீனப் படகு. அது பஃறி, திமில், தோணி, படகு என்பவற்றுள் ஒன்றுக்குச் சமமாகும். அது முப்பலகையாற் செய்யப்பட்டதினால் அப்பெயர் பெற்றது. Chinese san - pan. san = மூன்று, pan= பலகை. ஆதலால், சம்பான் என்ற சொல்லே தமிழுக்குத் தேவையில்லை. மொழி யுணர்ச்சியுள்ளவர் மண்ணெண்ணெய், மிதிவண்டி என்று தூய தமிழ்ச்சொற்கள் வழங்கவும் மொழியுணர்ச்சியில்லார் கெரோசின் ஆயில், சைக்கிள் என்று ஆங்கிலச் சொற்களையே வழங்குவது போன்றதே, சம்பான் என்னும் சீனச் சொல்லை வேண்டாது வழங்குவதும் என்க. அதைப் படகு என்றே சொல்லலாம். சீனச்சொல்லை வழங்குவது தமிழுக்குக் கேடேயன்றி ஆக்கமன்று.

காங்கு என்னும் சீனச்சொற்கு நேரானது வளந்து என்பது. யாழ்ப் பாண அகரமுதலியையும் சென்னைப் ப.க.க. அகரமுதலியையும் பார்க்க.

பானை யொத்த கலங்களுள்: மிகச் சிறியது சுண்டான்; அதிற் பெரியது முட்டி; அதிற் பெரியது பானை: அதிற் பெரியது மிடா; அதிற் பெரியது வளந்து. அதுவே கலங்கிற்குச் சமமானது.

மிகப் பெரிய தவளையை மிடாத்தவளை என்பர்.

பீங்கான் என்பது சீனநாட்டினின்று வந்த ஒருவகைச் சுடுமட்கல மாகும். பீங்கான் என்னும் சொல் பிங்கான் (pingan) என்னும் பாரசீகச் சொல்லின் திரிபாக, சென்னைப் பல்கலைக் கழக அகரமுதலியிற் குறிக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டுச் சுடுமட் கலங்களுள், சிவந்தவற்றைச் செஞ்சுள்ளை யென்றும், கரியவற்றைக் கருஞ்சுள்ளையென்றும், சொல்வது மரபு. பீங்கான் கலங்கள் பெரும்பாலும் வெண்ணிறமா யிருப்பதால் அவற்றை வெண் சுள்ளை என்னலாம். அக் கலங்களைச் சுள்ளாங்கலம் என்னலாம். சுடப் பட்ட கலம் என்பது அதன் பொருள். வெண்கலம் என்பது செய்பொருளாகு பெயராய் முறி என்னும் கருவியைக் குறிப்பது போன்றே, சுள்ளாங்கலம் என்பதும் செய்பொரு ளாகுபெயராய்ப் பீங்கான் கருவியைக் குறிப்பது பொருத்தமானதே.

இனி, இற்றை நூல்களிற் பீங்கானைக் குறிக்கும் சொல்லின்மையால், பண்டை நூல்களிலும் இருந்திராது என்ற முடிவுக்கு வரமுடியாது.

மணிலா(Manilla) என்னும் பிலிப்பைன் தீவுக்கணத் தலை நகரினின்று இறக்குமதியான கடலை வகையை, நிலக்கடலை, வேர்க்கடலை, கடலைக்காய் என்று தனித்தமிழ்ப் பெயரால் வழங்குவதே தமிழ்நாட்டுப் பெருவழக்கு. ஆங்கிலேயரும் நிலக்கடலை என்னும் சொல்லையே groundnut என்று மொழிபெயர்த்துள்ளனர். ஆயினும், மணிலாக் கொட்டை என்ற பெயரையே சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலி அளவையாகக் கொண்டுள்ளது. இதனால், தூய தமிழ்ச்சொற்களை இயன்ற வரை மறைத்து.

அயற் சொற்களை வழங்குவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள ஒரு வகுப் பாருண்மையை அறியலாம். மணிவாக்கொட்டை என்பது இன்று மல்லாக் கொட்டை என்று மருவி வழங்குகின்றது.

17. "நம்முடைய தந்தமும் முத்தும் மேனாட்டிற்குப் போனது போலக் கிரேக்க மொழிச் சொற்களும் தமிழில் வந்துள்ளன."

"நம்முடைய தந்தம்" என்று தந்தம் என்னும் பொருளோடு அச் சொல்லையும் நம்மோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றார் பேராசிரியர். தந்தம் என்பது அச் சொல்லையும் குறிக்கும்; அச் சொல்லாலுணர்த்தப் பெறும் பொருளையும் குறிக்கும். அவற்றுள், பொருள் நமது; சொல் நமதன்று.

தந்தம் என்பது ஆரியச் சொல். danta (வ), dentis (L.).

தந்தத்தைக் குறிக்கும் தமிழ்ச்சொல் 'மருப்பு'

"அசனி வேகமதன் மருப்பூசி யாக" (*சீவக*.1121)

மருப்பு = யானைக் கொம்பு (பிங்).

"அரிமந் திரம்புகுந்தா லானை மருப்பும்" (நீதிவெண்பா, 2)

முத்து என்பது தூய தமிழ்ச்சொல். ஆயினும், அது முக்தா என்னும் வடசொல்லின் திரிபாகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகர முதலியிற் காட்டப்பட்டுள்ளது. பேராசிரியர் கருத்து யாதோ அறிகிலம்.

18. "சாட்டையைக் குறிக்கும் 'மத்திகை' என்பதும், தரைக்குள்ளே செல்லும் வழியைக் குறிக்கும் 'சுருங்கை' என்னும் சொல்லும், 'கன்னல்' என்ற நாழிவட்டிலின் பெயரும், இரண்டரை நாழிகையைக் குறிக்கும் 'ஓரை' என்பதும், கிரேக்கச் சொற்களேயாம்."

இக் கூற்றினால், பேராசிரியர் தம் தமிழறியாமையைத் தெள்ளத் தெளிவாகவும் முற்ற முடியவும் காட்டுகின்றார். மேற்குறித்த நாற்சொல்லும் தூய தென்சொல்லே.

## மத்திகை

மத்திகை = குதிரைச்சாட்டை அல்லது சம்மட்டி (horse whip)

"மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை" (முல்லைப். 59)

மொத்துதல் = அடித்தல். சாட்டையால் அடித்தல்.

மொத்து - மொத்திகை - மத்திகை.

ஒ-அ. ஒ.நோ : ஒட்டு - அட்டு, கொம்பு - கம்பு, மொண்டை (மொந்தை) - மண்டை.

சமட்டுதல் = சாட்டையால் (சம்மட்டியால்) அடித்தல்.

சமட்டு - சமட்டி - சம்மட்டி.

சமட்டு - சவட்டு - சவட்டை - சாட்டை

சாட்ட - catta(M.), சாட்டி - cati (K.), ஜாட்டி - jati(T.).

ஜாட்டி jati(U.).

மத்திகை - Gk. Mastix, mastigos.

**சுருங்கை**

சுல்-சூல். சூலுதல் = தோண்டுதல்.

"நுங்குசூன் றிட்டன்ன கண்ணீர்மை" (நாலடி,44).

சுல்-சொல்-சொலி. சொலித்தல் = கிழித்து உரித்தல்.

சொலி = உரித்த தோல். சொல்- சொள்-சொள்ளல் = உள்ளீடற்ற சொத்தை.

சொள் - சொள்ளை = துளை, உள்ளீடற்றது, சொத்தை.

சொள் - சொண்டு = சொத்தை.

'சொண்டு மிளகாய் வற்றல்' என்பது பாண்டிநாட் டுலக வழக்கு.

சொள் - சொட்டு. சொட்டுதல் = குழியக் கொத்துதல்.

சொட்டு - சொட்டை - சொத்தை.

சுல் - (சுன்) - சுனை = உள்ளிருந்து ஊறும் நீர்நிலை.

சுள்-சுர்-சுர. சுரத்தல் - துளைவழியாய் ஊறுதல்.

சுர - சுரங்கு - சுரங்கம் = கள்வர் இடும் கன்னம், வெடிமருந்து வைக்கும் குழி, நிலவறை, கீழ்நிலவழி, சுரங்கம் - suranga (Skt.).

சுர் - சுரி. சுரித்தல் = துளையிடுதல்.

சுரி = 1. துளை(திவா.), 2. ஏட்டுத்துளை, 3.ஏட்டில் துளையிடுங் கருவி.

சுர - சுரை = உட்டுளை, சிறு குழாய், குழிந்த இடம், முற்றி உட்டுளையுள்ளதாகும் காய், சுரப்பு.

சுர் - சுரு - சுருவம் = குழிந்த அகப்பை, சுருவம் - sruva (Skt.).

சுரு - சுருவை = அகப்பை.

ஒ.நோ: முழை - மூழை = அகப்பை.

சுரு - சுருங்கு = அங்கணம் (சலதாரை).

சுருங்கு - சுருங்கை =அரசர் கரந்தோடித் தப்பும் கீழ்நிலவழி (சூடா.); 2. நீர் செல்லும் கரந்த படை. "பெருங்குள மருங்கிற் சுருங்கைச் சிறுவழி" (மணிமே. 12 : 79) 3. நுழைவாயில் (பிங்.).

சுருங்கை - surunga (Skt.)

சொலி - சொரி. சொரிதல் = உள்ளிருந்து விழுதல்.

சொல் - சோல் - சோர். சோர்தல்= உள்ளிருந்து கசிதல், வடிதல், விழுதல், தளர்தல், சோர்(க.) , சோலு (தெ.).

சோர் - சோரி-வடியும் அரத்தம்.

சோல் - (சோன்) - சோனம் = சொரியும் முகில்.

சோன் - சோனை = பெருமழை வீழ்ச்சி, கார்முகில்.

சோனையா (ம்) மாரி-சோனாமாரி.

இச் சொற்களால், சுருங்கை என்பது சுல் என்னும் அடிவேரினின்று, தோன்றி, சுரி என்னும் சொல்லோடு தொடர்புடையதாய், துளைக்கப்பட்டது என்னும் பொருளில் கீழ்நில வழியைக் குறிக்கும் என்பது தெளிவாம்.

**கன்னல்**

கல்லுதல் = கில்லுதல், தோண்டுதல், குடைதல்.

"மலைகல்லி எலிபிடிக்கிறது" என்பது ஒரு சொலவடை.

கல் -கலம் = மரம், கல் முதலியவற்றிற் குடைந்து செய்யும் ஏனம், தோணி.

கல் - கன் = உட்குழிந்த துலைத்தட்டு, செப்புக் கலம், செப்புக்கலத் தொழில், செம்பு.

கன்-கன்னான் = செப்புக்கலம் செய்யும் கம்மாளன்.

கன்-கன்னம் = துளையுள்ள காது, காதை யடுத்த அல்லது உட்குழிந்த கதுப்பு (ஒ.நோ. செவி-செவிடு = காதை யடுத்த கன்னம்), துலைத்தட்டு, கள்வர் சுவரிலிடும் துளை.

"செவிட்டைக் கட்டி அடித்தான்" என்னும் வழக்கை நோக்குக.

கன்- கன்னல் = 1. நீர்க்கலம். "தொகுவாய்க் கன்னல் தண்ணீ ருண்ணார்" (நெடுநல். 65).

2. நாழிகை வட்டில்.

"கன்னலின் யாமங் கொள்பவர்" (மணிமே. 7 : 65).

3. நாழிகை வட்டிலால் அறியப்படும் கால அளவு.

4. உட்டுளையுள்ள புல்வகையைச் சேர்ந்த நாணற்கரும்பு.

5. கருப்பஞ் சாற்றிலிருந்து செய்யப்படும் சருக்கரை அல்லது கற்கண்டு.

6. சருக்கரை கலந்து அடும் அடிசில் (பாயசம்).

ஒ.நோ. : நுள் - நள்-நாளம் = உட்டுளை, உட்டுளையுள்ள தண்டு.

நள்-நாள்-நாளி-நாழி = உட்டுளையுள்ள மூங்கிற்படி, படி, அம்புப்

புட்டில், நெசவுக்குழல், நாழிகை வட்டில், நாழிகை.

நாழி-நாழிகை = நாழிகைவட்டில், நாழிகை நேரம்.

உண்ணாழிகை = படிம அறை (கருப்பக்கிருகம்).

நாள்-(நாளல்)-நாணல் = உட்டுளையுள்ள புல்வகை.

கன்னல் - Gk. *kanna* (read), L.*kanna*, OF. *cane*, ME, *can(n)e*, E.*cane*, Hele.*ganeh*.

E.sugar - cane = கரும்பு.

இனி, கல் = கருமை, கல்-கன்-கன்னல் = செங்கருப்பானது என்றுமாம்.
ஒ. நோ: கரு - கரும்பு = கரியது, கல் - கள் - காள் - காளம் = கருமை.
கல் + து = கஃறு (கருமை).

**ஓரை**

ஒல்லுதல் = பொருந்துதல், கூடுதல். ஒல்-ஓர்-ஓர்-ஓரை=கூட்டம். மகளிர் கூட்டம், உடுக்களின் கூட்டம் (இராசி, sign of zodiac) 'இலக்கினம்' என்னும் ஓரை யெழுச்சி (இராசியுதயம்) நன்முழுத்தம் (சுபமுகூர்த்தம்).

"மகளிர் ஈட்டமும் மற்றவ ராடலும்
அவர்விளை யாடுங் களமும் இராசியும்
ஓரிடைச் சொல்லும் குரவையும் ஓரை" (10 : 225)

என்பது பிங்கலம்.

இராசி (ராசி) என்னும் வடசொல்லும், constellation என்னும் இலத்தீன் வழி யாங்கிலச் சொல்லும், (உடுக்களின்) கூட்டத்தை உணர்த்துதல் காண்க.

ஒரு மணி நேரத்தைக் குறிக்கும் hour என்னும் ஆங்கிலச் சொல்லின் மூலமான hore என்னும் கிரேக்கச் சொல் வேறு; பன்னிரு விண்மீன் கூட்டத்தையும் அவை எழும் மங்கல அல்லது ஆட்சி நேரத்தையும் குறிக்கும் ஓரை என்னும் தமிழ்ச்சொல் வேறு. இவ் விரண்டையும் தொடர்பு படுத்தியது தென்சொல்லை வடசொல்லாகக் காட்டும் ஆரியத் தமிழ்ப் பகைவர் செயல். அதை அவரடியாரும் பின்பற்றி வருகின்றனர்.

களவொழுக்கத் தலைவன் தன் இன்ப முதிர்ச்சி யொன்றே கருதுவதனால், அதற்குத் தடையாயுள்ள வழியருமை, விலங்கச்சம், வேளைத்தீங்கு, தலைவியுறவினர் சினம் முதலியவற்றைச் சிறிதும் பொருட்படுத்துவதில்லை. இதனையே,

"மறைந்த வொழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த வொழுக்கம் கிழவோற் கில்லை" (1081)

"ஆற்றின தருமையும் அழிவும் அச்சமும்
ஊறும் உளப்பட அதனோ ரன்ன" (1082)

என்னும் தொல்காப்பிய நூற்பாக்கள் குறிக்கும்.

(நாள் - நட்சத்திரம், ஓரை-இராசி, இலக்கினம்)

கடக லக்கினம், சிங்க லக்கினம் என்று வடசொல்லாற் குறிப்பவற்றை, கடகவோரை, மடங்கவோரை (அல்லது அரிமாவோரை) என்றே செந்தமிழிற் குறித்தல் வேண்டும்.

கிரேக்க மொழியில் நூற்றுக்கணக்கான அடிப்படைச் சொற்கள் தென்சொற்களாக உள்ளன. அவற்றுள் இரண்டொன்றைக் கண்ட வளவானே அவற்றைக் கிரேக்கச் சொல்லென்றே வலிப்பது, வரலாற்றறிவும், மொழிநூலாராய்ச்சியும் இல்லாதார் கூற்றே. இதை விரிப்பிற் பெருகும்; விளக்கின் மற்றொன்று விரித்தலாம். ஆதலால், இம்மட்டில் இதனை இங்கு நிறுத்துகின்றேன்.

19. "யூதர்கள் பழந்தமிழ் நாட்டில் இப்போது கேரளம் என்ற பகுதியில் பிறருடைய கையினின்றும் தப்பிச் சரண்புகுந்தார்கள். 'யூதர்' என்ற பெயர் 'யௌதி' என்று வழங்கப்படும் ஹீப்ருச் சொல்லாகும்."

யூதர் என்பார் கானான் நாட்டுக்குரிய அயல் இனத்தார். பகைவராற் சிறைப்பிடிக்கப்பட்டும் பகைவர்க்குத் தப்பியும் உலகத்தின் பல பகுதிகளிலும் பரவி வாழ்ந்துவந்தவர். அவர்க்குப் பிற இனத்தார்க்குப் போன்றே அவர்தம் மொழிச் சொல்லாற் பெயர் அமைந்துள்ளது. இதில் என்ன வியப்பு! ஆங்கிலரை ஆங்கிலர் என்னாது வேறெப் பெயரால் அழைப்பது? இதனால் பிறமொழிச் சொல் தமிழிற் புகுந்துள்ளதெனல் எத்துணைப் பேதைமையும் பகுத்தறிவின்மையும் ஆகும்! மராட்டியர், குச்சரர், சிங்களர், சீனர், சோனகர், யவனர் முதலிய எத்துணையோ வேற்று நாட்டார் வேற்றுமையின்றித் தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டில் இருந்து வந்திருக்கின்றனரே. இது தமிழ்நாட்டின் வணிக வள ச்சி, செல்வப் பெருக்கம், அரசியற் சிறப்பு, மக்கள் பண்பாடு முதலிய சிறப்பியல்புகளையன்றோ உணர்த்தும் இவ் வுண்மைக்கு மாறாக, இதனால் உயர்தனிச் செம்மொழியாகிய தமிழைக் கலவை மொழியாகக் காட்ட முயல்வது, ஒரு பேராசிரியர்க்கு, அதுவும் தமிழ்ப் பேராசிரியர்க்கு, அதுவும் அண்ணாமலைப் பல்கலைகழகத் தமிழ்ப் பேராசிரியர்க்கு, எத்துணை இளிவரல் என்பதை எண்ணிக் காண்க.

20. "அரபியர்களும் இங்கே வந்து தங்கினார்கள். முகமது நபிகள் தோன்றுவதற்கு முன்னிருந்தே தமிழரோடு சேர்ந்து அரபியரும் கப்பலோட்டியவர்கள்"

மகமது முன்னறிவர் கி.பி.6ஆம் நூற்றாண்டினர். அரபியரின் முதற் பெற்றோனான ஆபிரகாம் கி.மு.2000 ஆண்டுகட்கு முற்பட்டவன். அவன் காலத்துக்கும் முன்பு தமிழர் தென்கடலிலும் கீழைக் கடலிலும் மேலைக் கடலிலும் கப்பலோட்டினர்.

21. "சென்னைப் பல்கலைக்கழகம் தயாரித்துள்ள தமிழ் அகரமுதலியில் 891 அரபிச் சொற்கள் வந்துள்ளன. இசுலாம் மதத்தைச் சேர்ந்த சொற்களும் அரசியற் சொற்களும் இவற்றில் நிறைய வருகின்றன.

சென்னைப் பல்கலைக் கழகம் தொகுத்துள்ள தமிழ் அகரமுதலி (மறைமலையடிகள் போலும்) உண்மையான உரிமைத் தமிழறிஞரால் தொகுக்கப் பெற்றதன்று. அவ் வகரமுதலிக் குழு, அதன் பதிப்பாண்மைக் குழு முதலியவற்றின் உறுப்பினர் பெயரைக் கீழே குறிக்கின்றேன். நடுநிலைப் பகுத்தறிவாளர் பட்டிகளினின்று அறியத் தக்கவற்றை அறிந்துகொள்க.

**தமிழ் அகரமுதலிக் குழு (The Tamil Lexicon Committee)**

1. திருமான் (M.R.Ry.) (கே.வி.) கிருட்டிணசாமி அவர்கள்
2. " (எசு. (S.) அனவரதவிநாயகம் அவர்கள்.
3. " (ஏ.) சக்கரவர்த்தி அவர்கள்.
4. " பெரும்பேராசிரியர் (மஹாமஹோபாத்யாய) கலை நாவல (வித்யாவாசஸ்பதி) பண்டித (எசு.) குப்புசாமி அவர்கள்.
5. " அராவ ஆண்டகை (ராவ் பஹதூர்) (ஏ.) இலக்குமண சாமி அவர்கள்.
6. கனம் (Rev.) காடன் மத்தேயு.
7. திருமான் பண்டித கா. நமச்சிவாயம் அவர்கள்.
8. " அமைச்ச ஆண்டகை (திவான் பஹதூர்) (எசு.ஏ.) அரங்கநாதன் அவர்கள்.
9. " அராவ ஆண்டகை (பி.) சம்பந்தம் அவர்கள்.
10. " (தி. (T.) சிவராமசேது அவர்கள்.
11. " (சி.கே.) சுப்பிரமணியம் அவர்கள்.
12. " பெரும் பேராசிரிய தென்கலைச்செல்வ (தாட்சிணாத்ய கலாநிதி) பண்டித வே.சாமிநாதர் அவர்கள்.
13. " (டபிள்யூ எயிச்) வாரென் பெருமான் (Esg.)
14. " (எசு.) வையாபுரி அவர்கள்.

இப் பதினால்வருள், நால்வரே தமிழ்ப் புலவர். இருவர் ஒவ்வொரு சமயச் சார்பான தமிழறிஞரேயன்றி, இலக்கண விலக்கியம் முற்றக் கற்றவரல்லர். இவ் வறுவருள்ளும், ஒருவரேனும் தனித்தமிழாற்றலும் உலக வழக்கறிவும் பிறரை மேற்கொள்ளும் நெஞ்சுரமும் உடையவரல்லர். பர்.சாமிநாதர் தமிழ் இலக்கியத்துக்கு ஈடும் எடுப்புமற்ற அதிகாரியரே; ஆயின், தமிழ்மொழிக்கல்லர்.

கனம் காடன் மத்தேயுவும் வாரென் பெருமானும் மேனாட்டார். திருமான் (ஏ.) இலக்குமணசாமியார் தமிழறியாதவர்; தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர்.

**ஆட்சி மன்ற அகரமுதலிக் குழு (The Syndicate Lexicon Committee)**

1. கனம் (சி.(G.) பித்தெந்திரிகு.
2. திருவாளர் (Mr.) மார்க்கு அண்டர்.
3. பர். (Dr.) (சே. (J.) எயிச்.) தோண் (Stone)
4. மதிதகு (Hon'ble) திரு (Mr.) முறையாளியர் (Justice) (பி.ஆர்) சுந்தரம்).
5. வயவர் (Sir) (கே.) இராமுண்ணி மேனன்.
6. கனம் பர்.(ஈ.) மாண்டேய்து மேக்பேல்.

இவ் வறுவருள்ளும் ஒருவரேனும் தமிழ் இனத்தாரல்லர்.

**தமிழ் அகரமுதலிக் குழுத் தலைவரின் தொடர்முறைப் பட்டி (Succession list of Chairmen of the Tamil Lexicon Committee)**

1. கனம் (சே.(J.) எசு.) சாந்திலர்.
2. வயவர் (பி.எசு.) சிவசுவாமி.
3. மதிதகு திரு. முறையாளியர் (தி.வி.) சேசகிரி.
4. அராவ.ஆண்டகை (கே.வி.) கிருட்டிணசாமி.

இந் நால்வருள்ளும் ஒருவரேனும் தமிழ் இனத்தாரல்லர்.

**பதிப்பாளர் தொடர்முறைப்பட்டி (Succession list of Editiors)**

1. கனம் (சே. (J.) எசு.) சாந்திலர்.
2. திருமான் (எசு.) அனவரதவிநாயகம் அவர்கள்.
3. ,, (சி.பி.) வேங்கடராமன் அவர்கள்.
4. ,, பர். (பி.எசு.) சுப்பிரமணியம்.
5. ,, (எசு.) வையாபுரி அவர்கள்.

இவ் வைவருள், கனம் சாந்திலர் தமிழ்ப் பற்றும் நடுநிலையும் ஊக்கமும் தொகுப்பு முறையறிவும் உடையவரேனும், மேனாட்டார். திரு.அனவரதவிநாயகம் தமிழ் வரலாறறியாது பிராகிருதத்திற்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைப் பிறழ வுணர்ந்தவர். திரு.வேங்கடராமன் தமிழ்ப் புலமை நிரம்பாத பிராமணர். பர்.சுப்பிரமணிய (சாத்திரியார்) சமற்கிருத அடிப்படையில் தமிழைக் கற்றுத் தலைகீழாகவும் தாறுமாறாக வும் தமிழிலக்கணத்துக்கு உரை கூறுபவர். திரு.வையாபுரியாரோ தமிழைக் காட்டிக் கொடுப்பதில் குயக்கொண்டானை மேற்கொண்டவர்.

**தமிழ் அகரமுதலிப் பதிப்பாண்மைப் பணிக்குழு (The Editorial staff of the Tamil Lexicon)**

1. பதிப்பாளர் - திருமான் (எசு.) வையாபுரி அவர்கள்.
2. உதவிப் பதிப்பாளர் - திருமான் (வி.) நாராயணன் அவர்கள்.
3. தலைமைத் தமிழ்ப் பண்டிதர் - திருமான் பண்டித (எம்.) இராகவன் அவர்கள்.

4. சமற்கிருதத் தமிழ்ப் பண்டிதர் - திருமான் பண்டித (வி.எம்.) கோபாலகிருட்டிணன் அவர்கள்.

5. கூடுதல் (Additional) தமிழ்ப் பண்டிதர் - திருமான் பண்டித (எசு.) சோமசுந்தரம்) அவர்கள்.

6. உதவியாளர் - திருமான் (பி.ஆர்.) மீனாட்சிசுந்தரம் அவர்கள்.

இவ் வறுவருள், முதல் நால்வரே முதன்மையும் பொறுப்பும் வாய்ந் தவர். அவருள்ளும், பதிப்பாளரும் தலைமைத் தமிழ்ப் பண்டிதருமே தலைசிறந்த பொறுப்பு வாய்ந்தவர். பதிப்பாளரின் தமிழ்ப்பணிச் சிறப்பு முன்னரே குறிக்கப்பட்டது. அரசியல் துறையில் இறவாப் பெயர் தேடிக் கொண்ட குவிசுலிங் (Quisling) என்னும் நார்வே படைத்தலைவர் போல், மொழித்துறையில் இறவாப் பெயர் தேடிக்கொண்ட பெருமான் அவர். பண்டித (எம்.) இராகவ(ஐயங்கார்) கம்பர் தனிப்பாடலில் "முட்டிபுகும் பார்ப்பார்" என்று இருப்பதனை இட்டமுடன் பார்ப்பார் என்று திரித்தும், "ஐயர் யாத்தனர் கரணம் என்ப" என்னும் தொல்காப்பிய அடியிலுள்ள "ஐயர்" என்னும் சொற்கு ஆரிய மேலோர் என்று உரை வரைந்தும் அருந்தொண்டாற்றியவர்.

பண்டித (வி.எம்.) கோபாலகிருட்டிணமாச்சாரியார் அவர்களின் தமிழ்த் தொண்டு வடசொல் மிக்கனவும் அடிப்படைத் தென்சொற்களை யெல்லாம் வடசொல்லாகக் காட்டுவனவுமான அவர்கள் உரைநூல்கள் நன்கு விளக்கும்.

ஒரு நாட்டு இலக்கியத்தில் எந்நாட்டவரும் தேர்ச்சி பெற முடியும். ஆயின், ஒரு நாட்டு மொழியில் அந் நாட்டாரே யன்றி அயலார் தேர்ச்சிபெற முடியாது. ஒரு மொழியின் மரபும் (Idiom) வழக்காறும் (Usage), ஒலிப்பியலும் (Intonation) நூல் வாயிலாய் அயலார் அறிந்துகொள்ள இயலாவாறு, அம் மொழியாளரின் உள்ளத்திலிருந்து தோன்றுவன. ஆதலால், ஒரு நாட்டிற் குடிபுகுந்தவரின் வழித்தோன்றியவரே, பல தலை முறைக்குப்பின் அந் நாட்டுப் பழங்குடி மக்கள்போல் மொழித்தேர்ச்சி பெற முடியும். அதற்கு அம் மொழிப் பற்றும் அந் நாட்டுப் பழங்குடி மக்களோடு இரண்டறக் கலப்பு அல்லது நெருங்கிய தொடர்பும், இன்றியமையாதன வாகும்.

தமிழ்நாட்டுப் பிராமணர், தமிழையே தாய்மொழியாகக் கொண் டிருப்பினும், அவருள் ஒரு பகுதியாரின் முன்னோர் இங்கு வேத காலத்தி லேயே வந்தவரேனும், தமிழ் இலக்கியத் தலைமை அதிகாரியான பர். சாமிநாதரும் தமிழ்மொழியில் தேர்ச்சி பெறாமைக்குக் கரணியம் வருமாறு.

1. தமிழ்ப் பற்றின்மை அல்லது தமிழை வடமொழிக்குத் தாழ்வாகக் கொண்டிருத்தல்.

2. இயன்றவரை மேன்மேலும் வடசொல்லையும் பிற சொல்லையும் வேண்டாது புகுத்தித் தமிழைக் கலவை மொழியாக்கல்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகரமுதலியில் ஆயிரக் கணக்கான தென்சொற்கள் விட்டுப் போயிருப்பதும், பல தமிழ்ச் சொற்கட்குத் தவறாகப் பொருள் கூறியிருப்பதும், பல சொற்கட்கு எல்லாப் பொருளும் கூறாமையும், ஆயிரக்கணக்கான அயற்சொற்களை வேண்டாது சேர்த்திருப்பதும், அடிப்படைத் தென்சொற்களிற் பெரும்பாலான வற்றை வடசொல்லாக அல்லது பிற சொல்லாகக் காட்டியிருப்பதும், சொற்களையும் மரபு வழக்காறுகளையும் தவறான வடிவிற் குறித்திருப்ப தும், இவ் வழுக்களை யெல்லாம் ஆங்கிலத்திலும் தமிழிலுமாக இருமுறை தெளிவாக எடுத்துக் காட்டியும் எள்ளளவும் பொருட்படுத்தாமையும், சென்னைப் பல்கலைக்கழகம் தமிழுக்கு மாறான தென்பதையும் இன்று நடைபெறும் இந்திய பாக்கித்தானப் போர் இந்தியாவுக்கு வெற்றியாக முடிந்த பின் அதனை மாற்றியமைக்க வேண்டுமென்பதனையுமே நமக்கு வற்புறுத்திக் காட்டுகின்றன.

'சென்னைப் பல்கலைகழகத் தமிழகராதியின் சீர்கேடு' என்னும் என் திறனாய்வைக் கண்ட பின்னும், நம் பேராசிரியர் அவ் வகரமுதலியை ஓர் அளவைநூலாகக் கொண்டிருப்பது,

"கானாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாந் தான்கண்ட வாறு". (குறள். 849)

என்னுந் திருக்குறளையே நினைவுறுத்துகின்றது.

தமிழ்நாட்டில் எத்தனையோ பிற நாட்டு மக்கள் வந்து வாழ்கின்றனர். அவர்களின் அரசியற் சொற்களும் சமயவியற் சொற்களும் பிற துறைச் சொற்களும் தமிழ்நாட்டில் வழங்குகின்றன. ஆயின், அவற்றை யெல்லாம் தமிழ் அகரமுதலியிற் சேர்ப்பதும், தமிழ்ச்சொற்களென்று கொள்வதும், பேதைமையாகும். ஒரு நாட்டுப் பொதுவழக்கான மொழிவழக்கும் குழு வழக்கான அயலார் வழக்கும் வெவ்வேறாம்.

இஜ்ஜத்து (கண்ணியம், மானம்), இஜாஸத்து (உத்தரவு), இஷா (மாலை, மாலைத் தொழுகை), இஷாரா (குறிப்பு), இஷுக்கு (அன்பு, பற்று), இஷுராக்கு (விடியல், பொழுது புறப்பாடு), இஸ்திக்பார் (மன்னிப்பு வேண்டல்), இஸ்திலாக்கு (குழூஉக்குறி), இஸம் ( பெயர்), இஸீராபு (ஊதாரித்தனம்), இஹ்ஸான் (நன்றி) - இத்தகைய சொற்களைத் தமிழென்று கொள்பவன் தமிழறியாதவன் அல்லது தமிழ்ப் பகைவனாகவே யிருத்தல் வேண்டும்.

22. "வசூல், தபா (முறை) ரஜா, இமாம், இலாகா, பிஸ்மில்லா, உருசு, கலிமா, காயம்(உறுதி), ஜேப்பி, சைத்தான், தகவல், தாக்கீது, தலாலி, நகாரா, மக்கர், மால்(மகால்) முதலிய பல சொற்கள் அன்றாடப் பேச்சில் புகுந்து தமிழொடு தமிழாய் வழங்குகின்றன".

வேதகாலப் பிராமணர் தென்னாட்டுக்கு வந்ததிலிருந்தே தமிழ் தாழ்த்தப்பட்டு வந்திருப்பினும் பல் வேள்விச்சாலை முதுகுடுமிப்

பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்னும் பேதை வேந்தர் காலத்திலேயே அது தன் பெருமையை முற்றும் இழக்க நேர்ந்தது. தமிழரின் தாய்மொழி யுணர்ச்சி கொல்லப்பட்டதினால் பிற்கால மூவேந்தர் காலத்தில் பல அயன்மொழிச் சொற்கள் மொழிபெயர்க்கப் பெறாது தமிழில் தாராளமாய்ப் புகுந்து வழங்கத் தலைப்பட்டன. அதன்பின் நாயக்க மன்னரும் மராட்டிய மன்னரும் ஆண்ட காலத்தில், தமிழ்நிலை முன்னினும் பன்மடங்கு கெட்டது. இறைவ னருளால் ஆங்கிலேயர் வந்த பின்பே, தமிழர் ஆங்கிலக் கல்வியின் பயனாக மீண்டும் அறிவுக்கண் திறக்கப்பெற்று, தமிழின் தனிப் பெருமை யையும் ஆரிய ஏமாற்றையும் கண்டு தமிழைத் தூய்மைப்படுத்தி வருகின்றனர். பிறமொழிச் சொல்லால் தமிழ்த்தூய்மை கெடுவதுடன் தமிழ்ச்சொற்கள் வழக்கிறந்தும் இறந்துபட்டும் போகின்றன.

மேற்கண்ட அரபிச் சொற்கள் கீழ்வருமாறு மொழிபெயர்க்கப் பெறும்.

| அரபிச்சொல் | | தமிழ்ச்சொல் | அரபிச்சொல் | | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|---|---|
| வசூல் | - | தண்டல் | காயம் | - | நிலைப்பு |
| தபா | - | தடவை | ஜேப்பி | - | சட்டைப்பை |
| ரஜா | - | விடுமுறை | சைத்தான் | - | அலகை |
| இமாம் | - | தொழுவாசான் | தகவல் | - | செய்தி |
| இவாகா | - | திணைக்களம், துறை | தாக்கீது | - | கட்டளை |
| பிஸ்மில்லாஹி | - | கடவுள் திருப்பெயரால் | தலாலி | - | தரகு |
| | | | நகாரா | - | பேரிகை |
| உருசு | - | திருவிழா | மக்கர் | - | இடக்கு |
| கலிமா | - | நம்பக மந்திரம் | மால் | - | அரண்மனை |

தமிழைப் பிறமொழிகள்போற் கருதிக்கொண்டு, கடன் சொல் எல்லாம் வளர்ச்சியெனக் கருதுவது கண்மூடித்தனமாகும். விவசாயம் என்னும் வடசொல் உழவு, பயிர்த்தொழில், பாண்டியம், வெள்ளாமை, சாகுபடி முதலிய தென்சொற்களை வழக்கு வீழ்த்தி வருவதையும், ஜன்னல் என்னும் போர்த்துக்கீசியச் சொல் பலகணி, சாளரம், காலதர் என்னும் தென் சொற்களை வழக்கு வீழ்த்தியிருப்பதையும், கண்டு உண்மை தெளிக.

– "தென்மொழி" 1965

## 7

# தெ.பொ.மீ.யின் திரிபாராய்ச்சி

## 'தமிழிலக்கணத்தில் அயன்மொழி யமைப்புகள்' (Foreign Models in Tamil Grammar)

இறைவனருளால் இயன்ற அரைநூற்றாண்டாராய்ச்சியால், தமிழ் வேர்ச்சொற்பொருள் பெரும்பாலும் காணப்பெற்று, தமிழ் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமான உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழி யென்னும் உண்மை வெள்ளிடைமலையாய் விளங்கியபின், அதை உயிர்முதல் வேர்ச்சொற்கள், உயிர்மெய்ம்முதல் வேர்ச்சொற்கள் என்னும் இரு வேறு கட்டுரைத் தொடர்களால் ஒருவாறு காட்டி, இறுதியில், தமிழின் தலைமையை நாட்டும் தனிச்சொற்கள் என்றும் தொகுதிச் சொற்கள் என்றும் இருவகைக் கட்டுரைத் தொடர்களால் நாட்டி வருங்கால், தமிழைக் காட்டிக் கொடுக்கும் வையாபுரிகளின் வேலை மீண்டும் வலுத்து அரசையும் பல்கலைக்கழகங்களையும் மயக்கி, தமிழ் முன்னேற்றம் சாணேறியபின் முழஞ்சறுக்கியிருப்பதனால், வீடு ஒரு புறத்தில் தீப்பற்றி வேகும்போது அதை யணைக்கும் வரை வேறொரு புறத்தில் புதிதாய் வேய்தலை நிறுத்தி வைத்தல் போன்று, என் மொழியாராய்ச்சிக் கட்டுரைத் தொடர் வெளி யீட்டைக் குறுங்காலிகமாக நிறுத்திவிட்டு, பர். (Dr.) தெ.பொ.மீ. யின் 'தமிழிலக்கணத்தில் அயன்மொழி யமைப்புகள்' என்னும் தீய நூல் தீந்தமிழ்க்கு மேலுந் தீங்கு விளைத்தலைத் தடுத்தற்பொருட்டு, அதைச் சிறுசிறு பகுதியாகப் பகுத்துச் சீரிய வரலாற்று மொழிநூன் முறையிற் செகுத்து, தவிடுபொடியாய்த் தகர்த்தெறிதலைக் குறிக்கோளாகக் கொண்டது இத் தொடர் கட்டுரை யென்று தெரிந்துகொள்க.

நன்னாட்டின் இலக்கணங் கூறுமிடத்து,

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு" (குறள், 735)

என்றார் தென்னவர் தலைவர் திருவள்ளுவர். அவர் குறித்த முக்கேடுகளும் முற்றி முதிர்ந்தது முத்தமிழ் நாடு.

### பல்குழு

முதற்கண் பிறநாடுகளிற் போன்றே பிறப்பொடு தொடர்பில்லாது இயங்கி வந்த அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நால்வகைத்

தலைமைத் தொழில் வகுப்புகளும், வேளாளரின் பதினெண் பக்கத் தொழில் வகுப்புகளும், பிற்காலத்தில் ஆரியச் சூழ்ச்சியால் பிறப்பொடு தொடர்பு படுத்தப்பட்டு, நூற்றுக்கணக்கான அகமணக் குலங்களாகப் பல்கிக் காற்றிற் பறக்கும் பூளைப் பஞ்சுபோற் பறக்கடிக்கப்பட்டுச் சிறிதும் ஒற்றுமையின்றிச் சின்னபின்னமாகச் சிதையுண்டு போயின. அதோடு கல்வியுரிமையிழந்து, முதற்காலத்தில் நூற்றிற்கிருபத்தைவர் பாவலராயிருந்த தமிழ் இனம் நூற்றிற்குத் தொண்ணூற்றுவர் தற்குறிகளான தொகுதியாகவும் மாறிற்று.

பிறவிக்குலப் பிரிவினைக்குமேல் ஆரிய மத வேறுபாட்டாலும் தமிழர் ஒற்றுமை குலைந்தது. இன்று அரசியற் கட்சிகளால் ஏற்பட்டுள்ள ஒற்றுமைக்கேடு கொஞ்சநஞ்ச மன்று.

இந் நிலையில், தமிழைக் காத்தற்கும் வளர்த்தற்குமென்று தோன்றிய கழகங்களும் ஒன்றுபட்டவையல்ல. மதுரைத் தமிழ்ச்சங்கம், கரந்தைத் தமிழ்ச்சங்கம், திருநெல்வேலித் தென்னிந்தியத் தமிழ்ச்சங்கம், தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழகப் புலவர் குழு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பெங்களூர்த் தமிழ்ச்சங்கம் முதலிய பல்வேறு கழகங்களும் மன்றங்களும் குழுக்களும், பழைய பாண்டியன் தமிழ்க் கழகம்போல் ஒரே அமைப்பக மாக ஒன்றினாலன்றித் தமிழுக்குப் பெருநன்மை செய்தல் இயலாது.

## உட்பகை

பழங்காலப் பேதை மூவேந்தரும், ஆரியப் பூசாரியரின் வெண் ணிறத்தால் அவரை நிலத்தேவ ரென்றும், எடுப்பொலியால் அவரது இலக்கிய மொழியைத் தேவமொழியென்றும், முற்றும் நம்பிவிட்டதனால், வடமொழியை வழிபாட்டு மொழியாக உயர்த்தவும் தமிழைத் தாழ்த்தவும் நேர்ந்துவிட்டது. அக் கால வேந்தர் கண்கண்ட தெய்வமாதலாலும், “அரசன் எப்படி, குடிகள் அப்படி” என்பதனாலும், புலவர் பலரும் அவரைப் பின்பற்றிவிட்டனர். இங்ஙனம் அரசரும் குடிகளும் ஆரிய வழிப்பட்டதற்கு, ஆரியப் பூசாரியர் சிவனியம் மாலியம் என்னும் இரு தமிழ் மதங்களையும் தழுவி அவற்றைத் தமவென்று ஏமாற்றியதே அடிப்படைக் கரணியம்.

ஆரியப் பூசாரியரின் வழியினர் பல அரசியற் பதவிகள் ஏற்றதையும், பாட்டும் கூத்தும் பயின்றதையும், பல தொழிலாளரையும் பிறப்பொடு தொடர்புபடுத்தியதையும், கல்வியைத் தமக்கே உரிமையாக்க முயன்ற தையும், தமிழரைத் தாழ்த்தித் தம்மை உயர்த்தி வந்ததையும், நுண்மாண் நுழைமதித் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் நோக்கி, ஆரியச் சூழ்ச்சி யென்று கண்ட பின்னரே, தமிழர்க்கு விழிப்புணர்ச்சியூட்டத் திருக்குறளை இயற்றினார்.

அக்காலத்தில் உலக வரலாற்றறிவும் மொழிநூலாராய்ச்சியும் இன்மையால், திருவள்ளுவர் மொழித்துறையில் ஆரியத்தை எதிர்க்க வில்லை. ஆயின், அவர் நூலால் தமிழாரிய வேறுபாட்டுணர்ச்சி

தோன்றிவிட்டதனாலேயே, 2ஆம் நூற்றாண்டில் வையாபுரிப் பிள்ளை போன்ற கொண்டான் அல்லது கோடன் என்னும் குயவன், "ஆரியம் நன்று, தமிழ்தீது" எனவுரைத்து, பரிதிமாற் கலைஞன் போன்ற நக்கீரரால் சாவிக்கவும் பின்னர் உயிர்ப்பிக்கவும் பட்டான்.

11ஆம் நூற்றாண்டில் புத்தமித்திரன் மதவெறியாலும் ஆரியத்திற் கடிமையாலும்,18ஆம் நூற்றண்டில் சுவாமிநாத தேசிகர் ஆரியத்திற் கடிமையாலும் தமிழைக் காட்டிக் கொடுக்க நேர்ந்தது.

இவ் விருபதாம் நூற்றாண்டில், உலக வரலாற்றறிவும் ஒப்பியல் மொழி நூலாராய்ச்சியும் ஆங்கிலக் கல்வியும் பேச்சுரிமை, யெழுத் துரிமையும் மிகுந்திருப்பதால், தமிழைக் காட்டிக்கொடுக்கக் காரணமே யில்லை. ஆயினும், ஆங்கிலத்திற் பட்டக் கல்வியும் சட்டக் கல்வியும் பெற்றும், வேறெம் மொழியிலு மில்லாத பொருளிலக்கணங் கொண்ட தமி ழிலக்கியங் கற்றும், வையாபுரிப் பிள்ளையும் பர். தெ. பொ. மீ.யும் தமிழை வடமொழி வழியதாகக் காட்டியதற்கு,

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்" (குறள். 373)

என்பதே காரணமாதல் கூடும்.

பார்த்தமட்டில் தோன்றா அல்லது தெளிவாய்த் தோன்றா என்று பொருள்படும் "விழிப்பத் தோன்றா" என்னும் எளிய தொல்காப்பியத் தொடருக்கு, தோன்றவே தோன்றா (beyond ascertainment) என்று வையாபுரிப் பிள்ளை கூறியதும்,

"மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன" (மொழி. 49)

என்னும் போலிபற்றிய தொல்காப்பிய நூற்பாவை ஒருமை, பன்மை எண் பற்றியதென்று பர். தெ.பொ.மீ. கூறியதும், மேற்குறித்த குறளாலேயே விளங்கும்.

ஏறத்தாழ மூவாயிரமென்று, ஒருவகையிற் கணிக்கப்படும் உலக மொழிகளுக்குள், தமிழுக்குப் போன்று உட்பகை வேறெதற்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

## கொல்குறும்பு

தொன்றுதொட்டுத் தமிழரிடை வதிந்து, தமிழரிடமிருந்தே ஊணுடை யுறையுள் பெற்று, தமிழையே தாய்மொழியாகவும் வாழ் மொழியாகவுங் கொண்டு, தமிழராலேயே முன்னேறி, தமிழர் துணை யாலேயே வாழ்ந்து வரும் தமிழ்நாட்டுப் பிராமணர், செய்ந்நன்றி கொன்று வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தாற் போன்று தமிழரை யெதிர்த்துப் பிறப்பிலிழிந்தவரென்று தாழ்த்தி,

அறிவாராய்ச்சி மிக்க இவ் விருபதாம் நூற்றாண்டிலும் தமிழை முன்போல் வழிபாட்டு மொழியாகாதவாறு தடுத்து, அதன் தூய்மையை இயன்றவரை கெடுத்து, தமிழ்க் கலையறிவியல் மூல நூல்களையும் வடமொழி மொழிபெயர்ப்பு நூல்களின் வழியினமாகக் காட்டிவருகின்றனர்.

இதற்குமேல், வடநாட்டு இந்தியாரும் இன்னொரு கொல்குறும்பாகத் தோன்றியுள்ளனர். வடமொழியும் இந்தியும் ஒன்றுக்கொன்று துணை செய்கின்றன. இவ் விரண்டையும் ஏற்கும் பேராயத் தமிழர் உட்பகையாக மாறியுள்ளனர்.

**பர். தெ.பொ.மீ.**

இவர் வையாபுரிப் பிள்ளையை அடியொற்றிச் செல்பவர்; மாந்தன் தோன்றியகத்தையும் தமிழன் பிறந்தகத்தையும் ஆரியம் தோன்றிய வகையையும் ஆராய்ந்தறியாதவர்; தமிழின் குமரிநாட்டுத் தோற்றத்தை ஒப்புக்கொள்ளாதவர். தமிழரின் முன்னோர் நண்ணிலக் கடற்கரை நாடுகளி னின்று வந்தவ ரென்று வாயினாற் சொல்லாவிடினும் உள்ளத்தில் ஒப்புக் கொள்பவர்; தமிழ் வேர்ச்சொற்களை அறியாதவர்; அதனால் ஆரியத்தை முதன்மையாகவும் தமிழை வழிநிலையாகவும் வைத்து மொழியிலக்கிய வரலாறுகள் எழுதி வருபவர் (History of the Tamil Language, A History of Tamil Literature). இவர் 'தமிழ்க் கலைக் களஞ்சியத்தில்' சில கட்டுரைகளும் வரைந்துள்ளார். அடிப்படை தவறானபடியால் முடிபுகளும் பெரும்பாலும் தவறாகவே யிருக்கும். இவர் இறுதியாக எழுதி 1974-ல் வெளியிட்ட ஆங்கில நூல் , தமிழிலக்கணத்தில் அயன்மொழியமைப்புகள் என்று பொருள்படும். 'Foreign Models in Tamil Grammar' என்னும் தலைப்புக்கொண்டது. "எகர ஒகரத் தியற்கையு மற்றே" (நூன்மரபு, 16) என்னும் தொல்காப்பிய நூற்பா இவர் முடிபிற்குப் பெருந் துணை செய்வதாகத் தோன்றுகின்றது.

தொல்காப்பியம் இயற்றமிழிலக்கணம் முழுவதையும் ஓரளவு விரிவாகக் கூறும் ஒரே பண்டை நூலாயினும், இடையிடைப் பல படுகுழி களையும் கவர்வழிகளையும் கொண்டிருப்பதால், தமிழ் வேர்ச் சொல் லாராய்ச்சியும் தமிழன் பிறந்தக ஆராய்ச்சியும் இல்லாதார் எத்துணைத் தென்மொழியும் வடமொழியும் கற்றிருப்பினும், தொல்காப்பியத்தை மொழி வரலாற்றிற்குப் பயன்படுத்த இயலாது.

இந் நூலை இவரைக்கொண்டு எழுதுவித்தது, கேரளப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த V.I.சுப்பிரமணியம், கன்னடப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த R.C. இரேமத்து (Hiremath), திருப்பதிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த K. மகாதேவ சாத்திரி (Sastri) ஆகிய மூவர் குழு. இம் மூவருள் முதல்வர் தமிழைத் தலைகீழாகப் படித்தவர்; ஏனையிருவர் தமிழறியாத பெருமாளர்.

இந் நூல், புத்தமித்திரன் இயற்றிய **வீரசோழியம்**, சுப்பிரமணிய தீட்சிதர் இயற்றிய **பிரயோக விவேகம்**, சுவாமிநாத தேசிகர் இயற்றிய **இலக்கணக் கொத்து** ஆகிய மூன்று தள்ளுபடி நூல்களையும் விழுமிய அளவை நூலாகக் கொண்டு, உண்மைக்கு மாறானவும் தமிழுக்குக் கேடானவுமான முடிபுகளைக் கூறுவது.

தமிழிலக்கணம் வடமொழி வழியதென்று திரித்துக் கூறுவதால், நல்லிசைப் புலவராலும் அடிப்பட்ட சான்றோராலும் உண்மைத் தமிழ ராலும் உயரிய இலக்கண நூலாராலும் உதவாக் கடையென்று ஒதுக்கப்பட்ட கழிசடை நூல்களையே, இந் நூலாசிரியர் கருவி நூல்களாகத் தேடி யெடுத்துக் கொண்டதனால், இவரது மனப்பான்மை எவருக்குந் தெற்றென விளங்கும்.

இவரது இத் திருப்பணிக்கு 40,000 (நாற்பதினாயிரம்) உருபா உதவியது தி.மு.க. அரசே. இங்ஙனம் தமிழனே தமிழனிடம் பெற்ற தமிழ்ப் பணத்தைக் கொண்டு தமிழ்நிலத்திலேயே தமிழுக்குக் கேடான ஒரு போலிப் புன்னூலை யுருவாக்கித் தமிழ்ப் புலவர் முன்பே உலகிடைப் பரப்பியிருப்பதை, உள்ளுந்தொறும் உள்ளஞ் சுடும்.

சமற்கிருத அடிப்படையில் தமிழைக் கற்றுத் தமிழைப் பிறழ வுணர்ந்த இவரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஒரு தமிழதிகாரியாக அமர்த்திற்று. அதனால் தமிழுக்கு விளைந்த தீங்கு கொஞ்சநஞ்ச மன்று.

முதலாவது, அப் பல்கலைக்கழகத்தில் என்னால் தொகுக்கப்பட விருந்த செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலிப் பணி தடுப்புண்டது. அதனால் வெளியேற்றப்பட்டேன். என்னொடு தமிழும் வெளியேறிற்று. அவ் வகரமுதலியைப் பர். தெ.பொ.மீ.யும் தொகுத்தாரல்லர். அவரால் தொகுக்கவும் இயலாது.

இரண்டாவது, கால்டுவெலார் காலம்வரை கையாளப்பட்டு வந்த கொடிவழியியல் மொழிநூல் விலக்கப்பட்டு, அறிவியலல்லாத அமெரிக்க வண்ணனை மொழிநூல் புகுத்தப்பட்டது. கொடிவழியியல் மொழிநூலால் ஆரிய ஏமாற்றுக் குட்டு வெளியாகிவிடும். ஆதலாற் பிராமணர் அதை விரும்புவதில்லை. அதனால், அவர்வழிச் செல்லும் தெ.பொ.மீ.யும் அதைப் புறக்கணித்துவிட்டார்.

மூன்றாவது கிளைமொழியியல் என்னும் பெயரால், செந்தமிழ் மரபை மீறிக் கொடுந்தமிழினுங் கேடான கடுங் கொச்சைச் சொற்களும் உயர்ந்தோர் வழக்கிற் கொப்பாகத் தொகுக்கப்படுகின்றன. இது, கீழோர் பழக்கவழக்கங்களையும் மேலோர் மேற்கொள்ள வேண்டும் என்பது போலாகின்றது.

நான்காவது, உலக வரலாறு (World History), ஒப்பியன் மொழிநூல் (Comparative Philology), குமுகாயப் பண்பாட்டு மாந்தனூல் (Social and

Cultural Anthropology) என்னும் உலகந்தழீஇய மூவறிவியல்களின் வளர்ச்சி குன்றுகின்றது.

ஐந்தாவது, ஆரியம் என்னும் இலக்கியப் பிராமணியம் வலுத்து வருகின்றது. இதன் விளைவாக, அண்மையில், பதுமா சுப்பிரமணியம் என்னும் பிராமண நடிகையார், தமிழருக்கு நடக்கலையே தெரியாதென்றும், காசுமீரப் பரத முனிவரின் பரத சாத்திரத்தைக் கற்றே அக் கலையை அறிந்தனரென்றும், ஓர் இடுநூல் இட்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திற் பண்டாரகர்ப் பட்டம் (Doctroate) பெற்றதாகச் சொல்லப்படுகின்றது. இது, மீன்குஞ்சே தாய்மீனை நீந்தப் பயிற்றியது என்னுங் கூற்றை யொத்தது. இப் பட்டவளிப்பு, அண்ணாமலைப் பல்கலைக்கழக நடப்பேராசிரியரை மட்டு மன்றித் தமிழ்ப் பேராசிரியரையும் ஆட்சிக் குழுவையும் தலைமை யதிகாரி களையும் தாக்குகின்றது. இதனால், முத்தமிழ் என்னும் பெயரே முழுப் பொருளையும் இழக்கின்றது. அரசவயவர் அண்ணாமலைச் செட்டி யார் அவர்களின் தமிழிசைப் போராட்டம் முற்றும் பயனற்றதாகின்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ் வளர்ச்சிக்குத் தோன்றிய தென்ப தும் தவறாகின்றது. உலகத் தமிழ்ப் புலவர் அனைவரும் அடிமடையரும் அஃறிணையும் ஆகின்றனர்.

தமிழ் குமரிநாட்டில் தோன்றிய உலக முதற்றாய் உயர்தனிச் செம் மொழி யென்றும், கி.மு. 10,000 ஆண்டுகட்கு முற்பட்ட தலைக் கழகத்தி லேயே முத்தமிழ் தோன்றிவிட்ட தென்றும், தமிழின் 4ஆம் மடித்திரிபான மேலை யாரியத்தின் கிரேக்கப் பிரிவை யொத்த ஒரு மொழியைப் பேசிக்கொண்டு இலக்கியமும் எழுத்துமின்றி முல்லை நாகரிக நிலையில் கி.மு. 1500 போல் இந்தியாவிற்குட் புகுந்து தம் மொழி வழக் கிழந்து, வேதமொழியையும் அதற்குப் பிற்பட்ட சமற்கிருத மொழியையும் இலக்கிய மொழியாகவே கொண்டு, இந்திய மொழிகளையே பேசிவரும் ஆரிய வழியினர் எல்லா வகையிலும் தமிழராலேயே நாகரிகமடைந்து சூழ்ச்சி யாகத் தம்மை யுயர்த்திக் கொண்டு, தமிழ் மூலநூல்களை யெல்லாம் வடமொழியில் மொழிபெயர்த்துக் கொண்டபின் அழித்துவிட்டனர் என்பதை, அறிந்து அம்மையார்க்குக் கொடுத்த பட்டத்தை அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தை மீட்டுக் கொள்ளும் காலம் அண்மையி லிருக்கின்றது என்பதை, இன்று குதித்துக் கூத்தாடிக் குலவிக் கொண்டாடிக் கொட்டமடிக்கும் தமிழ்ப் பகைவர் அறிவாராக.

குறிப்பு: தனிப்பட்ட முறையில் பர்.தெ.பொ.மீ. யொடு எனக்கு எட்டுணையும் பகைமையில்லை. அவரை என் உண்மை நண்பர் எனவும் பின்வாங்கேன். ஆயின், அவருக்கும் எனக்கும் பொதுவான தாயைப் பழிப்பதும் முன்னோரைத் தகவிலர் என்பதும் போன்ற கொள்கையையும் கூற்றையுமே வன்மையாய் எதிர்க்கின்றேன்.

மூவாயிரவாண்டு மறையுண்டு கிடந்த முத்தமிழ் மாண்பு மீண்டும் உலகுக்கு வெளிப்படவிருக்கின்றது. இது இறைவன் ஏற்பாடு. இதை எவருந் தடுக்க வியலாது. ஆதலால், வையாபுரிப் பிள்ளைபோல் வசைபெற வாழாது, இனிமேலாயினும் திருந்தி உண்மை விளம்பியென்று பெய ரெடுக்க.

மேலையறிஞர் இற்றை அறிவியல்களுக்கன்றிப் பண்டு தோன்றிய மொழிகட்கு அதிகாரிகளாகார் என்பதைத் தெற்றென வுணர்க.

பார்.தெ.பொ.மீ.யின் 'தமிழிலக்கணத்தில் அயன்மொழி யமைப்புகள்' (Foreign Models in Tamil Grammar) என்னும் தமிழிலக்கண ஆராய்ச்சி நூல், 9 அதிகாரங்களும் 4 பின்னுரைகளுமாக 13 கட்டுரைகளைக் கொண்டது. அவற்றுள் முதலது, 'தமிழிலக்கண வரலாறு' (A History of Tamil Grammar) என்னுந் தலைப்பையுடையது.

## தமிழிலக்கண வரலாறு

இதில், ஆசிரியர் தம் ஆராய்ச்சி நூல் முழுமைக்கும் முன்னுரையாகத் தொல்காப்பியம் முதல் இவ் விருபதாம் நூற்றாண்டில் மாணவர்க்கு எழுதப்பட்ட உரைநடை யிலக்கணச் சுவடிகள் வரை, இற்றைத் தமி ழிலக்கண நூல்களையெல்லாம் பெரும்பாலுங் காலமுறைப்படி எடுத்துக் கூறி, அவற்றின் ஆசிரியர், உரையாசிரியர், புரவலர், மரபுச்சார்பு, இலக்கணப் பிரிவு, மொழிநடை முதலிய குறிப்புகளையும் சுருக்கமாகக் குறித்திருக் கின்றார்.

தமிழிலக்கணத்தை ஆரியச் சார்பினதாகக் காட்டுவதே பார். தெ.பொ.மீ.யின் அடிப்படைக் குறிக்கோளாதலால், தொல்காப்பிய மரபு, நன்னூல் மரபு, சமற்கிருத மரபு எனத் தமிழிலக்கண நூல்களை மூவேறு மரபினவாக வகுத்துக் கூறுவதை முதன்மையாகக் கொண்டிருக்கின்றார். இங்ஙனம் வேறுபட வகுத்திருப்பினும், முதலிரண்டும் அடிப்படையில் அல்லது ஒருமருங்கு சமற்கிருதச் சார்பென்றும், இறுதியது முற்றும் சமற் கிருதச் சார்பென்றும், கொள்வதே அவர் கருத்து. இது தொல்காப்பியம் பாணினீய வழியதென்று பின்னர்க் கூறுவதால் தெரியவரும்.

தமிழிலக்கணம் தனிப்பட்டதென்றும் இன்றும் ஒப்புயர்வற்ற தென்றும் அறிதற்கு, அதன் பொருளதிகாரமே போதிய சான்றாம். சமற்கிருதத்திற் பொருளிலக்கண மின்மையால், சொல்லதிகாரமே அதற்குச் சிறந்ததாகக் கொள்ளப்படும். தமிழிலோ, பொருளிலக்கணமே இலக்கண மென்றும், அதை யறிதற்குக் கருவியே எழுத்துஞ் சொல்லுமென்றும் கொள்ளப்படும்.

"அரசன், இனி நாடு நாடாயிற்றாகலின் நூல் வல்லாரைக் கொணர்க வென்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க, எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகார மும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை

எங்குந் தலைப்பட்டிலே மென்று வந்தார். வர, அரசனும் புடை படக் கவன்று, என்னை? எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதி காரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின், இவை பெற்றும் பெற்றிலேம்' எனச் சொல்லா நிற்ப" என்று இறையனா ரகப்பொருளுரை உரைத்தல் காண்க.

இங்ஙனமிருந்தும், இற்றை அகப்பொருள், புறப்பொருள் இலக்கண விலக்கியமெல்லாங் கற்றும், தமிழின் பெருமையையும் அதன் இலக்கண வுயர்வையும் இற்றைத் தமிழ்ப் பேராசிரியர் பலரும் உணராதிருப்பதற்கு, அவர் முன்னோர் மூவாயிர வாட்டை யாரிய வடிமைத்தனத்தில் உழன்ற தனாற் பகுத்தறி விழந்தமையே காரணமா யிருத்தல் வேண்டும்.

இனி, ஒரு தனிப்பட்டவர் அல்லது சாரார் உயர்நிலை யடைந் திருப்பின், அந் நிலை தொன்றுதொட்டதென்றே துணிய வியலாது. களவு செய்தும் பிறர்பொருள் பறித்தும் அவர் அந் நிலை யடைந்திருக்கலாம். அதை வரலாறு கொண்டு அறிதல் வேண்டும்.

ஆங்கிலர் 1765-ல் நீராவிப் பொறி புனையுமுன் இலக்கியத்தில் தமிழரினும் தாழ்ந்தன்றி உயர்ந்திருந்ததில்லை. அங்ஙனமே, இந்திய ஆரியரும் தமிழரொடு தொடர்புகொள்ளு முன், சிறுதெய்வ வழுத்துத் திரட்டாகிய வேதந்தவிரத் தமிழர்போல் இலக்கிய விலக்கணம் உடையரா யிருந்ததில்லை. இன்றோ, "குப்பை யுயர்ந்தது, கோபுரந் தாழ்ந்தது" என்னும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும், வேத ஆரியரின் முன்னோர் மொழியும் ஒருவகைத் தமிழ்த் திரிபே என்பது பின்னர் விளக்கப்படும்.

பர். தெ.பொ.மீ. தமிழாரிய மொழிகளின் தோற்றத்தையும் நெட் டிடைப்பட்ட முன்மை பின்மையையும் தென்மை வடமையையும் ஆராய்ந்தறியாமையால், அவ் விருமொழிகளும் இற்றை நிலையிலேயே தொன்றும் இருந்ததாகக் கொண்டு, தொல்காப்பியமே தமிழிலக்கண முதனூலென்றும், அது பாணினீயத்திற்குப் பிற்பட்டதென்றும் கிறித்தவ ஊழித் தொடக்கக் காலத்தின தென்றும், அதிற் கூறப்பட்டுள்ள ஆற்றுப்படை யிலக்கணம் பத்துப்பாட்டு ஆற்றுப்படைகளையே மூல இலக்கியமாகக் கொண்டதனால் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிற்காலத் தொல் காப்பியத்தைச் சேர்ந்ததென்றும், பன்னிருபடல ஆசிரியர் பன்னிரு வரின் ஆசிரியர் ஒருவரே அகத்தியரென்றும், அவர் உடம்படுமெய்பற்றி முற்காலத் தொல்காப்பியரொடு கருத்து வேறுபடுகிறாரென்றும், தமக்குத் தோன்றியவாறெல்லாம் பலபடக் கூறியுள்ளார்.

தமிழ் உலக முதல் உயர்தனிச் செம்மொழியாதலால், அதன் முதற்கால இலக்கணங்களெல்லாம் வரலாற்றிற் கெட்டாத தொன்முது பழைமையன; எண்ணிறந்தன; பெயருந் தெரியாவாறு இறந்துபட்டன.

தொல்காப்பியச் சிறப்புப் பாயிர ஆசிரியரான பனம்பாரனார்,

"செந்தமிழ் வழக்கொடு சிவணிய நிலத்து
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்"

என்று, தொல்காப்பிய முதனூல்கள் பலவெனப் பொதுப்படக் குறித்தார்.

தொல்காப்பிய முதல் நூற்பாவே, "எழுத்தெனப் படுப", "முப்பஃ தென்ப" என்று முன்னூலையும் முன்னூலாசிரியரின் பன்மையையும் குறிக் கின்றது. ஆதலால், தொல்காப்பியம் சார்பிற் சார்பான பண்டைப் பன்னூல் தொகுப்பேயன்றிப் புதுப்படத் தோன்றிய தனிநூலன்று.

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பே ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்." (தொல்.செய்.78)

"ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே" (செய்.104)

"மருட்பா பரிபாட் டெனவிரு வகையும்
மருவிய கலவைப் பாவென மருவும்"

"வண்ணந் தானே நாலைந் தென்ப." (செய்.204)

"வனப்பியல் தானே வகுக்குங் காலை
அம்மை அழகு தொன்மை தோலே
விருந்தே இயைபு புலனே இழைபென
எண்வகை யாமென் றியம்பினர் புலவர்."

"பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டி னியல பண்ணத்தி யியல்பே." (செய்.178)

இங்ஙனம் பல்வேறு வகைப்பட்ட யாப்பியற் கூறுகட்கும் எடுத்துக் காட்டிலக்கியம், தொல்காப்பியத்திற்கு முந்தியதே யன்றிப் பிந்தியதன் றென்பது வெளிப்படை.

இயைபு என்னும் வனப்பிற்குச் சிலப்பதிகாரமும் மணிமேகலையுமே மூல இலக்கியம் என்பதற்கும் இடமில்லை. அவ் விரு பாவியங்களும் னகர மெய் யொன்றையே பாட்டிறுதியாகக் கொண்டுள்ளன.

"ஞகார முதலா னகார வீற்றுப்
புள்ளி யிறுதி இயையெனப் படுமே" (தொல்.செய்.238)

என்பது இயைபிலக்கண மாதலால், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஐம்மெல்லின வீற்றிலும் இற்ற பாட்டுகளைக் கொண்ட ஐவகை இயைபு வனப்பிற்கும்

மூலவிலக்கியம், தொல்காப்பியத்திற்கு முந்தியதாகவே இருத்தல் வேண்டும். அதுபோன்றே,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்" (தொல். புறத். 38)

என்னும் ஆற்றுப்படை யிலக்கணத்திற்கும் மூல இலக்கியம், தொல் காப்பியத்திற்கு முந்தியதே யென்பது தானே பெறப்படும்.

பாணினிக்கு முந்திய கி.மு.7ஆம் நூற்றாண்டுத் தொல்காப்பியரும், கி.பி.7ஆம் நூற்றாண்டுபோ லியற்றப்பட்ட பன்னிருபடல ஆசிரியருள் ஒருவரான தொல்காப்பியரும், ஆக இருவர் தொல்காப்பியர் என்று கொள்ள இடமுண்டு. ஆயின், இரு தொல்காப்பியம் இருந்ததில்லை. முற்காலத் தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள் என்னும் முக்கூறும் பற்றிய இயற்றமிழிலக்கணம் முழுமையும் தொகுத்தவர். அந் நூலே தொல் காப்பியம் என அன்றிருந் தின்றுவரை வழங்கி வருகின்றது. பிற்காலத் தொல்காப்பியர், பர். தெ.பொ.மீ. கூறுகின்றவாறே, பன்னிருபடலத்துள் முதலதாகிய வெட்சிப் படலத்தை இயற்றியவர். ஆற்றுப்படையிலக்கணம் பொருளதிகாரத்தில் பாடாண்திணைக் குரியதேயன்றி வெட்சித் திணைக் குரியதன்று. இனி, வெட்சிப்படலம் இயற்றியவரே பாடாண் படலமும் இயற்றி யிருக்கவும் முடியாது; ஒருகால் இயற்றியிருப்பினும் அதைப் புலவர் தொல்காப்பியத்தோடு மயக்கியிருக்கவும் முடியாது. இறையனா ரகப்பொருளொடு நம்பியகப்பொருளை மயக்குவாரில்லை. அதுபோன்றே இதுவும்.

"இலக்கியங் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்" (நன் 141)

"இலக்கிய மின்றி யிலக்கண மின்றே" (பேரகத்)

என்பதனால், இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்கு முன் எத்துணையோ இலக்கிய வனப்புகள் இருந்திருத்தல் வேண்டும்.

இனித் தொல்காப்பியத்தில் சில ஆரியக் கருத்துகளும் குறிப்புகளு மிருப்பதால், தனித்தமிழ் நூல்களெல்லாம் அதற்கு முற்பட்டே யிருந்து இயற்கையாலும் செயற்கையாலும் அழியுண்டிருத்தல் வேண்டும்.

ஆயின் பர். தெ.பொ.மீ. தொல்காப்பியத்தையே தமிழ் முதனூலாக வும், ஆற்றுப்படை யிலக்கணத்தைப் பத்துப்பாட்டிற்குப் பிற்பட்டதாகவும், தொல்காப்பியரை அகத்தியருக்கு முந்தியவராகவும், காட்டியிருப்பதால், அவர் காலத்திற்குமுன் மூவேந்தராட்சியும் புலவர் பாணர் கூத்தர் பொருநர் விறலியர் முதலியோர் வாழ்க்கையும், தமிழிலக்கிய விலக்கணமும் தமிழ நாகரிகமும் இருந்ததில்லையென்றே, ஆராய்ச்சியில்லார் கருத வைத்துள்

ளார். இம் மயக்கை அறவே மறுத்தற்குப் "பாட்டுரை நூலே" என்ற தொல் காப்பிய நூற்பா ஒன்றே போதியதாகும்.

தொல்காப்பியர் போன்றே அகத்தியரும் இருவராவர். முதலகத்தியர் வான்மீகியார் காலத்தவர். அவரே முதன்முதலாகத் தென்னாடு வந்த ஆரியர். அதனால், பனிமலை யெழுச்சியும் குமரிமலை முழுக்கும் அவர் வரவொடு தொடர்புபடுத்திக் கதை கட்டப்பட்டது. அவர் முத்தமிழுங் கற்றுத் தம் பெயரில் ஒரு முத்தமிழிலக்கண நூலியற்றினா ரென்பது, வீரமா முனிவர் செய்தியை நோக்கின் ஐயுறவிற் கிடந்தருவதன்று. அம் முத்தமிழகத்தியம் இறந்துபட்டது.

"என்றுமுள தென்றமிழ் யம்பியிசை கொண்டான்" (ஆரணிய. அகத். 47)

என்று கம்பரும் பாடுதல் காண்க.

இரண்டாவது அகத்தியர், கி.பி. 7ஆம் நூற்றாண்டுப் பன்னிருபடல ஆசிரியன்மாரின் ஆசிரியரா யிருந்திருக்கலாம். அவரியற்றிய இயற்றமி ழிலக்கண நூலாகிய அகத்தியத்தினின்றே, உரையாசிரியன்மார், சில நூற்பாக்களை எடுத்தாண்டுள்ளனர் போலும்!

பிற்காலப் பேராசிரியத் திரட்டு என்பது ஆராய்ச்சிக்குரிய தன்று.

ஈருயிரொலிகள் இடையீடின்றி யொலிக்கும்போது, இடையில் யகர மெய் அல்லது வகரமெய் தோன்றுவது எல்லா மொழிகட்கும் பொது வியல்பாம். அங்ஙனம் தோன்றும் மெய் உடம்படுமெய் எனப்படும். அதை எல்லா மொழிகளும் எழுத்திற் குறிப்பதில்லை.

| | | |
|---|---|---|
| எ-கா: மணி + ஓசை = மணியோசை | } | உடம்படுமெய் குறிக்கப்படும் |
| பல + ஆறு = பலவாறு | | தமிழ் |
| my + object = my object, | } | உடம்படுமெய் குறிக்கப்படா |
| you + are = you are | | ஆங்கிலம் |

தமிழிலும் உடம்படுமெய் முதற்கால எழுத்திற் குறிக்கப்படாதிருந் திருக்கலாம். ஒலியறிவும் மெய்ப்பொருளறிவும் மிக்க பிற்காலத்தில், அது குறிக்கப்பட்டது.

"எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்" (புணரியல் 38)

என்பது, உடம்படுமெய்பற்றிய தொல்காப்பிய நூற்பா.

இதற்கு நச்சினார்க்கினியர் உரை வருமாறு:

"நிலைமொழியும் வருமொழியுமாய்ப் புணரும் எவ்வகை மொழிக் கும், உயிர் முதன்மொழி வருமிடத்து, உடம்படுமெய்யினது வடிவை உயிரீறு கோடலை நீக்கார் கொள்வார் ஆசிரியர்.

"அவை யகரமும் வகரமும் என்பது முதனூல்பற்றிக் கோடும்;

'உடம்படு மெய்யே யகார வகாரம்
உயிர்முதன் மொழிவரூஉங் காலை யான'

எனவும்,

'இறுதியு முதலும் உயிர்நிலை வரினே
உறுமென மொழிப உடம்படு மெய்யே'

எனவும் கூறினாராகலின்."

முதலகத்தியர் பாரதக் காலத்திற்கு முந்திய இராமாயண காலத்தவ ராதலால், கி.மு. 12ஆம் நூற்றாண்டினரா யிருந்திருக்கலாம்; இரண்டாம் அகத்தியர் கி.பி. 7ஆம் நூற்றாண்டினரா யிருந்திருக்கலாம்; என்பது முன்னர்க் கூறப்பட்டது. ஆகவே, கி.மு. 7ஆம் நூற்றாண்டினரான முதல் தொல்காப்பியர் அவ் விருவர்க்கும் இடைப்பட்டவராவார்.

தமிழின் தொன்மை தென்மை முன்மை முதலிய தன்மைகள் அதன் தாய்மையையும் தலைமையையும் காட்டுவதால் அவற்றை மறைத்தற் பொருட்டு, பர். தெ.பொ.மீ. முதலகத்தியரைத் தமிழொடு தொடர்புபடுத்தாது விட்டுவிட்டு, தொல்காப்பிய உடம்படுமெய்ந் நூற்பாவுரையில் நச்சினார்க் கினியர் முதனூல் நூற்பாக்களாக எடுத்துக் காட்டிய மேற்கோள் இரண்டை யும், ஓர் அகத்தியருடையனவென்று சான்றில்லாது கொண்டு, தொல் காப்பியர் காலத்தில் வழக்கூன்றாத உடம்படுமெய்யைத் தம்காலத்தில் வழக்கூன்றியதாகக் கூறும் அகத்தியர் தொல்காப்பியர் காலத்திற்குப் பிற்பட்டவர் என்று துணிந்து கூறியுள்ளார்.

குமரி நாட்டு முதற்காலத் தமிழில் உடம்படுமெய் எழுத்து மொழியிற் குறிக்கப்படாதிருந்திருக்கலாமேனும், தலைக்கழகமும் இடைக்கழகமுந் தாண்டிவந்த தொல்காப்பியர் காலத்தில் அது வழக்கூன்றாதிருந்த தென்பது பொருந்தாது.

மேலும், "உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்" என்னும் தொல்காப்பியர் கூற்று, அக்காலத்திற் புதிதாகத் தமிழ் கற்ற ஆரியப் புலவர் சிலரின் தவற்றைக் கண்டித்ததாகவும் இருக்கலாம்.

உடம்படுமெய் கொளல்வரையார் என்று கூறாது, "உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்" என்று கூறியது, உடம்படுமெய் எழுத்து மொழியிற் குறிக்கப்படாவிடினும், ஒலிப்புமொழியில் இயல்பாக இருக்கவேயிருக்கின்றது என்னும் உண்மையை நுண்ணிதின் உணர்த்துதல் காண்க.

நச்சினார்க்கினியர், உடம்படுமெய் நூற்பாவுரையில் தாம் எடுத்துக் காட்டிய மேற்கோட்கு ஆசிரியர் பெயர் அல்லது நூற்பெயர் குறியாமை மட்டுமன்றி, இருவேறு முதனூலினின்று எடுத்துக்காட்டி யிருப்பது பர். தெ. பொ. மீ. கூற்றைப் பொருளில தாக்கும்.

"முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப் புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்" என்னும் சிறப்புப் பாயிரமும், "என்ப", "என்மனார் புலவர்," "நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே," "எனமொழிப," "உணரு மோரே" "வரையார்." "என்றிசி னோரே" என்றெல்லாம் ஆசிரியர் நெடுகலுங் கூறிச் செல்லும் பெருவழக்கும், தொல்காப்பிய முதனூல்களின் பன்மையை மட்டுமன்றி, அவற்றுட் பலவற்றின் பெயர் அறியப்படாது போனமையையும் குறிப்பாய்த் தெரிவிக்கும்.

இனி,

"வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும்
நினையுங் காலை அவ்வகை வரையார்" (தொல். உயிர். 62)

"கொடிமுன் வரினே ஐஅவண் நிற்பக்
கூடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி" (தொல்.உயிர். 83)

என்னும் நூற்பாக்களை நோக்கின், "வரையார்" என்பது முற்கால நிலைமை யுணர்த்தும் ஒரு சிறப்புக் குறிப்புச் சொல்லன்றென்பதும் தோன்றும். அதனால், நச்சினார்க்கினியர், "நீக்கார் கொள்வர்" என்றே பொருள் கூறி யமைந்தார்.

தொல்காப்பியத்திற்கு முந்திய மூல நூல்களெல்லாம் உடம்படு மெய்யைத் திட்டவட்டமாகக் கூறியிருப்பதால், தொல்காப்பியமும் அத்தகையதேயெனக் கொள்வதே தக்கதாம். கால் மாத்திரை யொலிக்கும் ககரக் குறுக்கத்தையும் மகரக் குறுக்கத்தையும் நுண்ணிதா யுணர்ந்த முன்னைத் தமிழறிஞர், உடம்படுமெய் கண்டறிந்தாரென்பது இம்மியும் வியத்தற்குரியதன்று.

சேனாவரையர், பெருந்தேவனார் முதலிய உரையாசிரியரும், புத்தமித்திரன், சுப்பிரமணிய தீட்சிதர், சுவாமிநாத தேசிகர், வையாபுரிப் பிள்ளை, பர். தெ. பொ. மீ. முதலிய நூலாசிரியரும், கொண்ட சமற்கிருத மயக்கமும் தமிழிகழ்வும் அடுத்த கட்டுரை மறுப்புகளில் தெளிவாக விளக்கப்பெறும்

**உஆம் அதிகாரம்**

**கூற்று: தொல்காப்பியக் காலம் (Age of Tolkappiam)**

### தொல்காப்பியமும் சமற்கிருதமும்

"தொல்காப்பியம், சமற்கிருதச் சொற்கள் திரிக்கப்பட்டுத் தமிழிலக்கி யத்தில் வழங்கி வந்ததை நோக்குகின்றது. (தொல். 880, 884, 885. கழகப் பதிப்பு, 1954), தொல்காப்பியரே சமற்கிருதச் சொற்களை ஆண்டிருப்பதைப் பிரயோக விவேகம் குறிப்பிடுகின்றது. ஏற்கெனவே வேறோரிடத்திற் குறிப்பிட்டுள்ளவாறு கருத்துவேறுபாடுக ளிருந்தன வேனும், ஒலியியலும் இலக்கணமும்பற்றி ஓர் அனைத்திந்தியக் கொள்கையிருந்தது. தொல்

தாப்பியர் மேலையர் கொள்கையையும் சீனர் கொள்கையையும் பின்பற்றாது அவ் வனைத்திந்தியக் கொள்கையையே பின்பற்றினார் என்பதுபற்றிக் கருத்துவேறுபா டிருக்கமுடியாது. சமற்கிருத நெடுங்கணக்கின் அமைப்பு முறை ஏற்கெனவே வேறொரு கட்டுரையில் ஆயப்பட்டுள்ளது. அவ் வெழுத்துகளின் தெள்ளிய ஒலிப்புமுறை இக்கால ஒலிநூலை நினைவுறுத்தி னும், இந்தியாவிற்கே சிறப்பாக வுரியதாகும். அவை யாவும் மொழிகளின் உலகப் பொதுவியல்புகள் தொல்காப்பியர் அவற்றை உணர்ந்துகொண்டார். அதனால், அவர் அனைத்திந்தியக் கொள்கையைப் பின்பற்றுவதில் தமிழின் சிறப்பியல்பைக் கெடுக்கவில்லை.

## வடக்கொடு நெருங்கிய தொடர்பு கொண்டபின்

"இவை யாவும், சமற்கிருத இலக்கண முறைமையொடு நெருங்கிய தொடர்புகொண்ட பின்னரே தொல்காப்பியம் தோன்றிற்றென்பதை மெய்ப்பிக்குஞ் சான்றுகளாகின்றன. மேலையர் 19ஆம் நூற்றாண்டிற் சமற் கிருத இலக்கணத்தைக் கண்டுபிடித்ததே மேற்கில் மொழிநூல் வளர்ச்சிக்கு வழிகாட்டியது போன்று, கிழக்கில் சமற்கிருதத்தோடும் திரவிடமல்லாத மொழிகளோடும் தொடர்புகொண்டதே, தமிழின் ஒலியியலையும் இலக்கண அமைப்பையும் வண்ணிக்கும் முயற்சியை மேற்கொள்ள நேரடியான தூண்டுகோலா யிருந்திருத்தல் வேண்டும். இது இயற்கைதானே கையாளும் இனக்கலப்புப் போன்றது. இங்ஙனமே உலகமெங்கும் நாகரிகங்களும் கலைப்பண்பாடுகளும் தோன்றியுள்ளன. இம் முயற்சியும் முதலியன்மை யுள்ளதே.

## கி.மு. 4ஆம் நூற்றாண்டுக் காத்தியாயனர்

"திரவிடர் இருக்கு வேதக் காலத்தில் ஆரியரொடு தொடர்பு கொண் டிருக்கலாம். ஆனால், சமற்கிருதத்திற்குத் தமிழ் நாகரிகக் கலைப் பண்பாட் டோடு ஏற்பட்ட தொடர்பு திட்டவட்டமான தொன்றாகையால் பிந்தியே நேர்ந்திருத்தல் வேண்டும். சடங்குமுறைமைக்கும் பிற பயன்பாட் டிற்கும் வேதங்கள் தோரா. கி.மு. 1000 போல் தொகுக்கப்பட்டதாகச் சொல்லப்படு கின்றது. வேதமந்திரங்களின் ஒலியியல் இலக்கணக் கூறுகளைப் போற்றிக் காத்தற்குத் தோதாகப் பல்வேறு பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் விளைவாக, இலக்கணமும் ஒலியியலும் சொல்லியலும் சொற்றொடரியலும் வளர்ச்சியுற்றன. பாணினியின் இலக்கணமுறை நிறைவு பெறப் பல தலைமுறைக் காலஞ் சென்றிருத்தல் வேண்டும். பாணினி காலம் கி.மு. 6ஆம் நூற்றாண்டு அல்லது சற்று முன்பு என்று குறிக்கப்பட் டுள்ளது. பாணினிக்குத் தமிழரொடு அல்லது அவர் கலைப்பண்பாட்டொடு ஏதேனும் தொடர்பிருந்ததாகப் பாணினி மொழியில் யாதொரு குறிப்பு மில்லை. கி.மு. 4ஆம் நூற்றாண்டினரான **வரருசி** என்னும் **காத்தியாயனர்**, பாணினி நூற்பாக்களின் குறை நிரப்பலாகிய வார்த்திகங்கள் என்னும்

திருத்தவுரையை இயற்றினார். அவர் தமிழரையும் அவர் கலைப் பண்பாட்டையும் நன்றாய் அறிந்திருந்தார். அவர் வார்த்திகங்களுள் ஒன்று சோழ பாண்டியங்களைக் குறிப்பிடுகின்றது. சோழபாண்டியம் என்பது, குருபாஞ்சாலம் என்பது போன்றே அரசரையும் அவர் நாட்டையுங் குறிக்கும். ஆதலால், கி.மு. 4ஆம் நூற்றாண்டில் அல்லது ஒருகால் 5ஆம் நூற்றாண்டில், தொலைவிலுள்ள வடவர்க்கும் தென்றிசைத் தமிழர்க்கும் இடையே கலைப் பண்பாட்டுத் தொடர்புகள் வளர்ச்சியடைந் திருக்கலாம். ஆனால், தொல்காப்பியம் நெருங்கிய தொடர்பை அதினும் பேரளவிற் காட்டுகின்றது. எங்ஙனமிருப்பினும், ஒருவர் தொல்காப்பியத்தைக் கி.மு. 4ஆம் நூற்றாண்டிற்கு முந்தியதாகக் கூற முடியாது." (பக். 17-18).

## மறுப்பு

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே" (தொல். எச். 1)

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" (தொல்.எச். 5)

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்" (தொல். எச். 6)

என்னும் தொல்காப்பிய நூற்பாக்கள், பாண்டியரின் இரண்டாம் தலைநகர் முழுகி இரண்டாம் தமிழ்க் கழகமும் குலைந்து, தூய தமிழ்க் காவலரின்றித் தமிழ் ஆரியர் வயப்பட்டுப்போன காலத்தில், ஆரியம் வேரூன்றிய சேர நாட்டில் வாழ்ந்த தொல்காப்பியர், செந்தமிழ் மரபையும் சொல் வளத்தையும் ஒருங்கே சிதைத்து நாளடைவில் தமிழை ஆரிய வண்ண மாக்கும் பொருட்டு, ஆரியத் தமிழ்ப் பகைவர் தமிழில் வேண்டாது புகுத்திய ஒருசில தொடக்க வடசொற்களை அயற்சொற்களென்ற வகையில் குறித்ததைக் காட்டுமேயன்றி, அச் சொற்கள் தமிழுக்கு இன்றியமையாதன வென்றும், அவற்றால் தமிழ் வளம் பெற்றதென்றும், உணர்த்தா.

பிராமணியம் தமிழரின் தாய்மொழிப் பற்றையும் உணர்ச்சியையும் பெரும்பாலுங் கொன்றுவிட்டதனால், அயன்மொழியாரின் தொடர்பு கொள்ளும்போதெல்லாம் ஒருசில அயற்சொற்களையும் வழக்கிற் புகுத்திக் கொண்டனர். சன்னல் (ஜன்னல்), சாவி என்பன போர்த்துக்கீசியச் சொற்கள். ஆயின், அவை தமிழ்ச்சொற்களை வழக்கு வீழ்த்தித் தூய தமிழ்ச்சொற்கள் போன்றே வழங்கிவருகின்றன. அவற்றுள், முன்னது பலகணி, சாளரம், காலதர் என்னும் மூன்று அழகிய தமிழ்ச்சொற்களையும், பின்னது திறவுகோல், துறப்புக்குச்சு, தாழக்கோல் என்னும் மூன்று தெளிபொருட் சொற்களையும், இலக்கியச் சொல்லும் அருஞ்சொல்லும் ஆக்கியுள்ளன. இதனால், போர்த்துக்கீசியச் சொற்கள் தமிழுக்கு இன்றியமையாதன வென்றும், போர்த்துக்கீசியமே தமிழுக்கு மூலமென்றும், ஒருவரும் சொல்லத் துணியார். இங்ஙனமே வடசொல் நோக்கியும் உணர்க.

போர்த்துக்கீசியச் சொல்லிற்கும் வடசொல்லிற்கும் வேறுபா டென்னை யெனின், முன்னது தன்னவரே புகுத்திக்கொண்டதென்றும், பின்னது வேற்றாரும் மாற்றாருமான ஆரியர் புகுத்தியதென்றும், அறிந்து கொள்க.

தொல்காப்பியர் தாமே ஆண்டனவாகப் பிரயோக விவேகம் குறிக்கும் வடசொற்கள் அடுத்த கட்டுரையில் விளக்கப்படும்.

தமிழ் வேர்ச்சொல்லாராய்ச்சியும் தமிழன் பிறந்தகமும் ஆரியன் தோன்றியகமும் பற்றிய ஆராய்ச்சியும் தமக்கின்மையால், பர்.தெ.பொ.மீ. தமிழரும் ஆரியரும் தொடர்பற்ற வெவ்வேறினத்தா ரென்றும், ஒரே காலத்தில் தோன்றியவரென்றும், இன்று போன்றே முன்பும் இருந்தன ரென்றும், ஆரியராலேயே தமிழர் நாகரிகப்படுத்தப்பட்டன ரென்றும், எண்ணிக்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. தமிழர் என்றது திரவிடரையும் தழுவும்.

அவர் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராயிருந்த காலத்தில், குமரிமுனைக்குத் தெற்கே ஒருகாலத்தில் நிலமட்டும் இருந்ததென்றும், அதில் மக்கள் குடியிருக்கவில்லையென்றும், ஒரு முறை சொன்னதாகப் பர்.மெ. சுந்தரனார் சொன்னார். தமிழரின் முன்னோர் குமரிநாட்டுப் பழங்குடி மக்கள் என்பது, தமிழ் அல்லது தமிழர் வரலாற்றிற்கு அடிப்படையான உயிர்நாடிச் செய்தியாகும். இதை யுணராதார் எத்துணை கற்பினும் தமிழறிந்தவராகார்.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி" (சிலப். 11 : 19-22)

என்னும் பகுதியும் அதற்கு அடியார்க்குநல்லார் வரைந்த உரையுமே, தமிழன் குமரிநாட்டுத் தோற்றத்திற்குப் போதிய சான்றாம். இஃதல்லாது இருபதிற்கு மேற்பட்ட ஏனைச் சான்றுகளுமுள.

குமரிநாட்டுத் தமிழரே, தமிழின் பல்வேறு நிலையில் பல்வேறு திசை சென்று உலக முழுதும் பரவினர். (V.R.) இராமச்சந்திர தீட்சிதரின் 'தமிழரின் தோற்றமும் பரவலும்' (Origin and Spread of the Tamils) என்னும் ஆங்கில நூலைப் பார்க்க. வடபாற் சென்ற தமிழர் திரவிடராயினர். வட திரவிடர் பிராகிருதராயினர். பிராகிருதர் ஐரோப்பாவும் மேல்ஆசியாவும் சென்று ஆரியராயினர்.

"First as to the Aryan family, called also Indo-European, which takes in the languages of part of South and West Asia, and almost the whole of Europe. The original tongue whence these are all descended may be called the Primitive Aryan. What the roots of this ancient

language were like, and how they were put together into words, the student may gain an idea from Greek and Latin, but a still better from Sanskrit, where both roots and inflexions have been kept up in a more perfect and regular state......

".....The early home of the Aryans is supposed to have been in Inner Asia, perhaps in the present Turkestan, in the region of the Oxus and Yaxartes, for here the practicable way of migration for nomads with flocks and herds lies open down into Persia on the one side, and India on the other. As India and Persia have preserved in their sacred languages the Aryan tongue less changed than else where, it may be judged that the land whence the invading Aryans, came was not far off."(Anthropology by Edward. B. Tylor, pp.156-7)

**'The Cradle of the Aryas'**

"The fact....is in perfect harmony with the theory that the original home of the Aryas was on the slopes of the mountains which form the junction between the Hindukush and the Karakorum chains, what may be called the Northern Kohistan.

"........the region drained by the feeders of the Indus, the Oxus, and Yaxtartes." (Three Lectures on the Science of Language by F. Max Muller, pp. 64-5).

இந் நடுமேலை ஆசியாவினின்றே வேத ஆரியரின் முன்னோர், கிரேக்கத்திற்கு நெருங்கிய ஒரு மொழியைப் பேசிக்கொண்டும், ஆடு மாடு மேய்த்துக்கொண்டும், மாட்டிறைச்சி யுண்டுகொண்டும், இயற்கையையும் ஐம்பூதங்களையும் இரு சுடரையும் வணங்கிக்கொண்டும், எழுத்தும் இலக்கியமு மின்றி முல்லை நாகரிக நிலையிற் சிறுசிறு கூட்டமாகக் கி.மு. 2000-1500 போல் இந்தியாவிற்குட் புகுந்தனர்.

அவர் மொழி கிரேக்கத்திற்கு நெருங்கிய தென்பது, கீழ்வரும் தா என்னும் வினைமுற்றின் நிகழ்கால வடிவொப்புமையால் அறியப்படும்.

| | தமிழ் | கிரேக்கம் | வழக்கொழிந்த ஆரியம் |
|---|---|---|---|
| ஒருமை | தருகின்றேன் | திதோமி | ததாமி-dadha#mi |
| | தருகின்றாய் | திதோஸ் | ததாஸி-dadha#si |
| | தருகின்றான் | திதோஸி(ன்) | ததாத்தி -dadha#ti |
| இருமை | — | — | தத்வஸ்-dadhvas |
| | — | திதொத்தொன் | தத்தஸ்- dhatthas |
| | — | திதொத்தொன் | தததஸ் -dhattas |
| பன்மை | தருகின்றோம் | திதொமென் | தத்மஸ்-dadhmas |
| | தருகின்றீர் | திதொத்தெ | தத்த-dhattha |
| | தருகின்றனர் | திதொஆஸி(ன்) | ததத்தி-dadhati |

தா என்னும் ஓர் அடிப்படைத் தமிழ் வினைச்சொல், இலத்தீனிலும் கிரேக்கத்திலும் வேதமொழியிலும் பல்வேறு வடிவில் திரிந்து வழங்கு கின்றது. தமிழின் முதன்மையையும் மூலத் தன்மையையும் காட்ட இஃதொன்றே போதும். அதனால், இதை மறுக்குமாறு, ஈராண்டிற்கு முன்பே பா்.தெ. பொ. மீ. அவர்கட்கு ஓர் அறைகூவல் விடுத்தேன். அதற்கு இதுவரை மறுமொழி யில்லை.

கீழையாரியர் கால்நடை மேய்த்தலைச் சிறப்புத் தொழிலாகக் கொண் டிருந்தனரென்பது, கோத்திரம் என்னும் குடும்பப் பெயராலும் துஹித்ரு என்னும் மகட்பெயராலும், உழவுத்தொழிலை மேற்கொள்ளவில்லை யென்பது, அவர் நாடோடித் தன்மையாலும், மேலையாரிய மொழிகளி லுள்ள ஏர் என்னுந் தென்சொல் அவர் மொழியி லின்மையாலும், உழவுத் தொழிலைக் கொலைத்தொழிலென்று அவர் தரும சாத்திரம் பழிப்பதாலும்; அறியப்படும். (கோ = ஆன் (பசு), துஹ் = கற) அவர் மொழிக்கு மேனாட்டில் வழங்கிய பெயர் மறைந்தொழிந்தது. ஆரியம், சமற்கிருதம் என்னும் இரண்டும் அவர் இந்தியாவிற்கு வந்து தமிழரொடு தொடர்பு கொண்ட பின்னரே தோன்றியவை. ஆரியம் என்னும் சொல் இந்தியாவினின்றே மேலை நாடுகட்குப் பரவிற்று.

ஆரியம் என்பது தமிழ்ச் சொல்லே. அரு -ஆரி = அருமை, அழகு, மேன்மை. "ஆரி யாகவஞ் சாந்தந் தனித்தபின்" (சீவக. 129) ஆரி - ஆரியன் = மேலோன். இது ஆரியரே தமிழரை ஏமாற்றித் தமக்கு இட்டுக்கொண்டது. 'aristos' (best) என்னும் கிரேக்கச் சொல்லிற்கும் 'அரு' என்பதே மூலமாயிருத்தல் வேண்டும். ஏர்-Ar-Arya என்பது தவறு.

கும் - சும் - சம்(ஸம்). கும்முதல் = குவிதல், கூடுதல், கலத்தல், கருமை = மிகுதி, பெருமை. கள்ளுதல் = கலத்தல், கூடுதல். கள் - களம் = கூட்டம், அவை. கள் - கர் - கரு. கருத்தல் = மிகுதல், மிகுத்தல், செய்தல். கரு - கருமம். கரு - கருவி. கரு - கரணம். கரு(வ) க்ரு - க்ருத. ஸம்க்ருத - ஸம்ஸ்க்ருத = பிராகிருதமும் தமிழும், அல்லது வேதமொழியும் தமிழும் கலந்து செய்யப்பட்ட மொழி. ப்ராக்ருத சமற்கிருதத்திற்கு முந்து செய்யப்பட்ட மொழி. புதிதாகச் செய்யப்பட்ட பொருளால் அப் பொரு ளினம் மிகுதல் காண்க. இனி, கருத்தல் = கை கருத்துக் காழ்ப்பேறு மளவு உழைத்துச் செய்தல் என்றுமாம். "கருங்கைக் கொல்லர்" (சிலப். 5:29) என்னும் வழக்கை நோக்குக. கருத்தல் என்னும் வினை தமிழில் முன்பே வழக்கற்றது. பிரா = முன். க்ருத = செய்யப்பட்டது

தமிழர் கி.மு. 100,000 ஆண்டுகட்கு முன்பே குமரிநாட்டில் தோன்றிய மூல மக்களினத்தாரின் வழிவந்தவர். இற்றை இலக்கியத்தினும் விரிவான, எழுநிலச் செய்யுளாலியன்ற பல்துறை முழுத் தூய இலக்கியத்தையும் முத்தமிழிலக்கணத்தையும் கொண்டிருந்தவர்.

தொல்காப்பியம் நூலினியல்பை,

"ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த வோத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்
றாங்கனை மரபி னியலு மென்ப." (செய். 166)

"நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்." (செய். 168)

"ஒருநெறி யின்றி விரவிய பொருளாற்
பொதுமொழி தொடரினது படல மாகும்." (செய். 169)

"மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயிற்
றோன்றுமொழிப் புலவர் பிண்ட மென்ப" (செய். 170)

என விளக்கி, ஈருறுப்படக்கிய நூல் என்றும், மூவுறுப்படக்கிய பிண்டம் என்றும், நூலை இருவகையாக வகுத்துக் கூறிற்று.

மேற்கூறிய பிண்ட நூற்பாவிற்கு,

"அம் மூன்று உறுப்பினையும் அடக்கி வருவது பிண்டம் என்றவாறு.

"அம் மூன்றனையும் உறுப்பெனவே, பிண்டமென்பனதாம் உறுப்பினவென்பது பெற்றாம். தொல்காப்பியம் என்பது பிண்டம்; அதனுள் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகார மென்பன படலமெனப் படும்; அவற்றுள் ஒத்துஞ் சூத்திரமும் ஒழிந்த இரு கூறுமெனப்படும்.

'தோன்றுமொழிப் புலவர் பிண்ட மென்ப' என்றதனால், பிண்டத் தினையும் அடக்கிநிற்பது வேறு பிண்டமுளதென்பது. அது முதனூலாகிய அகத்தியமே போலும்; என்னை? அஃது இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழென்னும் மூன்று பிண்டத்தினையும் அடக்கி நிற்றலின்" என்று உரைத்தார் பேராசிரியர்.

ஒத்து எனினும் இயல் எனினும் ஒக்கும். அதிகாரம் எனினும் படலம் எனினும் பால் எனினும் ஒக்கும்.

பாணினீயம் சூத்திரம், பாதம், அத்தியாயம் என்னும் மூன்றுறுப் படக்கியதேனும் அதைப் பிண்டமென்னும் வழக்கு வடமொழியிலில்லை. மேலும், அது எழுத்தும் சொல்லும் ஆகிய இரண்டே கூறுவதால், ஈருறுப் படக்கியதாகவே கொள்ளப்படும். ஆதலால், அது நூலன்றிப் பிண்டமாகாது.

தொல்காப்பியத்திலுள்ள பொருளதிகாரம் என்னும் மூன்றா முறுப்பு, யாப்பு, அணியென்னும் பொதுவகைக் கூறுகளொடு வேறெம் மொழியிலு மில்லாத பொருளிலக்கண மென்னும் தனிச்சிறப்புக் கூற்றைக் கொண் டிருத்தலால், தொல்காப்பியத்துக் கிணையான இலக்கணநூல் இவ் வுலகில்

ஒன்றுமே யில்லையென்பது தெள்ளத் தெளிவாம். பொருளிலக்கணத்தைப் பாட்டியலென்று கூறி அதன் பெருமையைக் குறைக்கவும் மறைக்கவும் முயல்பவர் தம் அழுக்காற்றின் அளவின்மையைக் காட்டுவதோடு, நேர் நின்று கருங்காக்கையை வெண்புறா வென்னும் கடுந்துணிச்சற் பொய்யரே யாவர்.

இறையனா ரகப்பொருளுரை கூறும் தொன்னூல்களை நம்பாதும், தொல்காப்பியர் ஆங்காங்குக் குறிப்பிடும் முன்னூல்களைக் கருதாதும், வடநூல்களிலில்லாத தொல்காப்பியப் பொருளிலக்கணத்தைக் கண்டுங் காணாததுபோற் கண்மூடியும், நன்னூலும் சின்னூலும்போல் எழுத்துஞ் சொல்லுமே கூறும் பாணினீயத்தினின்று மூன்றுறுப்படக்கிய பிண்டமான தொல்காப்பியந் தோன்றிற்றென்பது, பூனை வயிற்றினின்று புலிக்குட்டி வந்ததென்றும், நரிமா அரிமாவை ஈன்றதென்றும் கூறுவது போன்றதே.

உயிர், மெய், உயிர்மெய் என்னும் மூவகையெழுத்துக் கொண்ட நெடுங்கணக்கு, இந்தியாவில் மட்டுமன்றி உலகிலேயே முதன்முதல் தமிழில்தான் தோன்றிற்று. அதைப் பின்பற்றியே பிராமியும் கிரந்தமும் தேவநாகரியும் தோன்றின. இது பின்னொரு கட்டுரையில் விரிவாக விளக்கப்படும்.

வேதமந்திரங்கட்குச் சிட்சை என்னும் ஒலியியலும், பிராதிசாக்கியம் என்னும் தனிமறை அல்லது மந்திரத் தொகுதிக்குரிய இலக்கண முறையும், தமிழிலக்கணத்தைப் பின்பற்றியே எழுந்தன.

இந்திய ஆரியரின் வழக்கிறந்த தாய்மொழியும் பிராகிருதமுங் கலந்ததே வேதமொழி. வேதமொழியும் தமிழும் கலந்ததே சமற்கிருதம் என்னும் பலதுறை உலகியல் இலக்கியமொழி. வேதமொழியைச் சமற் கிருதம் என்பது முற்காலப்படுத்தம் (Prochronism) என்னும் வழுவாகும்.

சமற்கிருதத்திற்கு எழுதப்பட்ட இலக்கணமே வியாகரணம். முதன் முதல் தோன்றிய ஐந்திரம் என்னும் சமற்கிருத இலக்கணம், தமிழகத்தி லேயே தோன்றித் தமிழகத்திலேயே அழிக்கப்பட்டது. ஐந்திரத்திற்குப் பிற்பட்டதே அஷ்டாத்யாயீ என்னும் பாணினீயம். தொல்காப்பியர் பாணினிக்கு முற்பட்டவராதலின் ஐந்திரம் மட்டும் கற்றிருந்தார். அதனா லேயே, "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பி யன்எனத் தன்பெயர் தோற்றி" என்று பனம்பாரனார் பாயிரத்திற் பாடினார்.

தொல்காப்பியர் காலம் கி.மு. 7ஆம் நூற்றாண்டு; பாணினி காலம் கி.மு.5ஆம் நூற்றாண்டு. வடமொழியிலக்கணம் தமிழிலக்கணத்தினின்று தோன்றிற்றேயன்றி, தமிழிலக்கணம் வடமொழி யிலக்கணத்தினின்று தோன்றவில்லை.

எழுத்துமுறை, எழுத்துச்சாரியை, எழுத்துப்பிறப்பியல், உயிர்மெய்த் தனிவடிவம், புணரியல்விரிவு, சொல்லமைப்பு, சொல்வகை, தொகைதொடர்

வகை, எண்வேற்றுமை, முதலியவற்றில், வடமொழியிலக்கணம் தமிழிலக் கணத்தைத் தழுவியிருப்பது, தெற்றெனத் தோன்றும். தொல்காப்பியர் மூவதிகாரத்தையும் ஒவ்வொன்பது இயல்களாக வகுத்திருப்பது போன்று, பாணினியார் எண்ணத்தியாயத்தையும் நந்நான்கு பாதமாக அமைத் திருப்பது, கவனிக்கத்தக்கது. பாணினீயம் படிப்படியாகத் திருந்திவந்த பல இலக்கண நூல்கட்குப் பிற்பட்டதாகும். அதன் முன்னூல்கள் 60 என்பர் கா.சு. பிள்ளையார்.

பதினெட்டாம் நூற்றாண்டிறுதியில், சார்ல்ஸ் வில்கின்சு (Charles Wilkins), உவில்லியம் சோன்சு (William Jones) முதலிய மேலையறிஞரால் சமற்கிருதம் வெளிப்படுத்தப்பட்ட பின், மேனாட்டார் ஆரிய ஒப்பியன் மொழிநூலை வளர்த்தனர். ஆயின், ஆரியத்தின் மூலமொழியை அறியா மையால், அம்மட்டில் நிறுத்திக்கொண்டு அதற்கு வண்ணனை மொழிநூல் (Descriptive Linguistics) என்று பெயரிட்டனர். ஆரியம் திரிமொழியாத லால், அதன் வாயிலாக வேர்ச்சொற்களையும் அவற்றின் பொருளையும் மூலமொழி தோன்றிய வகையையும் அறிய முடியாது. அவற்றை அறிவிக்கக் கூடிய இயன்மொழி தமிழ் ஒன்றே. உண்மையான மொழிநூல், ஒப்பியலும் வண்ணனையியலும் வரலாற்றியலும் ஒருங்கே கொண்டு கொடிவழியியல் (Geneological) முறைப்பட்டதாகவே யிருத்தல் வேண்டும். ஆதலால், வண்ணனை மொழிநூல் என்பது ஓர் அறிவிய லாகாது. இது பின்னரும் விளக்கப்படும்

சமற்கிருதத்தைக் கண்டுபிடித்தபின் மேனாட்டார் ஒப்பியன் மொழிநூலை வளர்த்துக்கொண்டதுபோல், தமிழரும் பாணினீயத்தைப் பின்பற்றியே தமிழிலக்கணம் அமைத்துக்கொண்டனர் என்பது, பேரனே பாட்டனைப் பெற்றான் என்பது போன்றதே. தொல்காப்பியர் சமற்கிருத இலக்கணமும் இலக்கியமுங் கற்றிருந்தார் என்பது உண்மையே. ஆயின், பாணினீயத்தைப் பின்பற்றித் தொல்காப்பியத்தை இயற்றினார் என்பது அறியாமை பற்றியதே. இதை அவர் கூற்றும் பொருளதிகாரமும் தெற்றெனப் புலப்படுத்தும். கி.மு. 10,000 ஆண்டுகட்கு முன் தோன்றிய தலைக்கழகக் காலத்திலிருந்து எழுத்து சொல் பொருள் என்னும் மூவதிகாரப் பட்டு, யாப்பையும் அணியையும் பொருளுள் அடக்கி, "ஒண்டீந்துறை" யென்று மாணிக்கவாசகரும் வியக்குமளவு நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்க அகப்பொருள் கொண்டு, மரபாக வழங்கி வந்த தெய்வத் தமிழிலக்கணத்தை, கி.மு. 5ஆம் நூற்றாண் டில் தோன்றி எழுத்துஞ் சொல்லுமே கூறும் பாணினீயத்தின் வழியதாகக் கூறுவது, தமிழைக் காட்டிக் கொடுக்கும் செயலின் பாற்பட்டதேயன்றி வேறாகாது.

இனி, வேதக் காலத்தில் ஆரியர் தமிழரொடு தொடர்பு கொள்ள வில்லையென்றும், காத்தியாயனர் காலமாகிய கி.மு. 4ஆம் நூற்றாண்டி

லேயே அத் தொடர்பு ஏற்பட்டதென்றும் கூறுவதும் வரலாற்றொடு முற்றும் முரண்பட்டதாகும்.

ஒரு காலத்தில் இந்தியா முழுதும் தமிழரே பரவியிருந்தனர். வடக்கே செல்லச் செல்ல மொழியும் நாளடைவில் மெல்ல மெல்லத் திரிந்தது. அதனால், வடநாடுகளைப் பிற்காலத்தில் 'மொழிபெயர் தேயம்' என்றனர்.

"மொழிபெயர் பன்மலை யிறப்பினும்
ஒழிதல் செல்வா தொண்டொடி குணனே." (ஐங். 321)

"மொழிபெயர் தேஎந் தருமார் மன்னர்
கழிப்பிணிக் கறைத்தோல் நிரைகண் டன்ன." (அகம். 67)

"பல்வேற் கட்டி நன்னாட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்." (குறுந். 11)

மொழிமாறு தேயம் என்னாது மொழிபெயர் தேயம் என்றதை நோக்குக. பெயர்தல் = ஒரே மொழி மெல்ல மெல்லத் திரிதல்.

குமரிமலையும் பஃறுளியாறும் மூழ்கியபின், அவற்றுக் கீடாகப் பாண்டியன் பனிமலையையும் கங்கையாற்றையுங் கொண்டான். அடியார்க்குநல்லார் சிறப்புக் குறிப்பைப் பார்க்க (சிலப். 11:17-22).

குமரிநாட்டுச் சிவநெறியார் அணிந்து வந்ததும் நேபாள நாட்டுச் சிவமணியே (உருத்திராக்கமே).

வங்க நாடு சென்று வாழ்ந்த தமிழ வணிகரே, காளிகோயில் சமைத்துக் காளிக்கோட்டம் என்று நகர்ப்பெயரிட்டனர். அஃது இன்று கல்கத்தா என்று ஆங்கிலத்தில் திரிந்து வழங்குகின்றது. தமிழகம் (Tamluk) என்றொரு நகரும் அந் நாட்டில் தோன்றிற்று. நிலவாணிகமும் நீர் வாணிகமும் வடநாடுகளொடு தொடர்ந்து நிகழ்ந்துவந்தன.

வடநாட்டார் குமரியாடவும் தென்னாட்டார் கங்கையாடவும் வந்து செல்வது, தொன்றுதொட்ட வழக்கமா யிருந்துவந்தது. பாரதக் காலத்தில் அர்ச்சுனனும் குமரியாட வந்து பாண்டியன் குமரியை மணந்தான்.

வேத ஆரியருள் முதன் முதலாக விந்தியமலை தாண்டித் தென்னாடு வந்த ஆரிய முனிவர் அகத்தியர். அதனால் விந்தமலையின் செருக் கடக்கியவர் எனச் சிறப்பிக்கப்பட்டார். அவருக்குப் பின் வந்தவர் நாரதர். பின்னர்த் தக்கணபதம் என்னும் ஒழுங்கான பாதையை அமைத்துக் கொண்டனர் ஆரியர்.

இயற்கையையும் ஐம்பூதங்களையும் இருசுடரையும் ஆவிகளையும் சோமச்சாறான கள்ளையுமே வணங்கிவந்த வேத ஆரியர், தமிழரொடு தொடர்புகொண்ட பின்னரே, காளி வணக்கத்தையும் குமர வணக்கத் தையும் சிவதிருமால் மதங்களையும் மேற்கொண்டனர். அதன்பின் பதினெண் புராணங்களும் இதிகாசங்களும் உபநிடதங்களும் ஆகமங்

களும் காவிய நாடகங்களும் வியாகரணங்களும் நிகண்டுகளும் சாத்திரங் களும் பிறவும் எழுந்தன.

இங்ஙனமிருக்கவும், தொல்காப்பியமே முதல் தமிழ்நூலென்றும், அதுவும் பாணினீயத்தைத் தழுவியதென்றும் முதன்முதலாக "நளியிரு முந்நீர் நாவா யோட்டி"ச் (புறம். 66) சுற்றுக் கடலோடியாய்த் (circumna vigator) திகழ்ந்து வடவை (*Aurora Borealis*) கண்ட தமிழனைக் கி.மு. 4ஆம் நூற்றாண்டுவரை வடஇந்தியாவும் அறியாதவன் என்று, இறப்ப இழித்துக் கூறுவது இளஞ்சிறாரும் எள்ளி நகையாடத்தக்கதே.

**குறிப்பு:** மூலத் தமிழ் நாடக நூலினின்று மொழிபெயர்க்கப்பட்ட காசுமீர வடமொழிப் பரத சாத்திரம், மறிநிழலீடாக மீண்டும் மூல மொழி யான தமிழில் மொழிபெயர்க்கப்பட விருக்கின்றது. இதைக் கண்டு அல்லது கேட்டு மூல மொழிபற்றி மயங்கற்க.

"நாடகத் தமிழ் நூலாகிய பரதம் அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்களும் இறந்தன" என்று அடியார்க்குநல்லார் தம் உரைப் பாயிரத்தில், உரைத்திருப்பதால், வடமொழி மொழிபெயர்ப்பின் மூலத் தமிழ்ப் பரதம் அழிக்கப்பட்டதென உய்த்துணர்க. இது என் 'முத்தமிழ்' என்னும் நூலில் விரிவாக விளக்கப்படும்.

## கூற்று: அசோகனும் தமிழ்நாடும்

"சந்திரகுப்தன் காலத்தில், விதப்பாக அசோகன் காலத்தே, (வடவர் தென்னவர்) தொடர்பு நெருங்கியிருந்தது. அசோகன் கட்டளை வாசகங்கள் *பிரமகிரிவரை தெற்கிற் காணப்படுகின்றன. அவன் விடுசெய்திகள் தமிழரசர்* உட்பட அனைவர்க்கும் விடப்பட்டுள. அவரொடு தொடர்பு நெருங்கியதாகி யிருத்தல் வேண்டும். அசோகன் சேரர், சோழர், பாண்டியர், சத்தியபுத்திரர் அல்லது அதிகமானர் என்னும் தமிழ்நாட்டரசர் நால்வரைப் பற்றிக் கூறுகின்றான். அவருள் முதல் மூவரே அரசரென்றும், அதிகமானர் சேரரொடு உறவுகொள்ள முயன்ற சிற்றரசரே யென்றும், தமிழ் மரபுவழிச் செய்தி கூறுகின்றது. சங்கக் காலத்திலும் தொல்காப்பியத்திலும் இந் நிலை மையே காண்கின்றோம். அதிகமானர் வல்லமையுள்ளவராயிருந்து ஏனை மூவரசரொடும் அரசியல் தலைமைக்குப் போட்டியிட்ட காலம் ஒன்று, அதற்கு முன் இருந்திருத்தல் வேண்டும். அது அசோகன் கட்டளை வாசகங்கள் உருவான காலமாயிருந்திருத்தல் வேண்டும். தமிழ் எழுத்து முறை அனைத்திந்திய எழுத்துமுறையின் தழுவிய அமைப்பே யென்றும், அதைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார் என்றும், இன்னொரு கட்டுரையிற் சொல்லாடப்பட்டுள்ளது. அசோகன் விடுசெய்தி பொதுமகன் உள்ளத்தைக் கவர்ந்ததனால், அவனுக்கு எழுத்தறிவின்மீது வேட்கை வளர்ந்தது. அது அனைத்திந்திய வெழுத்தைத் தழுவித் தமிழெழுத்தை யமைத்தற்கு அகத் தூண்டுகோலாயிற்று அல்லது அதை விரைவுபடுத்திற்று. இது அங்ஙன

மாயின், தொல்காப்பியம் அசோகன் காலத்திற்குப் பின்னரே தோன்றி யிருத்தல் கூடும்.

**புள்ளிக்கொள்கை**

"புள்ளிக்கொள்கை பற்றியும் பலவிடத்துக் கூறப்பட்டது. கி.பி. 2ஆம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்பும்தான் புள்ளி தோன்றுகின்றது என்று குறிப்பிடப்பட்டது. வெட்டெழுத்துகளின் எழுத்து முறைமை இலக்கணக் கொள்கையைப் பின்பற்றுவதற்கு ஒரு நூற்றாண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலம் சென்றிருக்கு மென்று நாம் கருதிக்கொள்ளலாம். வெட்டெழுத்துகள் பொதுமக்கள் எல்லார்க்குமென்று ஏற்பட்டவை. பொது மக்கள் வழக்கங்கள் எளிதில் மாறுவதில்லை. ஆதலால், தொல்காப்பியம் கிறித்தவவூழித் திருப்பத்தில் அல்லது அதற்குச் சற்று முந்தித் தோன்றிய தாகக் கொள்ளலாம். எங்ஙனமிருப்பினும், சமற்கிருதத்திற் போல் எழுத்து முறைமைக்குத் தேவையின்றியே இலக்கணக் கூறுபடுப்பு வளர்ச்சி யடைந்திருக்கக் கூடியதே. இனி, எழுத்து முறையைப் பற்றிய குறிப்புக ளெல்லாம் பிற்கால வளர்ச்சிகள் என்பதும் கொள்ளக்கூடியதே.

**இலக்கணம்**

"ஆனால், அங்ஙனமாயினும் அது காத்தியாயனார் காலத்துக்கு முந்தியதாகாது. காத்தியாயனரே இலக்கணம் என்னும் சொல்லாட்சியை, 'லக்ஷ்ய' அல்லது வழக்கு என்பதை அடிப்படையாகக் கொண்ட அணங் கத்தைக் (இலக்கணத்தைக்) குறித்ததென்று விளக்க வேண்டியிருந்தது. ஏனெனின், தமிழிலக்கணம் தமிழ்நாட்டில் இக் கல்வியின் நெடுந் தொன்மை யைக் காட்டுகின்றது.

**தொல்காப்பியத்தில் வெவ்வேறு படைகள்**

"முற்காலத்தவர் ஒருவரும் பிற்காலத்தவர் ஒருவருமாக இருபெரு நூலாசிரியர் தொல்காப்பியர் என்னும் பொதுப்பெயர் கொண்டிருந்ததனால் ஏற்பட்ட மயக்கத்தையும் குழப்பத்தையும் யாம் ஏற்கெனவே விளக்கி யிருக்கின்றேம். இக் கருத்துப்படி மயக்கம் நேரக் கூடியதாதல் இற்றைத் தொல்காப்பியத்தைக் கவனமாகக் கூறுபடுத்தி ஆயத் தூண்டுகின்றது. அத்தகைக் கூறுபாட்டாய்வுதான் அந் நூலின் பல்வேறு படைகளை வெளிப்படுத்திக் காட்டவொண்ணும். அப் படைக்கு வேறு காரணங்கள் பற்றிக் காலங் குறித்தல் வேண்டும்."

**மறுப்பு**

அசோகன் காலம் கி.மு. 272-31. குமரிநாட்டினின்று முதற்கால மக்கள் வடகிழக்கும் வடக்கும் வடமேற்குமாக வடஆசியாவிற்கும் ஐரோப்பா விற்கும் சென்றபின், அவர் வழியினர் இந்தியாவுக்குத் திரும்பி வரு

முன்னும், வடஇந்தியாவரை திரவிடர் பெரும்பான்மையராகவும் தமிழர் சிறுபான்மையராகவும் பரவியிருந்தனர். தமிழரே திரவிடராகவும் திரவிடரே பிராகிருதராகவும் மாறியதனால், ஆரியர் வந்த காலத்தில் வடஇந்தியர் பெரும்பாலும் பிராகிருதராகவும், நடுவிந்தியர் பெரும்பாலும் திரவிடராகவும் இருந்தனர் என்று கொள்ளலாம்.

கி.மு. 4ஆம் நூற்றாண்டுவரை, சமற்கிருத இலக்கியத்திற் சேர சோழ பாண்டியம் என்னும் முத்தமிழ்த் தென்னாட்டரசுகளே குறிக்கப்பட்டுள்ளன. ஆயின், கி.மு. 3ஆம் நூற்றாண்டிற் பொறிக்கப்பட்ட அசோகன் கல்வெட்டுகளில், பாண்டியம் சோழம் கேரளபுத்திரம் (சேரலம்) என்னும் முத்தமிழ் அரசக் குடிகளுடன் சத்தியபுத்திரர் என்னும் வேறோர் அரச மரபினரும் குறிக்கப்படுகின்றனர். அச் சத்தியபுத்திரரைத் தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த அதிகமானர் என்னும் சிற்றரசக் குடியினராகப் பர். தெ. பொ. மீ. கூறியிருக்கின்றார்.

அதிகமானர் ஒரு பழஞ்சேரர் கிளையைச் சேர்ந்த சிற்றரச ராதலின், அவரைத் தனியே பிரித்துக் கூறத் தேவையில்லை. கடைக்கழகக் காலத்தில் மூவேந்தருக் கடுத்தபடியாக வல்லமை யோடிருந்து, கோசர் என்னும் ஒரு வகுப்பார் தமிழகத்தின் வடமேலைப் பகுதியான துளுநாட்டை ஆண்டு வந்ததாக, எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் சிலப்பதிகாரமும் குறிக்கின்றன.

"நாலூர்க் கோசர் நன்மொழி" (குறுந். 15), "ஒன்றுமொழிக் கோசர்" (குறுந். 73), "மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்" (அகம். 15), "வடுவுடை முகத்தர் கடுங்கட் கோசர்" (அகம். 90), "காப்புக்கை நிறுத்த பல்வேற் கோசர்" (அகம். 113), "ஒன்றுமொழிக் கோசர்" (அகம். 196), "வாய்மொழி நிலைஇய சேண்விளக்கு நல்லிசை வளங்கெழு கோசர்" (அகம். 205), "பல்லிளங் கோசர்" (அகம். 216), "வெல்கொடித் துனைகா லன்ன புனைதேர்க் கோசர்" (அகம். 251), "ஊர்முது கோசர்" (அகம். 262), "வெவ்வேல் இளம்பல் கோசர்" (புறம். 169), "வலம்புரி கோசர்" (புறம். 283), "நனைக்கள்ளின் மனைக் கோசர்" (புறம். 369), "அவையகம் விளங்க நான்மொழிக் கோசர்" (மதுரைக். 508-9), "கடந்தடு வாய்வா ளிளம்பல் கோசர்" (மதுரைக். 773), "அதுகேட்டுக் கொங்கிளங் கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய மழைதொழில் என்றும் மாறாதாயிற்று." (சிலப். உரைபெறு கட்டுரை)

"கோசர்.....துளுநாட் டன்ன" என்று அகநானூற்றுப் பா (15) கூறுவதால் அவர் துளுநாட்டை ஆண்டுவந்தவரென்று தெரிகின்றது. சிலப்பதிகாரம் சேரன், சோழன், பாண்டியன், கயவாகு என்னும் வேந்தரொடு கோசரையுஞ் சேர்த்துக் கூறுவதால், அவர் பெருமை அறியப்படும்.

ஒன்றுமொழிக் கோசர், நன்மொழிக் கோசர், வாய்மொழிக் கோசர் என்று பலவிடத்தும் சிறப்பித்துக் கூறப்பட்டிருப்பது, அவரது சொற்றவ

றாமைப் பண்பைத் தெற்றெனக் காட்டும். அதனால், அவர் ஒருகால் சத்தியபுத்திரர் என்று அசோகன் கல்வெட்டுகளிற் குறிக்கப்பட்டிருக்கலாம். சொற்றவறாமை என்பது, வாய்நேர்ந்த உதவியைச் செய்யும் அறப் பண்புக்கும் வஞ்சினத்தை நிறைவேற்றும் மறப்பண்புக்கும் பொதுவாம்.

கடைக்கழகச் செய்யுள்கள் கோசரை வம்ப மள்ளர் என்று குறியாமை யின், அசோகன் காலத்திலும் அவர் குடியூன்றிய ஒரு தமிழக மறவர் வகுப்பினரா யிருந்திருக்கலாம்.

"துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மு தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்" (அகம். 251)

என்னும் அகநானூற்றுப் பகுதியும் இதை ஒருவாறுணர்த்தும்.

ஐம்பெரு வேளிருட் சிலர், ஒரோவிடத்துத் தமக்கு ஆற்றல் விஞ்சிய போது வேந்தர் ஒருவரையும் பலரையும் எதிர்த்தாரேனும் தமிழகம் தொன்றுதொட்டுத் தொல்காப்பியர் காலம்வரை மூவேந்தராட்சிக்குட்பட்டே யிருந்துவந்ததென்பது,

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்" (செய். 76)

என்னும் தொல்காப்பிய அடியால் விளங்கும்.

அசோகன் காலத்தில் அதிகமான் கை தமிழகத்தில் ஓங்கியிருந்த தென்பதற்கு யாதொரு சான்றுமில்லை.

இற்றைத் தமிழ்ப் புலவியத்துள் தொல்காப்பியமே முதற் பொத்தகமா யிருத்தல் பற்றி, ஆராய்ச்சியில்லாரெல்லாரும் அதுவே முதல் தமிழ்நூல் என மயங்கிக் கொண்டிருக்கின்றனர். வையாபுரியாரோ வெனின், அதையும் பாணினீயத்தின் வழிநூலாகக் காட்டி வருகின்றனர்.

தொல்காப்பியம் படுகுழிகளும் கவர்நெறிகளும் நிறைந்தது. ஆதலால், மாந்தன் வரலாற்றாராய்ச்சியும் மொழிவரலாற்றாராய்ச்சியும் தமிழ் வேர்ச்சொல்லாராய்ச்சியும் இல்லாதவர், கி.மு.1200 போல் தோன்றிய இலக்கியத் திரிமொழியாகிய சமற்கிருத அறிவைக்கொண்டு, கி.மு. நூறாயிரம் ஆண்டுகட்கு முன் குமரிநாட்டில் தோன்றிய மாந்தன் முதன் மொழியாகிய தமிழியல்பை அறியப் புகுவது, நாழிகொண்டு ஆழியை அளந்தறியத் துணிவதே யொக்கும்.

அசோகன் கல்வெட்டுச் செய்திகளாற் கவரப்பட்ட தமிழகப் பொது மக்கள், அவற்றைத் தாமே படித்தறிய வேண்டுமென்னும் அவாவினால் உந்தப்பட்டு, அவற்றின் பிராமியெழுத்தைப் பயின்றுகொண்டன ரென்றும்.

அதுவே தமிழ் நெடுங்கணக்குத் தோற்றமென்றும், பர். தெ.பொ.மீ. தம் நுண்மாண் நுழைபுலத்தாற் கண்டிருப்பது. ஆகா! எத்துணை அருமையான உய்த்துணர்வு! இது விண்ணுலகத்தும் மண்ணுலகத்தும் வேறெவர்க்கும் தோன்றியிருக்கக் கூடாத விழுப்புல மணிக்கருத்தே! ஒரு கல்லறைத் தோட்ட வாயிலின் மேல் "நாய்கள் புகற்க!" என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்த பலகையைக் கண்டவுடன், ஒரு நாய் புகாது நின்றுவிட்ட தென்று கூறும் பிக்குவிக்குத் தாள்களை (Pickwick papers) விட இது நகைச் சுவை விஞ்சியதே! இதனால், திக்கென்சை (Dickens) வென்றுவிட்டார் பர். தெ. பொ. மீ. யார் என்றே சொல்லலாம்.

அசோகன் கல்வெட்டுப் பிராமியெழுத்தைத் தமிழ்ப் பொதுமக்கள் கற்றபின், தொல்காப்பியம் தோன்றிற்றென்று, தமிழை இழித்தும் பழித்தும் புறக்கணிக்க வேண்டுமென்னுங் கருத்திருந்தாலன்றி, தொல்காப்பியங் கற்ற எவருஞ் சொல்லத் துணியார்.

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்" (எழுத். 15)

என்னும் நூற்பாவுக்குப் பின்,

"எகர ஒகரத் தியற்கையும் அற்றே" (எழுத். 16)

என்றுள்ள நூற்பா தொல்காப்பியப் படுகுழிகளுள் ஒன்றாகும். இது பின்னர் வேறொரு கட்டுரையில் விரிவாக விளக்கப்படும்.

தமிழ் நெடுங்கணக்கு அசோகன் கல்வெட்டுப் பிராமி யெழுத்தினின்று பொதுமக்கள் தோற்றுவித்ததென்னும் முழுத் தவறான கருத்தை அடிப்படையாக வைத்தே, பர் தெ.பொ.மீ. மேற்கொண்டு ஆராய்ந்து செல்கின்றார். "முதற் கோணல் முற்றும் கோணல்" என்றவாறு, அவர் ஆராய்ச்சி அடிப்படைத் தவற்றினால் முற்றுந் தவறாக முடிகின்றது.

உயிர், மெய், உயிர்மெய் என்னும் மூவகை யெழுத்து வேறுபாடும், அவற்றுக்கு வரிவடிவ வேறுபாடும் உள்ள நெடுங்கணக்கு முறை உலகில் முதன்முதல் தமிழிலேயே தோன்றிற்றென்பது, முன்னரே கூறப்பட்டது. மெய்க்குத் தனிவடிவில்லாது தோன்றிய குகைக் கல்வெட்டுப் பிராமி யெழுத்தை அடிப்படையாகக் கொண்டதனால், தமிழ் மெய்யெழுத்திற்கும் புள்ளிக்குறி கி.பி. 2ஆம் நூற்றாண்டிலேயே தோன்றிற்றென்பது, உண்மைக்கு முற்றும் மாறாகும்.

ஒரு நாட்டு மக்களை நல்வழிப்படுத்த அந் நாட்டு அரசனுக்கே இயலுமாதலால், அசோகன் தன் ஆட்சியெல்லைக்குள் பொறித்த பாறை, குகை, கம்பம் ஆகிய மூவிடக் கல்வெட்டுகளிலும், தன் அதிகாரத்துக் குட்பட்டவர்க்குக் கட்டளையாகவும் உட்படாத எல்லைப்புற நாட்டரசர்க்கு நட்பு முறைப்பட்ட நல்லுரையாகவும், துன்புறுத்தாமையை அடிப்படையாகக் கொண்ட அன்பு நெறியீடுகளைக் குறித்தது, தமிழகத்தைப் பொறுத்தவரையில் அரசரை நோக்கியதேயன்றிப் பொதுமக்களை

நோக்கியதன்று. ஓர் அரசன் நட்பு நிலையில் மற்றோர் அரசனின் குடிகட்கு நேரடியாக ஏதேனும் எழுதுவது இயல்புமன்று; முறையுமன்று.

கீழ்வரும் அசோகன் கல்வெட்டுச் செய்தியை நோக்குக.

## 2ஆம் பாறைக் கல்வெட்டு

(உவில்சன் (Wilson) மொழிபெயர்ப்பு)

"In all the subjugated territories of the king Priyadasi, the beloved of the gods, and also in the hordering countires, as Choda, Palaya (or Paraya) Satyaputra, Keralaputra, Tambapani it is proclaimed, and Antiochus by name the Yona (or Yavana) raja and those princes who are nearer to or allied with that monarco, universally are apprised that two designs have been cherished by Priyadasi, one (design) regarding men, and one relating to animals; and whatever herbs are useful to men or useful to animals wherever there are none, such have been everywhere caused to be conveyed and planted and roots and fruits wherever there are none, such have been everywhere conveyed and planted; and on the roads wells have been caused to be dug, and trees have been planted for the respective enjoyment of animals and men."

(Corpus Inscriptionum Indicarum, Vol I. pp. 117-8)

இதில், 'Palaya' என்றது பாண்டியனை; Tambapani (தாம்பிரபரணி) என்றது இலங்கையை. அசோகன் கல்வெட்டுச் செய்தி சேர சோழ பாண்டிய சத்தியபுத்திரராகிய அரசரையே நோக்கியதென்பது, இதனால் தெள்ளத் தெளிவாம். மேலும் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டது வடவெல்லைப் புறத்திலேயே யன்றித் தமிழகத்துள்ளன்று. அதனால் தமிழ்ப் பொதுமக்கள் அதனை அறிந்தேயிரார்; கண்டிரார் என்பதைச் சொல்லவே வேண்டுவ தின்று.

ஒரு மொழியிற் குறுங்கணக்காகவேனும் நெடுங்கணக்காகவேனும் வண்ணமாலை ஏற்படுவது, அறிஞராலேயேயன்றிக் கல்லாப் பொது மக்களாலன்று. ஆகவே, தமிழப் பொதுமக்கள் அசோகன் கல்வெட் டினின்று தமிழெழுத்தைக் கற்றுக்கொண்டது, முடவன் முண்மரமேறிக் கொம்புத்தேனைக் கொணர்ந்த செய்தியே யாகும்.

இனி, எழுத்தின்றியே சமற்கிருத இலக்கணம் தோன்றினாற் போன்று தமிழிலும் தோன்றியிருக்கலா மென்றும், தொல்காப்பியத்திலுள்ள இலக்கணக் குறிப்புகளெல்லாம், பிற்காலத்தனவென்றும், பர். தெ.பொ.மீ. கூறியிருப்பது, அவருக்குத் தமிழிலக்கணத்தைப் பற்றித் தெளிவான கருத்தின்மையைத் தெளிவாகக் காட்டும்.

இலக்கணம், இலக்கியம் என்னும் சொல் வரலாறு பின்னர்த் தெரி விக்கப்படும்.

கூற்று : தொல்காப்பியம் எழுத்ததிகாரம்

## I. நூன்மரபு

### ஒலியன்களின் பட்டி, அவற்றின் பாகுபாடு

"தொல்காப்பியத்தின் முதற்பாகம் எழுத்ததிகாரம் எனப்படும். அதன் முதற்பிரிவு நூன்மரபு, அதாவது தமிழிலக்கண நூல்களின் மரபு எனப்படும். தொல்காப்பியர் முதற்கண் எழுத்ததிகாரத்தையே இயற்றினா ெ ும். அதனால் நூல் என்பது எழுத்ததிகாரத்தையே குறிக்குமென்றுட ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கின்றேன். நூன்மரபு தமிழ் ஒலிகளையும் அவற்றின் பாகுபாட்டையும் மெய்ம்மயக்கங்களையும் எடுத்துக் கூறு கின்றது. அவை யாவும் எழுத்தையே குறிக்கின்றன. கண்டுள்ள விளக்கங் களும் இயல்வரையறைகளும் பெரும்பாலும் அக்காலத்து வழக்கிலிருந்த நெடுங்கணக்கொலிகளின் வரிசை முறையைத் தழுவி யுள்ளன. அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடியும் முதலெழுத்துகள் முப்பது; அவை இயற்கை யாக நெடுங்கணக்கு முறையைக் குறிக்கின்றன. மீண்டும் அவர் (நெடுங் கணக்கில்) 'ஔ'வொடு முடியும் பன்னீரொலிகளை உயிர் என்றும், அவற் றுக்குப் பின் வந்து 'ன'வ்வொடு முடியும் பதினெட்டை மெய் என்றும் கூறு கின்றார். அதன்பின் வெவ்வேறொலிகளின் அளபு தொடர்கின்றது. அவ் வடிப்படையில், ஒரு மாத்திரையுள்ள உயிர் குறில் என்றும், இருமாத்திரை யுள்ள உயிர் நெடில் என்றும் பாகுபாடு செய்யப்படுகின்றது. மெய் யெழுத்தின் மாத்திரை அரை."

### மறுப்பு

வடமொழியெழுத்துகள் மொத்தம் 48 என்றும், 52 என்றும், 53 என்றும், பிறவாறும் இலக்கண நூலாசிரியரிடைக் கருத்துவேறுபாடிருந்து வருவது போன்று, தமிழிலும் சார்பெழுத்துப்பற்றிக் கருத்துவேறுபாடு தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கின்றது.

தொல்காப்பியர் சார்பெழுத்து மூன்றென்றார். அது முன்னூல்களைத் தழுவியது. பவணந்தியார் சார்பெழுத்துப் பத்தென்றார். இவ் விருவர்க்கும் இடைப்பட்ட அமிதசாகரனார், "சார்பிற் றோன்றுந் தன்மைய வென்றா" என்று தொகை குறியாது கூறினும், அதன் உரையாசிரியர்,

"அவைதாம்
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன"

என்னுந் தொல்காப்பிய நூற்பாவை யொட்டிய,

"குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தப் புள்ளி யென்றிவை மூன்றும்
சார்பிற் றோற்றத் துரிமையி னுளவே"

என்றொரு பழநூற்பாவை எடுத்துக்காட்டினார். எனினும், தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இதுபற்றிக் கருத்துவேறுபாடிருந்திருத்தல் வேண்டும்.

"முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்"

என்னும் பனம்பாரனார் பொதுப்பாயிரமும் இக் கருத்துக்கு இடந்தரும்.

இனி, தொல்காப்பியர் காலத்தில் நூல் என்றது பொதுவகைப்பட்ட பொத்தகத்தையன்று; ஏதேனும் ஒருவகை அறிவியலையே (Science). இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் தனித்தனி இலக்கியம், இலக்கணம் என இருதிறப்படும். அவற்றுள் இலக்கணமெல்லாம் அறிவியல் போன்றிருப்பதால் நூல் எனப்படும். மருத்துவம், கணிதம், கணியம் (வானநூல்) என்பனவும் அவை போன்ற பிறவும் அறிவியல்களே யாதலால், அவையும் நூலெனப்படும்.

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
.................................
யாப்பின் வழிய தென்மனார் புலவர்" (செய். 78)

என்னும் தொல்காப்பிய நூற்பாவையும் அதன் உரையையும் நோக்குக.

இலக்கணம் ஒரு மொழிபற்றிய அறிவியலா யிருத்தலால் நூல் எனப்பட்டது. அதனைக் கூறும் பொத்தகமும் நூல் எனவேபடும். எ-டு: மதிவாணனார் நாடகத் தமிழ்நூல்.

ஆகவே, நூன்மரபு என்பது, தமிழிலக்கண நூல்களில் மரபாகக் கொள்ளப்பட்டுவரும் எழுத்துகளும் அவற்றின் பாகுபாடும் என்று பொருள் படுமே யன்றி, நூன்மரபு ஒன்றே தொல்காப்பியர் முதன்முதல் எழுதிய இலக்கணநூல் என்று பொருள்கொள்ள இடந்தராது.

எழுத்ததிகாரம் நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் எனத் தொண் (ஒன்பான்) பகுதிப்பட்டிருப்பதும், நூன்மரபு என்பது எழுத்ததிகாரம் முழுவதையும் குறிக்கவியலாதென்பதைத் தெற்றெனத் தெரிவிக்கும்.

தமிழ் நெடுங்கணக்கு அசோகன் கல்வெட்டுப் பிராமி யெழுத்தி னின்று தோன்றியதென்றும், அதையே முதல் தொல்காப்பியர் நூலாக வடித்தார் என்றும், அதற்குப் பிற்பட்ட இலக்கணங்களெல்லாம் அவராலும் இரண்டாம் தொல்காப்பியராலும் பிந்திச் செய்யப்பட்டவையென்றும், இரு தவறான அடிப்படையிலேயே பர். தெ.பொ.மீ.யின் ஆராய்ச்சி இயங்கு வதால், முதற்கோணல் முற்றுங் கோணலா யிருப்பதை நெடுகலுங் காணலாம்.

["Then follows....on which basis the classification of long and short vowels are made as having one and two matras respectively," என்னும் மூலப் பகுதியிலுள்ள நிரனிறை வழு அச்சுப் பிழையாகத் தெரிகின்றது.]

"வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்".

என்னும் பனம்பாரனார் பொதுப்பாயிரத்தொடு பா். தெ.பொ.மீ.-யின் கொள்கை முற்றும் முரண்படுதல் காண்க.

## கூற்று

**புள்ளி** "அவர் (தொல்காப்பியர்) சில எழுத்துகளின் வரிவடிவைக் கூறப் புகுமிடத்துப் புள்ளிக்கொள்கையைப் புகுத்துகின்றார். வேறோரிடத்தில் விளக்கியுள்ளவாறு, அவர் புள்ளியுடைய மெய்யெழுத்துகளொடு தொடங்கியிருக்க வேண்டுமென்பது விளங்கக்கூடியது. எகர ஒகர உயிர்க் குறில்களும் புள்ளி பெற்றுள்ளன. இது உயிர்மெய் என்னும் அசையெழுத்தைப்பற்றிக் கூற வழிகாட்டுகின்றது. இவற்றிற்கிடையே மிகக் குறுகிய மகரமாகிய மகரக்குறுக்கத்தின் வண்ணனை வருகின்றது. அதன் வரிவடிவம் புள்ளிக்கு அல்லது மெய்யெழுத்திற்கு முன்பே கூறப்படுகின்றது. இன்னோ ரொழுங்கின்மையும் உள்ளது. நூன்மரபு எழுத்தொலிகளைத் தனித்த வடிவிற் கூறுகின்றது. மொழிமரபு அவற்றின் புணரியல் வேறுபாடுகளைக் கூறுகின்றது. இவ் வேறுபாட்டிற்கு மாறாக, ஒரு புணரியல் வேறுபாடாகிய மகரக் குறுக்கம் நூன்மரபிற் கூறப்பட்டுள்ளது. தெளிவாக, இது ஓர் இடைச்செருகல். மயிலைநாதர் மகரக்குறுக்கத்திற்கு மேற்கோள் வேறு நூல்களினின்று காட்டித் தொல்காப்பியத்தினின்று காட்டாமை, சிறப்பாகக் கவனிக்கத் தக்கது. மகரக்குறுக்கம் பற்றிய தொல்காப்பிய நூற்பா பிற்காலத் தொல்காப்பியத்தைச் சேர்ந்ததாயிருக்கலாமா?"

## மறுப்பு

புள்ளியென்பது தொல்காப்பியர் புதிதாக வகுத்ததன்று. உயிர், மெய், உயிர்மெய் என்னும் மூவகை யெழுத்தும் முதன்முதலாகக் கொண்ட தமிழ் நெடுங்கணக்கு, வரலாற்றிற்கெட்டாத குமரிநாட்டு வினையினீங்கி விளங்கிய வறிவின் முனைவன் கண்டது. மெய்யெழுத்திற்குக் குறியாகக் கொள்ளப்பட்டது புள்ளி. இது பின்னர் விரிவாக விளக்கப்படும்.

தொல்காப்பியர் நூன்மரபில் எழுத்துகட்கு அளவு கூறிவருமிடத்து,

"மெய்யி னளபே யரையென மொழிப" (11)

என்று மெய்யெழுத்திற்கு அளபு குறித்தபின், சார்பெழுத்து மூன்றும் அவ்வளபே கொள்வதால்,

"அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே" (12)

என்று நூற்பாவியற்றி, அரையினுங் குறுகிக் காலாக வொலிக்கும் மகரக் குறுக்கத்தை,

"அரையளவு குறுகல் மகர முடைத்தே
இசையிடன் அருகுந் தெரியுங் காலை" (13)

என்று கூறி, அதன் சிறப்பான வரிவடிவத்தை,

"உட்பெறு புள்ளி யுருவா கும்மே" (14)

என்று அறிவித்தார்.

இங்ஙனம், உரிய இடத்திலும் தொடர்ச்சியான முறையிலும் கூறப்பட்டுள்ள புள்ளிச் செய்தியை,

"மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்" (15)

என்னும் புள்ளியெழுத்துப் பற்றிய நூற்பாவுக்கு முற்படக் கூறியது, இடவழு என்னும் குற்றமெனக் கொள்வது பொருந்தாது.

"எழுத்தெனப் படுப.

..............

முப்பஃதென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே." (1)

"அவைதாம்
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன" (2)

என்று நூல் தொடக்கத்திலேயே புள்ளிச் செய்தி கூறப்பட்டிருப்பதால், அதை ஆசிரியன்வாய்க் கேட்டறிந்த மாணவனுக்கு, "உட்பெறு புள்ளி யுருவா கும்மே." என்பது புதியதாகவும் விளங்காததாகவும், முற்படக் கூறல் என்னுங் குற்றத்தின் பாற்பட்டதாகவும், கொள்ளப்படா தென்க.

இனி, தொகுத்துச் சுட்டல், வகுத்துக் காட்டல், விரித்துக் கூறல், ஒப்பின் முடித்தல், ஒன்றினம் முடித்தல், தன்னின முடித்தல், மொழிந்த பொருளோ டொன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்றி முடித்தல் முதலிய உத்திகளை நோக்கினும், "உட்பெறு புள்ளி யுருவா கும்மே" என்னும் நூற்பா நூன்மரபில் இடம் பெற்றிருப்பது வழுவாகத் தோன்றாது.

மயிலைநாதர், நன்னூலின் சார்பெழுத்துத் தொகை நூற்பாவுக்கு,

"எழுத்தெனப் படுப........மூன்றலங் கடையே"

என ஆசிரியர் தொல்காப்பியனாரும் இவ்வாறு முதல் சார்பென வகுத்துக்கொண்டா ரென்க. அஃதே, அவர் சார்பெழுத்து மூன்றே கொண்டா ராலோ வெனின், அஃதே, நன்று சொன்னாய்! ஒழிந்தவை எப்பாற்படு மென்றார்க்கு மூன்றாவதொரு பகுதி சொல்லலாவ தின்மை யானும், முதலெழுத்தாந் தன்மை அவற்றிற்கின்மையானும், சார்பிற் றோன்றுத லானும், இப் பத்தும் சார்பாகவே கொள்ள வேண்டுமென்பது. அஃதே அமைக. ஒற்றளபெடையும் ஐகாரக் குறுக்கமும் யாண்டுப் ஔகாரக் குறுக்கமும் மகரக் குறுக்கமும் ஆய்தக் குறுக்கமும் பெற்றாமோ வெனின்,

"வன்மையொடு ரஃகான் ழஃகா னொழிந்தாங்
கன்மெய் ஆய்தமோ டளபெழும் ஓரோவழி."

"அளபெடை தனியிரண் டல்வழி ஐஔ
உளதாம் ஒன்றரை தனிமையு மாகும்."

"பதினெண் மெய்யும் அதுவே மவ்வோ
டாய்தமும் அளபரை தேய்தலும் உரித்தே"

என்றார் ஆசிரியர் அவிநயனாரும் எனக் கொள்க" என வுரைத்துள்ளார்.

இதில், அவிநய நூற்பாவே போதுமாதலின், தொல்காப்பிய நூற்பா எடுத்துக் கூறப்படவில்லை. அதனால், தொல்காப்பிய மகரக் குறுக்க நூற்பாவைப்பற்றி நாம் ஐயுற வேண்டியதில்லை. இகரக் குறுக்கம், உகரக் குறுக்கம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் முதலியன வும் தொல்காப்பியத்திற் கூறப்பட்டுள்ளன. ஆயினும், அவற்றையெல்லாம் மயிலைநாதர் மேற்கோளாகக் காட்டவில்லை. அங்ஙனமே மகரக் குறுக்கமும் என்க.

இனித் தொல்காப்பிய மகரக் குறுக்க நூற்பா பிற்காலத்ததாயின்,

"செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற் றாகும்." (மொழி. 18)

"னகாரை முன்னர் மகாரங் குறுகும்" (மொழி. 19)

என்பனவும் பிற்காலத்தனவேயாதல் வேண்டும். அங்ஙனம் ஆகாமை காண்க.

**கூற்று**

### ஒலியன்களின் பாதீடு

"பிராதிசாக்கியங்களும் ஒலியன்களின் பாதீட்டை விரித்துக் கூறு கின்றன. நன்னூல் அதை முதலீறிடைநிலை யென்கின்றது. தொல் காப்பியர், எங்ஙனமிருப்பினும், முதலிலும் இறுதியிலும் வரும் ஒலியன்களை

மொழிமரபிலும். மெய்ம்மயக்கங்களை நூன்மரபிலும், எடுத்துக் கூறு கின்றார்.....இம் மெய்ம்மயக்கம் தனிச் சொல்லிலும் தொடர்ச் சொல்லிலும் கூட்டுச் சொல்லிலும் நிகழும். எங்ஙன மிருப்பினும், நச்சினார்க்கினியர் தனிச் சொல்லில் வழங்கும் மெய்ம்மயக்கங்களையே எடுத்துக் கூறி, எடுத்துக் காட்டில்லாத மெய்ம்மயக்கங்களெல்லாம் இறந்துபட்டன என்றொரு கொள்கையை மேற்கொள்கின்றார். உண்மையில் நூன்மரபிற் கொவ்வாத சுட்டுவினா அடிகளும் அதிற் கூறப்பட்டுள்ளன.

## மறுப்பு

ஆரிய இனம் தோன்று முன்பே முத்தமிழிலக்கணம் குமரிநாட்டில் முழு வளர்ச்சியடைந்திருந்ததனாலும், முல்லை நாகரிக நிலையினரான ஆரியர் இந்தியாவிற்குட் புகுந்த காலத்தில் வடஇந்தியாவில் தமிழரும் வதிந்திருந்ததனாலும், இராமாயணக் காலத்திலேயே அகத்தியர் தென்னாடு வந்து "என்றுமுள தென்றமிழ் இயம்பி" மாபிண்டமாகிய அகத்தியம் இயற்றியதனாலும், ஆரிய முதலிலக்கியமாகிய இருக்கு வேதம் இந்தியா விலேயே இயற்றப்பட்டதனாலும், பல பிராதிசாக்கிய நூற்பாக்கள் தொல்காப்பிய நூற்பாக்களை ஒத்திருப்பதனாலும், பாணினீயத்துக்கு முந்திய முதற் சமற்கிருத இலக்கணமாகிய ஐந்திரம் தமிழகத்திலேயே தோன்றி மறைந்ததனாலும், பிராதிசாக்கியங்கட் கெல்லாம் தமிழிலக்கணமே மூலம் என்பது வெள்ளிடை மலையாம்.

உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்னும் இருவகை மெய்ம்மயக்கங்களுள், பின்னதைப் பற்றிய தொல்காப்பிய நூற்பாக்களின்படி, பல மெய்ம்மயக்கங்கள் தொகைச்சொல் என்னும் கூட்டுச் சொற்களிலும் தொடர்ச் சொற்களிலுமே நிகழும்.

எ-கா : ள்ச - நீள்சினை, ல்ய - கொல்யானை,
ள்ய - வெள்யாறு, ண்ச - வெண்சாந்து,
ண்ஞ - வெண்ஞாண், ண்ய - மண்யாறு,
ண்வ - எண்வட்டு, ன்ச - புன்செய்,
ன்ஞ - மென்ஞாண், ன்ய - இன்யாழ்,
ன்வ - புன்வரகு, ம்வ - வரும் வண்ணக்கன்,
ய்ச - எய்சிலை, ர்ச - வார்சிலை,
ழ்ச - வாழ்சேரி, ய்ஞ - பாய்ஞெகிழி,
ர்ஞ - நேர்ஞெகிழி, ழ்ஞ - வாழ்ஞெண்டு,
ர்ய - போர்யானை, ழ்ய - வீழ்யானை,
ய்ங - வேய்ங்ஙனம், ர்ங - வேர்ங்ஙனம்,
ழ்ங - வேழ்ங்ஙனம்.

ஞ்ய, ந்ய, ம்ய, வ்ய, என்பவற்றிற்கு உரையாசிரியர் காட்டிய உரிஞ்யாது, பொருந்யாது, திரும்யாது, தெவ்யாது என்பவற்றை உரிஞ்

யானை, பொருந்யாறு, திரும்யாமை, தெவ்யாடு என மாற்றின், நச்சினர்க் கினியர் கூறும் குற்றம் நீங்கிவிடும்.

"எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய" (எச்ச. 24)

என்று தொல்காப்பியமே கூறுவதால், மெய்ம்மயக்கத்துக்குத் தனிச்சொற் போன்றே கூட்டுச் சொல்லும் கொள்ளப்படும்.

இன்று தனிச்சொல் எடுத்துக்காட்டில்லா மெய்ம்மயக்கங்கள் சிலவற்றுக்கு, முன்காலத்தில் தனிச்சொல்லிருந்து பின்னர் இறந்துபட் டிருக்கலாம். ஆயின், தனிச்சொல்லே எடுத்துக்காட்டுக்குத் தகும் என வரையறுப்பது பொருந்தாது.

ஒரே சொல் அல்லது எழுத்தமைதி வெவ்வேறு வகையில் வெவ்வேறு இயலுக்கு உரியதாகலாம். 'அம்ம' என்னும் விளிப்பெயர் கேட்பிக்கும் இடைச்சொல்லாயின் இடையியலுக்குரியது. கருவி என்னும் தொகுதிப் பெயர் செய்யுள் வழக்குப்பற்றி உரியியலுக்குரியது. இங்ஙனமே சில மெய்ம் மயக்கங்களும் எழுத்தியலுக்கும் புணரியலுக்கும் உரியனவாகும். ஆதலால், "கட்சிறார் கற்சிறார் என்பன இருமொழிப் புணர்ச்சியாகலின் ஈண்டைக்காகா" என்று நச்சினார்க்கினியர் விலக்குவது பொருந்தாது.

இனி, ந்ய, ண்ய, ம்ய, ன்ய என்பன போன்ற மெய்ம்மயக்கங்கள் தமிழில் தனிச்சொற்குப் பொருந்தாவாதலின், என்றும் கூட்டுச் சொல்லி லேயே நிகழும். அவற்றைத் தனிச்சொற்கும் உரியனவென்று கூறி, தமிழை வடமொழி வண்ணமாக்கவும் வடமொழி வழியதெனக் காட்டவும் முயல்வர், அகப்பகையும் புறப்பகையுமாகிய தமிழ்ப்பகைவர் சிலர்.

சுட்டெழுத்துகளும் வினாவெழுத்துகளும் தமிழ் மரபெழுத்து களாதலின், அவையும் தொல்காப்பிய நூன்மரபிற் கூறப்பட்டுள்ளன. அசோகன் கல்வெட்டுப் பிராமி யெழுத்தினின்று தமிழ் நெடுங்கணக்குத் தோன்றிற்றென்று மயங்கியோ மயங்காதோ கூறுவதனாலும், இச் சுட்டெழுத்தும் வினாவெழுத்தும் வடமொழியிலின்மையால வடமொழி யிலக்கணத்தில் கூறப்படாமையாலும், இவ் விருவகை யெழுத்துகளும் நூன் மரபிற்குப் பொருந்தாவெனப் பர். தெ. பொ. மீ. கூறுவது அவர் பிறழ் வுணர்ச்சியையே பிறங்கக் காட்டும்.

**கூற்று**

**மொழிமரபு**

"அடுத்த இயல் மொழிமரபு. இதில் அவர் இ.உ. ஆய்தம் என்னும் மூன்றன் குறுக்கங்களாகிய புணரியல் வேறுபாடுகளைக் கூறுகிறார். அம் மூன்றும் தனிச்சொற்களிலும் புணர்ச்சொற்களிலும் நிகழ்கின்றன. சமற்கிருதப் புலுதம் (ப்லுத) என்னும் உயிரளபெடையை அறிந்துகொண்டு, இருமாத்திரைக்கு மேலொலிக்கும் நெட்டுயிர் தமிழில் இல்லை யென்று

ஏற்கெனவே வாசகரை எச்சரித்திருக்கின்றார். ஆயின், ஆறாம் நூற்பாவிற் கூறியுள்ளதையே ஏன் இங்குத் திருப்பிக் கூறவேண்டு மென்பது தெளிவா யில்லை. ஒருகால், அளபெடை உயிர்நெடிலின், புணரியல் வேறுபாடாக நிகழ்கின்றதென்று இங்குக் கூறுகின்றார் போலும்!''

## மறுப்பு

தொல்காப்பியம் இடைக்கழகக் காலத்தில் இயன்ற பல்வேறு தனித்தமிழ் முன்னூல்களினின்று தொகுத்த தொகைச் சார்பு நூலாதலின், வடமொழிப் புலுத அறிவைக்கொண்டு.

"மூவள பிசைத்தல் ஓரெழுத் தின்றே" (எழுத்து. 5)

என்று தொல்காப்பியர் கூறினார் என்னுங் கூற்று, கூற்றுப்போற் கொடியதே.

"எழுத்தெனப் படுப.......முப்பஃதென்ப." (எழுத்து. 1)
"அ இ உ எ ஒ.......குற்றெழுத் தென்ப." (எழுத்து. 3)
"ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ.....நெட்டெழுத் தென்ப." (எழுத்து. 4)
"நீட்டம் வேண்டின்.......என்மனார் புலவர்." (எழுத்து. 6)

என்று பலர்பாலிலேயே தமிழுமுன்னூலாரைத் தொல்காப்பியர் குறித் திருத்தல் காண்க.

"ஈரளபிசைத்தல் ஓரெழுத் தின்றே" என்று வரையறுத்ததனால், அதற்கு விலக்காக வரும் சிறுபான்மை நிகழ்ச்சியான அளபெடையை மாணவன் அறிதற்பொருட்டு, அதனையடுத்து, நீட்டம் வேண்டின்..... என்மனார் புலவர்,'' என்று பொதுப்படச் சுருக்கிக் கூறினார். ஆயின், உயிரள பெடை என்று எவ்வாறு நிகழுமென்றும், அதற்கு அடையாளம் எதுவென் றும், எத்தனை மாத்திரையென்றும், விரிவாகத் தெரியவேண்டுதலின், அவற்றை இங்கு மொழிமரபிற் கூறினார். எழுத்தின் தனிநிலை பற்றியது எழுத்தியல்; அதன் சொன்னிலை பற்றியது மொழியியல்.

ஓரெழுத்துச் சொல்லாயின், தனிநிலையிலும் இருவகை வழக்கிலும் அளபெடை நிகழும்.

எ-கா :ஏஎஎஎ அண்ணா!-உலகியலளபெடை

"ஓஒ இனிதே" (குறள். 1176) - செய்யுளியலளபெடை.

## கூற்று

'ஒலியியற் சொல்லைப் பின்னர் ஆயத்தொடங்கி ஓரெழுத்துச் சொல், ஈரெழுத்துச் சொல், மூவெழுத்துச் சொல் என அதை மூவகையாக வகுக்கின்றார். அதன்பின் முதலெழுத்துகளைப் பற்றிக் கூறுகின்றார். மகரக் குறுக்கம் மீண்டும் ஒருமுறை சொல்லப்படுகின்றது. ஐகாரக் குறுக்கமும் சொல்லப்படுகின்றது. மூன்றிற்கு மேற்பட்ட புணரியல் எழுத்து வேறுபாடு களை அவர் ஒப்புக்கொள்ளாவிடின், இக் குறுக்கங்களை இவ்விடத்திற்

கூறுவது பொருந்தாது. பிற்காலத்தார் ஐகார ஔகாரங்களை நெடில்களாகச் செய்யுளில் ஆள்வதன் இடர்ப்பாட்டை உணர்ந்த போது, போலிக் கொள்கையைப் புகுத்தியிருத்தல் வேண்டும்."

## மறுப்பு

மகரக்குறுக்கத்தை மொழிமரபிற் கூறியது, கூறியது கூறல் என்னுங் குற்றமன்று. நூன்மரபில் எழுத்துகளின் மாத்திரை யளவைக் கூறுமிடத்து, மகரக்குறுக்க மாத்திரை காலென்று கூற நேர்ந்தது. மொழிமரபில் மகரக் குறுக்கம் நிகழும் இடத்தைச் சொல்ல வேண்டியிருந்ததனால்,

"செய்யு ளிறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற் றாகும்" (12)

"னகாரை முன்னர் மகாரங் குறுகும்" (13)

என்றார் ஆசிரியர். ஈரிடத்தும் கூறவேண்டியது கூறலேயன்றிக் கூறியது கூறலன்று.

"அரையளபு குறுகல் மகர முடைத்தே
இசையிடன் அருகும் தெரியுங் காலை" (நூன். 13)

"உட்பெறு புள்ளி யுருவா கும்மே" (நூன். 14)

என்னும் இவ் விரு நூற்பாக்களையும், மேற்கூறிய மொழிமரபு நூற்பாக்க ளுடன் ஒப்புநோக்கி உண்மை காண்க.

தொல்காப்பியத்தின் முன்னூல்களான தனித்தமிழ் நூல்களெல்லாம், இயல்பான தமிழெழுத்துகளை மொத்தம் முப்பதென்றே கொண்டு, அவற்றுள் நான்கின் இடவேறுபாட்டாலும் புணர்ச்சி விளைவாலும் ஏற்பட்ட முத் திரிபொலிகளைச் சார்பெழுத்துகளென்றும், இயல்பான மூலமுப்பதை யும் முதலெழுத்துகளென்றும், வேறுபடுத்தி வழங்கினும், முதலெழுத்து களையே முதன்மையாகக் கருதினவென்பது,

"எழுத்தெனப் படுப
அகரமுதல் னகர விறுவாய்
முப்பஃ தென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே"

என்னும் தொல்காப்பிய முதல் நூற்பாவால் அறியக் கிடக்கின்றது.

எல்லா மெய்யொடுங் கூடா ஈருயிரும் உயிரேறா ஒரு மெய்யுமான முச்சார்பெழுத்துகளுள் இரண்டு சற்றுக் குறுகியொலிப்பினும், ஒலித்திரிபே சார்பெழுத்துகளின் சிறப்பியல்பாம். பிற்காலப் பதின்மூன்றாம் நூற் றாண்டினரான நன்னூலார், ஒலிக் குறுக்கமும் நீட்டமும் கலப்புமான இயல்புகளையுஞ் சேர்த்து, சார்பெழுத்துப் பத்தென விரித்தார். இக் கொள்கை தொல்காப்பியருக்கில்லை. ஆயின், ஒலித்திரிபு போன்றே

ஒலிக்குறுக்க நீட்டமும் சொன்னிலைக் குரியவாதலின், அவற்றை மொழி மரபிற் கூறினார். ஆதலால், மகரக் குறுக்கமும் ஐகாரக் குறுக்கமும் கூறுவதற்கு மொழிமரபே தக்க இயலாம்.

"ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔஎனும்
அப்பால் ஏழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப." (4)

"அகர இகரம் ஐகார மாகும்." (54)

"அகர உகரம் ஔகார மாகும்" (55)

என்று தொல்காப்பியம் கூறுவதால், ஐகார ஔகாரங்கள் தனிநிலையில் இன்றும் இருமாத்திரை நெடிலே.

"ஈரள பிசைக்கும் இறுதிஇல் உயிரே
.........................
குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும்" (736)

என்பதனால்,

"ஐவியப் பாகும்" (868)

என்னுமிடத்தும், ஐகாரம் இருமாத்திரை நெடிலேயாதல் வேண்டும்.

இனி, ஐகார ஔகாரம் சொல்லுறுப்பாக வந்து மாத்திரை குறையினும், செய்யுளில் எதுகை நோக்கி அய், அவ் என வரிமாற்றத் தேவையில்லை.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (1091)

என்னும் நூற்பாவில், ஐயர் என்னும் வடிவமே தொன்றுதொட்டு மூலத்திலும் உரையிலும் வழங்கிவருதல் காண்க.

**கூற்று**

"யகரத்தின் மட்டிட்ட வழக்கு வேறோரிடத்திற் குறிக்கப்பட்டுள்ளது. சகரமெய் அகரத்தொடும் ஐகார ஔகாரங்களோடும் கூடி வருவதில்லை. அகரத்தொடு வராமைக்குக் காரணம், அண்ணமெய்யாகிய சகரத்தின் பின்வரும் அகரம் அண்ணவுயிராகிய எகரமாகத் திரிந்துவிடுவதே. இது தொல்காப்பியர் கால மொழிநிலையைக் குறிக்கின்றது. அந் நிலை பல சகர முதற்சொற்கள் வந்துள்ள கழக இலக்கியக் கால நிலையினின்று வேறு பட்டதாயிருத்தல் வேண்டும்.

**மறுப்பு**

தொல்காப்பியர் காலத்திற் சகர முதற்சொல் ஒன்றேனும் தமிழில் வழங்கவில்லையென்பது சற்றும் பொருந்தாது. சக்கரம், சகடம் முதலிய ஒருசில (வடமொழி தென்மொழியாகிய) இருமொழிப் பொதுச் சொற்களை நீக்கினும், பெருவாரி உலக வழக்கும் இன்றியமையா அடிப்படையுமான

சக்கு, சக்கை, சகதி, சங்கு, சச்சரவு, சட்டம், சட்டி, சட்டு, சட்டை, சடங்கு, சடார், சடை, சடைவு, சன்னு, சண்பு, சண்டி, சண்டு, சண்டை, சணாய், சதக்கு, சதுப்பு, சதை, சந்து, சந்தை, சப்பட்டை, சப்பளி, சப்பாணி, சப்பு, சப்பை, சம்பளம், சம்பா, சம்மணம், சமட்டி, சமம், சமழ், சமை, சர், சரசர, சரட்டு, சரள், சரி, சருகு, சருவு, சரேல், சல்லி, சலக்கு, சலசலப்பு, சலங்கை, சலவை, சலி, சவ்வு, சவட்டு, சவர், சவளி, சவை, சழக்கு, சழி, சள், சள்ளை, சளப்பு, சளார், சளி, சற்று, சறாம்பு, சறுக்கு முதலிய ஏராளமான சகரமுதற் சொற்கள் தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னரே தமிழில் தோன்றின என்பது, எள்ளளவும் இயற்கைக்கு ஏற்காது. ஆரியர் வந்த காலத்தினின்று ஆங்கிலர் வந்த காலம்வரை, தமிழுக்குப் படிப்படியாக மேன்மேலும் கேடு நேர்ந்ததேயன்றி ஆக்கம் நேரவில்லை. தம்மைச் 'சூத்திரர்' என்றும், தம் மொழியை இழிந்தார் மொழியென்றும் தாமே தாழ்த்திக்கொண்டு, ஆரியரை நிலத்தேவரென்றும் அவரது இலக்கியமொழியைத் தேவமொழி யென்றும் நம்பி, இயன்றவரை தமிழ்ச் சொல்லை வழக்கு வீழ்த்திச் சமற்கிருதச் சொல்லையே மகிழ்ச்சியோடும் பெருமிதத்தோடும் வழங்கிவந்த அடிமைத் தமிழர், எங்ஙனம் புதுத் தனித்தமிழ்ச் சொற்களைப் புனைந்திருத்தல் கூடும்?

ஆகவே, கடைக்கழகக் காலச் சகரமுதல் தமிழ்ச்சொற்க ளெல்லாம் ஆரியர் வருகைக்கு முற்பட்ட பழங்காலத்தனவே. இதை,

"சரிசமழ்ப்புச் சட்டி சருகு சவடி
சளிசகடு சட்டை சவளி - சவிசரடு
சந்து சதங்கை சழக்காதி யீரிடத்தும்
லந்ததனாற் சம்முதலும் வை"

என்னும் மயிலைநாதருரை மேற்கோளாலும் தெளிக.

இனி, துடிசைகிழார் அ. சிதம்பரனார் கருத்துப்படி,

"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அஐஔ எனும் மூன்றலங் கடையே" (தொல். மொழி. 27)

என்னும் நூற்பாவின் ஈற்றடிக்கு,

"அவை ஔ என்னும் ஒன்றலங் கடையே" என்னும் பாட வேறுபாடு கொண்டு, ஔ என்னும் ஓருயிரொழிந்த ஏனைப் பதினோருயி ரொடுங் கூடிச் சகர மெய்யும் சொன்முதலாம் என்று பொருள் கூறின், சகரக் கிளவித் தொல்காப்பிய நூற்பா இம்மியும் மயக்கிற்கும் மறுப்பிற்கும் இடமின்றித் தெளிதலும் காண்க.

**கூற்று**

**பிறப்பியல்**

"பிறப்பியல் எழுத்துகளின் ஒலிப்பு முறையைப்பற்றிக் கூறுகின்றது. அதன் இறுதி நூற்பா, அவர் நோக்குப் புறநோக்காக வுள்ளதென்றும்,

ஒலிப்புமுறைக்கு முன் நிகழ்வதை வண்ணிக்கவில்லை யென்றும் கூறுகின்றது. ஒலிப்புமுறைக்கு முற்பட்ட நிலைகள் பற்றிய பல செய்திகள் அந்தணர் மறையில் வண்ணிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடுகின்றார். சமற்கிருத ஆசிரியர் கொள்கையை அவர் அறிந்திருந்ததை இது தெளிவாகக் குறிக்கின்றது."

**விளக்கம்**

"இது பிறன்கோட் கூறல் என்னும் உத்திக்கு இனம். என்னை? உந்தியில் எழுந்த காற்றினைக் கூறுபடுத்தி, மாத்திரை கூட்டிக்கோடலும், மூலாதாரம் முதலாகக் காற்றெழுமாறு கூறலும் வேதத்திற்கு உளதென்று இவ் வாசிரியர் கூறி, அவர் மதம்பற்றி அவர் கொள்வதோர் பயன் இன்றென்ற லின்." என்னும் நச்சினார்க்கினியர் கூற்று, இந் நூற்பாவின் தேவை யின்மையையும் பயனின்மையையுமே குறிக்கின்றது.

"உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான" (தொல். எழுத்து. 83)

என்று பிறப்பியல் முதல் நூற்பாவிற் கூறிய முகவுரையே, ஒலிப்புமுறைக்கு முற்பட்ட நிகழ்ச்சியைத் தெரிந்துகொள்ளப் போதுமானதாம்.

நுண்ணொலி (சூக்குமை), பருவொலி (பைசந்தி) இடையொலி (மத்திமை), எழுத்தொலி (வைகரி) என்று, ஆரியச் சிவக்கொண்முடிபு கூறும் நால்வகை யொலியுள், முதல் மூன்றும் அறிவியலோடு பட்டவையல்ல.

தனியெடுப்பொலியும் மூச்சொலியும் தமிழுக்கின்மையின், அவற்றின் பிறப்பைப் பற்றியும் தமிழிலக்கணத்திற் கூறவேண்டிய தில்லை.

"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்
கன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே" (தொல். களவு. 1)

என்பது போன்ற பல பிற நூற்பாக்கள் தொல்காப்பியரின் சமற்கிருத அறிவைத் தெரிவிக்கப் போதுமானவை.

ஆதலால், பிறப்பியல் இறுதி நூற்பா 'நின்று பயனின்மை' என்னும் குற்றத்தின் பாற்பட்டதே.

**- "செந்தமிழ்ச் செல்வி" பெப்பிரவரி சூலை 1980**

## 8

# 'பாணர் கைவழி' மதிப்புரை [மறுப்பு]

திருவாளர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் பாணர் கைவழியைப் பற்றிய தம் மதிப்புரையைத் தொடங்கு முன்னரே, காலஞ்சென்ற மறைத்திரு விபுலாநந்த அடிகள் இயற்றிய யாழ்நூல் மதிக்கொணாக் களஞ்சிய மென்றும், அதுபற்றி இற்றை யுலகம் அவர்கட்கு மிகக் கடமைப் பட்டுள்ளதென்றும், அவர்கட்குப் புகழ்மாலை சூட்டுகின்றார்கள். இதற்குக் காரணம், அந் நூலின் போலி முடிபுகளெல்லாம் மதிப்புரையாளரின் விருப்பத்திற் கிசைந்திருத்தலே.

தமிழரென்று தம்மைச் சொல்லிக்கொண்டு ஆராய்ச்சியின் பேரால் தமிழுக்குப் பெருவசை விளைத்து ஆரிய ஏமாற்றத்திற்கு அரண் செய்தவருள் விபுலாநந்த அடிகளும் ஒருவர் என்பது, இசையியல்புந் தமிழிசைத் தரமும் அறியாத பலர்க்குத் தெரியாதுபோயினும், அவற்றை யறிந்த ஒரு சிலர்க்கேனும் தெரியாததன்று. அவர்கள் உடல் தாங்கியிருந்த போதே 'குரல் மத்திமம்' என்னும் அவர்கள் கொள்கையைக் கண்டித்துக் 'குரல் சட்சமே' என்று செல்வியில் ஒரு கட்டுரை வரைந்தேன். அதற்கு அவர்கள் ஓர் இளைஞர் பெயரால் மறுப்பெழுதினார்கள். யான் அம் மறுப்பிற் கொரு மறுப்பு வரைந்தேன். அத்தோடு நின்றது அவர்கள் தருக்கு. 'முதற்கோணல் முற்றுங்கோணல்' ஆதலின் அடிப்படைக் கொள்கையே தவறாயிருக்கும்போது, அவர்கள் நூன்முடிபு எத்தகையதாயிருக்கும்? ஒரு மூலை முடங்கியில் கூட்டங்கூட்டி, எதிர்ப்பாளரைச் செலவிற்குப் பணங் கொடுத்து வரவழைக்காது, இசைத்தமிழ் மரபறியாதார் முன்னிலை யில் அவர்கள் தங்கள் யாழ்நூலை அரங்கேற்றியதாலும்; கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் அதனை வெளியிட்டதாலும்; அது புரையற்ற நூலாகப் போற்றப்பட்டுவிடாது. துவராடை யணிந்தவர் நூலெல்லாம் துகளற்றன என்னும் கொள்கை எம்மனோர்க் கில்லை.

இனி, மதிப்புரையாளரின் உடம்படாக் கூற்றுகளை யெல்லாம் ஒவ்வொன்றாகக் கூறி மறுப்பாம்.

கூற்றுகள் யாவும் இயன்றவரை சுருங்கிய அளவிற் கூறப்பெறும்.

---

[1] 16.7.1950-ல் வெளிவந்த இந்துச் செய்தித்தாளில் 'பாணர் கைவழி'யைப் பற்றித் திருவாளர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் வரைந்துள்ள மதிப்புரையைப் பற்றியது.

1. "8ஆம் நூற்றாண்டிற்கும் 13ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் வீணை என்னும் பெயர் யாழிசையோடு கூடிய மிடற்றிசையையே குறித்த தாயின், வீணை வாசிப்பின் செயல்முறையும் அதுபற்றிய இடக்கை வலக்கைத் தொழில் வேறுபாடுகளைக் குறிக்கும் மிகப் பலவாகிய குறியீடுகளும் பொய்யாய்ப் போம்."

இப்போது வீணையென வழங்கும் கருவி 8ஆம் நூற்றாண்டிற்கும் 13ஆம் நூற்றாண்டிற்கும் இடையில் தமிழ்நாட்டிலிருக்கத்தான் செய்தது. ஆனால், அது தொன்றுதொட்ட முறைப்படி யாழ் என்னும் தமிழ்ப் பெய ராலும் சிறுபான்மை வீணை என்னும் வடமொழிப் பெயராலும் அழைக்கப் பெற்றது. இவ் வடமொழிப் பெயர் கடைச்சங்க கால இறுதியில்தான் தமிழ்நாட்டிற் புகுத்தப்பட்டது. அதற்குமுன் வடசொற்கள் தமிழில் மிக அருகியே வழங்கின. வடசொல்லே கலவாத தனித்தமிழ் வழங்கிய காலமுமுண்டு. அது ஆரியர் தென்னாட்டிற்கு வருமுன்னதாகும்.

வீணை என்னும் பெயர் தனித்து வரும்போது, செங்கோட்டி யாழையே அல்லது பிற யாழையே குறிக்கும்.

"மங்கல மிழப்ப வீணை மண்மிசை"

என்று இளங்கோவடிகளும்,

"மாசில் வீணையும் மாலை மதியமும்"

என்று திருநாவுக்கரசரும்,

"குழலி னோசை வீணை மொந்தை கொட்ட முழவதிர"

என்று திருஞான சம்பந்தரும் கூறுதல் காண்க.

சிந்தாமணியில், கந்தருவதத்தையா ரிலம்பகத்தில், யாழ் என்னும் பெயரும் வீணை என்னும் பெயரும் ஒருபொருட் கிளவியாய் ஒன்றுக் கொன்று பதிலாக வருகின்றன. தேவாரத்தில் யாழ் என்னும் பெயர் வருமிடத் தில் வீணை என்னும் பெயரும், வீணை என்னும் பெயர் வருமிடத்தில் யாழ் என்னும் பெயரும் விலக்கப்பட்டன. நாரதயாழ் நாரதவீணை என ஒரே கருவி குறித்து இருபெயர் வழக்குமுள்ளது.

வீணை என்னும் பெயர், யாழ் என்னும் பெயரோடு கூடி வருமிடத் தில் மட்டும், தனி மிடற்றிசையையோ யாழிசையொடு கூடிய மிடற்றிசை யையோ குறிக்கும். இதற்குச் சிந்தாமணி மூலத்தின் உரையினின்றும் 'பாணர் கைவழி'யாசிரியரால் போதிய சான்றுகள் தரப்பட்டுள்ளன.

யாழ் என்னும் சொல்லும், பொதுப்பட்ட இசையையும் இசைப் பகுதியான பண்ணையும் இசைக்கருவியான யாழையும், இடத்திற்கேற்பக் குறிக்கும்.

"செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ" (தொல். அகத். 18)

"துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே" (தொல். களவு. 1)

என்று தொல்காப்பியரும்,

"யாழோர் மணவினைக் கொத்தனள் என்றே" (மணிமே. 22 : 86)

என்று சீத்தலைச் சாத்தனாரும், யாழ் என்னும் சொல்லை இசையென்னும் பொருளில் ஆண்டனர்.

"பாலை குறிஞ்சி மருதஞ்செவ் வழியென
நால்வகை யாழா நாற்பெரும் பண்ணே"

என்று பிங்கல முனிவர் அச் சொல்லைப் 'பண்' என்னும் பொருளில் ஆண்டனர்.

நரப்புக் கருவியைக் குறித்து அச் சொல் சங்க நூல்களிற் பயின்று வருதலானும், அற்றை உலக வழக்கிலும் அதற்கு அதுவே பொருளாத லானும், அதற்குச் சான்றுகள் வேண்டுவதில்லை.

ஆகவே, 8ஆம் நூற்றாண்டிற்கும் 13ஆம் நூற்றாண்டிற்கும் இடையில், இக்காலத்து வீணையைப் பெரிதும் ஒத்த செங்கோட்டியாழ் இருந்ததென்றும்; அதற்கு வீணையென்னும் பெயரும் சிறுபான்மை வழங்கிற்றென்றும்; அப் பெயர் ஆகுபெயராக மிடற்றிசையையும் உணர்த்தினதினால், இருபெயரும் இணைந்து வரும் இடைக்கால நூற்பகுதி கட்கு உரையாசிரியர் உரை வரைந்தபோது, அவற்றுள் தென்சொல்லைக் கருவிப் பெயராகவும் வடசொல்லை மிடற்றிசை குறித்ததாகவும் கொண்டனர் என்றும்; செங்கோட்டி யாழினும் வேறாகச் சிறந்ததொரு நரப்புக்கருவி இந்தியாவிலேயே இதுவரை யிருந்ததில்லை யென்றும்; யாழ், வீணை என்னும் இரு சொற்களும் ஒருபொருட் கிளவியாய் ஒரே கருவியையே குறிக்குமென்றும்; இதனால் வீணை வாசிப்புச் செயன் முறையும் அதுபற்றிய குறியீடுகளும் பொய்யாய்ப் போகா என்றும் அறிந்துகொள்க.

2. "யாழ் வடிவைப்பற்றி விபுலாநந்த அடிகள் ஒரு வகையாகவும், திரு. வரகுணபாண்டியனார் மற்றொரு வகையாகவும், வரைந்துள்ளனர்."

செங்கோட்டி யாழைப்பற்றி அடிகள் வரைந்து காட்டியுள்ள படமே உண்மையானதாயின் வறுவாய், கவைக்கடை, உந்தி, ஒற்றுறுப்பு, தந்திரிகரம், மாடகம், தகைப்பு, வணர் முதலிய உறுப்புகளெல்லாம் எங்கே? அவற்றைக் கூறியுள்ள இளங்கோவடிகளும் அடியார்க்குநல்லாரும் பித்தரோ? அன்றிப் பொய்யரோ?

மறைத்திரு. விபுலாநந்த அடிகள் தமிழிசைத் தரத்தை அறியாத வர்கள் என்பது முன்னரே கூறப்பட்டது. அதையே உண்மை யென்று கடைப்பிடிக்க.

3. "உருவச்சிலைச் சான்றை நோக்குவோமாயின், மேல்நாட்டிலும் கீழ்நாட்டிலும் பண்டைக் காலத்திலும் இடைக் காலத்திலுமிருந்த யாழ் வில்யா ழொத்திருந்ததேயன்றி வீணை யொத்திருந்ததன்று என்பது அறியப்படும். இவ் வியல்பிற்குத் தென்னாடு விலக்கன்று."

பண்டைத் தமிழர் இற்றைத் தமிழர் போன்றவரல்லர். முன்னவர் நாகரிகத்திலும் அறிவிலும் நாயகம்பெற்றவர்; பின்னவர் அடிமைத் தனத்திலும் பேதைமையிலும் பெயர் பெற்றவர்.

'செய்கலைக் கரசி செய்யுள்'(Poetry is the Queen of Arts) என்பர் சீரியோர். பண்டைத் தமிழர் செய்யுட் கலையில் ஒப்புயர்வற்றவர் என்பது உலகறிந்த வுண்மை. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் பாகுபாடு தமிழுக்கே சிறந்தது. அவற்றுள்ளும், வெண்பாவும் கலிப்பாவும் போன்ற யாப்பு வகைகளை வேறெந்நாட்டாரும் கனவிலும் கருதியிருக்க முடியாது. யாப்பிலக்கணத்தை யுள்ளிட்ட பொருளிலக்கணமோ மொழி யிலக்கணத்தின் கொடுமுடியாய்த் தமிழரைத் தனிவகுப்பினராகக் காட்டுவது. இத்தகைய இலக்கணத்தாற் பொலிவு பெற்ற இயற்றமிழோ டமையாது, இசைநாடகக் கலைகளையும் அதனொடு கூட்டி முத்தமிழ் என வழங்கிய தொன்றே, பண்டைத் தமிழரின் இசைப்புலமை யேற்றத்தையும் நாடகப்புலமை நாயகத்தையும் மொழித்திற முதன்மையையும் மதிநுட்ப மாண்பையும் ஐயந்திரிபற விளக்கப் போதிய சான்றாம். இத்தகை மொழி வளர்ச்சிக்கேற்ப, வாழ்க்கைமுறை ஒழுக்கம் தொழில்திறம் பொறி வினை முதலிய பிற நாகரிகத் துறைகளிலும் பண்டைத் தமிழர் ஏற்றம் பெற்றிருந்தனர். சிறப்பாக, செய்யுட்கலையில் சீரிய புலமை வாய்ந்திருந்த அவர், அதனொடு நெருங்கிய தொடர்புள்ள இசைக்கலையிலும் ஏற்றம் பெற்றிருந்தனர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

பழந்தமிழ் இலக்கியம் பலவகையில் இறந்துபட்டமையையும், தற்காலத் தமிழன் குலப்பிரிவினையால் தாழ்வுண்டிருப்பதையும், இந்திய வரலாறு தலைகீழாய் எழுதப்பட்டிருப்பதையும், பயன்படுத்திக்கொண்டு பண்டைத் தமிழன் கண்ட யாழ் வில்யாழே என்பது நடுநிலை திறம்பிய நலமில் கூற்றாம்.

4. "திருஞானசம்பந்தர் பாடிய யாழ்முரிப் பண்ணைத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம் யாழிலிட்டுக் காட்ட முடியவில்லை. அவ்யாழ் வீணையா யிருந்திருந்தால் அங்ஙனம் தவறியிருக்க முடியாது. ஏனெனின், மிடற்றி சையின் எத்திற நுணுக்கத்தையும் வீணையிற் காட்ட இயலும். ஆதலால், 9ஆம் நூற்றாண்டுவரை தமிழகத்திலிருந்தது வில்யாழ் வகையே. அதன் பின் (வடநாட்டினின்று) வீணை வந்தது. அது வந்ததும் யாழ் நெகிழவிடப் பட்டது."

திருநீலகண்ட யாழ்ப்பாணர், 'யாழ்முரிப் பண்ணை'த் தம் யாழி விட்டுக் காட்ட முடியாமைக்கு, முதலாவது, அவரது அளவிறந்த சிவபத்தியே காரணம். தருமபுரத்திலுள்ள அவருடைய உறவினர், அவர் திருஞானசம்பந்தரின் திருப்பதிக இசையை யாழ்ப்படுத்தி வந்த திறனைப் புகழ்ந்தபோது, அவர் அதற்கு மிக வருந்தி, யாழிலிட்டுக் காட்ட முடியாத வாறு திருப்பதிகம் பாடும்படி தாமே திருஞானசம்பந்தரை வேண்டினார். இதனால், யாழிலிட்டுக் காட்ட முடியாத பெருமை, திருப்பதிக இசைக் கிருத்தல் வேண்டுமென்று அவர் பேரவாக் கொண்டமை புலனாகும். இத்தகைப் பத்தி நோக்குடையவர் எங்ஙனம் தம் திறமையை அன்று காட்டியிருக்க முடியும்? அவர் காட்ட முயன்றிருப்பினும், அவரது அச்ச மனப்பான்மை எங்ஙனம் இடந்தந்திருக்கும்?

இரண்டாவது, யாழில் மட்டுமன்றி வேறெவர் மிடற்றிலும் இசைக்க முடியாதவாறு, இறைவனருளால் இறும்பூதுச் செயலாக யாழ்முரிப் பண்ணைத் திருஞானசம்பந்தர் பாடினாரென்று, சேக்கிழார் மிகத் தெளிவாகக் கூறுகின்றார். வேறெவர் மிடற்றிற்கும் இயலாத இசை யாழுக்கு மட்டும் எங்ஙனம் இயன்றிருக்கும்? இதனால் யாழ்முரிப் பண்ணைப் பாணர் யாழிலிட்டுக் காட்டமுடியாமை அவர் யாழ் வில்யா ழொத்தது என்னும் போலி யூகிப்பிற் கேதுவாகாமை பெறப்படும்.

மேற்காட்டிய காரணங்களின் உண்மையைப் படிப்போர் அறிதற்கு, அந் நிகழ்ச்சியைக் கூறும் பெரியபுராணச் செய்யுள்களை ஈண்டுக் காட்டு கின்றேன்:

"தருமபுரம் பெரும்பாணர் திருத்தாயர் பிறப்பிடமாம்
அதனாற் சார
வருமலர்தஞ் சுற்றத்தார் வந்தெதிர்கொண் டடிவணங்கி
வாழ்த்தக் கண்டு
பெருமையுடைப் பெரும்பாணர் அவர்க்குரைப்பார் பிள்ளையார்
அருளிச் செய்த
அருமையுடைப் பதிகந்தாம் யாழினாற் பயிற்றும்பே
றருளிச் செய்தார்."

"கிளைஞருமற் றதுகேட்டுக் கெழுவுதிருப் பதிகத்திற்
கிளர்ந்த ஓசை
அளவுபெறக் கருவியில்நீர் அமைத்தியற்று மதனாலே
அகில மெல்லாம்
வளரஇசை நிகழ்வதென விளம்புதலும் வளம்புகலி
மன்னர் பாதம்
*உளம்நடுங்கிப் பணிந்து*திரு நீலகண்டப் பெரும்பாணர்
உணர்த்து கின்றார்."

"அலகில்திருப் பதிக*இசை அளவுபடா* வகைஇலர்கள்
அன்றி யேயும்
உலகிலுளோ ருந்தெளிந்தங் குண்மையினை அறிந்துய்ய
உணர்த்தும் பண்பால்
பலர்புகழுந் திருப்பதிகம் பாடியரு ளப்பெற்றால்
பண்பு நீடி
இலகுமிசை யாழின்கண் அடங்காமை யான்காட்டப்
பெறுவன் என்றார்.

"வேதநெறி வளர்ப்பவரும் விடையவர்முன் தொழுதுதிருப்
பதிகத் துண்மை
பூதலத்தோர் கண்டத்தும் கலத்தினிலும் நிலத்துநூல்
புகன்ற பேத
நாதஇசை முயற்சிகளால் அடங்காத வகைகாட்ட
நாட்டு கின்றார்
மாதர்மடப் பிடிபாடி வணங்கினார் வானவரும்
வணங்கி ஏத்த."

"வண்புகலி வேதியனார் மாதர்மடப் பிடிஎடுத்து
வனப்பிற் பாடிப்
பண்பயிலுந் திருக்கடைக்காப் புச்சாத்த அணைந்துபெரும்
பாண னார்தாம்
நண்புடையாழ்க் கருவியினால் முன்புபோல் கைக்கொண்டு
நடத்தப் புக்கார்க்
கெண்பெருகும் அப்பதிகத் திசைநரம்பில் இடஅடங்கிற்
றில்லை யன்றே."

திருஞானசம்பந்தரினும் முதியரான திருநாவுக்கரசர், "மாசில் வீணையும்" என்று பாடியிருத்தலானும், திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழ்முரிப் பண்ணை இசைத்தற்கியலாமைபற்றித் தம் யாழை உடைத்தற் கெழுந்தபோது, அதைத் தடுத்த சம்பந்தர் 'யாழை விட்டுவிட்டு வீணையை மேற்கொள்ளும்' என்னாது, 'திருப்பதிக இசையை இயன்றவரை இயக்கும்' என்றமையானும்; பாணரும் வேறொரு நரப்புக் கருவியை மேற்கொள் ளாமையானும் அவர் கையாண்டது வீணையொத்த கருவியே யன்றி வேறன்று என்பது துணியப்படும்.

இனி, வீணை எத்துணைச் சிறப்பினதாயினும், அதை இயக்குவோர் எத்துணைத் திறவோராயிருப்பினும், அது எல்லெவர் மிடற்றிசையையும் இட்டுக் காட்டற்கேற்றது என்பது முற்றும் உண்மையானதன்று. இறைவன் அமைத்த மிடற்றிற்கும் மாந்தன் அமைத்த வீணைக்கும் சிறிதேனும் வேறுபாடு இருக்கத்தான் செய்யும்.

5. "யாழும் வீணையும் வெவ்வேறு கருவிகள்"

ஒரு நரம்புள்ள சுரையாழ் முதல் ஆயிரம் நரம்புள்ள ஆதியாழ் வரை எல்லா நரப்புக் கருவிகட்கும் யாழ் என்பது பொதுப் பெயராகும். எவ்வெவ் வடிவிலிருப்பினும், எவ்வெவ் அமைப்பைக் கொண்டதாயினும், எவ்வெம் முறையில் இசைக்கப்படினும், எவ்வெந் நாட்டிற்குரியதாயினும், நரம்பு அல்லது கம்பிகொண்ட இசைக்கருவிகளெல்லாம் தமிழில் யாழ் என்றே பெயர் பெறுதற்குரியன. கின்னரி அல்லது சீறியாழ்(Fiddle), கித்தார், சுரமண்டலம், மண்டொலின், பேஞ்சோ, புல்புல்தாரா, சுரகெத், சித்தார், கச்சுவா, தாவூஸ், தில்ரூபா, எஸ்ராஜ், சாரிந்தா (சாரங்கி), வில்லடி, சுரைவீணை, அகப்பைக் கின்னரி, வில்யாழ், தம்புரா(கேள்வியாழ்), வீணை முதலிய எல்லா நரப்புக் கருவிகளும் பொதுப்பட யாழ் என்றே அழைக்கப் பெறுவன. ஆகவே யாழ் என்பது ஒரு தனிப்பட்ட கருவியின் சிறப்புப் பெயராகாது. அது தோற்கருவி துளைக்கருவி நரப்புக்கருவி கஞ்சக்கருவி என்னும் நால்வகைக் கருவியுள் நரப்புக்கருவியை யெல்லாம் பொதுப்படக் குறிக்கும் பொதுப் பெயராகும். இப் பாகுபாட்டின்படி இற்றை வீணையும் ஒருவகை யாழாயிருக்க, அதை மட்டும் எங்ஙனம் வேறு பிரித்துக் கூற முடியும்?

யாழும் வீணையும் வெவ்வேறு கருவியாயிருப்பின், நாரதயாழ் நாரதவீணை எனச் சிலப்பதிகாரத்தும், மகரயாழ் மகரவீணை எனச் சிந்தாமணியிலும், ஒரே கருவி ஏன் இரு பெயராலும் அழைக்கப்பெறல் வேண்டும்? ஆதி (பெரு), மகர, சகோட, செங்கோட்டு, முண்டக, சிறு முதலிய அடையடுத்தாலன்றி, யாழ் என்னும் பெயர் ஒரு சிறப்புவகை நரப்புக் கருவியைக் குறிக்காது. ஆயினும், சுருக்கம்பற்றி, துப்பாக்கியிற் பலவகை யிருப்பினும் அவற்றுட் சிறந்ததும் துப்பாக்கியென்றே அழைக்கப்பெறுதல் போல, யாழுட் பலவகையிருப்பினும் அவற்றுட் சிறந்ததும் யாழ் என்றே அழைக்கப்பெறும்.

நரப்புக்கருவி வில்நாணொலியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிதலால், வில்யாழே முதன்முதல் தோன்றிய யாழ்வகையாக இருத்தல்வேண்டும். அதன்பின், பத்தர் (குடம்) உள்ள வில்யாழும், பத்தரும் கோடும் (தண்டியும்) உள்ள கோட்டியாழும், பத்தரும் கோடும் திவவுமுள்ள திவவியாழும், முறையே தோன்றியிருத்தல் வேண்டும். தலைச்சங்க காலத்திலேயே தமிழ் முத்தமிழாய் வழங்கியதால், கடைச்சங்க காலத்துச் சிறந்த யாழ்வகைகளாகக் கொள்ளப்பட்ட பேரியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டியாழ் என்னும் நால்வகை திவவியாழாகவே இருந் திருத்தல் வேண்டும். அவை முறையே யாழும் ஒன்றினொன்று ஏதேனு மொரு வகையில் சிறந்ததாயு மிருந்திருத்தல் வேண்டும். அவற்றுள், செங் கோட்டியாழ் கருவியமைப்பில் இற்றை வீணையை ஒத்ததாகும். நரம்பிற்குப் பதிலாய்க் கம்பியும் வார்த்திவவிற்குப் பதிலாய் வெண்கல மெட்டும் தோற் போர்வைக்குப் பதிலாய் மரப்பலகையும் வறுவாய்க்குப் பதிலாய் நுண்

துளைத் தகடும், கொண்டிருத்தலே இற்றை வீணையின் வேறுபாடாம். குட வடிவிற் சிறிது மாறுதல், கோல் எனப்படும் மெட்டுத் தொகையிற் கூடுதல், ஆகியவற்றையும் வேறுபாடாகச் சேர்த்துக்கொள்ள லாம். இவையெல்லாம் காலவளர்ச்சியில் வசதிக்கேற்ப ஏற்பட்டவை. ஈராயிரம் ஆண்டுக்கு முற் பட்ட செங்கோட்டியாழ் இன்று இத்துணை வேறுபட்டிருப்பது வியப்பன்று.

"பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
*சீர்பொலியுஞ் செங்கோடு* செப்பினார் - தார்பொலிந்து
மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே
*பின்னு முளவே* பிற"

என்பதனால், கடைச்சங்க காலத்தில் பலவகை யாழ்கள் இருந்தன என்பதும், அவற்றுள் நான்கு சிறந்தன என்பதும், அவற்றுள்ளும் செங்கோட்டியாழ் தலைசிறந்தது என்பதும் அறியப்படும். காலமுறைப்படி நோக்கின், இசைவல்லார் கையாளும் கருவிகளுள் பிந்தினது சிறந்திருக்குமேயன்றி முந்தினது சிறந்திருக்காது. நால்வகை யாழுள் இறுதியது செங்கோட்டி யாழாதலின், அது ஏனையவற்றினும் சிறந்ததாயிருத்தல் வேண்டும்.

ஆகவே, யாழ் என்பது தமிழ்நாட்டில் மட்டுமன்றி உலகமெங்கணும் முக்காலும் வழங்கும் நரப்புக் கருவிகட்கெல்லாம் பொதுப்பெயர் என்றும், அச் சொல்லைச் சிறப்புப் பெயராகக் கொண்ட ஒரு தனிக் கருவியும் கடைச்சங்க காலத்திருந்ததில்லை யென்றும், அன்றிருந்த பலவகை யாழுள் தலைசிறந்த செங்கோட்டியாழே இன்று வீணை என்னும் வடசொற் பெயர் கொண்டு வழங்கிவருகிறதென்றும், யாழ் வேறு வீணை வேறு என்பது இரு வகையில் தவறான திரிபுக்கொள்கை என்றும் அறிந்துகொள்க. யாழ் என்னும் தென்சொல் பிற்காலத்து வழக்கற்றதினாலேயே முற்காலத்தில் சுரையாழ் என வழங்கியது. இன்று சுரைவீணை அல்லது வீணை என உலக வழக்கில் வழங்குகின்றது.

6. "யாழில் விரலுறுகோடு (Finger-board) இல்லை. அதன் குடத்தி னின்றெழுந்த நரம்புகள் நேரே அதன் வளைவுக்கோட்டில் கட்டப்பட்டன."

இதற்கு மறுப்பு. ஏனை மறுப்புகளிலும், திரு. வரகுண பாண்டியனார் இலக்கியச் சான்றும் மேற்கோளும் காட்டி விளக்கியுள்ள செங்கோட்டி யாழின் 18 உறுப்புகளின் வரணனையுள்ளும், படங்களுள்ளும் கண்டு கொள்க.

"கோடே பத்த ராணி நரம்பே
மாடக மெனவரும் வகையின வாகும்"

"மாட்டிய பத்தரின் வகையு மாடகமுந்
தந்திரி யமைதியுஞ் சாற்றிய பிறவு
முந்திய நூலின் முடிந்த வகையே"

என்னும் பழஞ் சூத்திரங்களையும்,

"மணிகடை மருப்பின் வாளார் மாடக வயிரத் தீந்தேன்
அணிபெற வொழுகி யன்ன அமிழ்துறழ் நரம்பின் நல்யாழ்" 1722

என்னும் சிந்தாமணிச் செய்யுளையும் நோக்குக.

7. "யாழும் வீணையும் இடைக்காலத்தில் இறுதிவரை தமிழ்நாட்டில் பக்கம் பக்கமாயிருந்து வந்தன. மாணிக்கவாசகரின் திருப்பள்ளி யெழுச்சி யில், இரு கருவிகளும் உடன் குறிக்கப்படுகின்றன. புதுக் கோட்டைத் திருமயத்திலுள்ள திருமால் கோவிலுள் எழுமுனிவர்(சப்தரிஷி) சிலையில் இரு கருவி வடிவங்களும் உடன் பொறிக்கப்பட்டுள. வேத இலக்கியத் துள்ளும் யாழும் வீணையும் பற்றிய குறிப்புள்ளது."

நால்வகை யாழுள் செங்கோட்டியாழ் சிறந்ததாதலானும், குலப் பிரிவினையால் நேர்ந்த இழிவு காரணமாகப் பாணர் தம் பிழைப்பிழந்து பாண்தொழிலை அடியோடு கைவிட்டமையானும், ஏனை மூன்று யாழ்களும் படிப்படியாய் வழக்கிறந்தன.

ஆரியர் தென்னாடு வருமுன் அல்லது வடசொல் தமிழ்நாட்டில் வழக்கூன்றுமுன், செங்கோட்டியாழ் செந்தமிழ்ப் பெயராலேயே வழங்கி வந்தது. அதன்பின், அதற்கு வீணை என்னும் வடசொற் பெயர் புகுத்தப் பட்டது. சிறிது காலத்தின் பின் தமிழ்ப் பெயர் வழக்குவீழ்ந்தது. அதன் பின்னர், செங்கோட்டியாழ் வீணை என்னும் வடசொற் பெயராலும், இசை யெளியார் கையிலுள்ள பன்னரம்பு வில்யாழ் யாழ் என்னும் தமிழ்ப் பெயராலும், வழங்கிவந்தன. இடைக்காலத்தின் பின், அவ் வில்யாழும், கருவியும் பெயரும் ஒருங்கு வழக்குவீழ்ந்தது. பண்ணிசைத்தற்குரிய பண்டை யாழ்வகைகளுள், செங்கோட்டியாழ் ஒன்றே இன்று சிறிது உருக்கரந்தும் பெயர் மாறியும் வழங்கி வருகின்றது. தமிழ நாகரிகப் பழக்க வழக்கங்களுள்ளும் பொருள்களுள்ளும், தலைசிறந்தவற்றைத் தழுவிக் கொண்டு அவற்றைத் தமவாகக் காட்டுவது, ஆரியர் வழக்கம்.

செங்கோட்டியாழ் வீணையெனப் பிரிக்கப்பட்டபின் னெழுந்த நூல்களிற் சில, வில்யாழையும் செங்கோட்டியாழையும் முறையே "யாழும் வீணையும்" என உடன் கூறுகின்றன. திருமயம் சிலை இக் கொள்கை பற்றியதே. எந்நாட்டிலும் உயர்ந்த கருவியுடன் தாழ்ந்த கருவியும் பயில்வது இயல்பு. மதங்கம் (மிருதங்கம்) இருக்கும்போது கஞ்சிராவும், வீணையிருக்கும்போது புல்புல்தாராவும் வழங்குதல் காண்க. 'யாழ்', 'வீணை' என்னும் பெயர்கள் அடுத்துவரும்போது, அவற்றுள் ஒன்று மிடற்றிசை யைக் குறியாவிடின், முன்னது வில்யாழையும் பின்னது செங்கோட்டி யாழையுமே குறிக்கும்.

ஆரியர் கி.மு. 1500 ஆண்டுகட்கு முன்பே தமிழ்நாட்டிற் சிறுசிறு குடும்பங்களாகக் குடியேறிவிட்டதனால், வேத இலக்கியத்தில் யாழும் (வில்யாழும்) வீணையும் (செங்கோட்டியாழும்) பற்றிய குறிப்பிருப்பது வியப்பன்று.

முல்லை நாகரிக நிலையிலிருந்த நாடோடிகளான வேத ஆரியர் இந்தியாவிற்குள் புகுமுன்னரே, தமிழ் முத்தமிழாய் வழங்கிற்றென்பதையும், தமிழ் நாகரிகம் பனிமலை (இமயம்) வரை பரவியிருந்ததென்பதையும் நினைவிலிருத்துதல் வேண்டும்.

பண்டைக் காலத்தில் யாழ் என்னும் தமிழ்ப்பெயர் நரப்புக் கருவி களையெல்லாம் குறித்தவகை யொட்டி, இன்று வீணை என்னும் வடசொற் பெயரும் ஒரு கம்பியுள்ள இரப்போன் யாழ்முதல் எழு கம்பியுள்ள செங்கோட்டியாழ் வரை எல்லாக் கம்பி யிசைக்கருவிகளையும் குறித்து வருகின்றது.

செங்கோட்டியாழ் வடசொற் பெயர் பூண்டபின் தமிழ்ப்பெயரை யிழந்தமைக்கு, முதுகுன்றம் மறைக்காடு முதலிய தமிழ்நாட்டூர்கள் முறையே விருத்தாசலம் வேதாரணியம் என வடமொழிப் பெயர் பூண்டபின் தம் தமிழ்ப் பெயர்களை யிழந்தமை சிறந்த ஒப்பனையாம். அவ் வூர்கள் தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டைச் சேர்ந்தனவாயுள்ளமை அனைவரும் அறிவர். ஆயினும், அவற்றை வடசொற் பெயராலன்றித் தென்சொற் பெயராற் குறிப்பின், இன்று புலமக்கள் தவிரப் பொதுமக்கள் பொருளறியார்.

8. "பண்டைத் தமிழ்யாழ் வீணைபோன்றிருந்ததாயின், ஒவ்வொரு யாழிசைஞனும் விலக்க வேண்டியிருந்த 'அதிர்வு' என்னுங் குற்றத்திற்கு எங்ஙனம் காரணங்காட்ட முடியும்? யாழின் மெலிவு நரம்பைத் தெறித்த போது, அது ஏனை நரப்பிசையி னின்பம் நுகரப்படாதவாறு அதிர்ச்சியை உண்டுபண்ணிய தாதலின், அதை உடனே நிறுத்துதற்கு யாழோன் கையில் ஒரு கோல் இருந்தது. இக் கோலுருவம் அமராவதி யாழோன் சிலையில் பொறிக்கப்பட்டுள்ளது."

பேரியாழ் முதலிய மூன்றியாழ்களிலும், ஒலிபெருக் குறுப்பாகத் தரப்புச்சித்தாரில் பண்மொழி நரம்பிற்குக் கீழ் அமைத்திருக்கும் அதிர்வு நரம்புகளைப்போல், சில அதிர்வு நரம்புகள் அமைக்கப் பெற்றிருந்தன. பண்மொழி நரம்புகளை இசைக்கும்போது, அவ் அதிர்வு நரம்புகள் ஒலி பெருக்குவதுடன் அதிர்வையும் உண்டுபண்ணும். யாழ் இசைப்பவரின் தேர்ச்சிக்குத் தக்கவாறு அவ் அதிர்வு குறையும், அல்லது நீங்கும். இத் தகைய அதிர்ச்சி அல்லது இரைச்சல் நிகழாதவாறு, ஒவ்வோர் யாழிசைஞனும் காத்துக்கொள்ள வேண்டியிருந்தது. இவ் வதிர்ச்சி அதிர்வு நரம்புகளால் நேர்ந்ததேயன்றி யாழால் நேர்ந்ததன்று.

இவ் வதிர்வு நரம்புகளால் இனிமை கெடுகிறதென் றறியப்பட்டபின், பேரியாழிலிருந்த 14 அதிர்வு நரம்புகள் மகரயாழில் 12 ஆகவும் சகோடயாழில் 7 ஆகவும் குறைக்கப்பட்டு, இறுதியில் செங்கோட்டியாழில் அடியோடு விலக்கப்பட்டன.

மேலும், நரம்பின் அதிர்வு யாழின் மரக்குற்றத்தாலும் பிறக்கும். இதை, 'நரம்பினிசையாற் பிறந்த பொல்லாமை'யாவன:

"செம்பகை யார்ப்புக் கூட மதிர்வு...."

"அதிர்வெனப் படுவ திழுமென லின்றிச்
சிதறி யுரைக்குந ருச்சரிப் பிசையே" (சீவக. 718)

என்பன.

இவை மரக் குற்றத்தாற் பிறக்கும்:

"நீரிலே நிற்றல் அழுகுதல் வேதல் நிவமயங்கும்
பாரிலே நிற்றல் இடிவீழ்தல் நோய்மரப் பாற்படல்கோள்
நேரிலே செம்பகை யார்ப்பொடு கூடம் அதிர்வுநிற்றல்
சேரினோர் பண்கள் நிறமயக் கம்படும் சிற்றிடையே" (சீவக. 719)

என்னும் நச்சினார்க்கினியர் உரையான் அறிக.

யாழோன் கையிலிருந்த கோல், அவன் தன் யாழ்ப் புலமையை அரங்கேற்றிய காலத்து அவனுக்கு அளிக்கப்பட்ட வரிசைச் சின்னமே யன்றி, மெலிவு நரம்பதிர்ச்சியைத் தடுக்கும் இசைக்கருவி யுறுப்பன்று. மாதவி தன் ஆடல்பாடலை அரங்கேற்றித் தலைக்கோற் பட்டம் பெற்றாள். அப் பட்டம் ஒரு கோலுடன் கொடுக்கப்பெறுவது. அக் கோல் தலைக்கோல் எனப்படும். தலைக்கோல் இசைநாடகக்கலையில் தலைமை குறிக்கும் கோல். 'தலைக்கோல் தானம்', 'தலைக்கோலாசான்', 'தலைக்கோலரிவை' முதலிய வழக்குகளை நோக்குக.

9. "வீணை ஒருகாலும் தமிழ்நாட்டி லிருந்ததில்லையென்று நூலாசிரியர் கூறுகின்றார்."

செங்கோட்டியாழினும் வேறாக வீணையென்றொரு சிறந்த கருவி ஒருகாலும் தமிழ்நாட்டிலிருந்ததில்லை என்பது ஆசிரியர் கருத்தேயன்றி, வீணையே ஒருகாலும் தமிழ்நாட்டிலிருந்ததில்லை என்பதன்று.

10. "21 நரம்புள்ள பேரியாழிலும் பண்மொழி நரம்புகள் ஏழேயாகவும் ஏனைய வெல்லாம் அதிர்வு நரம்புகளாகவு மிருந்திருப்பின், அதற்குப் பெரும் பத்தர் எதற்கு? இசைபெருக்க அதிர்வு நரம்புகளே போதுமே!"

முற்கால மக்கள் உருவத்திற் பெரியவராயிருந்ததினால், அவர் கையாண்ட கருவிகளெல்லாம் பெரியனவாகவே யிருந்தன. மக்கள் உருவம் வரவரச் சிறுத்துவருவதினால், அவர்கள் கையாளும் பலவகைக் கருவிகளும் சிறுத்துவருகின்றன. பேரியாழ் மிகப் பழையதாதலின், அது முதுபழங்கால மக்கட்கேற்றபடி மிகப் பெரியதாயிருந்திருக்கின்றது. அது நால்வகை யாழில் முதற் குறிக்கப்பெறுவதற்கு அதன் பழைமையே காரணம். கடைச்சங்க காலத்திலும் அது வழங்கினதாகக் கூறப்படினும், அது உருவத்திற் பெரியவர்க்கே உரியதாய் அருகின வழக்காகவே வழங்கின தாகத் தெரிகின்றது.

அதிர்வு நரம்புகளால் இசையைப் பெருக்கலாம் என்ற எண்ணம் உண்டானபின், பெருங்கலம் என்னும் பேரியாழில் முதன்முதலாக அதிர்வு நரம்புகள் சேர்க்கப்பட்டிருத்தல்வேண்டும். ஆகவே, அவ் யாழில் பெரும் பத்தர் முந்தினதும் அதிர்வு நரம்பு பிந்தியதுமாகும். தலைச்சங்க காலத்து மக்கள் தம் உடற் பருமனுக்கேற்றபடி, இயல்பாகவே பெரும் பத்தர் அமைத்திருத்தல் வேண்டும். பிற்காலத்துச் சிற்றுருவ மக்களின் சீறியாழ்க ளோடு ஒப்புநோக்கிய பின்னரே, அதற்குப் பெருங்கலம் அல்லது பேரியாழ் என்று பெருமைச்சொல் அடைகொடுத்துப் பின்னோர் பெயரிட்டதாகத் தெரிகின்றது. முதற்காலத்தில் அது அளவான கருவி யாகவே கருதப்பட்டிருக்கலாம். பழங்காலத்திற் பெருவழக்காக வழங்கிய தாக நூல்களிற் கூறப்படும் மத்தளம், அதன் பருமை காரணமாக இன்று பயன்படுத்தப்படாமல் சில சிற்றூர்களிற் பதுங்கிக் கிடக்கின்றது. அதன் சிறுவடிவான மதங்கம் (மிருதங்கம்) இன்று பெருவழக்காயுள்ளது. இங்ஙனமே, பேரியாழ் சீறியாழ் நிலைமைகளும் கடைச்சங்க காலத்தில் இருந்திருத்தல் வேண்டும்.

பேரியாழினும் பேரியாழான ஆதியாழ் (பெருங்கலம்) வேறு; நாரதப்பேரியாழ் என்பதும் வேறு.

"பெருங்கலமாவது பேரியாழ்; அது கோட்டினதளவு பன்னிரு சாணும், வணரளவு சாணும், பத்தரளவு பன்னிரு சாணும், இப் பெற்றிக் கேற்ற ஆணிகளும் திவவும் உந்தியும் பெற்று, ஆயிரங்கோல் கொடுத் தியல்வது; என்னை?

"ஆயிர நரம்பிற் றாதியா ழாகும்
ஏனையுறுப்பு மொப்பன கொளலே
பத்தரளவுங் கோட்டின தளவும்
ஒத்த வென்ப இருமூன் றிரட்டி
வணர்சாணொழித்தென வைத்தனர் புலவர்".

என்பது அடியார்க்குநல்லார் உரைப்பாயிரம். நாரதப் பேரியாழ் வில்யாழ் வகையாகும்.

இதுகாறும் கூறியவாற்றால், திருமான் வரகுணபாண்டியனார் அவர்களின் பாணர்கைவழி முடிபுகள் அனைத்தும் உண்மையே என்றும், அத்ற்குத் திருமான் சாம்பமூர்த்தி அவர்கள் வரைந்த மறுப்பு சற்றும் பொருந்தாதென்றும் அறிந்துகொள்க.

குறிப்பு: வீணை என்னும் பெயர், வடசொல் என இம் மறுப்புரையிற் கூறியுள்ளேன். அது 'விண்' என்னும் பகுதியடியாகப் பிறந்த தென் சொல்லே யென்று மூதறிஞர் துடிசைகிழார் கூறியுள்ளனர். விண்ணென ஒலித்தது, விண்ணென இசைத்தது, விண்ணென இரைந்தது, விண்ணெனத் தெறித்தது என இருவகை வழக்கினும் வழங்குதலானும், 'விள்' என்னும்

வேர்ச்சொற்கு ஒலித்தல் சொல்லுதல் என்னும் பொருள்க ளுண்மையானும், அவர்கள் கூற்றும் ஒப்புக்கொள்ளத் தக்கதே.

இனி, முகவீணை என ஒரு குழற்கருவி யிருத்தலானும், அதன் இசை ஒருவகையில் விளையைச்சீழ்க்கை யொலியை யொத்திருத்தலானும், வீணை என்னும் பெயர் மிடற்றிசையையுங் குறித்தலானும், வீளை யென்னும் சொல்லினின்று வீணை யென்னும் பெயர் திரிந்ததோ எனவும் ஐயுறக் கிடக்கின்றது.

விண் என்னும் சொல்லினின்று நீட்டல் திரிபாகவோ, வீளை யென்னுஞ் சொல்லினின்று போலித்திரிபாகவோ, வீணை யென்னும் பெயர் தோன்றியிருக்கக்கூடியது பொருத்தமே. ஒரு பொருள்பற்றித் தென் சொல்லின் வேறாக வழங்கும் வடசொற் சில, தென்சொல்லி னடியாகவே பிறந்திருத்தலின், மேற்கூறிய கூற்று வியப்பிற்கிடமானதன்று.

– "செந்தமிழ்ச் செல்வி" சனவரி 1951

(9)

# சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் மதிப்புரை மறுப்பு

ஈராண்டுகட்குமுன் என் 'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளை'ப் பற்றி 'இந்து'த் தாளில் ஒரு மருங்கு போற்றியும் ஒரு மருங்கு தூற்றியும் ஒரு மதிப்புரை வந்திருந்தது. அதை எனக்கு ஒரு நண்பர் கொண்டுவந்து காட்டினார். அதன் பின்னர்த்தான், 'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்' ஒரு படி 'இந்து'ச் செய்தித் தாட்குத் திருவாளர் வ. சுப்பையாப் பிள்ளையவர் களால் மதிப்புரைக்காக விடுக்கப்பட்டிருத்தல் வேண்டும் என ஊகிப்பால் அறிய நேர்ந்தது. எனக்குச் சொல்லாமல் விடுத்ததினால் அதை முன்னறிய வில்லை. என்னைக் கேட்டிருந்தால் நான் தடுத்திருப்பேன். ஏனெனில், விளைவு முன்தெரிந்தது என்பது மட்டுமன்று, என் 'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளை' ஆயும் ஆற்றலுடையார் 'இந்து' நிலையத்திலாவது அந் நிலையச் சார்பிலாவது இல்லை என்பதே என் கருத்து.

மதிப்புரையைப் படித்தவுடன் "திருவாளர் சுப்பிரமணிய சாத்திரியார் அவர்கள் தங்கள் கொள்கைக்குச் சார்பான அல்லது மாறலல்லாத பகுதியைப் போற்றியும் மாறான பகுதியைத் தூற்றியும் வரைந்துள்ளார்கள்," என்று என் நண்பரிடம் சொன்னேன். அவர் உடனே "ஒரு மறுப்புரை விடுக்க வேண்டும்" என்றார். நான் அம் மதிப்புரையைப் பொருட்படுத்தாததினால் அவர் விருப்பிற்கிசையாது வாளா இருந்துவிட்டேன்.

இன்று, என் 'பாணர் கைவழி' மதிப்புரை மறுப்பைப் பார்த்தவுடன், என் நண்பர் மீண்டும் என்னிடம் ஓடிவந்து, "ஐயா! ஏனையர் இயற்றிய நூல்பற்றி யெழுந்த மதிப்புரைக்கு மட்டும் மறுப்புரை விடுத்தீர்களே! ஏன் தாங்கள் இயற்றிய 'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்' மதிப்புரைக்கு இன்னும் மறுப்புரை விடுக்கவில்லை? இதனால், திருவாளர் சுப்பிரமணிய சாத்திரியா ரவர்கள் வரைந்த மதிப்புரை சரியானதே யென்றும், தங்கட்கு அதை மறுக்கும் மதுகை யில்லை என்றும் அல்லவா படும்?" என்று எனக்கு மான வுணர்ச்சி தோன்றுமாறு ஒரு முறை கூறியதோடமையாது திரும்பத் திரும்பச் சொல்லி வற்புறுத்தியதின் பயனாக, இம் மறுப்புரை வருகின்ற தென்க.

சாத்திரியார் அவர்கள் கூற்றுகளை எம் வழக்கம்போல் ஒவ்வொன்றா யெடுத்து மறுப்பாம்:

1. "அந்தணர் என்பார் ஒரு குலத்தார் என்பது தொல்காப்பியத் திலேயே குறிக்கப்பெற்றுள்ளது."

அந்தணர் என்னும் பெயர் முதலாவது முனிவரை அல்லது துறவோரையே குறித்ததென, அச் சொல்லமைப்பே காட்டும்.

அந்தண்மையுடையார் அந்தணர். அந்தண்மை அழகிய அருளு டைமை. ஆதலின், அந்தணராவார் அழகிய அருளுடைய முனிவர்.

"அந்தண்மை பூண்ட.....அந்தணர்." (திருமந்திரம் 234)

"அந்தண் பொதியி லகத்தியனார்" (நக்கீரர்)

('பொதியில்' என்பது இங்கு இடைப்பிறவரல்)

"அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்" (குறள். 30)

எனத் திருவள்ளுவர் தெள்ளத் தெளியப் பொருளுணர்த்தியதுமன்றி, இக் குறளைத் துறவோரைப் பற்றிக் கூறும் 'நீத்தார் பெருமை' யதிகாரத்தில் வைத்தது குறிப்பிடத்தக்கது.

பிங்கலத்தின், குரவரைப் பற்றிக் கூறும் ஐயர் வகையில்,

"முனிவர் மாதவர் இலிங்கிகள் முனைவர்
படிவர் உறுவர் பண்ணவர் ஐயர்
அறவோர் தபோதனர் அறிஞர் அந்தணர்
துறவோர் கடிந்தோர் மோனியர் யோகியர்
கோபங் காய்ந்தோர் நீத்தோர் மெய்யர்
தாபதர் இருடிகள் தம்பெய ராகும்"

என இருடிகள் (முனிவர்) பெயரைக் கூறும் முதற் சூத்திரத்தில் 'அந்தணர்' என்னும் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

துறவியர் சிறந்த அறவோரும் தூயோருமாதலின் அந்தணன் என்னும் பெயர் அறவோன் தூயோனையுங் குறிக்கும்.

முதன்முதலாக மக்களால் அறியப்பட்ட அருளுடையோர் முனிவரே யாயினும் உண்மையில் இறைவனே சிறந்த அருளுடை யோனாதலின், அந்தணன் எனும் பேர் இறைவனையுங் குறிக்கும்.

"மணிமிடற் றந்தணன்" (அகம். கடவுள் வாழ்த்து)

"செந்தீ வண்ண ரந்த ணாளர்" (தேவாரம் 1815)

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு." (குறள். 261)

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்." (குறள். 251)

என்னுங் குறள்களாலும், 'அருளுடைமை,' 'புலான் மறுத்தல்,' 'கொல்லாமை' என்னும் அறங்களை வள்ளுவர் துறவறவியலில் வைத்து வற்புறுத்துவதாலும், துறவறத்தின் இயல்பாலும், அந்தணர் என்னும் பெயர் துறவியர்க்கே பொருந்தும் என்பது தேற்றம்.

தொல்காப்பியர், துறவியரை அந்தணர் அறிவர் ஐயர் தாபதர் என்னும் சொற்களாலும், கல்வித் தொழிலால் அவரோ டொருமருங்கொப் புடைய இல்லறத்தாரைப் பார்ப்பார் என்னும் சொல்லாலும் வேறுபடுத்திக் காட்டுவது கவனிக்கத்தக்கது.

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய" (1570)

எனத் தொல்காப்பியர் கூறும் அந்தணர் சின்னங்களே, அவர் துறவியரைச் சுட்டிக் கூறியமையை யுணர்த்தும்.

அந்தணர் என்னும் பெயர் இவ்வாறு துறவியர்க்கே யுரியதாயினும் பொருளிலக்கணத்தின் பொருட்டுப் பல்வேறு தொழில்களையும் கல்வி போர் வணிகம் கைத்தொழில் என்னும் நால்வகையுள் அடக்கி எல்லாக் குலங்களையும் நாற்பாற்படுத்துக் கூறும்போது,

"ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொரு ளொழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கினும் அஃறிணை மருங்கினும்," (தொல். 532)

என்னும் விதிப்படி

உவச்சர், பூசாரியர், தேவராளர், குருக்கள், பண்டாரவர், புலவர், கணக்காயர், கணியர், வள்ளுவர், பார்ப்பார் முதலிய பல்திறக் கல்வித் தொழிலாளரும் அந்தணர் என்னும் தலைமைச் சொல்லாற் குறிக்கப் பெறுவர், அல்லது அந்தணருள் அடக்கப் பெறுவர். (இங்குக் குறிக்கப் பெற்றா ரெல்லாருந் தமிழ்க் குலத்தாரே).

இதனால், அந்தணர் என்னும் பெயர் சிறுபான்மை இல்லறத்தாரான கல்வித் தொழிலாளரையுங் குறிக்கும். இங்ஙனங் குறிப்பது நூல் (செய்யுள்) வழக்கேயன்றி உலக வழக்கன்று.

ஆரிய இனத்தைச் சேர்ந்த பிராமணர் தென்னாடு (தமிழகம்) வந்து குடியேறியபோது, அவருள் துறவு அல்லது துறவொத்த நிலையிலுள்ளார் அந்தணர் என்றும், இல்லறத்தார் பார்ப்பா ரென்றும், நிலையொப்புமையும் தொழிலொப்புமையும் பற்றி அழைக்கப்பட்டார். பின்பு, இனவொருமை யாலும் ஆரிய வருணாசிரம தருமம் பற்றிய குலப்பிரிவினையாலும், இரு சார் பிராமணரும் ஒரு சாரராகி, அந்தணர் பார்ப்பார் என நூல் வழக்கிலும்,

பார்ப்பார் என மட்டும் உலகவழக்கிலும், அழைக்கப்பட்டனர். பிராமணரை மட்டும் அந்தணர் எனக் கூறும் தமிழ்நூல்க ளெல்லாம் பிற்காலத்தனவன்றி முற்காலத்தனவல்ல. அந்தணர் பார்ப்பார் என்னும் இருபெயரும் தூய தென்சொல்லாயிருத்தலே, அப் பெயராற் குறிக்கப்பட்ட தமிழ் வகுப்பார் அல்லது குலத்தார் தொன்றுதொட்டுத் தென்னாட்டிலிருந்து வந்தமையைப் புலப்படுத்தும். மேனாட்டினின்று வந்த ஐரோப்பியர் (ஆட்சித் தொழில் பற்றித்) துரைமார் என்னும் தமிழ் அல்லது தெலுங்கச் சொல்லாற் குறிக்கப் பட்டது போன்றே, வடநாட்டினின்று வந்த பிராமணரும் அந்தணர் அல்லது பார்ப்பார் என்னும் தமிழ்ச்சொல்லாற் குறிக்கப்பட்டனர் என்க. ஆயினும், பிராமணர் தம்மைத் தமிழரினும் உயர்ந்தவராகக் காட்டிக் கொள்வதால், தம்மைப் பிராமணர் என்னும் வட சொல்லாலன்றிப் பார்ப்பார் என்னும் தென்சொல்லாற் குறிக்க விரும்புகின்றிலர். ஆயின், தமிழ்நாட்டில் எல்லாவகையிலும் தலைமை பெற்ற முனிவரைக் குறிக்கும் ஐயர் அந்தணர் என்னும் தென்சொற்களால் தம்மைக் குறிப்பதில் பெருமையும் பெரு மகிழ்வுங் கொள்கின்றனர். அதோடு, அவ் விரு தென்சொற்களையும் வடசொல்லாகக் காட்டவும் முயல்கின்றனர். இம் முயற்சியின் நோக்கம், பிராமணரே தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டில் ஐயரென்றும் அந்தண ரென்றும் அழைக்கப்பெற்று வந்தவர் எனக் காட்டுவதேயாகும். இதனால், தமிழ் நாகரிகம் ஆரிய நாகரிகமாகக் கொள்ளப்பட்டுவிடும் என்பது கருத்து.

பிராமணர் வந்தபோதிருந்த தமிழப் பார்ப்பார் பிராமணரொடு கலந்துவிட்டமையால், இன்று பார்ப்பார் என்று (வடமொழியறியாது தமிழி லேயே வழிபாடியற்றும்) ஒரு தமிழக் குலத்தார் இல்லை. இங்ஙனங் கலந்து போனமையால், பிராமணருக்குத் தொகைப் பெருக்கமும் தமிழ்ப் பார்ப் பார்க்குக் குலவுயர்வும் பயன். குருக்கள் என்னும் ஒருசார் தமிழப் பூசனைக் குலத்தாருள் ஒரு பகுதியினர், அண்மையிலேயே வட மொழியைக் கற்றுக் கொண்டு அதில் வழிபாடியற்றுவதன் பயனாகப் பிராமணராகியுள்ளனர் என்று சொல்லப்படுகின்றது. தூய தமிழ்க் குலத்தாரான செட்டிமார் தம்மை வைசியரென்றும், நாடார்கள் தம்மைச் சத்திரியரென்றும், வேளாளர் தம்மைச் சூத்திரர் அல்லது சற்சூத்திரர் என்றும், சொல்லிக்கொள்வது மேற்கூறியதை நன்கு விளக்கும்.

இதுகாறுங் கூறியவற்றால், அந்தணர் என்னும் சொல் முனிவரையே சிறப்பாகக் குறிக்குமென்றும், பொருளிலக்கணப் பாகுபாடுபற்றிச் சிறுபான்மை கல்வித் தொழிலைப் பொதுவாக வுடைய பல்குலத்தாரையும் சுட்டுமென்றும், ஒரு நிலையாரையன்றி ஒரு குலத்தாரையுந் தனிப்படச் சுட்டாதென்றும், பிராமணரை அந்தணரென்றது பிற்கால வழக்கென்றும், அறிந்துகொள்க.

2. "பத்தினி என்னும் சொல் 'பத்நீ' என்னும் வடசொல்லின் திரிபன்றி, பத்தன் (பக்தன்) என்பதன் பெண்பால் வடிவமன்று."

வடமொழியில் கணவனைக் குறிக்கும் பதி என்னும் சொல்லின் பெண்பால் வடிவமான பத்நீ என்பது, மனைவி என்று மட்டும் பொருள் படுவதேயன்றித் தமிழிற்போல் கற்புடைய மனைவியையே குறிப்பதன்று. பத்தினி அல்லது பத்தினிப்பெண் என ஒரு பெண்ணைக் குறித்துத் தமிழர் சொல்லும்போதெல்லாம், கணவன்மாட்டுப் பத்தி யுடையவள் என்றே கருதிச் சொல்கின்றனர் என்பதைச் சாத்திரியார் அவர்கள் அறியாதிருப்பது வருந்தத்தக்கது. பத்தினி என்னும் சொல் மனைவி என்றே பொருள்படு மாயின், பத்தினிப்பெண் (மனைவிப்பெண்) என்னும் இருபெயரொட்டு வழக்கிற்கே இடமிராது. இத் தொடரில், பத்தினி என்பது சிறப்புப் பெயரும் பெண் என்பது பொதுப் பெயருமாகும். தெய்வத்தினிடத்தும் தெய்வத் தன்மையுள்ள அரசன் ஆசிரியன் முதலியோரிடத்தும் காட்டும் அச்சத் தோடு கூடிய அன்பு பத்தி எனப்படும். பத்தியுடையவன் பத்தன். பத்தியுடையவள் பத்தினி.

"குலமகட்கு அழகுதன் கொழுநனைப் பேணுதல்", "கற்புடை மனைவிக்குக் கணவனே தெய்வம்" என்னும் பண்டைக் கொள்கைபற்றி, சிறந்த மனைவி கணவனிடத்தே பத்திபூண் டொழுகினமையால், பத்தினி எனப்பட்டாள். ஆகவே, பத்தன் என்னும் ஆண்பாற் பெயர் தெய்வபத்தி யுடையவனையும், பத்தினி என்னும் பெண்பாற் பெயர் கணவன் பத்தியுடையவளையும் குறிப்பனவாகும்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (குறள். 55)

என்னும் குறளும், பத்தினி என்னும் பெயர்க் காரணத்தை ஓரளவு உணர்த்தும்.

இங்ஙனம், பத்தினி என்னும் சொல் பத்தியுடையாள் என்று பகுசொற் பொருள் கொண்டிருப்பவும், அதைப் பத்நீ என்னும் வடசொல்லோ டிசைத்ததற்கு, பத்தி என்னும் சொல் பக்தி என்னும் வடசொல்லின் திரிபெனச் சாத்திரியார் அவர்கள் கொண்டமையே காரணமாகும்.

பத்தி என்னும் சொல், பற்று என்பதன் மறுவடிவான பத்து என்பத னின்று திரிந்த தூய தென்சொல்லாகும்.

றகரவிரட்டை தகரவிரட்டையாகத் திரிவது இயல்பு.

எ-கா : ஒற்று - ஒத்து; குற்று - குத்து.

தஞ்சை மாவட்டத்தில் பொற்கொல்லரைப் பத்தர் என்பது மரபு. ஒருகால், பொன்னை நெருப்பிற் பற்றவைப்பவர் என்பது அப் பெயர்ப் பொருளாயிருக்கலாம்.

"பத்துடை யடியவர்க் கெளியவன்" என்னும் திவ்வியப் பனுவல் (திருவாய்மொழி 1:3:1) தொடரில், பத்து என்னும் சொல் பத்தி எனப் பொருள்பட்டது காண்க.

வயலைக் குறிக்கும் பற்று என்னும் சொல்லும் பத்து எனத் திரிந் திருப்பது கவனிக்கத்தக்கது. 'பத்தில் ஆறுபோனால் என்ன வாகும்?" என்பது ஒரு விடுகதை.

பற்று என்னும் சொல் பத்தியை அல்லது அன்பைக் குறிப்பதைப் பற்றி ஒன்றும் கூறவேண்டுவதில்லை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு." (குறள். 350)

என்னுங் குறளே போதியதாகும்.

குற்றியலுகரவீறு இகரவீறாகத் திரிவது பெருவழக்கு.

எ-கா : குச்சு - குச்சி; குஞ்சு - குஞ்சி; பஞ்சு - பஞ்சி; முட்டு - முட்டி

இவ்வாறே, பத்து என்னுஞ் சொல்லும் பத்தி எனத் திரிந்துள்ளது.

பழைமையான தென்சொற்கட்கெல்லாம் தென்மொழி வழியாகப் பொருள்கொள்ளுதல் வேண்டுமேயன்றி, வடமொழி வழியாகப் பொருள் கொள்ளுதல் கூடாது. அங்ஙனங் கொள்வார் இருட்டுவீட்டில் குருட் டெருமைபோல் இடர்ப்படுவது திண்ணம்.

பத்தினி என்னும் சொல்லைப் பத்நீ என்னும் சொல்லோ டிணைத்தத னாலேயே, முன்னதன் பகுதி பத்து அல்லது பத்தி என்பதை உணர முடியாமற் போயிற்று. அங்ஙனம் உணர முடியாமையினாலேயே, பத்தன் என்னும் ஆண்பாற் பெயர் சென்னைப் பல்கலைக்கழக அகராதியிற் குறிக்கப்பெறவில்லை.

நூற்றுக்கணக்கான தென்சொற்களை வடமொழியில் கொண்டு அவற்றை வடசொல்லாகக் காட்டுவதும், தூய தென்சொற்கட்கும் ஒலி யொப்புமைபற்றி வடசொன்மூலங் காட்டுவதும், எத்துணை நாட்குச் செல்லும்?

3. "எழுத்து என்பதன் பகுதி எழு என்பதேயன்றி எழுது என்பதன்று என்பது தொல்காப்பியத்தாலறியக் கிடக்கின்றது."

எழுத்து என்பதன் பகுதி எழு என்பதே என்று தொல்காப்பியர் ஓரிடத்துங் கூறவில்லை. எழுத்தொலியுண்டாவதைக் குறிக்குமிடத்து. 'எழுதல்' 'எழுவுதல்' முதலிய சொற்களை ஆள்கின்றாரேயன்றி எழுது வதைக் குறிக்குமிடத்தன்று. கருது என்னும் சொல் கருத்து என இரட்டித்துத் தொழிற்பெயரும் தொழிலாகு பெயருமாவதுபோல், எழுது என்னும் சொல்லும் எழுத்து என இரட்டித்துத் தொழிற்பெயரும் தொழிலாகு பெயருமாகும். வரிவடிவு ஒலிவடிவைக் குறிப்பதனாலும், பயிற்சி

மிகுதியால் அது ஒலிவடிவோ டொன்றியது போலத் தோன்றுவதாலும், எழுத்து என்னும் சொல் வரிவடிவைக் குறிப்பதுடன் ஆகுபெயர் முறையில் ஒலிவடிவையுங் குறிக்கும். இவ் வொலிவடிவுப் பொருளில் அஃது இருமடியாகு பெயராகும்.

ஓவிய வரைவைக் குறிக்கும் எழுத்து (எழுதுதல்) என்னும் சொல்லே, வரிவரைவையுங் குறிக்கும். வரிவடிவும் ஒருவகை யோவியமாதலின், எழுதுதல் வரைதல்.

"Letter. Fr. *lettre*, L. *litera*, from *lino. litum*, to besmear, an early mode of writing being by graving the characters upon tablets smeared over with wax, என்று The Imperial Dictionary என்னும் ஆங்கில அகராதியிற் குறித்திருப்பது ஒப்பு நோக்கத்தக்கது.

எழு என்னும் பகுதியினின்று எழும் தொழிற்பெயர், எழல், எழால், எழில், எழுதல், எழுகை, எழூஉ என இருக்குமேயன்றி, எழுத்து என இருக்காது. ஆகவே, அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பதுபோல, ஒலியை நினைத்துக்கொண்டு வரியைக் குறிக்கும் பெயர்க்குப் பகுதி கூறுவது பொருந்தாது.

4. "தென்சொற்கட்குப் பொருள் விளக்கவந்த புத்தகத்திற் சில வட சொற்களும் தென்சொற்களாகக் கொள்ளப்பட்டுள்ளன."

வடசொற்களிவை. தென்சொற்களிவை யென யான் அறியாம லில்லை. சில வடசொற்கள் தமிழில் வழக்கூன்றி யுள்ளமை காரணமாகத் 'தன்னின முடித்தல்' என்னும் உத்திபற்றி அவற்றைத் தொடர்புடைய தென்சொற்களொடு சேர்த்துக் கூறியிருக்கின்றேன். அங்ஙனம் கூறப் பட்டவை இரண்டொன்றே. அவற்றை வடசொல்லென விதந்து குறித்து மிருக்கின்றேன். அங்ஙனங் குறிக்கப்படாதவை யெல்லாம் தென்சொல் லாகவே யிருக்கும். அவற்றை யெல்லாம் அல்லது அவற்றுள் ஒரு பகுதியைச் சாத்திரியார் அவர்கள் வடசொல்லென மயங்கியிருப்பார்களா யின், அது அவர்களது குற்றமேயன்றி என் குற்றமன்று.

5. "ஆசிரியர் மொழியொலி நூல் (Phonology), சொல்வடிவு நூல் (Morphology), பொருட்பாட்டு நூல் (Semasiology), ஆகியவற்றைப் பயின்றிருந்தால் நன்றாயிருந்திருக்கும்."

கடந்த இருபானாண்டுகளாக மொழிநூலில் மூழ்கிக் கிடந்த எனக்கு, மீன்குஞ்சுக்கு நீச்சுப் பயிற்றுவதுபோலும், கொல் தெருவில் குண்டூசி விற்பதுபோலும், சாத்திரியார் அவர்கள் மொழிநூல் துறைகளை யுணர்த்த விரும்பியது, மிக வியப்பை விளைக்கின்றது.

'பார்ப்பான் தமிழும் வேளாளன் கிரந்தமும் வழவழா கொழகொழா' என்பது ஒருபுறமிருக்க, வடமொழியை இயன்மொழியாகவோ, தமிழுக்கு முந்திய மொழியாகவோ கொள்பவ ரெல்லாம், ஒப்பியன் மொழிநூல்

மாணவராதற்கும் உரியவரல்லர் என்பது எனது ஆய்ந்த முடிபு. செயற்கை வல்லொலியெல்லாம் சிறந்து, பலுக்க (உச்சரிக்க) அரிதான சொல்லமைப் பெல்லாம் பெற்று, ஆசியா, ஐரோப்பா ஆகிய இருபெருங் கண்டங்கட்குப் பொதுவான சொற்களையெல்லாம் தழுவி, எண்ணரு நூற்றாண்டுகளாக இடுகுறிமுறையில் வளம்படுத்தப்பட்ட வடமொழியை; இயல்பாயெழுந்து, எளியவொலி கொண்டு இளஞ்சிறாரும் ஒலிக்கும் சொல்லமைப்புப் பெற்று, மாந்தன் தோன்றிய காலந்தொட்டு மாண்பாக வளர்க்கப்பெற்ற தமிழுக்கு முந்தியதாகவும் மூலமாகவுங் காட்டத் துணிவார்; மொழிநூற்றுறைகளில் முற்றத் துறைபோய முதுபெரும் புலவராகத் தம்மைத் தாமே மதித்துத் தருக்கின், அவருக்கு விடையாக யானொன்றும் விடுத்தற்கில்லை.

இனி, என் 'சொல்லாராய்ச்சிக் கட்டுரைகளில்' சாத்தியார் அவர்கள் குறிப்பிடாத இரண்டொரு குற்றங்குறைகள் உள. அவை சொற்பொருள் பற்றியவை. அவற்றை அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்வேன்.

- "செந்தமிழ்ச் செல்வி" சூன் 1951

- - - - -

## “மொழிஞாயிறு” தேவநேயப் பாவாணர்

## வாழ்க்கைச் சுவடுகள்

| | |
|---|---|
| தி.பி. 1933 (1902) | : திருநெல்வேலி மாவட்டம், சங்கரநயினார் கோயிலில் சுறவம் – 26ஆம் நாள் (7.2.1902) பிறந்தார். |
| தந்தை | : ஞானமுத்து |
| தாய் | : பரிபூரணம் |
| தி.பி. 1938 (1907) | : வடார்க்காடு மாவட்டம், ஆம்பூர் மிசௌரி |
| தொடக்கக் கல்வி | : நல்லஞ்சல் உலுத்தரின் விடையூழிய நடுநிலைப் பள்ளி. |
| உயர்நிலைக் கல்வி | : திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, திருச்சபை விடையூழிய உயர்நிலைப் பள்ளி (9,10,11 – வகுப்பு) |
| தி.பி. 1950–52(1919–21) | : முகவை மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், சீயோன் மலையிலுள்ள சீயோன் நடுநிலைப் பள்ளியில் முதற்படிவ ஆசிரியப் பணியிற் சேர்ந்தார். |
| தி.பி. 1952–53(1921–22) | : வடார்க்காடு மாவட்டம், ஆம்பூர் நடுநிலைப் பள்ளியில் (தாம் பயின்ற பள்ளி) உதவி ஆசிரியராய்ப் பணியாற்றினார். |
| தி.பி. 1955 (1924) | : மதிப்பு மிக்கதாகக் கருதப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதத் தேர்வில் வெற்றி பெற்றார். (இவ் வாண்டில் பாவாணரைத் தவிர வேறொருவரும் வெற்றி பெறவில்லை).<br>உதவித் தமிழாசிரியர், சென்னை, திருவல்லிக் கேணிக் கெல்லற்று உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினார். |
| தி.பி. 1956 (1925) | : தமிழாசிரியர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினார்.<br>***“சிறுவர் பாடல் திரட்டு”*** நூல் வெளியீடு. |
| தி.பி. 1957 (1926) | : திருநெல்வேலித் தென்னிந்தியத் தமிழ்ச் சங்கம் நடத்திய தனித்தமிழ்ப் புலவர் தேர்வில் இவர் ஒருவரே வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. |

| | |
|---|---|
| தி.பி. 1959 (1928) | : தலைமைத் தமிழாசிரியர், மன்னார்குடி பின்லே கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினார். முதல் மனைவி எசுத்தர் அம்மையார் மறைவு. |
| தி.பி. 1961 (1930) | : நேசமணி அம்மையாரை மணந்தார். |
| தி.பி. 1963 (1932) | ***"கிறித்தவக் கீர்த்தனம்"*** – நூல் வெளியீடு. |
| தி.பி. 1965 (1934) | : தலைமைத் தமிழாசிரியர், பிசப்பு ஈபர் உயர்நிலைப் பள்ளி, புத்தூர், திருச்சிராப்பள்ளியில் பணியாற்றினார். **கீழைக்கலைத்** (B.O.L.) தேர்வில் வெற்றி பெற்றார். |
| தி.பி. 1968 (1937) | : முதல் இந்தி எதிர்ப்புப் போரை மையமாகக் கொண்டு – ***"செந்தமிழ்க்காஞ்சி"*** நூல் வெளியீடு. இந்தி எதிர்ப்புக் கிழமை கொண்டாடினார். ***"கட்டுரைக் கசடறை*** என்னும் ***வியாச விளக்கம்"*** நூல் வெளியீடு. |
| தி.பி. 1971 (1940) | : ***"ஒப்பியன் மொழிநூல்"*** முதற்பாகம் ***"இயற்றமிழ் இலக்கணம்"*** ஆகிய நூல்கள் வெளியீடு. ***"கட்டுரை வரைவியல்"*** என்னும் உரைநடை இலக்கண நூல் வெளியீடு. |
| தி.பி. 1972 (1941) | : ***"தமிழர் சரித்திரச் சுருக்கம்"*** வெளியீடு : தமிழக இளைஞர் மன்றம், திருச்சிராப்பள்ளி. ***"தமிழன் எப்படிக் கெட்டான்"*** ஆகிய நூல்கள் வெளியிடல். |
| தி.பி. 1974 (1943) | : தலைமைத் தமிழாசிரியர், சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினார். |
| தி.பி. 1974 (1943) | : ***"சுட்டு விளக்கம்"*** – நூல் வெளியீடு. – பண்டிதமணி கதிரேசனார் தலைமையில் நடைபெற்ற முதலாம் தமிழ் உணர்ச்சி மாநாட்டில் பங்கேற்று உரையாற்றினார். |
| தி.பி. 1975 (1944) | : – தமிழ்த்துறைத் தலைவராகச் சேலம் நகராண்மைக் கல்லூரியில் பணியாற்றினார். – ***"திரவிடத்தாய்"*** – நூல் வெளியீடு. |

| | | |
|---|---|---|
| தி.பி. 1980 (1949) | : | ***"சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்"*** – நூல் வெளியீடு.<br>பாவாணர்க்குத் தவத்திரு மறைமலையடிகளார் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்தார்.<br>பாவாணர் அவர்கள் சேலம் கல்லூரியில் பணி யாற்றியபோது தென்மொழி ஆசிரியர் பெருஞ்சித்திர னார் அவர்கள் அக்கல்லூரியில் பயின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. |
| தி.பி. 1981 (1950) | : | ***"உயர்தரக் கட்டுரை இலக்கணம்"*** (மு.பா.) – நூல் வெளியீடு. |
| தி.பி. 1982 (1951) | : | ***"உயர்தரக்கட்டுரை இலக்கணம்"*** (இ.பா.) – நூல் வெளியீடு. |
| தி.பி. 1983 (1952) | : | சென்னைப் பல்கலைக்கழகத்தில் கலைமுதுவர் (M.A.) பட்டம் பெற்றார்.<br>***"பழந்தமிழாட்சி"*** – நூல் வெளியீடு. |
| தி.பி. 1984 (1953) | : | ***"முதற்றாய்மொழி அல்லது தமிழாக்க விளக்கம்"*** – நூல் வெளியீடு. |
| தி.பி. 1985 (1954) | : | ***"தமிழ்நாட்டு விளையாட்டுகள்"*** – நூல் வெளியீடு. |
| தி.பி. 1986 (1955) | : | *'A Critical Survey of Madras University Lexicon'* என்னும் ஆங்கில நூல் வெளியிடப் பெற்றது. |
| தி.பி. 1987 (1956) | : | ***"தமிழர் திருமணம்"*** – நூல் வெளியீடு.<br>அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் விரிவுரை யாளராகப் பணியிற் சேர்ந்தார். |
| தி.பி. 1988 (1957) | : | பெரியார் ஈ.வே.ரா. தலைமையில் சேலம் "தமிழ்ப் பேரவை" இவரின் தொண்டைப் பாராட்டித் 'திராவிட மொழிநூல் ஞாயிறு' எனும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.<br>திசம்பர் 27, 28, 29–ல் தில்லியில் நடைபெற்ற அனைத் திந்தியக் கீழைக்கலை மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்பித்தார். |
| தி.பி.1990 (1959) | : | தமிழ்நாட்டு அரசின் ஆட்சித் துறையில் கலைச் சொல் லாக்கத் தொகுப்பில் பங்கேற்றுச் சிறப்பித்தமைக் காகத் தமிழ்நாட்டரசு சார்பில் தமிழ்நாட்டு ஆளுநரால் அவருக்குச் செப்புப் பட்டயம் வழங்கப்பட்டது. |

மொழிஞாயிறு பாவாணர் அவர்களால் பெயர் சூட்டப்பட்ட 'தென்மொழி' இதழ் பாவலரேறு பெருஞ் சித்திரனார் அவர்களால் தொடங்கப் பெற்றது. தனித்தமிழியக்க வளர்ச்சிக்கு இவ் விதழ் இன்றளவும் பெரும் பங்காற்றி வருகிறது.

தி.பி. 1992 (1961) *"சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதியின் சீர்கேடு"* – நூல் வெளியீடு.

– அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட சிக்கலால் எனக்கு வறுமையும் உண்டு, மனைவியும், மக்களும் உண்டு – அதோடு எனக்கு மானமும் உண்டு – என்று கூறிவிட்டுப் பல்கலைக்கழகப் பணியிலிருந்து வெளியேறினார். என்னோடு தமிழும் வெளியேறியது என்று கூறினார்.

தி.பி. 1994 (1963) : துணைவியார் நேசமணி அம்மையார் மறைவு.

தி.பி. 1995 (1964) : முனைவர் சி.இலக்குவனார் தலைமையிலான மதுரைத் தமிழ்க் காப்புக் கழகம் – "தமிழ்ப் பெருங் காவலர்" என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

*"என் அண்ணாமலைநகர் வாழ்க்கை"* என்னும் கட்டுரைத் தொடர் தென்மொழியில் வெளிவந்தது.

தி.பி. 1997 (1966) : *"இசைத்தமிழ்க் கலம்பகம்"*

*"பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும்"*

*"The Primary Classical Language of the World"*

என்னும் நூல்கள் வெளியீடு.

தி.பி. 1998 (1967) : *"தமிழ் வரலாறு"*

*"வடமொழி வரலாறு"*

*"The Language Problem of Tamilnadu and Its Logical Solution"* ஆகிய நூல்கள் வெளியீடு.

தி.பி. 1999 (1968) : மதுரைத் தமிழ் எழுத்தாளர் மன்றம் இவரின் மணிவிழாவைக் கொண்டாடி *"மொழிநூல் மூதறிஞர்"* எனும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

06–10–1968–ல் இவரைத் தலைவராகக் கொண்டு "உலகத் தமிழ்க் கழகம்" தோற்றுவிக்கப்பட்டது.

*"இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?"*

*"வண்ணனை மொழிநூலின் வழுவியல்"* –

*"Is Hindi the logical solution of India"*

ஆகிய நூல்கள் வெளியீடு.

| | |
|---|---|
| தி.பி. 2000 (1969) | : பறம்புக்குடியில் உலகத் தமிழ்க் கழக முதல் மாநாடு. இம் மாநாட்டில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் முனைவர் சி. இலக்குவனார், முனைவர் வ. சுப. மாணிக்கனார், புலவர் குழந்தை உள்ளிட்ட தமிழ்ச் சான்றோர் பங்கேற்றுச் சிறப்பித்தமை குறிப்பிடத் தக்கது.<br>இம் மாநாட்டில் – ***"திருக்குறள் தமிழ் மரபுரை"*** ***"இசையரங்கு இன்னிசைக் கோவை"*** ***"தமிழ் கடன்கொண்டு தழைக்குமா?"*** – ஆகிய நூல்கள் வெளியீடு. |
| தி.பி. 2002 (1971) | : பறம்புமலையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்ற பாரி விழாவில் பாவாணர் "செந்தமிழ் ஞாயிறு" என்று பாராட்டிச் சிறப்பிக்கப் பெற்றார்.<br>பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களால் தென்மொழியில் அறிவிக்கப்பட்ட 'செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலித் திட்டம்' வகுக்கப் பெற்றது. |
| தி.பி. 2003 (1972) | : தஞ்சையில் இவர் தலைமையில் உலகத் தமிழ்க்கழக மாநாடு – "தமிழன் பிறந்தகத் தீர்மானிப்பு" மாநாடாக நடந்தது.<br>– ***"தமிழர் வரலாறு"***, ***"தமிழர் மதம்"*** ஆகிய நூல்கள் வெளியீடு. |
| தி.பி. 2004 (1973) | : ***"வேர்ச்சொற் கட்டுரைகள்"*** நூல் வெளியீடு. |
| தி.பி. 2005 (1974) | : 8.5.1974–ல் "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்குநராக"த் தமிழ்நாட்டரசால் அன்றைய முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் அமர்த்தப்பட்டார்.<br>செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் பேரகர முதலியின் முதல் மடல முதற் பகுதி அவரின் மறைவிற்குப் பிறகு 1985–ல் வெளியிடப்பட்டது. |
| தி.பி. 2009 (1978) | : ***"மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடைமை"*** – நூல் வெளியீடு.<br>சென்னையில் உலகத் தமிழ்க் கழக நான்காவது மாநாடு பாவாணர் முன்னிலையில் நடைபெற்றது. மாநாட்டிற்குப் பதிப்பாசிரியர் புலவர் அ.நக்கீரனார் தலைமை தாங்கினார். |

தி.பி. 2010 (1979) : ***"தமிழ் இலக்கிய வரலாறு"*** – நூல் வெளியீடு.

வாழ்நாள் முழுவதையும் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் ஆராய்ச்சிக்கும் ஒதுக்கிய இப் பெருமகனுக்குத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் ***'செந்தமிழ்ச் செல்வர்'*** என்னும் சீரிய விருது வழங்கப்பட்டது.

தி.பி. 2011 (1980) : ***'Lemurian Language and Its Ramifications - An Epitome'*** எனும் ஆங்கில நூல் மதுரையில் நடைபெறவிருந்த ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டு அயல் நாட்டுப் பேராளர்களுக்காக (52 பக்க அளவில்) உருவாக்கப்பட்டது.

தி.பி. 2012 (1981) : மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டில் பங்கேற்று "மாந்தன் தோற்றமும், தமிழர் மரபும்" என்னும் தலைப்பில் தமிழர்தம் வரலாற்றுப் பெருமையை நிலைநாட்டிப் பேசினார்.

சுறவம் 2ஆம் நாள் "சனவரி 15–ல் இரவு 12.30–க்கு இவ்வுலக வாழ்விலிருந்து மறைந்தார்".

## தாய்மொழிப்பற்றே தலையாயப்பற்று

தாய்மொழிப் பற்றில்லாத் தன்னாட்டுப் **பற்றே**
தன்னினங் கொல்லவே தான்கொண்ட **புற்றே**

மொழியொன் றில்லாமலே இனமொன்று **மில்லை**
இனமொன்றில் லாமலே நாடொன்று **மில்லை!**

மதியுணர் வின்றியே மடிவெனுந் தூக்கம்
மயங்கிக் கிடக்கின்றாய் மறுத்தெழு **தமிழா!**

காந்தும் அண்டைவீட்டுள் கால்வைத்த லின்றிக்
கண்மூடித் தூங்குவாய் கடிதெழு **தமிழா!**

வருமானங் குன்றியே வறியவ னானாய்
வாழ்நாள் வீணாகாமல் வல்லெழு **தமிழா!**

அருசுவை யுண்டியே ஆக்கிடின் உன்கை
அருந்த மறுக்கின்றார் ஆய்ந்தெழு **தமிழா!**

ஒலியொடு வரியும்பின் ஒழியவே அண்மை
உறும்தேவ நாகரி உணர்ந்தெழு **தமிழா!**

பார்முதல் பண்பாடு பயின்றவன் **தமிழன்**
பலரையும் உறவெனப் பகர்ந்தவன் **தமிழன்.**

பிறப்பாலே சிறப்பில்லை **தமிழா** – இதைப்
பெருநாவ லன்சொன்னான் **தமிழா!**

மறத்தாலும் திறத்தாலும் **தமிழா** – மேன்மை
மதியறி வொழுக்கத்தால் **தமிழா!**

தமிழினுக் குலகினில் தருவதே தலைமை
தமிழரும் அடையவே தாழ்விலா நிலைமை

இமிழ்தரு மொழியியல் எய்துக நலமே
எமதுமெய் வரலாறே எழுகவே வலமே.

வேனிலிற் கான்மலை வெம்மைகொள் பாலையின்
விளைநில மாவதிந் **நாடு**

மின்னும்பல் மணிகளும் மிகுவிலை யாற்பெற
மேலுலகும் விரும்பும் **நாடு**

கொன்றுதன் மகனையே கொடுமையை நிமிர்த்துச்செங்
கோன்முறை குலவிய **நாடு**

நீலியின் கணவற்கு நிகழ்த்திய வாய்மொழி
நிறைவேற்றின வேளாளர் **நாடு**

அறியாது முரசணை அயர்ந்திடும் புலவர்க்கும்
ஆலவட்டம் விசிறும் **நாடு**

சித்தரின் மருத்துவம் சிறந்தபொன் னாக்கமும்
சிலம்பொடு திகழ்ந்ததிந் **நாடு**

# பாவாணர் பொன்மொழிகள்

அன்பென்பது ஏசுவும் புத்தரும்போல் எல்லாரிடத்தும் காட்டும் நேயம்.

ஆட்சி ஒப்புமை நட்புறவிற்கே அன்றி அடிமைத்தனத்திற்கு ஏதுவாகாது.

ஒய்வகவையைத் தீர்மானிக்கும் அளவையாய் இருக்க வேண்டியது பணித் திறமையேயன்றி அகவை வரம்பன்று.

துறவு தம்மாலியன்றவரை பொதுமக்கட்குத் தொண்டு செய்வது சிறந்த துறவாகக் கருதப்படுகின்றது.

இந்தியாவில் விலங்கினம் இருக்கும் நிலைமையை உணர்த்த அவற்றின் கழுத்துப்புண்ணும் விலாவெலும்புத் தோற்றமும் போதும்.

கட்டுப்பாட்டில்லாவிடின் காவலனுங் காவானாதலாலும் செங்கோலாட்சியொடு கூடிய இருகட்சியரசே குடியரசிற் கேற்றதாம்.

மாந்தன் வாழ்க்கை, இல்லறம் துறவறம் என இருவகைத்து. மனைவியோடு கூடி இல்லத்திலிருந்து அதற்குரிய அறஞ் செய்து வாழும் வாழ்க்கை இல்லறம்; உலகப் பற்றைத் துறந்து அதற்குரிய அறத்தோடு கூடிக் காட்டில் தவஞ் செய்து வாழும் வாழ்க்கை துறவறம்.

ஒருவன் இல்லத்தில் இருந்து மனையாளோடு கூடிவாழினும் அறஞ் செய்யாது இருப்பின் அவன் வாழ்க்கை இல்லறமாகாது வெறுமனான இல்வாழ்க்கையாம்.

இலங்கையில் இடர்ப்படும் மக்கள் பெரும்பாலும் தமிழராயிருத்தலின் அவர்களின் உரிமையைப் பேணிக்காத்தற்கு அங்குள்ள இந்தியத் தூதாண்மைக் குழுத்தலைவர் தமிழராகவே இருத்தல் வேண்டும்.

கருத்துவேறுபாட்டிற் கிடந்தந்து ஒரு சாராரை ஒருசாரரார் பழிக்காதும் பகைக்காதும் இருப்பதே உண்மையான பகுத்தறிவாம்.

இவ் வுலகில் தமிழனைப் போல் முன்பு உயர்ந்தவனு மில்லை; பின்பு தாழ்ந்தவனும் இல்லை.

இற்றைத் தமிழருட் பெரும்பாலாரும் தம்மைத் தாமே தாழ்த்துவதிலும், இனத்தாரைப் பகைத்துப் பகைவரை வாழவைப்பதிலும், பகைவர் மனங்குளிரத் தம் முன்னோரைப் பழிப்பதிலும், தம்மருமைத் தாய்மொழியைப் புறக்கணித்துப் பகைவரின் அரைச்செயற்கைக் கலவை மொழியைப் போற்றுவதிலும் ஒப்புயர்வற்றவராய் உழல்கின்றனர்.

❖❖❖❖❖



ஐந்திணை வாழ்வும் நல்ல
அகப்புறப் பாட்டும் பெற்று
மொய்ம்புற்ற தமிழர் சால்பு
முற்றுமாய் வடவர் சூதால்
நைந்ததே இதனை மீண்டும்
நடுக்கின்றி நிமிர்த்த வந்த
பைந்தமிழ்த் தறுகண் வேழம்
பாவாணர் நம்ஜ யாவே!

முடைநாற்றப் பழமை சாய்க்க
முற்றாக நமக்கு வாய்த்த
படைக்கலம் பெரியார் என்றால்
பழந்தமிழ் மீட்புப் போரில்
வடமொழிச் சூழ்ச்சி யாளர்
வாலறு பட்டே ஓட
அடைகாத்த சீற்றத் தோடே
ஆர்த்தவர் நம்பா வாணர்!

-பாவலர் தமிழேந்தி




தமிழ்மண் பதிப்பகம்
அகமது வணிக வளாகம்
எண்:293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை- 600 014